# இந்து சமயம்

( HINDUISM TEACHERS GUIDE GRADE -12 )

# தரம் - 12

# ஆசிரியர் வழிகாட்டி

(2017 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)


**சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,**

**மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,**

**தேசிய கல்வி நிறுவகம்,**

**மகரகமம.**

# இந்துசமயம்

தரம் - 12

ஆசிரியர் வழிகாட்டி

தேசிய கல்வி நிறுவகம்

முதற் பதிப்பு - 2017

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,

தேசிய கல்வி நிறுவகம்,

மகரகம.

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்,

மஹரகம.

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி . திருமதி . ஜெயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**வண கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்**
பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்.

தேசிய கல்வி நிறுவக இந்து சமயத் துறையின் ஊடாக தரம் - 12 இந்து நாகரிக புதியபாடத்திட்டத்திற்கான ஆசிரியர் வழிகாட்டியைத் தயாரித்து, பாடசாலைத் தொகுதிக்கு அறிமுகம் செய்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியை அடைகின்றோம்.

பாடசாலைகளில் சமய பாடம் கலைத்துறைப் பாடமாகக் கொள்ளப்பட்டாலும், வாழ்க்கையில் நேரடியாகப் பங்கெடுக்கும் விடயங்கள் பல அதில் உள்ளன. அதனாற் கலைத்துறை மாணவர்கள் மட்டுமன்றி, எல்லாத் துறையினரும் இந்து நாகரிக பாடத்தைக் கற்க முன்வர வேண்டும். இதற்கு இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களின் அர்ப்பண சிந்தனை, முயற்சி என்பன தேவை. அவ்வகையில் இப்பாடத்தை மாணவர் விருப்புடன் பயிலக்கூடியதாக ஆசிரியரின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படு கின்றது. இப்பாடம் பரீட்சைக்குரியது மட்டுமன்றி முழுவாழ்க்கைக்குத் தேவையான அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த ஆசிரியர் வழிகாட்டியானது இரண்டு பகுதிகளைக் கொண்டது.

- விடய உள்ளடக்க வழிகாட்டித் தொடர்
- பாடசாலை மட்டக் கணிப்பீடு என்பன அவையாகும்.

மாணவரிடம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான கற்றற் பேறுகள், உத்தேச விடய உள்ளடக்க வழிகாட்டிகள், கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள், உசாத்துணைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்நூலின் முதற்பகுதி அமைகின்றது. இவை யாவும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டலையே வழங்குகின்றன. எனவே, ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைக்கும் ஏற்றதான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு பூரண உரிமை உண்டு.

ஆசிரியர் வழிகாட்டியின் இரண்டாம் பகுதியில் கற்றல் - கற்பித்தற் செயற் பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்குரிய பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக் கருவிகள் தவணைக்கு மூன்று என்ற ரீதியில் தரம் - 12 க்கு 9 கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கணிப்பீட்டுக் கருவிகள், வகுப்பறைக்கு வெளியேயும் மாணவர்கள் கற்பதற்குத் துணைபுரிவதுடன், குழுச் செயற்பாடு, ஆய்வுகள் என்பவற்றுக்கும் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் என்பவற்றின் விருத்திக்கும் இட்டுச் செல்லும் என நம்புகின்றோம்.

**திரு பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

# கலைத்திட்டக் குழு

**வழிகாட்டலும் அனுமதியும் :** **கல்விசார் அலுவல்கள் சபை,**
தேசிய கல்வி நிறுவகம்.

**பணிப்பு :**

- **கலாநிதி . திருமதி . ஜெயந்தி குணசேகர**
  பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
- **வண. கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்**
  பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
  மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
  தேசிய கல்வி நிறுவகம்,

**இணைப்பாக்கம் :** **திரு பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**விடய ஆலோசனை :**

- **பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்**
  (ஓய்வு) தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.
- **பேராசிரியர். பி. கோபாலகிருஷ்ண ஐயர்,**
  வாழ்நாள் பேராசிரியர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **பேராசிரியர். எம்.வேதநாதன்**
  தலைவர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **திருமதி. சாந்தி கேசவன்,**
  தலைவர், இந்து நாகரிகத்துறை,
  கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.
- **திருமதி நாச்சியார் செல்வநாயகம்,**
  சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு), இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி,**
  கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.
- **கலாநிதி (திருமதி) எஸ். ஸ்ரீமுரளிதரன்,**
  சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **கலாநிதி (திருமதி) வி. பவநேசன்.**
  சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **திரு.எஸ். முகுந்தன்,**
  சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **திரு. எஸ். ரமணராஜா,**
  விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  யாழ். பல்கலைக்கழகம்.
- **திரு. என். சுபராஜ்,**
  விரிவுரையாளர், இந்துநாகரிகம்,
  தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.
- **திரு.என். வாமன்,**
  விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
  கிழக்குப் பல்கலைக்கழகம்.

## எழுத்தாளர் குழு

**உள்வாரி** : - **திரு. பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

**வெளிவாரி** - **திரு. பெ. பேரின்பராசா**
ஆசிரியர், மட்/களுதாவளை மத்திய மகா வித்தியாலயம்,
களுவாஞ்சிக்குடி. மட்டக்களப்பு.

- **திருமதி ஆர். யோகானந்தம்**,
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
கொ/ நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம், நுகேகொட.

- **திருமதி என். சுதமதி**
ஆசிரியர், யாழ்/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்

- **திரு. எஸ். கமலநாதன்**
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு மேற்கு.

- **திருமதி எம். சண்முகதாஸ்,**
ஆசிரியர், தி/ இ.கி.ச. ஶ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,
திருகோணமலை

- **திரு. ரி. சுதர்சன்**
ஆசிரியர், யாழ்/நாவற்குழி மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

- **கலாநிதி வீ. குணபாலசிங்கம்,**
ஆசிரியர், மட்/ மகிழடித்தீவு ம.மகா வித்தியாலயம், மட்டக்களப்பு.

- **திருமதி . எம். சிவகுமாரன்**
ஆசிரியர், கல்/ வாகரை தமிழ் மகா வித்தியாலயம், வாகரை

.

**கணனி வடிவமைப்பு** - **திரு. பொன் ஜெயரூபன்**
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

**அட்டைப்படம்** -

**காரியாலய உதவி** - திருமதி எஸ்.சி.பிரியதர்சனி
- திருமதி மங்கலிகா விஜயரதன
- திரு..டயஸ் அமரசிங்க

# உள்ளடக்கம்

| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | - | 3 |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | - | 5 |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | - | 6 |
| கலைத்திட்டக் குழு | - | 7 |

| | | | |
|---|---|---|---|
| 12.1 | கற்றல் கற்பித்தல் முறைகள் - விளக்கம் | - | 11 |
| 12.2 | பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம் | - | 107 |
| 12.3 | பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக் கருவிகள் | - | |

# செயற்பாடுகள்

## கற்றல் கற்பித்தல் முறைகள் - விளக்கம்

**தேர்ச்சி 1.0** : இந்து சமயத்தின் சிறப்பம்சங்களையும் வரலாற்றுப் பின்னணியையும் இனங்கண்டு, அவை மனித வாழ்வை மேம்படுத்துமாற்றைத் தெரிந்து அவற்றில் ஈடுபாடு கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : சமயம் என்பதன் பொருள் விளக்கத்தையும் இந்து சமயத்தின் சிறப்புக்களையும் எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற் பேறுகள்** :

- சமயம் என்பதன் பொருள் விளக்கத்தை அறிந்து கூறுவார்.
- இந்து சமயத்தின் தொன்மையை விளங்கி எடுத்துரைப்பார்.
- இந்து சமயத்தில் உள்ள காலத்தால் முற்பட்ட வேத இலக்கியங்களை அறிந்து கூறுவார்.
- இந்து சமயத்தின் சிறப்பு அம்சங்களை நூல் ஆதாரங்களில் தேடி, பட்டியற்படுத்துவார்.
- இந்து சமயத்தின் சிறப்பு அம்சங்களை மேலும் அதிகப்படுத்துவதற்கான வேறு சான்றாதாரங்களைத் தேடும் முயற்சியில் ஈடுபடுவார்.
- இந்து சமயம் மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து ஆன்ம விடுதலையைப் பெறவேண்டும் என்பதை நோக்காகக் கொண்டது என்பது பற்றி எடுத்துரைப்பார்
- இந்துப் பண்பாட்டில் இந்து தத்துவங்கள் வாழ்வியலை இணைத்துள்ள முறைமை பற்றி விளக்குவார்.
- இந்து சமயத்தின் சிறப்பம்சங்களை அறிந்து போற்றுவார்.
- இந்து சமயம் பற்றிய சிறப்புக்களை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்
- பிற மதக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளலும் மதித்து நடத்தலும் மற்றொரு சிறப்பம்சமாகும் என்பதைக் கூறுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி** :

- சமயம், மதம் என்பன ஒரு பொருட் சொற்கள்.
- ஒரு பிரிவினரின் கொள்கையை மதம் என்று கூறலாம்.
- மதம் என்பது மனத்தோடு, உள்ளத்து உணர்வோடு உறவாடும் உன்னத வெளிப் பாடாகும்.
- உலகெங்கணும் உள்ள மக்களால் ஆயிரக்கணக்கான மதங்கள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் காலத்தால் முற்பட்ட சமயமாக இந்து சமயம் உள்ளது.
- இந்து என்ற சொல் சிந்து நதியைக் குறிப்பதாகவும், பின்னர் சிந்து நதிக்கு அப்பாலுள்ள பிரதேசத்தையும், அடுத்து அச்சொல் அவ்விடத்தில் வாழ்ந்த மக்களையும் அவர்களுடைய மதத்தையும் குறிப்பதாகவும் பயன்படுத்தப்பட்டது.

### 1.1.2 இந்து சமயத்தின் சிறப்பம்சங்கள்

- உலகிலே தோன்றிய பழைமை மிக்க சமயங்களுள் இந்து சமயமுமொன்று. இதன் ஆரம்பம் கிறிஸ்தவத்திற்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தது என்பர். சிந்துவெளியில் கிடைக்கும் தொல்பொருட் சான்றுகள் இந்து சமயத்தின் தொன்மையை விளக்கப் போதுமானவை.
- இந்து சமயம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் தொட்டு இன்று வரை நிலைத்து நிற்ப தோடு, பல கோடி மக்களின் வாழ்வியல் ஒழுங்கிற்கும் ஆன்மீக நாட்டத்திற்கும் வழிகாட்டியாகவும் அமைகின்றது.
- இந்து சமயம் பரந்த நோக்குடையது,அது சனாதன தர்மம் என்று வழங்கப்பட்டு வருகின்றது.
- இந்து சமயம் காலத்தால் முற்பட்ட இருக்கு, யசுர்,சாம, அதர்வணம் ஆகிய வேத இலக்கியங்களைக் கொண்டது. அவை ஒவ்வொன்றும் சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் எனும் இலக்கிய வடிவங்களையும் கொண்டுள்ளது.

- இந்திய தத்துவங்களுக்கெல்லாம் முன்னோடியாக அமைந்துள்ள உபநிடதங்களை இந்துசமயம் கொண்டுள்ளமை அதன் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகும்.
- எல்லைப்படுத்த முடியாத இறைவனை, தம்மனத்தினால் எல்லைப்படுத்தி, அவன் வீற்றிருந்து அருள்பாலிக்கும்படி பலதரப்பட்ட கலைக்கோயில்களை அமைத்துக் கொண்ட சமயம் இந்துசமயமே.
- இந்துக்கள் தம் கட்டடக் கலையினை நாகரம், வேஸரம், திராவிடம் எனப் பகுத்து, அவற்றின் அடிப்படையில் அழகிய மாடங்களையும் கோபுரங்களையும் சுற்றாலைகளையும் கட்டி அங்கு இறைவனை எழுந்தருளச் செய்துள்ளனர்.
- அழகிய கோயில்களில் வீற்றிருக்கும் இறைவனை எவ்வகையில் வழிபடல் வேண்டும் என்பதை ஒழுங்குபடுத்தி அதற்கு ஆகமம் எனப் பெயர் சூட்டி, அறநெறி பிறழாது மகோற்சவங்களை நடத்தி வருவது அதன் பிறிதொரு சிறப்பம்சமாகும்.
- கண்களால் காணமுடியாத கடவுளைக் அகக் கண்களால் கண்டு அவனோடு உறவு கொண்டு பதிகங்களாகவும், பாசுரங்களாகவும் பாடி அவனின் இருப்பை நிறுவிய சமயம் இந்து சமயமே.
- இறைவன் என்றும் உள்ளவன்; எல்லாம் வல்லவன்; எல்லாம் அறிபவன் என்பதால் அவனது திருமேனியை அவனது மெய்யடியார்கள் உருகிப் பாடிய பாசுரங்கள் மூலம் அறிந்து வார்ப்புக்கலை கொண்டு இறைவனது பல்வேறு திருமேனிகளைப் படைத்து வழிபட்டு வருவதும் இந்து சமயத்தின் சிறப்பாகும்.
- உலகில் பல சமயங்களும், தத்துவங்களும் பேசப்பட்டாலும் வாழ்வியலும், ஆன்மீகமும் இணைந்து, மக்களை வழிப்படுத்தும் தத்துவங்களையும், சமயங்களையும் கொண்ட சமயமாக இந்து சமயம் விளங்குகின்றது.
- அறுவகைச் சமயங்களையும், சைவ சித்தாந்தம், வேதாந்தம் எனும் தத்துவங்களையும் கொண்டு விளங்குவதும் இந்து சமயமேயாகும்.
- கிராமத்து மக்களின் எண்ணப்பாங்கிற்கும், ஆன்மீகத்திற்கும் இடம் கொடுத்து அவர்களை ஆன்மீகப்பாதைக்கு வழிகாட்டும் சமயமாக விளங்குகின்றது.
- சிற்பம், ஓவியம், இசை, நாட்டியம் முதலான கலைகள் யாவற்றையும் தனிமனித வெளிப்பாட்டின் பொருட்டும் ஆன்மீக நாட்டத்தின் பொருட்டும் உருவாக்கலாம் என்பதை வரவேற்கும் சமயமாகவும் இந்துசமயம் விளங்குகின்றது.
- "மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து ஆன்ம விடுதலையைப் பெறவேண்டும்" என்ற உயர்ந்த எண்ணத்தை மானுடனின் உள்ளத்தில் விதைப்பதே இந்துசமயம் விரும்பும் உயர்ந்த பண்பாகும்.
  * வாழ்க்கை வாழ்வாங்கு வாழ்தல் அடிப்படையில் மனித மேம்பாட்டை மையமாகக் கொண்டது.
  * உலக சகோதரத்துவத்தை வலியுறுத்துவது

    உ - ம்: - "இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க"

    - "வான்முகில் வழாது பெய்க......"
- அவரவர் விரும்பும் வடிவத்திலும் பெயரிலும் தெய்வத்தை வழிபட சுதந்திரம் உண்டு
- நற்பண்புகளுக்கு இலக்கணமாக வாழ்ந்துகாட்டிய எண்ணற்ற மகான்களை முன்னு தாரணங்களாகக் கொண்டது.

- மனித உயிர்களில் மட்டுமன்றி எல்லா உயிரினங்களிலும் ஆன்மா குடிகொண்டிருக்கிறது என்ற ஆன்மீக ஒருமைப்பாடு உடையது.
- கன்மம் மறுபிறப்புக் கோட்பாட்டை விஞ்ஞான ரீதியாக விளக்குவது.
- எல்லோரையும் கடவுளின் குழந்தைகளாகக் கொண்டு, சகோதர பாசத்தோடு நாம் பிறருக்காக வாழவேண்டும் என்பதை இந்து சமயம் வலியுறுத்துகின்றது.
- தாய், தந்தை, குரு, விருந்தினர், அடியார்கள் ஆகியோரை இறைவனாகக் கருதிப் பணிவிடை செய்யும் சிறப்பு இந்து சமயத்திற்குரியது.
- மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் தெய்வத்தை அறிய வழிகாட்டுகிறது.
- அறம், பொருள், இன்பம், வீடு என்ற அடிப்படையில் மனிதன் இக, பர சுகங்களை அடைய வழிகாட்டுகிறது.
- கடவுள் தொலைவில் இருப்பவரல்லர் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உறைந்துள்ளார் என்ற நம்பிக்கையை வலியுறுத்துகிறது.
- வேற்றுமையில் ஒற்றுமை காண்பது (unity in diversity).
- கணவன் மனைவி, அண்ணன் தம்பி, தாயும் மகளும், தந்தையும் மகனும், மாமியார் மருமகள், மூத்தோர் இளையோர் முதலிய குடும்ப பந்தங்களின் புனித உறவை வலியுறுத்தி அன்புமிக்க சமுதாய வாழ்விற்கு வழிவகுக்கிறது.
- மானுட ஆற்றலை விட, இறை ஆற்றலே மேலானது என்னும் கருத்துக்கள் அடிப்படையில் இறை உண்மை,, இறைநம்பிக்கை என்பவற்றை ஏற்று வாழ்தல் இந்து சமயத்தில் வலியுறுத்தப்படுகின்றது.
- இந்து தத்துவங்கள் வாழ்வியலை இணைத்துள்ள முறைமை மேலும் சிறப்பானது. சைவசித்தாந்தமானது, சமய வாழ்வியல் தத்துவமாகவும் அறிவியல், உளவியல் கருத்துக்களை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றது.
- உலகியலையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் இந்து சமயப்பண்பு உன்னதமானது.
- சனாதன தர்மமாக விளங்குகின்றது. மண்ணில் நல்லவண்ணம் வாழும் எண்ணங்களைப் பதிவுசெய்த இலக்கியங்கள் இந்து ரிஷிகளால் படைக்கப்பட்டுள்ளன. பிறர் நலம், பிறருக்கான பிரார்த்தனைகள், விருந்தோம்பல் என்பன சமயமாக, வாழ்வாதாரமாக, தர்மமாக இந்து சமயத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
- உலகளாவிய இலக்கியங்களிலே இசைப்பாடல் வடிவங்களை உள்ளடக்கிய சிறப்பும் இந்து சமயத்துக்குண்டு.
- உலக விடுதலைக்கான வேண்டுதல்கள் நாளாந்தம் ஆலயங்களிலே ஒலிக்கின்றன. வான்முகில் வழாது பெய்க..." என்னும் பாடலில் குறைவிலாது உயிர்கள் வாழ வழிகாட்டும் சைவநீதிக் கருத்துக்கள் பிரதானமானவையாகும்.
- பயன் கருதாத கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்த இந்து சமயம் "கடமையைச்செய்; பயனை எதிர்பாராதே " என்றும், "என்கடன் பணி செய்து கிடப்பதே " என்றும் பணிவான தொண்டை உயர் தொனியாகக் கொண்டுள்ளது.

- காலம் காலமாக வளர்ந்து வரும் கலைப்பண்பாட்டைக் கூறுவதுடன் கலை கலைக் காகவே என்பதை விட, கலை ஆன்மிக அனுபவத்திற்காகவே என்னும் கலைத்துவத்தை யும் அழகியல் இரசனையையும் அரவணைத்துக் கொண்டுள்ளது.
- இம்மை உலகம் மட்டுமல்லாது, மறுமை உலக வாழ்வையும் கூறுவதோடு உலக வாழ்வியலில் இருந்து விடுபடும் ஆர்வத்தைத் தூண்டும் சிறப்பும் முக்கியமானதாகும்.
- இற்றைக்கு 5000 ஆண்டுகள் பழமையானது இந்துசமயம். தனக்குச் சம காலத்தில் தோன்றிய பிற பண்பாடுகளின் சுவடுகள் அழிந்து போக, கால தேச வர்த்தமானங்களைக் கடந்து இன்று வரை நிலைத்துள்ள சிறப்பும் இந்துப் பண்பாட்டிற்கே உண்டு.
- உலகின் பல்வகை சமயப் பண்பாடுகளிலே இந்துப் பண்பாடு தனித்துவமானது; சிறப்புத்தன்மை வாய்ந்தது. அத்தகைய தனித்துவமான பண்பாட்டுக்கூறுகளே இந்துசமயம் எனும் பெருவிருட்சம் இன்றும் உலகப்புகழ் பெறக் காரணம் எனக் குறிப்பிட முடியும்.

## கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:

படி 1 : இந்து சமயத்தின் சிறப்பம்சங்களில் மாணவர்கள் தமக்குத் தெரிந்தவற்றைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படி 2 : மாணவர்கள் மேற்படி தலைப்புத் தொடர்பான மேலதிக விடயங்களைத் திரட்டுவதற்காக நூல்களை வழங்கி வழிப்படுத்துங்கள்.

படி 3 : மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து இந்து சமயத்தின் சிறப்பம்சங்களைத் தேடித் தொகுக்குமாறு கூறுங்கள்.

படி 4 : தொகுத்த விடயங்களை ஒழுங்குபட எழுதி, வகுப்பில் முன்வைக்க வழிப்படுத்துங்கள். அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்த வழிகாட்டுங்கள்.

### மேலதிக வாசிப்புக்குரியவை :

வியத்தகு இந்தியா - ஏ. எல். பசாம்
இந்துப் பண்பாட்டு மரபுகள் - பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
இந்துப் பண்பாடு அன்றும் இன்றும் - பேராசிரியர் வி. சிவசாமி

இணையத்தளம் : www.vedic Recearch.org

(www.tamil.net/Project.mathurai)

www.tamil heritage foundation,org

www.hindu.org

**தேர்ச்சி 1.0 :** இந்து சமயத்தின்சிறப்பம்சங்களையும் வரலாற்றுப் பின்னணியையும் இனங்கண்டு, அவை மனித வாழ்வை மேம்படுத்துமாற்றைத் தெரிந்து அவற்றில் ஈடுபாடு கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.2 :** இந்துசமயத்தின் வளர்ச்சியை வரலாற்று ஆதாரங்கள் ஊடாக விளங்கிக் கொண்டு அவை தொடர்பாக எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள் :** 04

**கற்றற் பேறுகள் :**

- இந்துப் பண்பாட்டின் வரலாற்று மூலங்களைப் பட்டியல்படுத்திக் காட்டுவார்.
- இந்து சமயத்தின் தொன்மையைத் தொல்பொருட் சின்னங்கள், இலக்கியச் சான்றுகள், வெளிநாட்டார் குறிப்புகள் முதலான ஆதாரங்கள் மூலம் அறிந்து முன்வைப்பார்.
- தொல்பொருள் பொறிப்பு சான்றுகளைத் தாமே வாசித்து அறியும் ஆற்றலைப் பெறுவார்.
- ஒரு நாட்டில் இந்துப் பண்பாடு நிலவியமையை அறியக் கல்வெட்டுக்கள் அல்லது தொல்பொருட் சான்றுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்குவார்.
- சிந்து வெளிக்கால வழிபாட்டம்சங்களை ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார்.
- வேதங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பதையும் அவை வெளிப்படுத்தும் கருத்துக்களையும் எடுத்துரைப்பார்.
- ஆகம வழிபாட்டு முறைகளை விதிப்படி முன்வைப்பார்.
- இதிகாச, புராணங்கள் வெளிப்படுத்தும் உண்மைகளை எடுத்துரைப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : இந்து சமய இலக்கிய, வரலாற்று மூலங்கள்**

- வரலாற்று மூலாதாரங்கள் உண்மையை நிறுவக்கூடிய சான்றுகளாகும்.
  - கல்வெட்டுகள்
  - தொல்பொருட் சின்னங்கள்
  - இலக்கிய ஆராய்ச்சிகள்
  - பிறநாட்டு அறிஞர் குறிப்புகள் முதலானவை அடங்கும்.
- தொல்பொருள் ஆய்வுடன் தொடர்பான ஆதாரங்களில் அடங்கும் பட்டயங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் என்பனவும் அவற்றில் வெளியிடப்படும் பலவகை மொழிகளும் வரலாற்று ஆதாரங்களுக்குச் சிறந்த உதாரணங்களாகும்.
- வரலாற்று ஆதாரங்களில், வேறுநாட்டுப் பயணிகள் குறிப்புகள், கற்பாறைத் தூண் எழுத்துக்கள் (கொடைகள், தானங்கள்), நாணயங்கள் பற்றிய குறிப்புக்கள் பிரதான மானவை. அரசர்களின் மெய்க்கீர்த்திகள், செப்பேடுகளில் பொறிக்கப்பட்ட விடயங்கள் என்பனவும் வரலாற்று ஆதார வகைக்குள் அடங்கும்.
- கல்வெட்டு அமைப்பு பின்வரும் பகுதிகளை உடையது.
  1. மங்கல வாசகம்
  2. கல்வெட்டின் காலம்
  3. கல்வெட்டின் நோக்கம்
  4. ஓம்படைக் கிளவி என்பனவாகும்.
- கல்வெட்டுக்களிலுள்ள "ஸ்வஸ்தி ஶ்ரீ" என்பது "மங்களமுண்டாகுக" என்னும் பொருளைத் தருகின்றது.

- கல்வெட்டுப் பொறிப்புக்கள் போல நினைவுச் சின்னங்களும் இந்து சமயத்தை அறிய உதவும் மூலாதாரங்களாக விளங்குகின்றன. மட்கலம், ஜாடிகள், வணிகப் பொருட்கள் என்பன இவற்றில் அடங்கும்.
- வரலாற்று இலக்கிய மூலங்களில் பிரமாண நூல்கள், மெய்க்கீர்த்திகள், காப்பியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள், நாடகங்கள், பழங்கதைகள் என்பவற்றின் மூலம் தகவல்கள் பெறப்படும்.
- அயல் நாட்டவர் குறிப்புக்களும் இந்து சமயத்தை அறிய உதவும் மூலாதாரங்களாகும். உ-ம்: மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா என்னும் நூலில் பாண்டிய அரசர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பிளினி - தமிழகத் துறைமுகம் பற்றியும் நாடுகளுக்கு இடையிலான தொடர்புகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். பாகியன், யுவான் சுவாங் என்பவர்களின் குறிப்புக்கள் குப்தர் பண்பாட்டைக் குறிப்பிடுகின்றன.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

படி 1 : இந்து சமயத்தின் மூலாதாரங்களில் ஒன்றைத் தெரிவுசெய்து மாதிரிகளுடன் முன்வையுங்கள்.

படி 2 : கல்வெட்டுகள், தொல்பொருட் சின்னங்கள், பிற நாட்டு அறிஞர் குறிப்புகள் என்ற தலைப்புகளை வழங்குங்கள். அவை தொடர்பான படங்கள், மாதிரிகள், கருத்துக்கள் என்பவற்றைத் தேடித் தொகுக்க வழிகாட்டுங்கள்.

படி 3 : தேடித் தொகுத்தவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்

**மேலதிக வாசிப்புக்குரியவை :**

| | |
|---|---|
| வியத்தகு இந்தியா | - ஏ. எல். பசாம் |
| தமிழக சமுதாய, பண்பாட்டு வரலாறு | - பேராசிரியர் ந. க. மங்கள முருகேசன் |
| இந்தியாவின் சிறப்பு வரலாறு | - மொழி பெயர்ப்பு |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | - டாக்டர் கே. கே. பிள்ளை |
| சாசனமும் தமிழும் | - பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை |
| இலங்கையில் இந்துக் கலாசாரம் | - பேராசிரியர் சி. பத்மநாதன் |
| இலங்கையில் தமிழ்ச்சாசனங்கள் | - பேராசிரியர் சி. பத்மநாதன் |
| இந்துப் பண்பாட்டு மரபுகள் | - பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் |
| இந்துப் பண்பாடு அன்றும் இன்றும் | - பேராசிரியர் வி. சிவசாமி |

**தேர்ச்சி 1.0** : இந்து சமயத்தின்சிறப்பம்சங்களையும் வரலாற்றுப் பின்னணியையும் இனங்கண்டு, அவை மனித வாழ்வை மேம்படுத்துமாற்றைத் தெரிந்து அவற்றில் ஈடுபாடு கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : இந்துசமயத்தின் வளர்ச்சியை வரலாற்று ஆதாரங்கள் ஊடாக விளங்கிக் கொண்டு அவை தொடர்பாக எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள்** : 36

**கற்றற் பேறுகள்** :

- இந்துப் பண்பாட்டின் வரலாற்று மூலங்களைப் பட்டியல்படுத்திக் காட்டுவார்.
- இந்து சமயத்தின் தொன்மையைத் தொல்பொருட் சின்னங்கள், இலக்கியச் சான்றுகள், வெளிநாட்டார் குறிப்புகள் முதலான ஆதாரங்கள் மூலம் அறிந்து முன்வைப்பார்.
- தொல்பொருள் பொறிப்பு சான்றுகளைத் தாமே வாசித்து அறியும் ஆற்றலைப் பெறுவார்.
- ஒரு நாட்டில் இந்துப் பண்பாடு நிலவியமையை அறியக் கல்வெட்டுக்கள் அல்லது தொல்பொருட் சான்றுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதை விளக்குவார்.
- சிந்து வெளிக்கால வழிபாட்டம்சங்களை ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார்.
- வேதங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பதையும் அவை வெளிப்படுத்தும் கருத்துக்களையும் எடுத்துரைப்பார்.
- ஆகம வழிபாட்டு முறைகளை விதிப்படி முன்வைப்பார்.
- இதிகாச, புராணங்கள் வெளிப்படுத்தும் உண்மைகளை எடுத்துரைப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி** :

1.2.2 சிந்துவெளிக் காலம்

- உலகின் பல பாகங்களிலும் பல்வேறு நதிக்கரை நாகரிகங்கள் தோன்றி வளர்ச்சி பெற்றன. அவ்வாறு தோன்றிய ஏனைய நதிக்கரை நாகரிகங்களுக்கு ஒப்பான சிறப்புடையதாக சிந்துவெளி நாகரிகமும் அமைகின்றது.
- சிந்துவெளி நாகரிகம் கி.மு. 3250 தொடக்கம் கி.மு. 2750 வரையான காலப் பகுதியில் சிறப்புடன் விளங்கி இருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் துணிபு.
- சிந்துவெளிப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் இந்து சமய நம்பிக்கைகளைக் கடைப் பிடித்தனர் என்பது வரலாற்று ஆதாரங்கள் தரும் உண்மையாகும். எனவே இந்துசமயம் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை உடையதெனக் கொள்ள இடமுண்டு.
- சிந்து நதி பாயும் பகுதியானது 1922 தொடக்கம் 1930 வரையான காலத்தில் சேர். ஜோன் மார்ஷலின் தலைமையில் அலெக்ஸ்சாண்டர், கன்னிங்காம் முதலான புதைபொருளாய்வாளர்களால் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.
- அவர்களால் மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற பல நகர அழிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் ஹரப்பா மேற்குப் பஞ்சாப் மாநிலத்திலும், மொகஞ்சதாரோ பாகிஸ்தானிலும் உள்ளன.
- அந்நகரங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டடங்கள், கற்சிலைகள், இலிங்க வடிவங்கள், களிமண் பொம்மைகள், சித்திர வடிவ எழுத்துக்கள் போன்ற புதைபொருட்களைக் கொண்டு சிந்துவெளி மக்களின் சமயநிலை, வாழ்க்கை முறை என்பன பற்றி அறிய முடியும்.

**சமய நிலை**

- சிந்துவெளிப் பிரதேச புதைபொருட்கள் இந்து சமயச் சார்புடையனவாகவே உள்ளன.
- இப்பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருட் சின்னங்கள் வாயிலாக இம்மக்கள் இந்து சமயத் தெய்வங்களை வழிபட்டனர் என்பர்.
- சைவத்தின் பரம்பொருளாகிய சிவனை அக்கால மக்கள் முக்கிய தெய்வமாக வழிபட்டனர். முத்திரைகள், இலிங்க வடிவங்கள் என்பனவற்றின் ஊடாக அக்காலச் சிவ வழிபாட்டை அறிய முடியும்
- முத்திரை ஒன்றில் யோக நிலையில் அமர்ந்த ஒரு வடிவம் காணப்படுகிறது. இவ் வடிவம் தலை மீது வளைந்த கொம்புகள், இடுப்பில் இரட்டைப் பட்டையாக அரைக்கச்சை என்ற அங்க இலட்சணங்களுடன் காட்சியளிக்கிறது.
- யோகி வடிவத்தின் கீழ்ப் புறத்தில் யானை, புலி, எருது, காண்டாமிருகம் போன்ற அம்சங்களைக் காணலாம். அவ்வடிவத்தினை சேர். ஜோன் மார்ஷல் போன்றவர்கள் சிவனுடன் இனங்காண்கின்றனர்.
- தற்காலச் சக்தி வழிபாட்டுடன் இனங்காணத்தக்கதாக சிந்து வெளி மக்களிடையே நிலவிய தரைப்பெண் வழிபாடு அமைகிறது.
- ஒரு பெண்ணின் கருப்பையில் இருந்து செடி ஒன்று முளைப்பது போன்று பொறிக்கப்பட்டுள்ள முத்திரையை இதற்கு ஆதாரமாகக் காட்டுவர். உற்பத்திக்குக் காரணமான பூமியை இம்மக்கள் தாயாக வழிபட்டனர் எனக் கொள்வர்.
- ஆய்வாளர்கள் இத்தெய்வத்தைத் தரைப்பெண் வழிபாடு அல்லது தாய்த் தெய்வ வழிபாடு என்று குறிப்பிடுகின்றனர்.
- களிமண் தாயத்தொன்றில் முக்காலி ஒன்றின்மேல் பாற் கிண்ணம் காணப்படுகின்றது. அருகில் பாம்பு தனது படத்தை விரித்தபடி உள்ளது. இன்றும் எமது சமயத்தில் நாகபாம்பை பால், பழம் படைத்து வழிபடும் மரபு இருந்து வருகின்றது.
- சில முத்திரைகளில் மரங்களும், அம்மரங்களில் உறையும் பெண் தேவதைகளின் வடிவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.
- ஒரு முத்திரையில் மரங்களுக்கு இடையில் பெண் உருவம் ஆடையின்றிக் காணப்பட அதன் கீழ் ஒரு பெண் அவ்வடிவத்தினை வழிபடும் வகையில் காட்சியளிக்கின்றது. எனவே அம்மக்கள் விருட்சங்களை அல்லது அவற்றில் உறையும் தெய்வங்களை வழிபட்டிருக்க வேண்டும் என்று கொள்வர்.
- சூரியவழிபாட்டுடன் தொடர்புடைய ஆதாரங்களும் சிந்துவெளிப்பகுதியில் கிடைத்துள்ளன.
- இன்றைய இந்து மதத்தில் காணப்படும் வழிபாடுகளுக்கு ஒப்பான சமயச் சடங்குகள் அக்கால மக்களிடையே நிலவியதை உணரலாம்.
- முத்திரைகளில் இறைவனின் முன் ஆட்டைப் பிடித்திருப்பதனைப் போலவும், ஒரு பெண் மண்டியிட்ட வண்ணம் இருக்க, ஒருவன் வாளை ஓங்குவது போலவும் காணப்படுகிறது. இம்மக்களிடையே பலியிடுதல் முக்கிய சடங்காக இடம்பெற்றமைக்குரிய சான்றாக இது அமைகிறது.
- இன்றைய இந்து சமயத்தில் நிலவும் ஆலய வழிபாட்டுடன் தொடர்புடையதாகவுள்ள நிவேதன வழிபாட்டினை வெளிப்படுத்தும் ஆதாரங்களையும் காணலாம்.

- முத்திரையொன்றில் பெண்கள் படைக்கும் தட்டுக்களை ஏந்தியவாறு காணப்படுகின்றனர்.
- பூசைத் தட்டுகள் கிடைக்கப் பெற்றமையினைக் கொண்டு, தெய்வங்களுக்கு பூசைப் பொருட்களை நிவேதனமாகப் படைத்து வழிபட்டிருக்க வேண்டுமெனக் கருதுவர்

**கலைகள் - நுண்கலைகள்**

- சிந்துவெளிப் பிரதேசத்தில் கலைகளின் வளர்ச்சியையும் காணலாம்.
- மொஹஞ்சதரோ, ஹரப்பா போன்ற இடத்துக் கட்டடங்களும் அக்கால கட்டடக் கலையின் வளர்ச்சியை அறிவதற்கு உதவுகின்றன.
- உயரமான கோயில்களை அமைத்த சுமேரிய மக்களோடு வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்த சிந்துவெளி மக்கள், நிலையான கோயில்களை அமைத்திருக்க வேண்டுமெனக் கருத இடமுண்டு. இப்பிரதேசத்தில் கோயில் இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படும் இடம் இதுவரை அகழ்வாய்வு செய்யப்படவில்லை.
- இங்குள்ள செய்குளத்திற்கருகே எட்டு அறைகளைக் கொண்ட கட்டடம் ஒன்று காணப்படுகின்றது. இவ்வெட்டு அறைகளும் மேலே ஏறுவதற்கு படிக்கட்டுக்களைக் கொண்டுள்ளன. கட்டிடத்தின் அமைப்பை அவதானித்த ஆய்வாளர்கள் இங்கு வாழ்ந்தவர்கள் சமயச் சார்புடையவர்களாக இருந்திருக்க வேண்டுமென கருதுவர்.
- இப்பிரதேசத்தில் மாளிகை போன்ற கட்டிட அமைப்புகள், களஞ்சிய அறை, நீராடு கின்ற குளம், மாடி வீடுகள், வீடுகள் என்று பல கட்டடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கட்டடம் ஒன்று 242 அடி நீளமும் 112 அடி அகலமும் கொண்டதாக உள்ளது.
- மழைநீருக்குத் தாக்குப் பிடிக்கும் வண்ணம் வெளிப்புறச் சுவர்களுக்கு சுட்ட செங் கற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.
- உட்புறச் சுவர்களுக்கு சூளையிடப்படாத செங்கற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.
- அடுக்கு மாடி வீடுகளுக்கு அதன் பாரத்தைத் தாங்கும் வகையில் நடுப்பகுதிச் சுவர்கள் தடிப்பாக அமைக்கப்பட்டுள்ளன.
- மொஹஞ்சதரோ, ஹரப்பா போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு சிற்ப வடிவங்களும் அக்கால சிற்பக்கலை வளர்ச்சியைக் காட்டுவன.
- சிந்துவெளி காலம் சிற்பக்கலை வளர்ச்சியைக் காட்டுவதாக பல ஆய்வாளர் கருதுவர். சேர். ஜோன். மார்ஷல் 'இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது' என்று கூறுவதனையும் காணலாம்.
- சிந்துவெளி மக்கள் சிற்பங்களுக்கு வெண்கலம், பழுப்பு நிறக் கற்கள், சுண்ணக் கற்கள் போன்றவற்றினை மூலப்பொருளாகப் பயன்படுத்தினர்.
- சிந்துவெளி பிரதேசத்தில் வெளிப்படுத்தப்பட்ட சிற்பங்களுள் ஆணின் வடிவம், வெண் கலத்தினாலான நடனமாதின் வடிவம், ஆடவர் வடிவங்கள் போன்றவற்றைக் கூறலாம்.
- வெண்கலத்தில் வார்க்கப்பட்டுள்ள நடன மாதின் வடிவம் வழுவழுப்பாகவும் ஒழுங் காகவும் செப்பனிடப்பட்டுள்ளது. இவ்வகைச் சிலைகள்: 'சிவபெருமானது பிற்கால நடனத்திற்குத் தோற்றுவாய் ஆகலாம்' என்று மா. இராசமாணிக்கனார் கருதுகின்றார்.

- இங்கு கிடைக்கப் பெற்ற மட்பாண்டங்கள் மீது பாம்புகள், மீன்கள், வட்டங்கள், சதுரங்கள், இலைகள் என்று பல உருவங்கள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.
- மட்பாண்டங்களில் காணப்படும் வடிவங்கள் அக்கால ஓவியக்கலை பற்றி அறிய உதவுகின்றன.
- முத்திரைகளில் பொறிக்கப்பட்டுள்ள மிருதங்கம், தவில் போன்ற சான்றுகள் அக்கால இசைக் கலை பற்றி அறிய உதவுவன.
- துளைகளை உடையதாகக் காணப்பட்ட ஊதுகுழல் வாசிக்கும் நிலையில் இருந்த தாக அறிஞர் மாக்கே குறிப்பிடுகிறார்.

- **வாழ்க்கை முறை**
  - சிந்துவெளிப் பிரதேச மக்கள் நாகரிகம் உடைய வாழ்க்கையை வாழ்ந்தமைக்கு அப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதைபொருட் சின்னங்களே சான்றாக அமையும்.
  - சிந்துவெளிப் பிரதேச மக்களின் முக்கிய தொழிலாக வாணிபமே இருந்தது. சிந்துவெளியில் கிடைத்த முத்திரைகள், மட்பாண்டங்கள், கருவிகள் போன்றவை சுமேரியா, மொசப்பதேமியா, எகிப்து போன்ற நாடுகளில் கிடைக்கப் பெறுகின்றமை யைக் கொண்டு சிந்துவெளி மக்கள் மேற்கூறிய நாட்டு மக்களுடன் வணிகத் தொடர்புகளை வைத்திருந்தனர் எனக் கொள்வதற்கு இடமுண்டு.
  - கப்பல் கட்டுதல், தச்சுத் தொழில், சிற்பத் தொழில், கைவினைத் தொழில் என்பன போன்ற தொழில்களிலும் அம்மக்கள் ஈடுபட்டனர்.
  - அங்கு கண்டுபிடிக்கப்பட்ட மதகுருவின் ஆடையில் பூவேலைப்பாட்டுடன் கூடிய சித்திரத்தைக் காணமுடிகின்றது.
  - ஆண்கள் மேலாடைகளை அணியும் அளவிற்கு அக்கால மக்கள் நாகரிகமுடைய வர்களாக வாழ்ந்தனர் என்பது இதன் மூலம் பெறப்படுகிறது.

**வேதம்**

- இந்து இலக்கியங்களுள் வேதம், ஆகமம் என்பன முதன் நூல்கள் எனவும் பிரமாண நூல்கள் எனவும் கொள்ளப்படுகின்றன.
- வேதம் என்ற சொல் 'வித்' என்னும் வினையடியிலிருந்து தோன்றியது. அது அறிவு என்னும் பொருள் தரும். அதனால் வேதங்களை அறிவு நூல் எனக் கொள்வர்.
- வேதங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை என்பது மேலோர் மரபு.
- வேதங்களை வகுத்தவர் அல்லது தொகுத்தவர் வியாசர் ஆவார். வியாசர் என்பது ஒரு காரணப்பெயர். அதற்குத் தொகுப்பாசிரியர் எனப் பொருள் கொள்வர்.
- வரலாற்று அடிப்படையில் வேத இலக்கியங்கள் கி.மு. 1500 - கி.மு. 600 வரையிலான காலப்பகுதியில் தோற்றம் பெற்றன எனக் கூறப்படுகின்றது.
- வேதங்களை எழுதாமறை, எழுதாக்கிளவி, சுருதி, மறை, அபௌருஷேயம், சுயம்பு, ஆம்நாயம் முதலான பல பெயர் கொண்டு அழைப்பர்.

## வேதங்களின் வகையும் அமைப்பும்

- ஆரம்பத்தில் வேதங்கள் 'திரயீ வித்யா' என மூன்றாகச் சொல்லப்பட்டன. அவை இருக்கு, யசுர், சாமம் என்பனவாகும். பின்னர் வழக்கில் இருந்த அதர்வ வேதமும் இணைக்கப்பட்டு, நான்காகக் கூறப்பட்டன.
- வேதங்கள் நான்கு என்பதனால் அவை சதுர்மறை, சதுர்வேதம் என அழைக்கப்பட்டன.
- இருக்கு வேதம் 10 மண்டலங்களையும் 1028 சூக்தங்களையும் கொண்டுள்ளது.
- 101 சாகைகளைக் கொண்ட யசூர் வேதம் கிருஷ்ண யசூர், சுக்கில யசூர் எனும் இரு பிரிவுகளைக் கொண்டது.
- சாம வேதம் 1875 பாடல்களைக் கொண்டுள்ளதுடன் பூர்வ ஆர்ச்சிகம், உத்தர ஆர்ச்சிகம் என்னும் இரு பிரிவுகளையும் கொண்டுள்ளது.
- அதர்வண வேதம் 20 காண்டங்களையும், 731 சூக்தங்களையும், 6000 பாடல்களையும் கொண்டுள்ளது.
- நான்கு வேதங்களும் மூன்று நான்கு பகுதிகளையும் காண்டங்களையும் உடையன.
- சங்கிதை, பிராமணம், ஆரணியகம், உபநிடதம் என்பன நான்கு பகுதிகளாக உள்ளன. அவற்றுள் சங்கிதை என்பது மந்திரங்களின் தொகுப்பாகும். பிராமணம் என்பது வேள்விக் கிரியைகளுக்குரிய விதிகளைக் கூறும். ஆரணியகம் என்பது வானப்பிரஸ்தனுக்குரிய சமய அனுட்டானங்களைக் கூறும். உபநிடதம் என்பது உண்மைப்பொருள் பற்றிய விசாரணைகளைக் கொண்டது.
- சங்கிதை, பிராமணம் என்பன வேதத்தின் கர்ம காண்டப் பகுதியைச் சார்ந்தவை.
- ஆரணியகம் வேத நூல்களின் உபாசனைக் காண்டமாகும். உபநிடதம் வேதத்தின் ஞான காண்டப் பகுதியைச் சார்ந்தவையாகும்.

## வேதங்களில் தெய்வங்களும் வழிபாடுகளும்

- வேத இலக்கியங்கள் அக்காலத்தில் நிலவிய சமய நிலை பற்றி அறிய உதவுகின்றன.
- வேத கால மக்களிடையே காணப்பட்ட இயற்கை வழிபாடு பற்றி இவை விபரிக்கின்றன.
- இயற்கை அம்சங்களே நாளடைவில் தெய்வங்களாக உயர்வு பெற்றன.
- வேதங்களில் கூறப்படும் 33 தெய்வங்களையும் விண்ணுலகத் தெய்வங்கள், இடையுலகத் தெய்வங்கள், மண் உலகத் தெய்வங்கள் என வகைப்படுத்துவர்.
- வேதங்கள் தெய்வங்களை வழிபடுவோருக்கு வரங்களை கொடுப்பனவாகவும் பகைவர்களிடமிருந்து பாதுகாப்பவையாகவும் குறிப்பிட்டன.
- வேதங்களில் கூறப்பட்ட தெய்வங்களே பிற்கால சமய வளர்ச்சியின் தெய்வீக நம்பிக்கையில் பிரதான இடத்தை பெறுகின்றன.
- வேதகால மக்கள் தெய்வங்களுக்கு செய்த வழிபாடுகள், கிரியைகள் பற்றி வேதங்கள் கூறுகின்றன.

- வேதங்களில் அஷ்வமேதம், இராஜசூயம், வாஜபேயம், புருஷமேதம், சர்வமேதம் போன்ற வேள்விகள் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன.
- வேள்வி வழிபாட்டில் புரோகிதன், அக்கினி பகவான், சோமன் என்போர் பிரதான இடம் வகித்தனர்.
- வேள்விக் கிரியைகளின்போது ஓமகுண்டம் அமைத்தல், அக்கினி வளர்த்தல், தானஸ் துதி பாடுதல், பலியிடுதல், தானம் வழங்குதல், தட்சணை வழங்குதல் முதலான கிரியைகள் இடம்பெற்றன.
- வேள்விகளின் பிரதான நோக்கம் உலகியல் இன்பங்களேயாகும்.
- நீண்ட ஆயுள், போரில் வெற்றி, நோய் நீக்கம் முதலான உலகியல் இன்பங்களை அவாவி வேள்விகள் செய்யப்பட்டன.
- சவித்திரு எனும் ஞாயிற்றுக் கடவுளுக்குரிய காயத்திரி மந்திர செபம், விபூதி தாரணம் பற்றியும் வேதங்களில் காணலாம்.
- சுக்கிலயசூர் வேதம் உருத்திரனுக்குரிய பல திருநாமங்களைக் கூறி வழிபடும் முறையைக் கூறுகின்றது. உ-ம்: சதருத்திரியம்
- சாம வேதம் இறை வழிபாட்டிற்குரிய இசைப் பாடல்களைக் கொண்டுள்ளது.
- இருக்கு வேதம் " தூய்மையான இறைவனை தூய பாடல்களால் போற்றுவோமாக" என்று இசையால் இறைவனை வழிபடுதல் பற்றிக் கூறுகின்றது.
- அதர்வண வேதம் சாதாரண மக்களிடையே நிலவிய மாந்திரீக நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது.
- பௌஷ்டிகாணி, ஆயுஸ்ஸானி, ஸ்திரீகர்மாணி, ராஜகர்மாணி போன்ற பகுதிகள் செல்வச் செழிப்பையும், நிறைந்த ஆயுளையும் பெண்களின் சுபீட்சம் பற்றியும், அரசனின் நன்மை பற்றியதாகவும் அமைந்தவை.

## தனிமனித வாழ்வும் சமூக நிலையும்

- வேத இலக்கியங்கள் அக்கால மக்களின் வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றியும் விபரிப்பன.
- தனிமனித வாழ்க்கைப் படிநிலைகளாகிய பிரமச்சரியம், கிருகஷ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன தொடர்பான சிந்தனைகளை வேதங்கள் கொண்டுள்ளன.
- இருக்கு வேதத்தில் உள்ள பிரம்மசரிய சூக்தம், முனி சூக்தம், திருமணம் பற்றிய பாடல்கள் போன்றவற்றில் வாழ்க்கைப் படிநிலைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. திருமணம், கணவன் மனைவி உறவு, குடும்ப வாழ்வு, கணவரின் கடமைகள் பற்றியும் அவை குறிப்பிட்டுள்ளன.
- கணவன் - மனைவி என்போரைச் சுட்டும் 'தம்பதி' என்னும் தொடர் இருக்கு வேதத்தில் உள்ளது.
- குடும்பத் தலைவனின் கடமைகளுள் முக்கியமானது வேள்விச் சடங்கினை ஆற்றுதல்.
- வேத இலக்கியங்களில் பிதிர் வழிபாடு, மறுவுலக நம்பிக்கை ஆகியன கூறப்பட்டுள்ளன.

- வேத இலக்கியங்கள் ஊடாக, அக்கால சமூகக் கட்டமைப்பு, சமூகத் தொடர்புகள் என்பனவற்றை அறியலாம்.
- பிற்காலத்தில் வலுப்பெற்ற நால்வகை வருணக் கட்டமைப்பின் தொடக்கத்தை இருக்கு வேத புருஷ சூக்தப் பாடல்கள் கொண்டுள்ளன.
- நால்வருணத்தவருள் பிராமணர் சமூகத்தில் முக்கிய நிலையில் காணப்பட்டனர். சதபதப் பிராமணம் - 'பிராமணர்கள் அவனியில் நடமாடும் தெய்வங்கள்' என்று கூறுகின்றது.
- வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல் என்பன பிராமணர்களின் முக்கிய கடமைகள் எனக் கூறப்படுகின்றன.
- வேத காலச் சமூக அமைப்பில் சத்திரியர்களும் முக்கிய இடத்தை வகித்தனர்.
- வேத கால மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர். அதனை அடுத்து குழுத் தலைவர்கள் அரசர்களாக உயர்வு பெற்றனர்.
- அரசர்கள் மாளிகையில் வசிப்பவர்களாகவும், உயர்ந்த ஆடை ஆபரணங்கள் அணிபவராகவும் கூறப்பட்டுள்ளது. மக்களின் நலன்களைப் பேணும் வகையில் அரசனின் ஆட்சி அமைய வேண்டும் எனக் கூறப்பட்டிருந்தது.
- அரசரின் மகுடாபிஷேகத்தின்போது 'மன்னராகிய நீர் இன்று முதல் வலியோரையும் மெலியோரையும் சமமாக நடத்துவீராக' என்று புரோகிதன் வேண்டிக் கொண்டான்.
- அரசனுடன் தொடர்புடைய சபா, சமிதி முதலான நிறுவனங்கள் பற்றியும் வேதங்கள் கூறியுள்ளன. அரசனது அன்றாடச் செயற்பாடுகளுடன் தொடர்பு உடையனவாக இந்நிறுவனங்கள் காணப்பட்டன.

### தத்துவ சிந்தனைகள்

- வேத இலக்கியங்கள் இந்து மெய்யியல் தொடர்பான அடிப்படைச் சிந்தனைகளையும் கொண்டுள்ளன.
- பரம்பொருள், ஆன்மா, பிரபஞ்சம் தொடர்பான பல விடயங்கள் நாஸதீய சூக்தம், ஜம சூக்தம், வருண சூக்தம் போன்ற பகுதிகளில் உண்டு.
- ரிக் வேத 1:164:46 வது பாடலில், 'ஏகம் சத் விப்ரா வகுதா வதந்தி' என்னும் தொடர் ஒரு கடவுள் கொள்கையை பிரதிபலிப்பதாக உள்ளது.
- இருக்கு வேதத்தில் உள்ள நாஸதீயப் பாடலில் இந்து மெய்யியலில் உள்ள அத்வைதக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பத்தைக் காணலாம்.
- வேத இலக்கியங்களில் பிரபஞ்சம், ஆன்மா, ரிதம் தொடர்பான சிந்தனைகளையும் காணலாம்.
- இருக்கு வேதத்தில் உள்ள யம சூக்தம், இறப்பு பற்றிய பாடல்கள் போன்ற பகுதிகளில் ஆன்மாவின் இறப்புக்குப் பிற்பட்ட நிலை, ஆன்மாவின் கன்ம வினைகள், வினைகளுக்கான பயன்கள் பற்றிய கருத்துக்கள் உள்ளன.
- பிரபஞ்ச உற்பத்தி, பிரபஞ்சப் படைப்புக்கு முற்பட்ட நிலை, படைப்பின் மூலாதாரம் பற்றிய விடயங்களை இருக்கு வேதத்திலுள்ள நாஸதீய சூக்தத்தில் காண முடிகின்றது.
- இருக்கு வேதத்திலுள்ள வருணன் பற்றிய பாடல்களில் வரும் வருண சூக்தம் ஒழுக்கம் பற்றிய சிந்தனைகளைக் கொண்டுள்ளது.

- ரிதத்துக்கு பொறுப்புடையவன் வருணன். அதனால் ரிதஸ்ய கோபா என்ற பெயர் அவனுக்குண்டு. வருணன் உலக ஒழுங்கைப் பேணுபவனாகவும், மனிதர்களின் ஒழுக்கத்தைக் கண்காணிப்பவனாகவும் கூறப்படுகின்றான்.

  மேற்கூறியவற்றின் அடிப்படையில் வேத இலக்கியங்கள் அக்கால மக்களின் தத்துவ சிந்தனைகளைக் கொண்டிருப்பதுடன் அவை பிற்கால மெய்யியல் வளர்ச்சிக்கும் முன்னோடியாக உள்ளன.

## வேதங்களின் முக்கியத்துவம்

- இந்து சமய வளர்ச்சியில் வேதங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன.
- இந்து சமயம் சார்ந்த இறை நம்பிக்கை, தத்துவ சிந்தனைகள், அரசியல், சமூக சிந்தனைகள் போன்றவற்றின் வளர்ச்சியில் வேதங்கள் அதிக செல்வாக்குச் செலுத்தியுள்ளன.
- வேதங்கள் இறை சம்பந்தமுடையது என்பதுடன், அக்கால மக்களின் சமய நம்பிக்கை பற்றி அறிய உதவும் முக்கியமான இலக்கிய மூலங்களாக அமைகின்றன.
- பிற்காலத்தில் வைதீக மரபுகளைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் பல தோன்றுவதற்கு வேதங்கள் பிரமாணமாய் அமைந்தன.
- நால்வகை ஆச்சிரம நிலைகளின் வளர்ச்சிக்கும் வேதங்களே அடிப்படையாகும்.
- தரும தருமசூத்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் போன்றவற்றின் உருவாக்கத்தில் வேதங்களுக்கு முக்கிய பங்குண்டு.
- இறைவனைத் துதித்துப் பாடிய முதல் துதிப் பாடல்களாக இருக்கு வேதப் பாடல்கள் உள்ளன. பிற்காலத்தில் எழுந்த துதிப்பாடல்களுக்கு வேதங்களே முன்னோடி.
  உ-ம்: நாயன்மார் பாடல்கள், ஆழ்வார் பாசுரங்கள்

### 1.2.4 பிராமணங்கள்

- வடமொழி இலக்கிய வரலாற்றில் வேதங்களை அடுத்த முக்கிய பகுதியாகக் காணப்படுவது பிராமணங்கள் ஆகும்.
- வேதத்தின் முக்கிய பகுதியாகிய மந்திரங்கள் (சங்கிதை) தேவர்களை விளிப்பதற்கு உதவுவன. அவை ‘இருக்கு’ என்று சொல்லப்படும். செய்யுள் வடிவில் காணப்படும்.
- பிராமணம் எனும் சொல் ‘பிரமம்’, ‘பிராமண’ என்னும் சொற்களில் இருந்து பிறந் திருக்க வேண்டும் என்பர்.
- பிராமணம் என்பது வேள்வித்துறையில் வல்லவர்கள் கிரியைகள் பற்றி விரித்துரைக்கும் பகுதியாகும். வேள்விகள் பற்றி விரித்துரைக்கும் ஒரு பெருநூல்.
- பிராமணங்கள் பொதுவாக மந்திரங்களுக்கு உரை போன்றவை. அவை பெரிதும் உரைநடையில் உள்ளன. மந்திரங்களின் பொருளையும் பயனையும் சிறப்புக்களையும் கூறுவன.

- அவை தேவர்களைப் போற்றவில்லை. மாறாக வேள்விகளைப் பற்றி விரித்துரைக் கின்றன. மந்திரங்கள் எப்பொழுது தோன்றுகின்றதோ அப்பொழுது பலரிடம் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வதும் இடம் பெற்றுள்ளன.
- பிராமணங்கள் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.
  (1) மந்திரங்களின் பொருள் முதலியவற்றைக் கூறும் முதற்பகுதி சங்கிதை என்றும்
  (2) வானப்பிரஸ்தம், ஆச்சிரம தர்மங்கள் பற்றிக் கூறும் இரண்டாம் பகுதியை கூறுவது ஆரணியகம் என்றும் கூறுவர்.
  (3) ஒருவன் ஆசிரியனை நாடிச்சென்று உபதேசம் பெற்று விடுதலையைப் பெறும் வழியைக் கூறுவதனை உபநிடதம் என்றும் கூறுவர்.
- பிராமணங்களின் சில பகுதிகள் வேத மந்திரங்களைப் பற்றியும் சில பகுதிகள் மக்களின் பழக்கவழக்க முறைகள் பற்றியும் கூறும்.
- “பிராமணங்கள் இல்லாத வேதங்கள் வேதங்களாகா” என்னும் கூற்று பிராமணங்களின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தும்.
- அதர்வ வேதம் வேதங்களுள் ஒன்றாக போற்றப்படுவதற்கு அதர்வ வேதத்துடன் பிராமணங்கள் இணைந்திருப்பதே காரணம் என்பர்.
- முக்கிய பிராமணங்கள் வருமாறு:
  * இருக்குவேதம் சார்ந்தவை
    (i) ஐதரேய பிராமணம்
    (ii) கௌஷீதகீயப் பிராமணம்
  * கிருஷ்ண யசுர் வேதம
    (i) தைத்திரீயப் பிராமணம்
  * சுக்கில யசுர் வேதம்
    (ii) சதபதப் பிராமணம்
  * சாமவேதம் சார்ந்தவை
    (i) தாண்டிய மகா பிராமணம்
    (ii) சட்விம்ச பிராமணம்
    (iii) ஜைமிநீய பிராமணம்
    (iv) பஞ்சவிம்சதி பிராமணம்
    (v) சாந்தோக்கிய பிராமணம்
  * அதர்வ வேதம்
    (i) கோபதப் பிராமணம்
- பிராமணங்களில் தெய்வங்கள் போற்றப்படுகின்றன.
    (i) இந்திரன்
    (ii) அக்கினி
      - இத் தெய்வங்களின் நிலை வேதகாலத் தெய்வநிலைக்கு ஒப்பானதல்ல.
    (iii) விஷ்ணு
    (iv) உருத்திரன்
      - இத்தெய்வங்கள் பிராமணங்களில் பெருந்தெய்வங்களாக உயர்வு பெற்றனர்.

  (v) பிரஜாபதி முக்கிய தெய்வம்

- வேள்வி வேட்டலே வாழ்க்கையின் குறிக்கோள் என்னும் வகையில் வேள்வி முக்கியத்துவம் பெற்றுள்ளது.
- வேள்வி வேட்பது, வலிமை பயக்கும் என நம்பப்பட்டது. யாகம் தான் பிரஜாபதி என நம்பினர்.
- பிராமணர் பற்றி வேதங்கள் கொண்டிருந்த கருத்துக்கள் இங்கு போற்றப்பட்டன.
- பிராமணங்கள் விதி என்றும் அர்த்தவாதம் என்றும் இரு பகுதிகளைக் கொண்டன. விதி என்பது கிரியைகள் நடத்தவேண்டிய ஒழுங்கு பற்றிக் கூறுவது. அர்த்தவாதம் என்பது விதிகள் உணர்த்தும் கருத்துக்களை விளக்குவது.
- குறிப்பாகக் கிரியைகளுக்கு விளக்கம் கூறும் பகுதிகளில் கதைகள், பழைய வரலாறுகள், இதிகாசங்கள் போன்றன எடுத்துக் கூறப்படும். இத்தகைய இலக்கியங்கள் தோன்றுவதற்குப் பிராமணம் அடிப்படையாக அமைகிறது.

### 1.2.5 ஆரணியகம்

- பிராமணங்களின் அடுத்த பகுதியாக அமைவது ஆரணியங்களாகும். தகுதியற்றவர்கள் கேட்பதன் மூலம் இழப்புக்கள் ஏற்படும் என்பதால் இந்நூல் காட்டிலே கற்பிக்கப்பட்டது
- காட்டிலே பயிலப்பட்டதால் ஆரணியகம் எனப்பட்டது. அதனால் ஆரணியகத்தை வனநூல் என்றும் வழங்குவர்.
- இந்நிலை வானப்பிரஸ்த நிலையாகக் கொள்ளப்படும்.
- ஆரணியகங்கள் பற்றிய சிந்தனைகள் தோன்றுவதற்குப் பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றுள் பின்வரும் காரணங்கள் முக்கியத்துவம் உடையன.
  - (i) வேள்விகள் எதிர்பார்த்த பயனை விளைவிக்கவல்லன அல்ல என்ற நம்பிக்கை.
  - (ii) உண்மையான உறுதிப்பொருள் உண்டு என்று பூரணமாக நம்பிக்கை கொண்டிருத்தல்.
  - (iii) உறுதிப்பொருளை நோக்கி நடக்க முற்படல்.
  - (iv) ஆரணியகங்கள், வேள்வி விதிகளை விரித்துரைக்கவில்லை. துறவு, அனுபூதி, உறுதிப்பொருள் பற்றிய சிந்தனைகள் மீட்டுருவாக்கம் பெற்றன.
  - (v) ஐதரேய ஆரணியகம், கௌஷீதகி ஆரணியகம், தைத்திரீய ஆரணியகம் முதலான சில ஆரணியகங்களே இன்று கிடைப்பன.

### 1.2.6 உபநிடதம்

- உபநிடதம் வேதங்களின் இறுதிப்பகுதியாகவும் அமைவதினால் அது வேதாந்தம் எனவும் அழைக்கப்பட்டது.
- பிராமணங்கள், ஆரணியகங்கள், உபநிடதங்கள் என்பன ஒன்றன் சார்பாக அமைவன. அவ்வகையில்;

  உ-ம்: வேதத்தைச் சார்ந்த ஐதரேய பிராமணங்கள் அடங்கி இருப்பது ஐதரேய ஆரணியகம். ஐதரேய ஆரணியகத்துள் அடங்கியிருப்பது ஐதரேய உபநிடதம் ஆகும்.

## உபநிடதங்கள் தோன்றிய காலச் சூழ்நிலை

- **உபநிடதம் தோன்றிய சூழ்நிலை:**
    - * கிரியைகளுக்கு எதிர்நிலையாக எழுந்தவை
    - * கிரியைகள் மூலமாக வாழ்வில் முழுமை பெறமுடியாத நிலையில் ஏற்பட்ட ஆன்மிகத் தேடல்
  - இவை கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் எழுந்தவை. 108 உபநிடதங்கள் பிரதானமானவை.
  - உபநிடதங்கள் கிரியைகளின் விளக்கமாக எழுந்தவை. ஆன்மிக ஞானத்தைப் போதிப்பதற்காகவும் அறிவு வழியால் இறைவனை வழிபடவும் எழுந்தவை எனக் குறிப்பிடலாம்.
- **உபநிடதம் என்பதன் பொருள்:**
    - உப + நி + சத் எனப் பிரிக்கப்பட்டு குருவுக்கு மிக அண்மையிலிருந்து அவர் கூறுகின்ற கோட்பாடுகளைச் சிரத்தையுடன் கற்றல் எனப் பொருள்படும்.
    - "பிரமஞானத்தை அறிவுறுத்தும் ஓர் ஆசிரியரின் அடியில் நெருங்கியிருந்து மறைபொருட் கோட்பாடுகளைச் சிரத்தையுடன் கேட்டல்" எனவும் பொருள் கொள்வர். அதாவது சீடன், குருவை நெருங்கியிருந்து ஞான உபதேசம் பெறுவதைக் குறிக்கும்.
  - உபநிடதங்கள் முந்திய கால உபநிடதங்கள் என்றும் பிந்திய கால உபநிடதங்கள் என்றும் கூறப்படும். பிருகதாரணிய, சாந்தோக்கிய உபநிடதங்கள் முற்கால உபநிட தங்களில் அடங்கும்.
  - உபநிடதங்களில் சில உரைநடையிலுள்ளன. ஆயினும் சுவேதாஸ்வர, கட உபநிடதங்கள் செய்யுள் நடையில் காணப்படுகின்றன. பொதுவாகவே உபநிடதங்கள் வினா விடை வடிவிலேயே காணப்படுகின்றன.
  - ஒவ்வொரு குருசீட உரையாடலும் வெவ்வேறு விடயங்களைக் கூறினாலும் பொதுவாகவே பிரமம் பற்றியே குறிப்பிடுகின்றன.

## பிரமம்

### அ. பிரமம் என்பதன் பொருள் விளக்கம்

- பிரஹ் என்ற வினை அடியாகப் பிறந்தது பிரமமாகும்.
- இதன் பொருள் வளர்தல்,பெருகுதல், பரவுதல் என்பதாகும்.
- தஜ்ஜலன் - தஜ் என்றால் அது ஜீ - உலகத்தைத் தோற்றுவிப்பது லி- தன்னுள் ஒடுக்குவது அன் - தாங்குவது. அதாவது உலகின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாக இருப்பது பிரமமாகும்.

### ஆ. பிரமத்தின் தன்மைகள், இயல்புகள்

- உபநிடதத்தின் பிரதான தத்துவக் கோட்பாடு பிரம சிந்தனையாகும்.
- அனைத்திற்கும் அடிப்படையானது. சொல்லால் விளக்க முடியாதது. உலகையும் உடலையும் இயக்குவது.
- பிரமம் சத்தியமானது. ஞானமுடையது. அநந்தமானது. பரிபூரணமானது என்னும் கருத்துக்கள் கூறப்படுகின்றன.
- மகாவாக்கியங்களில் ஆத்மாவே பிரமம் சிந்தனைகள் - தத்துவமசி, அகம்பிரமாஸ்மி

- பிரமம் பரிபூரணமானது. சலனமற்றது.பரவித்யாவானது. ஒன்றானது. மாறாத் தன்மையுடையது. குணமற்றது. சொல்லால் விளக்கமுடியாதது. பிரமம் சத், சித் ஆனந்த வடிவமானது. மாற்றமற்றது. தனித்துவமானது. எல்லையற்றது. என்றுமுள்ளது. நிலை யானது. பிரமத்துடன் எதனையும் ஒப்பிட முடியாது. அழியாதது. நிலையானது.
- முண்டக உபநிடதத்தில் அனைத்தும் பிரமமே என்று கூறப்பட்டுள்ளது.
- பிரசன உபநிடதத்தில் உயர் பிரமம் ஒன்றே உண்மை. அதற்கு அப்பால் எதுவு மில்லை என்று கூறப்பட்டுள்ளது.
- சாந்தோக்கிய உபநிடதத்தில் பிரமம் இரண்டற்றது.
- பிருகதாரணிய உபநிடதத்தில் இந்த உலகின் அடி யாது? என்னும் வினாவும். இவ்வுலகம் எதனால் தோன்றி, எதனால் இயங்கி, எதில் ஒடுங்குகின்றதோ அதுவே பிரமம்" என்றும் கூறப்பட்டுள்ளது.
- பிரமக்கோட்பாட்டை விளக்கும் உத்திகளும் உதாரணங்களும்:

  உதாரணம் காட்டல் - ஆலம் விதை, உப்புநீர், சிலந்தி, நெருப்புத் தழல்

  கதை கூறல் - தைக்கு என்னும் வண்டிக்காரன் கதை சத்தியகாமன் ஜயபாலன் - கதை

  உரையாடல் முறை - யக்ஞ்ஞுவல்லியர - மைத்திரேயி, உத்தாலகர் - சுவேதகேது தர்க்கித்தல், ஐயம் தெளிதல் , செயல் முறைக் கல்வி ஆகிய உத்திகள் பின்பற்றப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| பிரமத்தின் நிலை | - சகுணம், நிர்க்குணம் |
| சர்வவியாபகம் | - உப்பு, நீர் |
| பிரமத்தில் இருந்து உலகம் தோன்றுதல் | - ஆலம் வித்து |

**ஆன்மா**

- உபநிடத மகாவாக்கியங்கள் ஆத்மா பற்றிக் கூறியுள்ளன. உடலின் இயக்கத்திற்கு காரணம் ஜீவாத்மாகும். ஆன்மா ஒன்றே அதுவே பரமாத்மா என்றும் உபநிடதம் கூறுகிறது.
  - உடலில் இருந்து உடலை இயக்கும் சக்தியே ஆன்மா என்று கூறப்படுகின்றது. ஆன்மா சிற்றறிவுடையதாக இருப்பதால் அபரவித்யாவானதாகும்.
  - அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் எனப் பல சடஉடம்பால் மூடப்பட்டுள்ள நிலை ஆன்மாக்களுக்குண்டு.
  - தீப்பொறியில் இருந்து சிறிய சிறிய பொறிகள் உருவாக்குவது போல பிரமமே பல ஜீவன்களாகத் தோற்றம் பெறுகின்றது.

- **ஆன்மாவின் இயல்புகள்**
  - ஆன்மா உருவமற்றது கண்ணால் காண முடியாதது.
    * வண்டியிற் கட்டப்பட்ட குதிரை போல உடலை ஆன்மா இயக்குகின்றது.
    * காண்பது கண்ணல்ல. கண்ணைக் கருவியாக கொண்டு காண்பது ஆன்மா

- ஆன்மா அஞ்ஞானத்தில் மூழ்கி உழல்வதால் அறியாமை அடைகின்றது. அதனால் தீவினை செய்து பிறவியில் அகப்படுகின்றது.
- ஆன்மா தாம் செய்த வினையைத் தாமே அனுபவிக்க வேண்டும். பொன்கட்டியில் இருந்து ஆபரணங்கள் தோன்றுவது போலவும், நெற்கதிர் முற்றி உதிர்ந்து மீண்டும் முளைப்பது போலவும், புழு, புல்லின் நுனில் இருந்து வேறு புற்களுக்குத் தாவுவது போலவும், ஆன்மா வெவ்வேறு உடலில் பிறவி எடுக்கும் எனக் கூறப்படுகின்றது.
- ஆன்மா பிரமத்தை உணர்தல் உயர்ஞானமாகும். சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்பன பிரமஞானத்திற்கான (முத்திக்கான) வழியாகும்.

**பிரபஞ்சம்**

- பிரபஞ்சம் பற்றிய உவமைகள்
  நிலத்திலிருந்து தாவரங்கள் தோன்றுவது போலவும் ஒருவரது உடலிலிருந்து உரோமங்கள் எழுவது போலவும், தீயிலிலருந்து வெப்பம் தோன்றுவது போலவும், சிலந்தியிலிருந்து வலை தோன்றுவது போலவும் பிரமத்திலிருந்து பிரபஞ்சம் தோன்றுகின்றது.

- **கன்மம், மறுபிறப்பு**

1. புழுவானது ஒரு புல்லின் நுனியில் இருந்து இன்னொர புல்லுக்குத் தாவுவது போல ஒரு ஆன்மாவானது ஒரு உடலில் இருந்து இன்னொரு உடலுக்கு செல்கிறது.
2. பழைய ஆடைகளைக் கழைந்துவிட்டு புதிய ஆடைகளை அணிவது போல ஆன்மாவானது பழைய உடலைக் கழைந்து புதிய உடலை எடுக்கின்றது.
3. ஆசைகளை வெல்லாத ஒருவன் எந்த ஆசைகளுடன் இறக்கின்றானோ இறந்தும் அந்த ஆசைக்குரிய இடங்களில் பிறக்கின்றான்.

- முக்திக்குரிய வழி
  * சிரவணம், மனனம், நிதித்தியாசனம்
  * பக்தி வைராக்கியம், ஞானம்

## ஆகமம்

- **ஆகமம் என்ற சொல்லின் பொருள்**
  - தொன்றுதொட்டு வரும் அறிவு
  - ஆன்மா, மலநாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல்
- **ஆகமங்களின் சிறப்பு**
  - இந்து சமய வரலாற்றில் வேதங்களைப் போல் ஆகமங்கள் முதனூல்கள் ஆகும்.
  - சிரௌதம், சுப தந்திரம் என ஆகமம் சிறப்பிக்கப்படுகிறது.
  - வேதங்கள் பொது நூல் எனவும், ஆகமங்கள் சிறப்பு நூல் எனவும் கொள்ளப் படுகின்றன.
  - ஆகமங்கள் சிறப்பு நூல்கள் என்ற வகையில், சைவ ஆகமங்கள் சிவாகமங்கள், வைணவ ஆகமங்கள் சங்கிதைகள், சாக்த ஆகமங்கள் தந்திரங்கள் எனவும் அழைக்கப்படும்.
  - இந்து சமய தத்துவக் கோட்பாடுகள் பலவற்றில் ஆப்த வாக்கியப் பிரமாணமாக அமையும் சிறப்புடையது.
    உ-ம்: சைவ சித்தாந்தம்
  - இந்துக்களின் கோயில் கட்டட, சிற்பக் கலைகளை எடுத்துக் கூறுவது ஆகம மாகும்.
  - இந்துக்களின் கிரியை மரபுகளை நெறிப்படுத்துவதில் ஆகமங்கள் முக்கிய இடம் பெறுகின்றன.
  - ஆகமங்கள் கிரியை நெறி மூலம் வழிபாட்டை நெறிப்படுத்துகின்றன. இக்கிரியை நெறியை எடுத்துக் கூறும் நூலே பத்ததிகள் ஆகும்.
  - ஆகமங்கள் ஆலய வழிபாடு, சமய அனுட்டானங்கள், சைவ சித்தாந்த சிந்தனைகள் போன்ற பல விடயங்களின் ஊடாக மக்களின் வாழ்க்கையுடன் நெருக்கமுற்று விளங்குகின்றன.

- **ஆகமங்களின் பொருள் மரபு**

  (அ) கிரியைகள்
  (ஆ) ஆலயக் கட்டட அமைப்பு
  (இ) சிற்பம், ஓவியம், நடனம்
  (ஈ) விக்கிரகவியல்
  (உ) தத்துவம்
- **ஆகமங்களின் முக்கியத்துவம்**
  - சமயம், தத்துவம், வாழ்வியல், கலை முதலானவற்றில் ஆகமங்களின் செல்வாக்கு.
  - வேதமொடாகமம் மெய்யாம் இறைநூல் ஓதும் பொதுவும் சிறப்பு மென்றுள்ளன
    நாதன் உரையவை............. திருமந்திரம்

### சிவாகமங்கள்

- சைவ ஆகமங்களின் பொருள் விளக்கம்
  - ஆ - பசு, க - பதி, ம - பாசம். அதாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை உணர்த்தும் நூல்.
  - ஆகமம் என்பதில் உள்ள ஆ - சிவஞானம், க - மோட்சம், ம - மலநாசம். அதாவது மலத்தை நாசம் பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தை நல்குவது எனவும் பொருள்படும்.
- சிவாகமங்களைச் சிவனே அருளினார் என்பது சைவ சமயத்தவர்களின் நம்பிக்கை.
  - மாணிக்கவாசக சுவாமிகள்

    "ஆகமமாகி நின்று அண்ணிப்பான்......" எனவும்

    "அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்......" எனவும் பாடியுள்ளமை, ஆகமம் தெய்வீக நூல் என்பதை உணர்த்தும்.
- சிவாகமங்களுள் மூலாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக 28. இவை சிவபேதம் கூறுபவை, உருத்திரபேதம் கூறுபவை என இருவகைப்படும். உபாகமங்கள் 207
- சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்னும் நான்கு பிரிவுகளை உடையன. அவையாவன:
  1. சரியா பாதம்- பிராயச்சித்த விதி, பவித்திர விதி, ஆலய அமைப்பு விதி, சுற்று பிரகாரம், கோபுரம், பரிபாலகர் அமைப்பு உமாமகேசுவரர் இலக்கணம், சிவலிங்க இலக்கணம்.
  2. கிரியா பாதம்-மந்திரம், உற்சவம், நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள், சிவசின்னங்களை அணியும் முறை.
  3. யோக பாதம்- அட்டாங்க யோகம், அட்டமாசித்திகள், ஆறுவகை ஆதாரங்கள்.
  4. ஞான பாதம்- முப்பொருள் உண்மை, புவனங்களின் தோற்றம்.

### ஆலய நிருமாணமும் திருவுருவ அமைப்பும்

- சிவாகமங்கள் கடவுள், ஆன்மா, கடவுள் வழிபாடு, ஆன்மாக்கள் ஆற்றும் வினைகள், சைவ சமய வாழ்க்கை, ஆலய அமைப்பு, ஆலயக் கிரியைகள், தத்துவ சிந்தனைகள் என்று சைவநெறிசார் பல விடயங்களைக் கூறுகிறது.
- சைவாகமங்கள் சைவ மக்களின் ஆன்மீக வாழ்வை ஆலயங்களை மையமாகக் கொண்டு கூறுகின்றமையைக் காணலாம்.
- ஆகமங்கள் கூறும் ஆன்மீக வாழ்வும், அதனுடன் இணைந்த ஆலய வழிபாடும் வேத மரபின் பரிணாம வளர்ச்சியென்றோ அல்லது அதன் மாறுபட்ட வளர்ச்சியென்றோ கொள்ள முடியும்.
- அனைத்து மக்களும் ஆன்ம விடுதலை பெறவேண்டும் என்ற வகையிலேயே ஆகமங்கள் ஆலய வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றன.
- வேதங்கள் கூறும் அக்கினி வழிபாடும் சாதாரண மக்களுக்கு ஏற்புடைய உருவ வழிபாடும் சிவாகமங்களில் இணைவுறுகின்றன.

- ஆலய வழிபாட்டையும் அவைசார்ந்த அனுட்டானங்களையும் விதிகளாக விளக்கு தனால் சிவாகமங்களுக்கு சாத்திரங்கள் என்ற பெயரும் உண்டு.
- சிவாகமங்கள் ஆலயம் அமைக்கும் இடம், ஆலய அமைப்பு, ஆலயத்தின் உறுப்புகள், அவை அமைய வேண்டிய இடங்கள், அவற்றின் அளவைப் பிரமாணங்கள், கோயிற் கிரியைகள், ஆலய அனுட்டானங்கள் போன்ற விடயங்களை விதிகளாக விபரிக்கின்றன.
- ஆகமம் கூறும் கிரியைகளுள் கர்ஷணம் என்னும் கிரியை ஆலயம் அமைப்பதற் குரிய இடத்தைப் பண்படுத்தல் பற்றியதாக உள்ளது.
- சிவாலயம் ஒன்றில் இடம்பெற வேண்டிய கருவறை, மண்டபங்கள், பரிவாரக் கோயில்கள், பிரகாரங்கள் மற்றும் கோபுரம், விமானம் என்பன அமைய வேண்டிய விதிகள் பற்றி இவற்றில் உண்டு.
- ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி காமிக ஆகமம் 'பிரகார லட்சண விதிப்படலம்' எனும் தலைப்பில் விபரிக்கிறது.
- சிவாகமங்கள் ஆலய அமைப்பினூடாக திருவுருவ வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றன.
- சிவலிங்கம், அர்த்தநாரீஸ்வரர், இலிங்கோற்பவர், கங்காதரர், தட்சணாமூர்த்தி போன்ற சிவனின் 25 மூர்த்தி பேதங்களை அமைக்க வேண்டிய விதிகளை ஆகமங்களே வகுத்துக் கூறுகின்றன.
- திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லைத் தெரிவு செய்தல் பற்றி சிவாகமங்கள் 'சிலாபரீட்சணம்' என்ற தலைப்பில் கூறுகின்றன.
- திருவுருவங்களினுடைய பங்க அமைதிகள், அங்கலட்சணம், அவற்றின் அளவுப் பிரமாணம், ஆடை ஆபரணம் என்பன பற்றியும் அவற்றில் உண்டு.
- திருவுருவங்களின் பிரதிமாலட்சணத்தில் ஆகமப் பிரமாணம் முதன்மையான இடம் பெறுகின்றது.
- சுக்கிர நீதி - 'திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல' என்கின்றது.

**ஆலயக் கிரியைகளும் அனுட்டானங்களும்**

- அனைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றம் சிவாகமங்களின் உயிர் நாதமாக உள்ளது. சிவாகமங்கள் இந்நோக்கத்தை அடையும் வகையில் திருவுருவ அமைப்பையும் அவை சார்ந்த கிரியை முறைகளையும் வகுத்துக் கூறுகின்றன.
- மணிவாசகர்- 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டாமே' என்னும்வாக்கின் செயல் வடிவமாக ஆகமம் கூறும் உருவ வழிபாடு அமையும்.
- சிவாகமங்கள் கூறும் கிரியை முறைகள் திருக்கோயிலையும் திருவுருவங்களையும் மையமாகக் கொண்டவை.
- கோயில்களில் இடம்பெற வேண்டிய கிரியைகள், அவற்றை ஆற்றும் விதிகள், பூசையின் அங்கங்கள், மந்திர உச்சாடனம், நிவேதனப் பொருள்கள் என்பன பற்றிக் கூறுகின்றன.
- சிவாகமங்களில் வரும் பூஜா விதிப்படலம், மந்திராவதாரப் படலம் போன்ற பிரிவுகள் மேற்கூறிய அம்சங்களுடன் தொடர்புபட்டவை.
- கோயிற் கிரியைகளை சிவாகமங்கள் கர்ஷணம், பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளன.

| | | |
|---|---|---|
| கர்ஷணம் | - | ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்துதல். |
| பிரதிட்டை | - | ஆலயத்தில் திருவுருவங்களை பிரதிட்டை செய்தல். |
| உற்சவம் | - | ஆலயத்தில் வருடமொரு முறை இடம் பெறும் திருவிழா |
| பிராயச்சித்தம் | - | ஆலய கிரியைகளின்போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை |

**சித்தாந்த சிந்தனைகள்**

- சிவாகமங்கள் ஆலய வழிபாட்டுடன் சித்தாந்த சிந்தனைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளன.
- சிவாகமங்களின் யோகபாதம், ஞானபாதம் என்பனவற்றில் சைவ சித்தாந்தக் கருத்துகள் அதிகம் உண்டு.
- கிரணம், ரௌரவம், பௌஷ்கரம் முதலான ஆகமங்கள் சித்தாந்த சிந்தனைகளைப் பெரிதும் கொண்டவை.
- பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மை, அவற்றின் இயல்புகள் பதியின் மூவகைத் திருமேனிகள், அவற்றின் இயல்புகள், ஐந்தொழில்கள், ஆன்ம ஈடேற்றம், மும்மலங்கள் போன்ற விடயங்களை ஆகமங்கள் கூறுகின்றன.
- கிரண ஆகமம் பதி படலம், பசு படலம், மாயா படலம், சத்திநிபாத படலம் போன்ற தலைப்புகளின் கீழ் சைவசித்தாந்த உண்மைகளை விபரிக்கின்றது.
- சிவாகமங்களின் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்பன சைவ சித்தாந்த சாதனைகள் பற்றிக் கூறுகின்றன.
- நான்கு பாதங்களில் குருலிங்க சங்கம வழிபாடு, சிவசின்னங்கள் பற்றிய விளக்கங்கள் உள்ளன.
- ஆகமங்கள் கூறும் ஆலய வழிபாட்டின் ஊடாக நாற்பாத நெறிகள் வலியுறுத்தப் பட்டுள்ளன.
- இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் அட்டாங்க யோகங்கள் பற்றியும் இவற்றில் காணப்படுகின்றன.
- அட்டாங்க யோகம் மூலம் கைகூடும் அட்டமா சித்திகளாகிய அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராப்தி, ஆகாமியம், ஈசத்துவம், வசித்துவம் பற்றியும் இவை கூறுகின்றன.
- ஆலய தரிசனத்தின்போதும் சமய அனுட்டானங்களின்போதும் சிவசின்னங்களை தரித்தல் பற்றியும் இவை குறிப்பிடுகின்றன.
- ஆன்மாவின் இறுதி இலட்சியமான வீடுபேறாகிய சுத்தாத்துவித முத்தி பற்றியும் சிவாகமங்கள் கூறுகின்றன.

**சாக்த ஆகமங்கள்**

- சக்தியின் சிறப்புக்களை கூறுபவை.
- இதனை தந்திரங்கள் என அழைப்பர். இவை 77 ஆகும்.

இவற்றில் 1. மகாநிருவாணதந்திரம்
2. திரிபுரரகசியம்
3. காமகலாவிலாசம் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

**வைணவ ஆகமங்கள்**

- வைணவ ஆகமத்தை தந்திரம், சங்கிதை, பாகவதசாத்திரம் எனவும் அழைப்பர்.
- 108 ஆகமங்கள். ஆயினும் சிலர் 218 எனவும் கூறுவர்.
- வைணவ ஆகமங்களை பாஞ்சராத்திர மரபு, வைகாசன மரபு என இரண்டாகக் கூறுவர். இவை ஒரே தத்துவங்களைக் கொண்டவை.
- வைணவ ஆகமங்கள்

  உ-ம்: சகஸ்தியசங்கிதை, ஈஸ்வரசங்கிதை, காசிச்சங்கிதை, அனிருத்தசங்கிதை

### 1.2.7 இதிகாசம்

- இதிகாச இலக்கியங்களில் மகாபாரதம், இராமாயணம், சிவரகசியம் என்பன அடங்கும். அவற்றுள் மகாபாரதம், இராமாயணம் சிறப்பானவை.
- இதிகாசங்கள் ஆரம்பத்தில் சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டன. பின்பு பல்வேறு மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- மகாபாரதம், இராமாயணம் ஆகியன இந்திய நாட்டின் இந்துப் பண்பாட்டினை வெளிப்படுத்தும் மூலங்களாக அமைகின்றன.
- இதிகாசங்கள் வேத இலக்கியங்களின் விரிவுபட்ட நெறியாக காணப்படுகின்றது.
- இதிகாசங்கள் இந்து சமய கலைக் களஞ்சியமாகவும் விளங்குகின்றன. இந்து சமூகத்தில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களை இதிகாசங்கள் வெளிப்படுத்துகின்றன.
- மகாபாரதத்தின் ஒரு பகுதியான பகவத்கீதை உலகப்புகழ் பெற்றுள்ளது. சூதர்களால் ஓதப்பட்ட கதைகள் பின்பு முழுவடிவமாக தொகுக்கப்பட்ட பின்பே இன்றைய இதிகாச வடிவத்தைப் பெற்றுள்ளன.
- இதிகாசங்கள் கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பே தோற்றம் பெற்றாலும் குப்தர் காலத்திலேயே இறுதி வடிவம் பெற்றுள்ளதெனக் கூறலாம்.

### மகாபாரதம்

- இது 18 பர்வங்களை உடையது. ஆதிபர்வம் தொடக்கம் மோட்சபர்வம் வரை ஒரு இலட்சம் சுலோகமுடையது. உபதேச முறையானது.
- மகாபாரதம் கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் எழுந்தது. விஷ்ணுவை முதன்மைப்படுத்தும் நூல். அத்துடன் விஷ்ணுவின் பரத்துவமும் விளக்கப்படுகிறது. சிவபெருமானும் போற்றப்படுகிறார். அர்ச்சுனன் சிவனருள் பெற்ற கதைகளும் கூறப்படுகின்றன.
- சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், சௌரம் முதலிய சமய நெறிகளுக்கான மூலங்களை அறிவதற்கு இந்நூல் துணையாகின்றது. பாகவதத்திற்கும் மூலமாக அமைகின்றது.
- உலகியல் சார்பும் தெய்வீக நம்பிக்கையும் கலந்த இலக்கியமாகும். தன்னிகரில்லாத்தலைவனின் தர்மநெறியைத் தெளிவான சிந்தனையுடன் விளக்கும் நூல் இதுவாகும்.
- ஒவ்வொரு அத்தியாயமும் "ஓம் நாராயணாய நமஸ்கிருதய " என்று ஆரம்பிக்கின்றது. பாகவத வழிபாட்டிற்கு இந்நூல் அடிப்படையாக அமைகின்றது.
- மகாபாரதத்தின் ஒரு பகுதியாகிய பகவத்கீதை, கிருஷ்ண அவதாரத்தை வெளிப்படுத்தும் தத்துவ இலக்கியமாகவும் யோக நூலாகவும் உள்ளது.
- இந்து மதத்தின் பிரதான வழிபாட்டம்சங்கள், வாழ்க்கை முறைகள் அனைத்தும் மகாபாரதக் கதையில் வெளிப்படுகின்றது.
  - விரத வழிபாடு, தீர்த்த யாத்திரை, தல மகிமைகள், ரிஷிகளின் தவம், பூசை முறை, உருவ வழிபாடு, துறவு, தியானம் ஆகிய விடயங்களும் இந்நூலில் எடுத்துரைக்கப்படுகின்றது.
  - துர்க்கா தோத்திரம் இங்கு இடம் பெறுகிறது.

- மகாபாரதத்தில் ராஜதர்மம் உயர்நிலையில் போதிக்கப்படுகின்றது.
  - சாந்திபர்வத்திலே அரச உபாயம், மக்கள் ஒழுக்கம் ஆகியன குறிப்பிடப் பட்டுள்ளன. அறத்தால் வருவதே உண்மை வெற்றி என்பது அரசியல் நெறியாக கூறப்படுகின்றது.
  - வீஷ்ம பர்வம், துரோண பர்வம் என்பனவும் அரச தர்மங்களையே போதிக் கின்றன.
  - வில் வித்தை போதித்தல், தபோவன வாழ்வு, குருகுல மரபு, இல்லற வாழ்வு முதலிய தர்ம விடயங்களும் மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளன.
- பகவத்கீதை பாகவத நெறிக்கும், இந்து தத்துவக் கோட்பாடுகளுக்கும் அடிப்படையானதாகும்.
  - கடவுள், ஆன்மா, கன்மவினை, மறுபிறப்புக் கோட்பாடு, கருமயோகம், பக்தி யோகம், ஞானயோகம் முதலிய விடயங்கள் இந்துக்கள் அனைவருக்கும் உரிய கோட்பாடுகளாக விளங்குகின்றன.

**இராமாயணம்**

- இராமாயணம் வடமொழியில் வான்மீகியால் முதலில் எழுதப்பட்டது.
- கம்பராமாயணம் ஏழு காண்டங்களை உடையது. அவை பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரண்யகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம், உத்தரகாண்டம் என்பனவாம்.
- வான்மீகி இராமாயணம் 24000 சுலோகங்களை உடையது.
- வெவ்வேறு காலங்களில் இடம்பெற்ற இந்துசமயக் கதைகளின் தொகுப்பாக இராமாயணம் முக்கியத்துவம் பெறுகிறது.
- கி.மு 400- கி.மு.200 க்கும் தொகுக்கப்பட்டது. வெவ்வேறு இலக்கிய மரபுகள் தமிழ்நாட்டில் பரவியபோது தமது பிரதேச மொழிக்கேற்ப பல மொழிகளில் பாடப்பட்டது.
- சோழர் காலத்தில் கம்பரால் தமிழில் கம்பராமாயணமும் இந்திமொழியில் துளசிராமாயணமும், இயற்றப்பட்டது. இராம அவதாரம் விஷ்ணுவின் அவதாரமாகக் கொள்ளப்படும். இது இராமாயணத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.
- இராமாயணம் இந்துதர்ம நெறிக்கும் மானுட விழுமியங்களுக்கும் அடிப்படையாகும்.
- இராமாயணத்தில் நட்பு, தவம், அரச உபாயம், ஒழுக்கம் ஆகிய விடயங்கள் சிறப்பாகப் போதிக்கப்பட்டுள்ளன.
- இராமாயணக் கதை மூலம் வட இந்திய கலாசார மரபுகள் தமிழகத்தில் பரவிய வரலாற்றை அறியமுடியும். இவை புதிய கலை மரபுகள் தோன்றுவதற்கும் பொருளாக அமைந்தன.
- இந்துக்களின் விருந்தோம்பல், செய்ந்நன்றி அறிதல், யுத்த தர்மம், ஆச்சிரம வாழ்க்கை முறைகள் என்பவற்றை அவை பிரதிபலிக்கின்றன.

### 1.2.8 புராணங்கள் அறிமுகம்

- புராணம் என்பதன் பொருள் விளக்கம்

  புராணம் - புராதனம், பழமைவாய்ந்தது என்னும் கருத்துக்களைத் தரும்.
  "பூரணாத்புராணம் இதி உச்சயதே "-முழுமையானதால் புராணம் என்ற கருத்தும் உண்டு

- **தோற்றம்**

  - பௌராணிகர்களால் தோற்றுவிக்கப்பட்டது.
  - வைதிக ஒழுகலாறுகளைப் பேணும் வகையில் தோற்றம் பெற்றன.
  - தெய்வீக வரலாற்றைப் பரப்பும் நோக்கில் இடம்பெறுதல்.

- **காலம்**

புராணம் தொன்மையானது காலத்தின் வரையறை செய்யமுடியாது எனினும் கி.பி 300 இல் வளர்ச்சியடைந்து இறுதிவடிவம் பெற்றது.

- **புராணங்களின் பகுப்பு முறைகள்**

  - சிவ புராணங்கள் - 10
  - விஷ்ணு புராணங்கள் - 04
  - அக்கினி புராணம் - 01
  - சூரிய புராணம் - 01
  - பிரம புராணம் - 02

- **புராணங்களின் அமைப்பு**

  - வடமொழிப் புராணங்கள் 18. அவை மகா புராணங்கள் என்று அழைக்கப்படும். அவை சமஸ்கிருத மொழியில் உள்ளன. பல லட்சம் சுலோகங்களைக் கொண் டமைந்தவை.
  - பஞ்ச லட்சணம் - சர்க்கம், பிரதி சர்க்கம், வம்சம், வம்சானு சரிதம், மனுவந்தரம்
  - தச லட்சணங்களை உடையது.
  - தெய்வங்களின் வரலாறுகளைக் கூறுவது.
  - சைவ, வைணவ நெறிகள் பற்றிக் கூறுவது.
  - திருக்கோயில் வழிபாட்டு வழிமுறைகளை எடுத்துரைப்பது.
    - விரதம், தீர்த்தம், தவம், தலயாத்திரை, தோத்திரம்
  - தெய்வீகப் பரத்துவத்தை விளக்குவது.

    சிவ பரத்துவம் - அடிமுடி தேடிய கதை
    விஷ்ணு பரத்துவம் - பாகவத புராண அவதாரம்
    சக்தி பரத்துவம் - துர்க்கை மகிடாசுரனை அழித்தது
  - பக்தி மரபுகள்- மார்க்கண்டேயர், பக்த பிரகலாதன் கதைகள்
  - கலை, அரசியல் மரபுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**புராண இலக்கியங்கள் பிற்காலச் சமய மரபுகளில் செலுத்திய செல்வாக்கு**

- தல புராணங்களும், தமிழ்ப் புராணங்களும் தோன்றக் காரணமாக வடமொழிப் புராணங்கள் அமைந்தன
- பிற்கால வடமொழி நாடகம், காவியங்களுக்கு முன்னோடியானவை
- திருமுறைகளிலும் ஆழ்வார் பிரபந்தங்களிலும் புராணக்கதைகள் செல்வாக்குப் பெற்றமை
- சிற்ப, ஓவிய, நடனக் கலைகளுக்கு கருவாக அமைந்தவை
- மகாத்மியங்கள் / மான்மியங்கள் உருவாகக் காரணமானவை
  புராண படன மரபு, கந்த புராணக் கலாசாரம் என்பவை தோன்ற வழிவகுத்தமை

**முக்கியத்துவம்**

- நண்பர் போல் அறிவுரை வழங்குவது
- கோயில் வழிபாடு, உருவ வழிபாடு என்பன பற்றிக் கூறுவது
- சமயக்கருத்துக்களை இலகுபடுத்தியும், எளிமைப்படுத்தியும் கூறும் பாங்குடையது.
- அறநெறிப் போதனை புரிவது
- இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையானது
- **கலை** : புராணங்களை அடிப்படையாகக் கொண்டு திருவுருவ வழிபாடு, சிற்பக்கலை மரபு, ஓவியக்கலை என்பன வளர்ச்சி பெற்றன.
- **இலக்கியம்** : இலக்கிய வடிவங்களுக்கும், குறிப்பாக பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் ஆகியவற்றுக்கு புராணங்கள் பொருள் மரபாக அமைந்துள்ளன. பிற்கால காவியங்களுக்கு புராணங்கள் முன்னோடியாக அமைவன.
- **சமயம்** : புராணங்கள் சமய சின்னங்களுக்கு அடிப்படையாக விளங்குவன.
  புராணங்கள் இறைநம்பிக்கையை வலுப்படுத்துவன.
  பக்தி, தவம், தானம், விரதம், தீர்த்தம், மூர்த்தி, தலம், தியானம் முதலான சமயவழிபாட்டு முறைகளை கூறுவன.
  சிவன், பிரமா, விஷ்ணு, சூரியன், முருகன், சக்தி முதலான தெய்வங்களின் பரத்துவம் கூறுவன.
- **தத்துவம்** : இந்துசமயம் சார்ந்த தத்துவ உண்மைகளைப் பாமர மக்களுக்கு கதைவடிவில் புராணங்கள் எடுத்துக் கூறுவன.
  (உ-ம்) ஸ்கந்த புராணம் -சூரன்போர் - ஆணவத்தைஅழித்தலைக் குறிக்கும்.
  மார்க்கண்டேய புராணம் - யம சங்காரம் - பக்தியின்சிறப்பு
  கருட புராணம் - பாவம் செய்தவர்களுக்குரிய தண்டனை
  - உலகில் சிறப்பாக வாழ்வதற்குரிய வழி முறைகள்

**கற்பித்தல் செயற்பாடுகள் :**

படி I இந்தியாவில் இந்து நாகரிகத்தின் வளர்ச்சி என்னும் தலைப்பிலுள்ள ஒரு பகுதியைத் தெரிவுசெய்து, மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும்வகையில் முன்வையுங்கள்.

படி II இந்து சமயத்தின் வளர்ச்சிக் கட்டங்களின் அடிப்படையில் தகவல்கள் திரட்ட மாணவர் குழுக்களுக்கு இடமளியுங்கள். தேவையான நூல்களையும் வழங்குங்கள்.

படி III: திரட்டிய தகவல்களை கால அடிப்படையில் ஒழுங்குபடுத்த இடமளியுங்கள். குழுக்களிலிருந்து ஒருவர் வீதம் தெரிவு செய்து, வகுப்பில் முன் வைக்க இடமளியுங்கள்.

படி IV: அவற்றைத் தொகுத்து, காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை :**

| | | |
|---|---|---|
| வியத்தகு இந்தியா | - | ஏ. எல். பசாம் |
| இந்தியா ஒரு பண்பாட்டு வரலாற்றுச்சுருக்கம் | - | இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் |
| இந்திய வரலாறு | - | நா. தருமராசன் |
| ஆரியர் ஆதி வரலாறும் பண்பாடும் | - | பேராசிரியர் வி. சிவசாமி |
| வாழ்வியற் களஞ்சியம் | - | ‘கு’ தொகுதி |

**தேர்ச்சி 1.0** : இந்து சமயத்தின்சிறப்பம்சங்களையும் வரலாற்றுப் பின்னணியையும் இனங்கண்டு, அவை மனித வாழ்வை மேம்படுத்துமாற்றைத் தெரிந்து அவற்றில் ஈடுபாடு கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : தமிழக இந்து சமய பண்பாட்டின் பல்வேறு கூறுகளை அறிந்து, விளக்கிக் கூறுவார்.

**பாடவேளைகள்** : 50

**கற்றற் பேறுகள்** :

- இந்துப் பண்பாட்டின் வரலாற்று மூலங்களைப் பட்டியல்படுத்திக் காட்டுவார்.
- பண்டுதொட்டு தமிழகத்தில் நிலவிய இந்துசமய பண்பாட்டு அம்சங்களை அறிந்து போற்றுவார்
- இயற்கை நெறிக்காலத்தில் மக்களின் சமய வாழ்வியல் அம்சங்களை அறிந்து கடைப்பிடிப்பார்.
- இக்காலத்தில் வழிபடப்பட்ட தெய்வங்களை அறிந்து போற்றுவார்.
- இயற்கையோடிணைந்த வாழ்வினதும் வழிபாட்டு முறைகளினதும் சிறப்புக்களை அறிந்து போற்றுவார்.
- அறநெறிக்காலத்தில் தனித்துவமாகப் பேணப்பட்ட இந்துசமயச் சிறப்புக்களை எடுத்துரைப்பார்
- பல்லவர் கால பக்தியெழுச்சியின் சிறப்புக்களை ஏனையவர்களுக்கு விரித்துரைப்பார்.
- பல்லவர் கால நாயன்மார்கள் மற்றும் ஆலயத்தின் வளர்ச்சி மற்றும் சிறப்புக்களை விளக்குவார்.
- சோழர் கால சமய இலக்கியங்களில் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சி இந்துப் பண்பாட்டு தத்துவங்கள் அதிகளவில் தோற்றம் பெற்றமை பற்றிய செய்திகளை முன்வைப்பார்.
- நாயக்கர் கால இந்துசமய வளர்ச்சி பற்றிய செய்திகளை ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : தமிழகத்தில் இந்து சமய வளர்ச்சி**

**அறிமுகம்**

- தமிழகப் பண்பாடு கிறிஸ்து சகாப்தம் தொடக்கம் தற்காலம் வரையிலான வரலாற்று வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.
  - சங்க இலக்கியங்களில் இந்து சமயப் பண்பாட்டிற்கான பல்வகை ஆதாரங்களை நோக்க முடியும்.
  - வேத, புராண, இதிகாச மரபுகள் ஊடுருவியும் பரவியும் விளங்கிய காலகட்டமாக சங்ககாலம் குறிப்பிடப்படுகின்றது.
  - திருமுருகாற்றுப்படை, பரிபாடல் என்பவற்றில் இடம்பெறும் செய்திகள் இந்து சமயப் பண்பாட்டை வெளிப்படுத்தும் ஆதாரங்களாகும்.
- - களப்பிரர்களுக்கும், வைதீக பிராமணர்களுக்குமிடையிலான போராட்டம் சங்க மருவிய காலத்தில் நிகழ்ந்தது. மரபுவழி இந்து சமய அமைப்பில் அது மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது.
  - களப்பிரர் சமண சமயச் சார்புடையவர்கள். அதனால் களப்பிரர் ஆட்சிக்காலம் தமிழக வரலாற்றில் இந்துசமய நெறியில் பின்னடைவுக்காலம் என்று குறிப்பிடலாம்.
  - பௌத்த மதச் செல்வாக்கும் தமிழகத்தில் பரவலாயிற்று.
  - களப்பிரர் ஆதிக்க காலத்தைத் தொடர்ந்து பல்லவர் காலம் செல்வாக்குற்றது.

- கி.பி. 4 ஆம் நூற்றாண்டளவில் ஆந்திரா நாட்டின் தென்பகுதியில் ஆதிக்கம் செலுத்திய பல்லவர்கள் பினனர், கி.பி. 6 ஆம் நூற்றாண்டளவில் காஞ்சிபுரத்தை தலைநகரமாகக் கொண்ட தொண்டை மண்டலத்தில் தமது ஆதிக்கத்தை விரிவு படுத்தினர்.

- பல்லவர்களில் சிம்மவிஷ்ணு, குமாரவிஷ்ணு ஆகியோர் ஆரம்ப கால அரசர்களாவர்.
- பல்லவ அரசர்களின் ஆட்சிக் காலத்தில் வைதீக சமயநெறியானது தமிழக சைவநெறியுடன் கலந்தமையைப் பின்வரும் விடயங்கள் விளக்குகின்றன.
  - பிராமணர்களுக்கு நிலமானியங்கள் வழங்கப்பட்டமை.
  - வேத, ஆகம கல்வி மரபு பரவியமை.
  - ஆலயங்களை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் எழுச்சி பெற்றமை.
  - மன்னர்களும், மக்களும் சைவ, வைணவ மதங்களைத் தழுவியமை.
  - வேதம், வேதாங்கம், மீமாம்சை முதலியன போதிக்கப்பட்டமை.
  - மரபுவழியான சைவமரபு மறுமலர்ச்சியடைந்தமை
- தமிழ்நாட்டில் வேதாகம மரபு பரவி, மரபுவழி சைவ வைணவ மதங்களில் கலந்தமையால் சைவசமய பக்தி இயக்கமும், வைணவ பக்தி இயக்கமும் தோன்றக் காரணமாயிற்று.
- தொண்டை மண்டலத்தில் ஆரம்பித்த பக்தி இயக்கம் சோழ மண்டலத்திலும் பரவ லாயிற்று. இதன் விளைவாக சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தத்தம் சமயநெறி வளர்ச்சிக்கு பல பணிகளைச் செய்தனர்.
  - அடியார்கள், பொதுமக்கள், கலைஞர்கள் முதலானோர் நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் உதவினர்.
  - இந்துப்பண்பாடு இந்து அரசர்களின் ஆதரவோடும் வளர்ச்சியடைந்தது.
- தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சியைத் தொடர்ந்து, தஞ்சையிலிருந்து ஆட்சி செய்த முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன் முதலான சோழ மன்னர்கள் பல்லவர்களின் ஆட்சிப் பிரதேசங்களை வென்று சோழ மண்டலத்தைக் கைப்பற்றி ஆட்சி உரிமையை நிலை நாட்டினர். அத்துடன் வட நாடு, தக்கணத்தின் சில பகுதிகள், இலங்கை முதலான நாடுகளிலும் சோழராட்சி பரவியது.
- முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திர சோழன் ஆகியோரின் ஆட்சிக் காலத்திலே இந்துப் பண்பாட்டுப் பணிகள் உச்சநிலையை அடைந்தன. குறிப்பாக சைவசமயம் உச்சநிலை அடைந்தது. முதலாம் இராஜராஜன் இலங்கையில் ஆதிக்கம் செலுத்த, முதலாம் இராஜேந்திரன் இந்தியாவின் கங்கைநாட்டை வெற்றி கொண்டான் என்று கூறப்படுகிறது.
- சோழராட்சியில் கோயில்கள் சமுதாய மைய நிறுவனங்களாகின.
- பல்லவ பக்திநெறிப் பண்பாடு சோழராட்சியில் நிறுவனமயமாகியது.
- நாயன்மார் வழிபாடுகள் விருத்தியடைந்தன. நாயன்மார் பாடல்களும் கோயில்களில் பாடப்பட்டன.
- சைவ, வைணவ சமயப் பக்திப் பாடல்கள் தொகுக்கப்பட்டன.
- கோயில்களில் ஆடல், பாடல் என்பன விருத்தியடைந்தன.
- காப்பியம் சார்ந்த சைவ இலக்கியங்களும் எழுந்தன. சைவசித்தாந்த நூல்களில் சிவஞானபோதம் முக்கியம் பெற்றன.
- இக்காலப் பகுதியில் வடஇந்தியாவில் ஆதிக்கம் கொண்டிருந்த இஸ்லாமிய கலாசாரம் தென்இந்தியாவிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இஸ்லாமிய எழுச்சியை தொடர்ந்து இந்துப் பண்பாட்டை பாதுகாக்க கி.பி. 1336 இல் துங்கபத்திரா நதிக்கரையில் காணப்பட்ட விஜய நகரத்தில் இந்து அரசு ஒன்று நிறுவப்பட்டது.
- விஜய நகர அரசர்கள், தமிழ்நாட்டிலும் தமது ஆதிக்கத்தை கி.பி. 16 ஆம் நூற்றாண்டு வரை நிலைநிறுத்தினர்.

### 1.3.1 இயற்கை நெறிக்காலம்

- சங்ககாலம் இயற்கை நெறிக்காலம் என்றும் அழைக்கப்படும்
- இயற்கை நெறிக்காலமானது தமிழர் சமயநெறியின் பண்பாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றின் தொன்மைச் சிறப்பினைக் காட்டும் காலமாக அமைந்தது.
- இயற்கை நெறிக்காலம் என்பது தமிழ்நாட்டின் ஆரம்பப் பண்பாட்டினைக் குறிக்கும் காலம் ஆகும். இக்காலத்திலே மோரியர், ஜவனர், நந்தர் ஆகிய பண்பாட்டம்சங்கள் தமிழ் நாட்டில் கலந்தமை பற்றிய குறிப்புக்களும் உண்டு. அது மட்டுமன்றி வடமொழி இலக்கியம்சங்களும் கலந்த வரலாறுகளும் காணப்படுகின்றன.
- இக்கால அரசியல் பின்னணியில் அரசன் சமூகத்தால் ஏற்கப்பட்ட தலைவனாகக் குடிமக்கள் நலன்கருதி, பிராமணர்களுக்குத் தானம் வழங்கி மக்களை நீதிமுறை வழுவாது காத்தனர்.
- இயற்கை நெறிக்கால சமுதாயப் பின்னணியில் ஐவகை நிலவாழ்வுக்கு அமைய சமுதாய அமைப்பு நிலவியது. மக்கள் வாழ்வில் இசை, நடனம் கலந்த பண்பாடு காணப்பட்டது. ஐவகை நில அமைப்புக்கேற்ப வழிபாடுகள் காணப்பட்டன.
- பிராமணர்களது கலாசாரப் பரவல் இக்காலத்தில் ஏற்பட்டது. இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தாலும் வழிபாடு, சடங்கு, கலையுணர்வு என்பவற்றில் மிக்கவராக வாழ்ந்தனர்.
- பொருளியல் பின்னணியை நோக்கும்போது காவிரிப்பூம்பட்டணம், கடைவீதிகள், வாணிபம் என்னும் கருத்துக்கள் வணிகப் பண்பாட்டம்சங்கள் காணப்பட்டமைக்குச் சான்றாகின்றன.
- கலைப் பின்னணியை நோக்குகையில் கட்டட அமைப்புக்கள், சித்திரமாடங்கள் துணங்கைக்கூத்துக்கள், பாணர் இசைகள் முதலிய ஆடல்களை வடமொழிக் கதைத் தொடர்பில் ஆடியதாக அறிய முடிகின்றது. மேற்படி பின்னணிகளிலேயே இயற்கை நெறிக்கால சமய நெறி நோக்கப்படுகின்றது.
- **இந்து சமய நிலை**
  வடநாட்டின் வைதிக சமயநெறியும் தமிழ்த் தெய்வமரபும் கலந்து காணப்பட்டன. மாயோன், சேயோன், வேந்தன் வழிபாடுகள்" இதற்கு ஆதாரமானவை.
- **சிவ வழிபாட்டில் புராணக்கதை மரபுகள் பரவியமை**
  - கறைமிடற்றண்ணல், ஆலமர்கடவுள், முக்கட்செல்வன் என சிவன் போற்றப்பட்டமை. கொற்றவை சக்தி வழிபாட்டில் சங்கமித்தமை.
  - சைவசமயம் சார்பான திருவாதிரை நாள் பற்றிய விரிவான குறிப்புக்கள் காணப்படுகின்றன.
  - திருமுருகாற்றுப்படை பிராமணிய வழிபாட்டையும் நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறுகின்றது.
- **இயற்கை நெறிக்கால வைணவ வழிபாடு**
  - வைணவம் மாயோன் வழிபாடாகத் முருக வழிபாடு தோற்றம் பெற்றது. தொல்காப்பியத்தில் இதுவே முதலில் கூறப்பட்டது. வைணவம் முதன்மை பெற்றது என்பதற்கு இதுவே சான்று.
  - வழிபாட்டம்சங்களில் சிலம்பு, பாவை நோன்பு என்பன இடம்பெற்றன. சங்க இலக்கியம் தழுவியே வைணவ வேதாந்த வளர்ச்சிகள் ஏற்பட்டன.
  - முருக வழிபாடு ஆரிய - திராவிட இணைப்பைக் காட்டுவதாய் அமைகிறது. திருமுருகாற்றுப்படையில் இரு வகை வழிபாடு, ஆறுபடை வீடுகள் என்பன கூறப்பட்டுள்ளன.

**இயற்கை நெறிக்கால இந்து தர்மநெறி**

- ஒரு இனத்தின் பண்பாடானது அந்த நாட்டின் வளங்களை வைத்து அறியப்படுவதில்லை. அந்நாட்டு மக்களின் பண்புநலன் பற்றியே கூறப்படும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. "யாதும் ஊரே யாவரும் கேளிர் " என்பது ஒருமைப்பாட்டு தர்மத்தை எடுத்துக் காட்டுகின்றது.
- "தீதும் நன்றும் பிறர்தரவாரா" என்பது இந்துப் பண்பாட்டின் உயர் விழுமியத்தின் அடிப்படையில் எழுந்த புறநானூற்றுப் பாடலாகும். மனச்சாட்சியை விட உயர் தர்மம் எதுவும் இல்லை என்பது கலித்தொகைப் பாடல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

## 1.3.2 அற நெறிக்காலம்

- கி.பி. 3 ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் ஆந்திர தேசத்தின் தென்பகுதியில் செல்வாக்குச் செலுத்தினர். பின்னர் தொண்டை மண்டலத்திலும் அவர்கள் ஆதிக்கம் பரவியது. தொண்டை மண்டலத்தின் தலைநகரமாக காஞ்சிபுரம் விளங்கியது. அங்கு பிராகிருத மொழி ஆட்சி மொழியாகவும் பண்பாட்டு மொழியாகவும் விளங்கியது.
- நீதி, ஒழுக்கம் முதலியவற்றை எடுத்துக் கூறும் நூல்கள் அறநூல்களாகும்.
- மக்களால் போற்றப்பட்டு நீண்டகால வாழ்வு பெற்றுள்ள இலக்கியம் யாவும் அறத்தை அடிப்படையாகக் கொண்டவை.
- களப்பிரர் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் வெளியார் படையெடுப்பு நிகழ்ந்து போர், குழப்பம், அமைதியின்மை முதலியன காணப்பட்டன. இவ்வாறமையும் சூழ்நிலையில் மக்கள் ஒழுக்கம் குன்றுவதியல்பு. அக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கமாக ஒழுக்கத்தை வலியுறுத்தும் நூல்கள் தோன்றுவது எதிர்பார்க்கக்கூடியதே. அந்த வகையில் இக்காலங்களில் அறநூல்கள் தோன்றின எனலாம்.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறக் கருத்துக்களைக் கூறும் பல நூல்கள் உள்ளன. அவற்றுள் திருக்குறள், நாலடியார், திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, ஆசாரக்கோவை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- களப்பிரராட்சிக் காலத்துத் தமிழ் நாட்டில் சமண பௌத்தர் அபரிமித செல்வாக்குப் பெற்றிருந்தமையால் அறநூல்கள் தோன்றின எனலாம்.
- களப்பிரராட்சியில் நலிவுற்ற தமிழ் மக்களுக்கு அறவழியே உய்தி நெறியெனக் கொண்ட சமண - பௌத்தர் வழிகாட்டினர்.
- அறநூல்களின் தோற்றத்திற்கு அக்காலச் சூழ்நிலைகள் காரணங்களாக அமைந்தன.

### 1.3.3 பக்தி இயக்ககாலம் (பல்லவர் காலம்)

- கி.பி. 3 ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் களப்பிரர் ஆதிக்கமும் பௌத்த சமயச் செல்வாக்கும் ஏற்பட்டன. இவ்வேளையிலே ஆரம்ப காலப் பல்லவ அரசர்கள் வைதீக சமயத்தை வளர்த்தனர். வேதக் கல்வி மரபு பரவியது. ஆலயங்களை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள் எழுச்சியடைந்தன. புராண இதிகாசக் கதைகளும் பரவின. சமண சமயத்தைச் சேர்ந்த மன்னர்கள் சைவ சமயத்துக்கும் வைணவ சமயத்துக்கும் ஆதரவு வழங்கினர்.
- தமிழ் நாட்டின் வடபகுதியில் காஞ்சிபுரத்தில் வடமொழிக் கல்விக்கூடம் அமைந்திருந்தது. அங்கு வேதாங்கம், மீமாம்சை முதலியன போதிக்கப்பட்டன. கூரம் செப்பேடு கி.பி. 6 இல் வைதிகப் பல்லவர்கள் ஆட்சி செய்தமையைக் குறிப்பிடும்.
- கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலேயே சிம்மவிஷ்ணு, குமாரவிஷ்ணு முதலான பல்லவ அரசர்கள் ஆட்சி செய்தனர். யுவான் சுவாங் குறிப்பின்படி கி.பி. 5 ஆம் நூற்றாண்டளவில் காஞ்சிபுரத்தில் சைவ சமயத்தைச் சேர்ந்த பலர் பௌத்த சமயத்தில் சேர்ந்த வரலாறு அறியப்படுகின்றது.
- **பக்தி இயக்க காலத்தில் வேதாகம மரபுகள்**
  - பல்லவ மன்னர்கள் பிராமணக் குடியிருப்புக்களை விரிவுபடுத்தினர்.
  - வேதாகம மரபுகள் பரவின.
  - திருக்கோயில்கள் எழுச்சி பெற்றன. கோயில் பூசை மரபுகளும் ஏற்பட்டன. திருக்கோயில் நகரங்களும் உருவாகின.
  - அரண்மனையில் சமயச்சடங்குகள் மேலோங்கின.
  - அரண்மனைச் சடங்குகள் ஆலயச்சடங்குகளாக மாற்றமடைந்தன.
  - மன்னர்களும் வேதாகம மரபுகளைப் பேண மக்களும் சைவசமயச் சார்புடையவர்களாகினர்.
- **அரசர்களும் சைவ மரபும்**
  - மகேந்திரவர்மன் சிம்மவிஷ்ணு வைணவ சமயத்தவன். இவனது மகனே மகேந்திரவர்மன்.
  - பல்லவர் காலத்துப் பக்தி நெறியில் பெரும்பங்கு வகித்தவன் சிம்மவிஷ்ணுவே. ஆயினும் மகேந்திரவர்மன் காலத்திலேயே இந்து மத மறுமலர்ச்சியும் சமயநிலையில் திருப்பங்களும் புதுமைகளும் ஏற்பட்டன.
  - பல்லவர்களின் சமய சின்னமாகிய நந்திச் சின்னமும் சிவனின் கட்டுவாங்கக் கொடியும் அவர்கள் சைவத்தின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றது. கூரம், காசாக்குடிப் பட்டயங்களில் நந்திக்கு மேல் லிங்கம் அமைக்கப் பட்டுள்ளது.
  - வடமொழிக் கல்வி பரவி வேள்விக் கிராமங்கள் பல உருவாகின்
  - கோயிற்பணிகளில் மாற்றமேற்பட்டது. மகேந்திரவர்மன் மண், மரம் தவிர்ந்து புதிய கற்கோவில்களைக் (குணபர ஈச்சரம்) கட்டுவித்தான். சாளுக்கியப் படையெடுப்பை முறியடித்து, சைவ சமயத்தைப் பாதுகாத்தான். சைவ சமயத்திலிருந்து சமணத்திற்கும் பின் சைவ சமயத்திற்கும் மதம் மாற
  - மகேந்திரவர்மனால் சீயமங்கலம், வல்லம் முதலிய இடங்களில் குட போக ஆலயங்கள் பல அமைக்கப்பட்டன. விசித்திர சித்தன், வியத்தகு திறத்தோன், சங்கீர்ணஜாதி, குணபரன், மத்தவிலாசன், ஷேத்திர சித்திரகாரப்புலி எனும் விருதுப் பெயர்களும் மகேந்திரவர்மனுக்கு வழங்கப்பட்டன.

- மகேந்திரவர்மன் நூலாசிரியனாகவும், கட்டட நிர்மாண சிற்பியாகவும், இசை வல்லுனனாகவும், ஓவியனாகவும் விளங்கியமையே இதற்குக் காரணமாகும்
- திருச்சிராப்பள்ளிக் (குகைக் கோயில்) கல்வெட்டு மகேந்திரவர்மனது சைவப்பணிகளைக் குறிப்பிடுகின்றது.
- குடுமியாமலைக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள சிவதோத்திரம் மகேந்திரவர்மனின் ஆழ்ந்த சிவபக்தியைப் புலப்படுத்துகின்றது.
- 1 ஆம் சிம்மவர்மன் திருக்கழுக்குன்றம் சிவன் கோயிலுக்குத் தானம் செய்ததாக, சாசனச் சான்று குறிப்பிடுகின்றது.
- 111 ஆம் சிம்மவர்மனே ஐயடிகள் காடவர்கோன் என்று புகழ் பெற்ற சைவ அடியார் ஆவார்.
- இவர் 24 சிவத்தலங்கள் பற்றி, ஷேத்திர வெண்பா பாடியுள்ளார்.

- **மாமல்லன்**
  - பல்லவ அரசர்களில் மாமல்லன், 'முதலாம் நரசிம்ம பல்லவன்' என்று அழைக்கப்பட்டான்.
  - ரதக் கோயில்கள் மண்டபங்கள் அமைத்து திறந்தவெளிப் பாறைகளில் சிற்பக்கூடங்களை அமைத்தவனும் இவனே.
  - இவற்றில் புராண இதிகாசக் கதைகளைச் சிற்பங்களாக வடித்தான்.

  **மண்டபங்கள்:**
  - வராக மண்டபம், மகிடாசுர மண்டபம், கொடிக்கால் மண்டபம், மகிடாசுரமர்தனி மண்டபம், பஞ்சபாண்டவர் மண்டபம், இராமனூர் மண்டபம், திரிமூர்த்தி மண்டபம், நிறைவுபெறாத இரு மண்டபம், கிருஷ்ண மண்டபம்

  **ரதக் கோயில்கள்** :
  - அருச்சுனன் ரதம், தர்மராஜ ரதம், வீமரதம், நகுலரதம், சகாதேவ ரதம், பிடாரி ரதம், வளையான் குட்டை ரதம், கணேச ரதம் ஆகியவை சிவனுக்குரியவை ஆகும்.
  - வாதாபிச் சாளுக்கியருடன் போராடி தமிழகத்தை மீட்ட பெருமை இவனுக்குண்டு.
  - வாதாபியை வெற்றி கொண்டதை அடுத்து, வாதாபி கணபதியை தமிழ் நாட்டிற்கு வெற்றிச்சின்னமாகக் கொண்டு வந்தான்.
- **பரமேசுவர வர்மன்**
  - வித்யாவிநீதன் எனும் விருதுப்பெயர் கொண்ட இவன் "கூரம்" என்ற இடத்தில் சிவன் கோயிலொன்றை அமைத்தான். அக்கோயிற் பூசைகளுக்கென 108 சதுர்வேதிகளுக்கு நிலமளித்ததாக அறியமுடிகின்றது.
  - இவன் தனது திருமுடியில் உருத்திராட்சத்திலான சிவலிங்கத்தைத் தரித்திருந்தான் எனக் கூறப்படுகின்றது.
  - மாமல்லபுரக் கணேசர் கோயிற் கல்வெட்டு, பரமேசுவரவர்மனின் ஆழ்ந்த சிவ பக்தியினை எடுத்துக்காட்டும். அது வருமாறு: "சிவனுக்குமேல் தெய்வம் இல்லை; அவனே முழுமுதற்கடவுள்; சிவனை நினையாதோர் ஆறு முறை சபிக்கப்பட்டவர்கள் என்று பொறிக்கப்பட்டுள்ளது.

- 2 ஆம் நரசிம்மவர்மன் (இராசசிம்மன்)
    - 40 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனுடைய காலத்தில் தமிழ்நாட்டில் அமைதி நிலவியது. சிவ பக்தனாகையால் இவன் காலத்தில் சைவ நெறி சிறப்பாக வளர்ச்சி கண்டது. மகாபலிபுரத்திலும் காஞ்சிபுரத்திலும் சைவ ஆலயங்களையும் வைணவ ஆலயங்களையும் அமைத்தான். காஞ்சிக் கடிகையை மறுசீரமைப்புச் செய்து, வடமொழிப் பண்பாட்டைப் பரப்பினான்.
    - பிற்காலத்தில் பல்லவர் பாண்டியர் தொடர்பு வலுப்பெற்றது. தமிழகத்தின் வடக்கில் பல்லவர்களும் தெற்கில் பாண்டியர்களும் ஆட்சி செய்தனர். அவர்களிடையே சமய, பண்பாட்டு அடிப்படையில் ஒருமைப்பாடு நிலவியது.
    - மேற்படி அரசர்கள் தொண்டை மண்டலத்தை முதலிலும் அதனைத் தொடர்ந்து சோழ மண்டலத்தையும் தமது ஆதிக்கத்துக்கு உட்படுத்தினர். ஆந்திர மண்டலத்தின் தென்பகுதிகளும் பல்லவர் ஆதிக்கத்தின் கீழ் வந்தன.
    - இவ்வரசர்களின் காலத்தில் சைவ வைணவ ஆலயங்களுக்குத் தனித்தனிச் சொத்துக்கள் வழங்கப்பட்டன.
    - சிவாலயங்களுக்குச் சொந்தமான நிலபுலங்கள் தேவதானம **தேவதானம்** என்றும் வைணவ ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்கள் **திருவிடையாட்டம்** என்றும் அழைக்கப்பட்டன.
    - இக்காலத்தில்,
        - வட இந்தியாவிலிருந்து வந்த வைதிகக் கலாசாரம் தமிழ் கலாசாரத்துடன் பரவியது.
        - சதுர்வேதிமங்கலங்களும் கிருஷ்ணமங்கலங்களும் பெருகின.
        - வைதிகக் கல்வி பரவியது. புராண,இதிகாசக் கதைகளின் செல்வாக்கு ஏற்பட்டது.
        - சைவம், வைணவம் என்பவற்றுடன் பாசுபதம், கபாலிகம் என்னும் சைவப் பிரிவுகளும் வைசேடியம், சாங்கியம் முதலிய தத்துவக் கோட்பாடுகளும் பரவலாயின.
    - சிவசூடாமணி, சங்கரபக்தன், ஆகமப்பிரியன், ரிஷபலாஞ்சனன், சைவசித்தாந்த மார்க்கன் எனும் விருதுப்பெயர்கள் அவன் சைவத்தின் மீது கொண்ட ஈடுபாட்டினைப் புலப்படுத்துகின்றது.
    - இராசசிம்ம அரசன் அமைத்த பெரிய கற்றளி - காஞ்சிக் கைலாசநாதர் கோயில், தமிழகத்தின் முதலாவது கட்டுமானக் கோயில் என்ற பெருமையைப் பெறுகின்றது.
    - "கலியுகத்தில் அசரீரி கேட்டவன் " என்று சாசனங்களில் குறிப்பிடப்படுகின்றான்.
    - வைகுந்தப் பெருமாள் கோயிலையும் அமைத்தவனும் அவனே.
    - பூசலார் நாயனார் வரலாற்றுடன் தொடர்புபடுத்தப்படும் மன்னன் இவனே.
- **சைவ, வைணவ வளர்ச்சி**
    - அரசர்கள் ஆலயப் பணிகளில் ஈடுபட்டனர். கிராமங்களைத் தேவதானமாக வழங்கினர்.கலைஞர்கள், சிற்பிகள், புரோகிதர்கள் சமயப் பணிகளில் ஈடுபட்டனர். ஆலயங்கள் கல்வி, பண்பாட்டு நிலையங்களாக விளங்கின.
    - ஆலயங்களில் வேதக்கல்வி, இதிகாச புராணக் கதை மரபு என்பன பரப்பப்பட்டன.
    - தக்கணத்தின் வழியாகப் பரவிய வைணவ சமயம் தமிழகத்தில் புகுந்து,ஆழ்வார்கள் மூலமாகச் செல்வாக்குப் பெற்று, தென்கலை வைணவமாகச் சிறப்புற்றது.
    - பல்லவர் காலத்து சைவநெறி பல்வேறு பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஆகம வழியை பின்பற்றிய மாகேஸ்வரர்கள் வீர ஆகமங்களைக் கடைப்பிடித்து வீர சைவர்கள் என அழைக்கப்பட்டனர். காளாமுகர், மாவிதர், பாசுபதர் முதலிய சைவ சமயப் பிரிவினர் காணப்பட்டனர். இவ்வேளையிலேயே நாயன்மார்கள் சைவ சமயப் பக்திநெறியை வெளிப்படுத்தினர்.

•

- சைவ சமய பக்தி மார்க்கத்தில் புறச்சமயக் கண்டனம், சைவ சமய மீட்டுருவாக்கம், இறைவனை அன்பு வழியில் வழிபடல், தோத்திரப் பாடல்கள் உருவாதல், பதிகம் பாடல், இசையுடன் பாடல், கலைஞர்களை இணைத்தல், சைவப் பெண்களைப் பக்தி இயக்கத்தில் இணைத்தல், மன்னர்களை சைவ சமயத்தில் சேர்த்தல், சிவ சின்னங்களைப் பேணுதல், பஞ்சாட்சர மந்திரம் ஓதுதல் போன்றவற்றை சைவ பக்தி இயக்கத்தினர் கடைப்பிடித்தனர். ஆலயத் தொண்டுகளைச் செய்தனர். ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்தனர். புராணக் கதைகளைக் கூறினர். ஆடிப் பாடி வழிபாடு செய்தனர். அன்பு நெறி வழிபாட்டில் இறையருள் மூலம் அற்புதங்கள் விளைந்தன.
- பொதுமக்களின் துன்பங்கள் விலகின. சிவனடியார்கள் பக்தி இயக்கத்தில் கலந்து செயற்பட்டனர். பொதுமக்கள் நாயன்மார்களுடன் சேர்ந்து வழிபாட்டில் ஈடுபட்டனர். அனல்வாதம், புனல்வாதம் என்பவற்றால் சைவசமயமே மெய்ச் சமயம் என வலியுறுத்தப்பட்டது.
- பக்திநெறியால் கல்லையும் கனியவைக்கும் இனிமையான பதிகங்கள் தோற்றம் பெற்றன. நாயன்மார்கள் பல்வேறு மார்க்கங்களில் நின்று சிவனைப் போற்றினர். அவை தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம் என்பனவாகும்.

- திருமால் பக்தியில் மூழ்கித் திளைத்தவர்கள் ஆழ்வார்கள். திருமால் மீது தமிழில் பாசுரங்களை இசையுடன் பாடி வைணவ பக்தியை வளர்த் தார்கள். அன்பை விளக்காகவும், ஆர்வத்தை நெய்யாகவும் கொண்டு ஆன்ம ஒளி விளக்கேற்றி வழிபாடு செய்தவர்கள் ஆழ்வார்கள். கடவுள் மீது இடையறாத ஈடுபாடு கொண்ட ஆழ்வார்கள், பாசுரங்களைப் பஜனையாகப் பாடும் மரபையும் கொண்டவர்கள். வைணவ பிரபந்தத்திற்கு புராண, இதிகாசக் கதைகளை ஆதாரமாகக் கொண்டனர்.
- பல்வேறு பாவங்களில் விஷ்ணுவைப் போற்றினர். அவை தாஸ்ய, மதுர, வாத்சல்ய, சக்கிய முதலான பாவங்களாகும்.
- மங்களாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு ஆழ்வார்கள் அடித்தளமிட்டனர்.

- **நாயன்மார் பதிகமும் ஏனைய இலக்கிய வடிவமும்**
  - பதிகம் எனும் சொல் பகத்திமயமானது 10 பத்துப் பாடல்களைக் கொண்டது சில பதிகங்கள் 11 பாடல்களைக் கொண்டது. சில பதிகங்கள் 20 பாடல்களைக் உடையன திருவெம்பாவைப் பாடல்கள் 20 பாடல்களைக் உடையது.
  - பதிக வடிவங்கள் தலப் பதிகம் பூம்பாவைப் பதிகம், நமச்சிவாயப் பதிகம் கோளறு பதிகம் திருநீற்றுப் பதிகம் அங்கமாலைப் பதிகம் என்னும் வெவ்வேறு பாடு பொருளை உடையனவாகும் பதிகம் என்னும் அமைப்புடன் தொடர்பான இலக்கிய வடிவங்கள் பலவும் உண்டு திருநாவுக்கரசர் திருத்தாண்டகம் இதற்கு சான்றானது. திருத்தாண்டகம் என்பது இறை பெருமைகளை சுருக்கிக் கூறும் கவிவரிகளாகும். சுந்தரமூர்த்தி நாயனார் சிவனடியார் வரலாறுகளை புகழும் போது திருத்தொண்டர் தொகை என்றும் இலக்கியத்தைப் பாடினார். மாணிக்க வாசகர் பாடல்களிலே பொதுமக்கள் சார் இலக்கி வடிவங்கள் வெளிப்படுகின்றன. அம்மானை, பாவை, சாழல் கோவை என்றும் வடிவங்கள் மட்டுமல்லாது நெடும் பாடல் வடித்திலும் நாயன்மார் பதிகத்தை அவதானிக்கலாம் மாணிக்கவாசகர் சிவபுராணம் பாடல்களை இதற்கு சான்றானவை.

### 1.3.4 சோழர்காலம்

- பல்லவ - பாண்டியர் ஆட்சியில் முத்தரையர் என்னும் அரச வம்சத்தவர்களும் ஆதிக்கம் செலுத்தினர். இதே காலத்தில் விஜயாலய சோழன், முத்தரையர்களைத் தோற்கடித்து தஞ்சையைத் தலைநகரமாக்கினான்.
- விஜயாலய சோழனைத் தொடர்ந்து, ஆதித்தனின் ஆட்சி நிலவியது. அவனது ஆட்சியில் சோழ மண்டலத்தில் பல்லவ ஆதிக்கம் நிலை குலைந்தது.
- அதனைத் தொடர்ந்து சோழ அரசர்கள் தொண்டை மண்டலத்தில் தமது ஆட்சியைப் பரப்பி, இந்துப் பண்பாட்டைப் பேணினர். சைவ ஆலயங்களையும் அமைத்தனர். ஆலயங்களுக்கு வழங்கிய அறக்கொடைகளும், பிராமணர்களுக்கு வழங்கிய தானங்களும் இவர்களால் பொறிக்கப்பட்ட உத்தர மேரூர் சாசனத்திலே கூறப்பட்டுள்ளன.
- சோழ அரசர்களில் முதலாம் பராந்தகன், முதலாம் ஆதித்தன் ஆகியோர் ஆரம்ப கால அரசர்களாவர். அவர்களைத் தொடர்ந்து முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகியோர் ஆட்சி செய்தனர்.
- முதலாம் இராசராசன் மும்முடிச்சோழ மண்டலத்தையும் கங்கை நாடு, கடாரம், தொண்டை மண்டலம், வேங்கி மண்டலம் ஆகிய நாடுகளையும் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தான்.
- சோழ அரசர்கள் சைவநெறி தழுவியவர்கள். அதனால் திருநீற்றுச்சோழன் என்றும் திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்றும் சிவபாதசேகரன் என்றும் பல விருதுப் பெயர்களால் அழைக்கப்பட்டனர்.
- நடராச சின்னம் சோழ அரசர்களது சின்னமாகியது. அத்துடன் சோழர் காலத்தில் நந்திக்கொடியும் சமயச் சின்னங்களில் இடம்பெற்றது.

**சோழ அரசும் சைவ நெறியும்**

- இராஜராஜ சோழன் சோழ அரசர்களில் தலைசிறந்தவன். நர்மதா நதி வரை தமது அரசாட்சியைப் பரப்பியவன். அவன் இந்தியத் துணைக் கண்டம் எங்கும் சைவப் பண்பாட்டைப் பரப்பினான்.
- இராஜராஜ சோழனின் ஆட்சியில் சைவசமய நெறி பல வளர்ச்சிகளைக் கண்டது. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.
  - அரச சபையிலும், வீடுகளில் பயன்படுத்தப்பட்ட அளவைக் கருவிகளிலும் ஆடவல்லானாகிய நடராச சின்னம் பொறிக்கப்பட்டது.
  - பிராமணர்களுக்குக் கொடைகள் வழங்கப்பட்டன.
- இராஜராஜ சோழனின் பிறந்த நாள் (ஐப்பசி சதயம்) பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டது.
- சோழர் ஆட்சியில் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் கோயில்கள் பல அமைக்கப்பட்டன. அவற்றில் இறைதிருமேனிகளும் சிவனடியார் சிற்பங்களும் பொறிக்கப்பட்டன.

- ஆகம முறையிலான பூசைகள் இடம்பெற்றன. ஆலய வழிபாட்டுக்கென தேவரடியார், ரிஷபத்தளியிலார், தலைக்கோலிகள், நிருத்தவிடங்கியர் முதலானோர் நியமிக்கப்பட்டனர்.
- சைவத் திருமுறைகள் தேடப்பட்டு தொகுக்கப்பட்டன. பண் வகுக்கப்பட்டன; பாடப்பட்டன. ஓதுவார்கள், பிடாரர்கள் என்போர் அவற்றைப் பண்ணுடன் பாடினார்கள்.
- வேதவிருத்தி, புராணவிருத்தி, பாரதவிருத்தி முதலியனவற்றுக்காக மானியங்கள் வழங்கப்பட்டன.
- கோயில்களிலும் மடங்களிலும் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டன.
- கோயில் சேவைகள் பெருகின. கோயில்கள், ஆதுலர் சாலையாக விளங்கின. அரசைச் சிறப்பிக்கும் விழாக்களும் இடம்பெற்றன.
- ஆலயங்களுக்கு அண்மையில் மடங்கள் அமைத்து, சமயப் பணி செய்யும் நிலை ஏற்பட்டது.
- திருமுக்கூடல் என்னும் இடத்தில் வணிகர்கள் மடங்கள் அமைத்து, சைவப்பணியில் ஈடுபட்டனர்.
- சைவ இலக்கியங்கள் பல தொகுக்கப்பட்டன. அத்துடன் நம்பியாண்டார் நம்பி, சேந்தனார், கருவூர்த்தேவர் முதலியோர் பதிகங்களைப் பாடினர். நம்பியாண்டார் நம்பி தமது பாடல்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் வாழ்க்கை வரலாறுகளைப் பாடியுள்ளார்.
- சேக்கிழார் 63 சைவ அடியார்களின் வரலாற்றைப் பெரிய புராணம் எனும் சைவக் காப்பியமாக இயற்றினார். இத்தகைய அடியார்களைப் போற்றும் இலக்கியங்களால் நாயன்மார் வழிபாடு முதன்மையடைந்தது. சிவனடியார் குருபூசைகள் முக்கியத்துவம் பெற்றன.
- காஞ்சிபுரம் கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத்தைப் பாடினார். இந்நூல் சிவசங்கர சங்கிதை எனும் வடமொழி நூலைத் தழுவி, முருகப்பெருமானைப் போற்றிப் பாடப்பட்டதாகும்.
- சோழர்காலப் பகுதியில் சைவ சித்தாந்தக் கோட்பாடு உருவாக்கப்பட்டது. அதில் மெய்கண்ட தேவரது சிவஞானபோதம் பிரதானமானது. திருவுந்தியார், திருக்கழிற்றுப்படியார் ஆகிய சைவசித்தாந்த நூல்கள் காலத்தால் முற்பட்டவை. ஆகம மரபுகளும் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன.
- கோயில் அமைப்பு மேலும் பல விருத்திகளைக் கண்டது. தேவார சுற்றுக்கல்லூரி, நிருத்த மண்டபம், திருக்கைக்கோட்டி மண்டபம், வக்காணிப்பு மண்டபம் என்பன அவற்றுள் அடங்கும்.
- சோழர் காலத்தில் அம்மன் வழிபாடு திருக்காமக் கோட்டத்தில் இடம்பெற்றதாக அறியப்படுகிறது. விநாயகர் வழிபாடும் இடம்பெற்றிருந்தது.
- அரசர்கள் தமது இராஜகுருவாக சைவக் குருமாரைக் கொண்டிருந்தனர். ஈசான பண்டிதர், சர்வசிவ பண்டிதர் முதலான பெயர்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன.

- சோழர் ஆட்சியில் வைணவமும் வளர்ச்சி கண்டது. வைணவத்திற்கு மன்னர்கள் ஆதரவு வழங்கினர். வைணவ ஆலயங்கள் தோன்றின. வைணவ இலக்கியங்கள் தொகுக்கப்பட்டன.
- நாதமுனிவர், யமுனாச்சாரியார் குரு குலங்கள் சான்றுகளாகும்
- ஆழ்வார் மரபு ஆச்சாரியார் மரபாக வளர்ச்சியடைந்தது.
- கம்பராமாயாணத்தில் இராம வழிபாடு மேன்மை பெற்றது.
- ஆழ்வார் சிந்தனைகள், இராமானுஷர் சிந்தனையின் கோட்பாடாக வளர்ச்சியடைந்தன.
- ஸ்ரீரங்க கோயிலின் சிறப்பும் வைணவ மறுமலர்ச்சியும்
- தென்கலை வைணவம் என்பன வளர்ச்சியடைந்தது.
- விசிட்டாத்வைத வேதாந்தம் விரிவான வளர்ச்சி கண்டது.
- இராமானுஜரின் வைணவ கைங்கரியங்கள் பிரதானமானவை.

### 1.3.5 விஜயநகர ஆட்சியில் சைவமும் வைணவமும் தோற்றமும் பின்னனியும்

- தென்னிந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் 1336 இல் விஜயநகரப் பேரரசு நிறுவப்பட்டது. அவர்கள் காவிரி, வைகை, தாமிரபரணிப் பிரதேசங்களையும் கைப்பற்றினார்கள். விஜயநகர அரசர்கள் தமிழகத்தை ஆதிக்கம் செலுத்த முன்பு மதுரைச் சுல்தானியர் ஆட்சி தமிழகத்தில் பேராதிக்க நிலையை ஏற்படுத்தியது.
- இஸ்லாமியர்கள் இந்துக்களை அழித்தனர். இந்துக்களை மதம் மாற்றினர். கோயில் களையும் படிமங்களையும் சிதைத்தனர். அத்துடன் இந்துக்களை இழிவாகக் கருதும் நிலையை ஏற்படுத்தினர். இவ்வேளையில் இவற்றையெல்லாம் எதிர்க்கத் தோன்றியதே விஜயநகர அரசாகும். கோய்சல (கௌசல) அரசின் தொடர்ச்சியாகவே விஜயநகர அரசு வளர்ச்சி பெற்றது. வித்யாரண்யர் (1305-1387) என்னும் அரசவைத் தலைவர் இதனை உருவாக்கினார்.
- முதலாம் புக்கன் என்பவன் விஜயநகரப் பேரரசனாக முடிசூடித் தமிழகத்தை ஆட்சி செய்தான். அவனைத் தொடர்ந்து கரிகரன், குமாரகம்பணன் முதலியோரும் விஜயநகர ஆதிக்கத்தை வளர்த்தனர்.
- விஜயநகர அரசர்களில் தமிழ் நாட்டை ஆண்டவர்களை மண்டலிதர் எனக் கூறுவது மரபாகியது. மண்டலிதர் என்பவர் மண்டல ஆட்சியில் ஈடுபட்டவர்களாவர்.
- விஜயநகர ஆதிக்கத்தின் கீழ், தமிழ்நாட்டை ஆண்டவர்கள் மகாமண்டல ஈஸ்வரன் என அழைக்கப்பட்டனர். இத்தகைய விஜயநகர அரசர்களின் ஆட்சி தலைக்கோட்டைப் போரைத் தொடர்ந்து வலுவிழந்தது.
- தலைக்கோட்டைப் போரைத் தொடர்ந்து விஜயநகர நாயக்க அரசர் மதுரை, தஞ்சை, செஞ்சி ஆகிய இடங்களில் ஆட்சிசெய்து தம்மை மன்னர்களாக மாற்றிக் கொண்டார்கள்.
- சோழர் காலத்தில் காணப்பட்ட மண்டலம் எனும் அரசமுறை தவிர்ந்து விஜயநகர ஆட்சியில் ராஜ்ஜியம் என்னும் ஆட்சிமுறை வலுப்பெறத் தொடங்கியது.
- விஜயநகர அரசர்களில் முதன்மையானவர் கிருஷ்ணதேவராயர் (1509-1529). இவரது பெருமையைப் பயஸ் எனும் வெளிநாட்டறிஞன் புகழ்ந்துரைக்கின்றான். அவரது காலத்தில் நீதியான ஆட்சி இடம்பெற்றதென பயஸ் குறிப்பிட்டுள்ளார்.
- கிருஷ்ணதேவராயரைத் தொடர்ந்து அச்சுதராயர் என்பவர் ஆட்சி செய்தார். அதன்பின்பு இராமராயர் ஆட்சி இடம்பெற்றது. இராமராயரைத் தலைக்கோட்டைப் போரில் இஸ்லாமியர் தோல்வியடையச் செய்ததன் மூலம் விஜயநகர ஆதிக்கம் சிதைவுற்றது.

### விஜயநகர ஆட்சியும் வடமொழி இலக்கியச் சிறப்பும்

- முதலாம் புக்கன் வடமொழி உரையாசிரியர் சாயனருக்கு உதவி செய்தான். சாயனரால் நான்கு வேதம் பிராமணங்கள் என்பவற்றுக்கு உரை எழுதப்பட்டது. இராமாயண உரையை ஸ்வரதீட்சிதர் எழுத கிருஷ்ணதேவராயர் உதவினான். கிருஷ்ணதேவராயரின் அரண்மனைப் புலவராகிய சானாவதிம்மர் மகாபாரதத்திற்கு கிருஷ்ணசந்தம் என்னும் உரையை எழுதியுள்ளார். விஜயநகராட்சியில் நாடக நூல்களும் எழுந்தன.
- தமிழகத்தில் ஆட்சிசெய்த நாயக்கர் அவையில் அப்பையதீட்சிதர் வடமொழி இலக்கியத் துறைக்கு பெரும்பணி செய்தார். சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு இலக்கியங்கள் இங்கு சிறப்பிடம் பெற்றன. கிருஷ்ணதேவராயர் ஆமுக்தமால்யதா என்னும் ஆண்டாள் கதையை இயற்றினார்.

### விஜயநகர ஆட்சியில் சைவமும் வைணவமும்

- சித்தாந்த சைவம், வீர சைவம், காஷ்மீர சைவம் என்பவற்றின் வளர்ச்சி காணப்பட்டது. பசவபுராணம் பிரபுலிங்கலீலை என்பன பிரதான நூல்கள். இவை வீரசைவக் கோட்பாட்டைக் விளக்கிக் கூறுகின்றன. சைவசமய நெறியில் விருபாட்சகர் கோயில், விருபாட்சம் பொறித்தல் என்பன முக்கியமானவை. விருபாட்சகர் வழிபாடு என்பன முக்கியமானவை. வைணவம் பற்றித் தெலுங்கு, கன்னட மொழிப்பாடல்கள் எழுந்தன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் தெலுங்கு இலக்கியமும் முதன்மை இடம்பெற்றது. கிருஷ்ணதேவராயரே விஷ்ணுசித்தீயம விஷ்ணுசித்தீயம் என்னும் நூலை எழுதியுள்ளார். சிறந்த எளியநடைக் காப்பியம். அட்டதிக்கஜயம் என்னும் எட்டு நூல் புலவர்கள் பிரதானமானவர்கள்.
- சைவசமயத்தில் காளத்தி மகாத்மியம் கிருஷ்ணதேவராயர் காலத்தில் எழுதப்பட்டது. இஸ்லாமிய மதத்தைக் கண்டனம் செய்ததன் மூலம் விஜயநகரத்தின் புகழ் பரவிக் காணப்பட்டது.
- விஜயநகர அரசர்களில் ஒருவரான கரிகரர் காளகஸ்தி, சிதம்பரம், திருப்பதி, திருவரங்கம் முதலிய கோயில்களில் திருப்பணி செய்தார். இவற்றினூடாக கரிகர அரசரது சைவ, வைணவப் பணி வெளிப்படுகின்றது.
- விஜயநகரத்தின் ஆரம்பகால அரசர்கள் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள். விஜயநகர அரசர்கள் சங்கரரின் சிருங்கேரி மடத்திற்கு கூடுதல் மானியங்களை வழங்கினர். சாருவநரசிம்மனுக்கு பின்பு ஆட்சி செய்த அரசர்கள் வைணவ அரசர்களாவர். அவர்கள் சைவ, வைணவ ஆலயங்களுக்கு வேறுபாடின்றி தானங்களை வழங்கினர்.
- வைணவம் வடகலை வைணவம், தென்கலை வைணவம் என விரிவடைந்தது. வேதாந்த மரபும் செல்வாக்குப் பெற்றது. அருணகிரிநாதர் பாடல்கள் விஜயநகரர் ஆதிக்கத்தை எடுத்துக் காட்டுவன. காளமுகர், பாசுபதர் முதலிய சைவசமயப் பிரிவினர்களும் காணப்பட்டனர்.

### விஜய நகரமும் கலை மரபும்

- விருபாட்சகர் கோயில், விட்டலாசுவாமி கோயில் என்பன கிருஷ்ணதேவராயர் அமைத்த கோயில்களாகும். அவற்றில் இராமாயணக் கதைச்சிற்பம், ராஜகோபுரம், கல்யாண மண்டபம், ஆயிரங்கால் மண்டபங்கள், பட்டாபிராமர் கோயில், அம்மன் சந்நிதானம் முதலான அமைப்புக்கள் இடம் பெற்றன.
- சுற்றுப்பிரகார அமைப்புக்கள் முக்கியமானவை. இராமாயண, மகாபாரத ஓவியங்கள் அதில் தீட்டப்பட்டுள்ளன.
- குதிரை யாழித்தூண்கள் அமைக்கப்பட்டன. திருப்பாற்கடல் கடைதல், இராவணன் கதைச் சிற்பங்கள் கூடுதலாக அதில் உண்டு.

### 1.3.5 மடங்களும் ஆதீனங்களும்

- மடம் என்பதன் விளக்கம்
  * மடம் என்பது இருக்கை எனப் பொருள்படும். அது துறவிகள் இருக்குமிடம் என விரிந்த பொருளிலும் பொருள் கொள்ளப்படும்.
  * மடம் என்பது துறவிகளாகிய பெரியோர்கள் இருந்து கொண்டு அறவொழுக் கத்தையும், சமயத்தையும் வளர்க்கும் இடமெனவும் பொருள்படும்.
  * மடம், மடாலயம், ஆதீனம் என்பன ஒரு பொருட் சொற்களாகும். இன்று மடம் என்பது சத்திரங்களையும் ஆதீனம் என்பது துறவிகளின் ஊழியத்துக்குரிய பெரிய நிறுவனங்களையும் குறிக்கின்றன.

### 1.3.5.1 தோற்றம்

- இஸ்லாமியர்களின் தாக்கத்தினால் வீழச்சி அடைந்த இந்துசமயத்தினை நிறுவனரீதியாக கட்டியெழுப்ப மடங்கள் தோன்றின.
- யாத்திரையினை மேன்மையடையச் செய்யவும்
- அடியவர்க்கு உணவழிப்பதற்காகவும், எளியவர்க்கு உணவளிப்பதற்காகவும்
- சைவத்தைக் காக்க வேண்டும் என்ற நோக்கிலும் மடங்கள் ஆரம்பிக்கப்பட்டமை

- **மடாதிபதியின் இலக்கணம்**
  * நல்லொழுக்கமும், கல்வியறிவொழுக்கமும் உடையவராய் இருத்தல் வேண்டும்.
  * கலாசாரத்தைப் பின்பற்றுபவராக இருத்தல் வேண்டும்.
  * அனுஷ்டான விதிமுறைகளைப் பின்பற்றுபவராக இருத்தல் வேண்டும்.
- **கடமைகள்**
  * மடங்களுக்குரிய மானியங்களை ஒழுங்காகப் பேணல்
  * திருநந்தவனம் அமைத்தல்
  * அறிவும், ஆற்றலும் உடையோரைக் கொண்டு ஆன்மீகப் போதனை நடத்தல்
  * உயர்வு தாழ்வு கருதாது, எல்லா மக்களையும் சமமாகக் கருதி அன்னம், வஸ்திரம் முதலான தருமங்களை அளித்தல் வேண்டும்.
  * அன்னதானம் பெறத் தகுதியுடையோர்
    - திருமுறை, வேதாகமம் படிப்போர், சமய போதனை செய்வோர்
    - ஆலய சேவை புரிவோர்
    - துறவிகள், அங்கவீனமுற்றோர், யாத்திரை செல்வோர்
  * பூசைக்குரிய வேதிகைகள் கட்டுதல் வேண்டும்.
  * சமூக சேவையில் ஈடுபடுதல் வேண்டும்.

**ஆதீனங்கள்**

- தோற்றம்
  * சைவ சமயத்தைப் பாதுகாத்து வளர்க்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டமை
  * மானியங்களை நிர்வகித்தல்

**ஆதீன கர்த்தாவின் பண்பு**

* சித்தாந்த நூல்களையும், வேதாகமங்களையும் கற்றிருக்க வேண்டும்.
* செயலிற் துறவு வேண்டும். அன்பு, பக்தி, ஞானம், வைராக்கியம் முதலான பண்புகள் உடையவராயிருத்தல் வேண்டும்.
* சமய விழுமியங்களையும், பண்பாடுகளையும் அனுஷ்டான விதிமுறைகளையும் பின்பற்றுபவராய் இருத்தல் வேண்டும்.

- **கடமைகள்**
  * மாணவர்களுக்கு அன்னம், வஸ்திரம், உறையுள் கொடுத்துக் கற்பித்தல்
  * யாவரையும் சமமாக மதித்தல்
  * ஆதீனங்களில் உள்ளோர் நித்திய கருமம், திருமுறை வேதாகம அனுஷ்டானம், ஆலயசேவை, வாய்மை, இரக்கம், பொறை, அடக்கம் முதலான பண்புகள் உடையவர்களாக இருக்க வழிப்படுத்தல்.

- **பணிகள்**
  * மடங்களும் ஆதீனங்களும் ஒத்த பணிகளை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**1.3.5.2 திருவாவடுதுறை ஆதீனம்**

- காலம் - நாயக்கர் காலம்
- அமைவிடம் - நாகபட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை கும்பகோணம் சாலையில் உள்ளது.
- பரம்பரை - திருக்கைலாச பரம்பரை, மெய்கண்ட சந்தானம்
- நிறுவியவர் - நமசிவாய மூர்த்திகள்
- சீடர்கள் - குழந்தை சிவப்பிரகாசம், மறைஞானதேசிகர், அம்பலவாண தேசிகர், தட்சணாமூர்த்தி தேசிகர்
- கிளை மடங்கள் - 136
- பிரதான நூல்கள் - மெய்கண்ட சாஸ்திரங்கள்
  * தசகாரியங்கள்
  * அதிசயமாலை
  * நிட்டை விளக்கம்
  * நமசிவாய மாலை
  * சித்தாந்த சிகாமணி

- **சமயப் பணிகள்**
  - (i) நாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆதீனத்தின் கிளை மடங்களை நிறுவுதல்.
    உ-ம்: தஞ்சாவூர், வேலூர், கடலூர், தூத்துக்குடி
  - (ii) பாடல் பெற்ற தலங்களையும், பிற கோயில்களையும் ஆட்சிக் கோயில்களாகக் கொண்டிருத்தல்
  - (iii) பல நூல்களையும், கண்டனங்களையும் (தம்பிரான்களும், முனிவர்களும்) எழுதுதல்
    உ-ம்: சிவஞான முனிவர் - சிவஞானபாடியம், சிவஞானசித்திப் பொழிப்புரை
    கச்சியப்ப முனிவர் - தணிகைப் புராணம்
  - (iv) புலவர்களைப் பேணல் - முத்துக்குமாரத் தம்பிரான்
    அருணாசலக்கவிராயர்
    ஆறுமுக நாவலர்
  - (v) மானியங்களை நிர்வகித்தல் - 50000 ஏக்கர் நிலங்களைப் பாதுகாத்தல்

- **சமூகப் பணி**
  - (i) மேல்நிலைப் பள்ளிகள், ஆகமப் பள்ளிகள், தட்டச்சு, சுருக்கெழுத்துப் பள்ளிகள் அமைத்தல்.
  - (ii) வள்ளலார் குருகுலம், கன்னியா குருகுலம், கருணை இல்லம் முதலானவற்றை அமைத்தல்.
  - (iii) நூல் வெளியீடு செய்தல், மெய்கண்டான் எனும் சஞ்சிகை நடத்துதல்.
  - (iv) வெள்ளப்பெருக்கு, சுனாமி முதலான இயற்கை அனர்த்தங்களின் பொழுது உதவுதல்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

படி I தமிழகத்தில் இந்து சமய வளர்ச்சி என்னும் பகுதியில் அடங்கும் ஒரு பகுதியைத் தெரிவுசெய்து, நூலாதாரங்களின் அடிப்படையில் மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

படி II
- மாணவர்கள் மேற்படி தலைப்பு தொடர்பான மேலதிக தகவல்களைத் திரட்டுவதற்காக நூல்களை வழங்கி வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்து, மேற்படி தலைப்பில் உள்ளடங்கும் 5 விடயங்கள் தொடர்பான தகவல்களையும் உசாத்துணைகளின் பெயர்ப்பட்டியலையும் சேகரிக்க வழிப்படுத்துங்கள்.

படி III
- ஒவ்வொரு குழுவும் சேகரித்த தகவல்களை ஒழுங்குபடத் தொகுத்து, வகுப்பறையில் முன்வைக்க இடமளியுங்கள்.
- முன்வைத்த தகவல்களைத் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்துமாறு கூறுங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை :**

| | |
|---|---|
| தமிழர் சால்பு | - பேராசிரியர் சு. வித்தியானந்தன் |
| பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் | - பேராசிரியர் கைலாசபதி |
| தமிழ் நாட்டு சமுதாய பண்பாட்டு வரலாறு | - பேராசிரியர் ந.க. மங்கள முருகேசன் |
| தமிழர் சமய வரலாறு | - பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை |
| தமிழ் இலக்கியத்தில்காலமும் கருத்தும் | - பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை |
| சங்க இலக்கியம் | - மகாநாட்டு மலர் - இந்து கலாசார அமைச்சு |
| மெய்கண்டான் சஞ்சிகை | |

**தேர்ச்சி 2.0 : இந்து சமயத்தில் அறுவகைச் சமய நெறிகள் வகிக்கும் பங்கினை, சான்றாதாரங்களுடன் அறிந்து மதிப்பளிப்பர்.**

**தேர்ச்சி மட்டம் 2.1** : இந்து சமய நெறிகள் பற்றி விளங்கிக் கொள்வார்
**பாடவேளைகள்** : 20

**கற்றற் பேறுகள் :**

- இந்துமதம் பற்றிய அடிப்படை அறிவைப் பெறுவார்.
- அறுவகைச் சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியையும் நூல்களின் ஊடாக ஆராய்ந்து எழுதிக் காட்டுவார்.
- அறுவகைச் சமயங்களின் சிறப்பியல்புகளையும் விளக்கமாக அறிந்து கூறுவார். சைவ வைணவ சமயநெறிகளின் சிறப்பியல்புகளை விளக்கமாக அறிந்து கூறுவார்
- காணபத்திய சமய நெறியின் விழுமியங்கள் மற்றும் சிறப்புக்கள், நூல்கள், விரதங்கள் பற்றி எடுத்துரைப்பார்.
- சாக்த வழிபாட்டு சிறப்பம்சங்களையும் அதன் தொன்மைச் சிறப்புக்களையும் அறிந்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வார்
- முருக வழிபாட்டின் தொன்மை மற்றும் சிறப்புக்களை நூலாதாரங்கள் மூலம் எடுத்துரைப்பார்.
- தற்காலத்தில் இவ்வகை வழிபாடுகளின் சிறப்பான தன்மைகளையும் நம்பிக்கைகளையும் விளக்குவார்.
- இலங்கையில் சக்தி, கணபதி, முருக வழிபாட்டின் முக்கியத்துவத்தை முன்வைப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**அறுவகைச் சமய நெறிகள்**

- இந்து சமயம் பற்றிய அறிமுகம்
- சண்மதபிரதித்தாபகர் ஆதிசங்கரர்.
- சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன அறுவகைச் சமய நெறிகளாகும்.

### 2.1.1.4 காணபத்தியம்

- கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் காணபத்தியமாகும். கணபதியை வழிபடுவோர் காணபத்தியர் என்று அழைக்கப்படுவர்.
- காணபத்திய வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்
  - வட இந்தியா
  - வேதம் - இருக்கு வேதத்தில் "கவிஞர்களின் கவிஞன் "
    ஞானிகளின் ஞானி"
    அரசர்களின் அரசன்" எனச் சுட்டல்.
- வேதங்களில் உருவ வழிபாடு இல்லை. எனினும் கணபதி பற்றிய வர்ணனைகள் காணப்படுகின்றன.
  "கணானம் த்வாம் கணபதிகூம்" யசுர்வேதத்தில் "கணபதிக்கு வணக்கம் "என்று கூறப்பட்டுள்ளது.
- பிராமணங்கள் (ஐதரேயம்) விநாயகர் விக்கினங்களைத் தீர்ப்பவராகவும் அடியார்களைச் சாந்தப்படுத்துபவராகவும் விளங்குகின்றார்.

- உபநிடதங்கள் - ஏரம்ப உபநிடதம், கணேச உபநிடதம்

  ஓம் கணபதியே வணக்கம். நீயே காணும் உண்மைப் பொருள். நீயே படைப்பவனும் காப்பனும் அழிப்பவனுமாய் உள்ளாய்" எனும் குறிப்புக்கள் உள்ளன.

- புராணங்கள்

  பிள்ளையாருடைய பிறப்பு, சிறப்பு என்பன எடுத்துக் கூறப்படுகின்றன.

  உதாரணம்: ஸ்கந்த புராணத்தின் ஒரு பகுதியான கணேச மகாத்மியம் வடமொழிப் புராணங்களான முக்கல புராணம், பிரம்ம கைவர்த்தன புராணத்தின் ஒரு பகுதியான கணேசபுராணம்

- குப்தர் காலம்குப்தர் காலம் இங்கும் பிள்ளையாருடைய சிறப்பு கூறப்படுகின்றது.

  உதாரணம்:

  மகாபாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல விநாயகர் எழுதினார். இடையில் எழுத்தாணி உடைய, தன்னுடைய ஒற்றைக் கொம்பினை உடைத்து எழுதினார்.

- தென்னிந்தியா

  சங்க காலம் - குறிஞ்சி நிலத்துக்குரிய தெய்வமாக முருகன் வணங்கப்படுகின்றார். எனவே அவரது அண்ணனான விநாயகரும் இருந்திருக்க வேண்டும்.

  சங்கமருவிய காலம் - மணிமேகலை - " கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை"

  நக்கீரர் - விநாயகரைப் பற்றி பாடியுள்ளார்.

- பல்லவர் காலம்

  இக்காலத்தில்தான் தமிழ் நாட்டில் விக்கிரக வழிபாடு ஆரம்பமானது. வட இந்தியாவில் இருந்து அகத்தியரால் வாதாபிக்குக் கொண்டு வரப்பட்ட விநாயகர் உருவம் தென் தமிழகத்தில் சிறுத்தொண்டரால் வழிபடப்பட்டது. இதனைத் திருஞானசம்பந்தர்

  அங்கமும் வேதமும்.......... என்ற பாடலில்

  ..... ஏந்தியாடும் கணபதீச்சரம் காமுறவே எனக் குறிப்பிட்டுள்ளார்.

- **சோழர் காலம்**

  இக்காலத்தில் ஆலயங்கள் பல கட்டப்பட்டன. நம்பியாண்டார் நம்பி பொல்லாப் (பொள்ளாப்) பிள்ளையாரின் (திருநாரையூர்) அருளைப் பெற்று விநாயகர் மீது பல பாடல்களைப் பாடியுள்ளார்.

  உதாரணம்: திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை,

- **நாயக்கர் காலம்**

  - விநாயகருக்குரிய கோயில்கள் காணப்பட்டன.
  - கணபதியினுடைய திருவுருவச் சிறப்பு

  கணபதியின் உடலில் எல்லா தெய்வங்களும் இருக்கின்றார்கள்.

  முகம் - விஷ்ணு ரூபம்

  கண் - சிவரூபம்

  வலப்பாகம் - சூரியரூபம்

  இடப்பாகம் - சக்திரூபம்

  நாபி - பிரம்மரூபம்

  எல்லா ஜீவராசிகளும் இவருடைய உடலில் இணைந்து இருத்தல்

- **கணபதிக்குரிய சில காரணப் பெயர்கள்**

  பிள்ளையார் - பிள்ளைகளுக்குரிய கடவுள்

  விநாயகர் - தனக்குமேல் தலைவன் இல்லாதவர்

  லம்போதரர் - பெரிய வயிறை உடையவர்

  கணபதி - கணங்களுக்கெல்லாம் தலைவர்

  கணேசன் - மனம், வாக்கு என்பவற்றிற்கும் அவற்றை கடந்த நிலைக்கும் உரியவர்

- **விநாயகரின் திருவுருவமும் தத்துவக் கருத்தும்**

  பானை வயிறு - உலகம் முழுவதும் வயிற்றில் உள்ளடக்கம்

  யானை முகம் - ஓம் என்ற பிரணவ மந்திரத்தைக் குறிக்கின்றது

  பெரிய செவி - அன்பர்கள் கூறுவதைக் கேட்கும் ஆவல் உடையவர்

  மோதகம் - இன்ப வடிவானவன்

  ஒற்றைக் கொம்பு- தியாகத்தைக் குறிக்கும்

- **ஐந்தொழில்களை உணர்த்தி நிற்றல்**

  எழுத்தாணி பிடிக்கும் கரம் - படைத்தல்

  மோதகம் இருக்கும் கரம் - காத்தல்

  அங்குசம் ஏந்திய கரம் - அழித்தல்

  அமுத கலசம் - அருளல்

  பாசம் கொண்டிருக்கும் கை - மறைத்தல்

**சாக்தம்**

- சாக்தம் என்பதன் பொருள்
- சாக்தத்தின் முழுமுதற் கடவுள்
- சாக்த வழிபாட்டின் தோற்றம், தொன்மம், பழ மரபுக் கதைகள், தொல் பொருட் சான்றுகள்
- சாக்தம் தோன்றி வளர்ந்த இடங்கள்
- வழிபாடு
  - கடவுளரின் வடிவங்கள்
  - இலட்சண விதிகள்
  - வழிபாட்டு முறைகள் - மந்திரம், தந்திரம், யந்திரம்
  - விரதங்கள்
- சாக்த சமய நூல்கள்
- சாக்த தத்துவம்
- பிரசித்தி பெற்ற ஆலயங்கள்

**முருக வழிபாடு**

- முருக வழிபாட்டின் விளக்கம்
- முருக வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்
- பிரசித்தி பெற்ற கோயில்களும் வழிபாட்டு முறைகளும்
- முருக வழிபாடு தொடர்பான நூல்கள்முருக வழிபாடு
- முருக வழிபாடு தொன்மை மிக்கது. சிவனின் மகனான முருகனுக்கும் தமிழர்களுக்கும் இருக்கக்கூடிய தொடர்பு என்பது வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டதாகும்.
- தமிழர்களின் பண்பாட்டோடும் மொழியோடும் தத்துவத்தோடும் பழக்க வழக்கங்களோடும் இம்முருக வழிபாடு பின்னிப் பிணைந்திருந்த தன்மையைச் சங்ககால இலக்கியங்களான திருமுருகாற்றுப்படை, பரிபாடல் என்பன கூறுகின்றன.

- இயற்கை வழிபாட்டின் ஒரு கூறான சூரிய வணக்கமே பின்னர் முருக வழிபாடானது என்பர். இதனைப் "பரிபாடற்திறன்" எனும் நூலில் செவ்வேள் வணக்கம் பற்றி எழுதிய "சாரங்கபாணி" பின்வருமாறு விவரித்துள்ளார். "மாக்கடலினின்று நிவர்தெழுந்த இளஞாயிற்றின் இயற்கை அழகில் உள்ளந் தோய்ந்த அன்பர்கள் அதனையே இறையென வழிபட்டு வணங்கினர். அதுவே பின்னர் நீலமயில் மீது வீற்றிருக்கும் செவ்வேள் வழிபாடாக மலர்ந்தது"
- குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாக "முருகன் "சேயோன் மேய மைவரை உலகமும்" "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்று திருமுருகாற்றுப் படையில் நக்கீரர்குறிப்பிடுகின்றார்.
- மானுடவியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி முருகன் ஒரு குழுமத்தின் தலைவனாக இருந்து பெரும் வெற்றிகளையீட்டித் தெய்வத்தன்மைக்கு உயர்த்தப்பட்டு நாளடைவில் ஒரு தெய்வமாக வணங்கப்பட்டிருக்கலாம். சமூக அடிப்படையில் மலையைத் தெய்வமாகவும் முருகனை மலைவாழ் இறையாகவும் வழிபட்டிருக்கலாம்.
- சிக்மன் பிறைட்" என்ற அறிஞரின் மானுடவியற் கொள்கைப்படி தெய்வவழிபாடு என்பது தனி மனிதனின் உள்மனப் போராட்டத்தின் எதிரொலியாகும் என்கின்றார். இதனடிப்படையில் தங்களுக்குள் ஒரு தலைவனை உருவாக்கிக் கொண்ட ஆதிகால மக்கள் அவனை "முருகன்" என்று அழைத்தனர்.
- முருகவழிபாடு குறித்துத் தார்பர் கூறும் போது தமிழர்கள் முருகனைப் போர் நிலத் தெய்வமான கொற்றவையின் மகன் என்று போற்றியதோடு தங்கள் போர்த் தெய்வமாகவும் வணங்கினர் என்று குறிப்பிடுகின்றார்.

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்**

படி I
- அறுவகைச் சமய நெறிகளுள் ஒன்றைப் பற்றி மாணவர்களுக்குவிருப்பை ஏற்படுத்தக்கூடியதாக முன்வையுங்கள்.

படி II
- அறுவகைச் சமய நெறிகள் தொடர்பாகத் தகவல்களைத் திரட்ட மாணவர் களுக்கு இடமளியுங்கள்.
- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து, கௌமாரம், சௌரம் தொடர்பான பல்வேறு தகவல்களைத் திரட்ட வழிகாட்டுங்கள்.

படி: III
- இரு குழுவினரும் சேகரித்த தகவல்களை முன்வைக்க இடமளியுங்கள்.
- முன்வைத்த விடயங்களை அட்டவணையாக்கி, வகுப்பறையில் காட்சிப் படுத்துமாறு கூறுங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை :**


இந்துப் பண்பாட்டு மரபுகள் - கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர்
இந்திய வரலாறு 1, 11 - கா. சுப்பிரமணியபிள்ளை
விநாயக மகோற்சவம் - பிரம்மஸ்ரீ ஆத்மநாபசர்மா
தேவிபாகவதம் - சங்கராச்சாரியர்
இந்துநாகரிகம் - க. சி. குலரெத்தினம்
இந்துநாகரிகம் - சொக்கன்
இந்து நாகரிகம் - சாந்தி கேசவன்

**தேர்ச்சி 3.0 : நாயன்மார்களதும் சித்தர்களதும் பணியினை இனங்கண்டு, அவர்களின் மேம்பட்ட வாழ்வை வாழ முன்வருவார்**

**தேர்ச்சி மட்டம் 3.1 :** பக்தி மார்க்கங்களையும் அவை பற்றிய விளக்கங்களையும் நாயன்மார்களதும், ஆழ்வார்களதும் வாழ்வியலைத் துணைக் கொண்டு எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள் :** 15

**கற்றற் பேறுகள் :**

- பக்தர்கள், சித்தர்கள் என்பதன் பொருள் விளக்கத்தை உதாரணங்களுடன் முன்வைப்பார்.
- பக்தர்களது வகைகளைச் சைவ, வைணவம் என்ற அடிப்படையில் பகுத்துக் கூறுவார்.
- நாயன்மார் என்பதன் விளக்கத்தையும், அவர்களில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறு, பணிகள் என்பவற்றையும் முன்வைப்பார்.
- நாயன்மாரின் சிறப்புக்களை மதித்து குருபூசைத் தினங்களை மேற்கொள்வார்.
- பன்னிரு ஆழ்வார்களையும், அவர்களின் பாசுரங்களையும் வகைப்படுத்துவார்.
- வைணவ ஆழ்வார்களில் நம்மாழ்வார், ஆண்டாள், பெரியாழ்வார் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர்களது பணிகளையும் குறிப்பிடுவார்.
- நாயன்மார்களதும், ஆழ்வார்களதும் பாடல்களைப் பாடுவதுடன் அவற்றுக்கு மதிப்பும் அளிப்பார்.
- நாயன்மார், ஆழ்வார்களின் பாடல்களில் காணப்படும் இரசனைகளை மற்றவர்களுடன் கலந்துரையாடிப் பகிர்ந்து கொள்வார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- **3.1.1 பக்தர்கள், சித்தர்கள் விளக்கம்**
- சைவநெறி, அன்புநெறி எனப் பறைசாற்றியவர்கள் பக்தர்களே.
- வைதிக சமயம் மீண்டும் ஒருமுறை தன் ஒளி குன்றி, சரியாதபடி திடமான அடிப்படையில் நிறுவியவர்கள்.
- இறைவனின் பக்தி வெள்ளத்தில் ஆழ்ந்தவர்களே பக்தர்கள். இவர்கள் நாயன்மார், ஆழ்வார்கள் ஆவர்.
- இறைவனிடத்தில் ஈடுபாடு கொண்டு, அகங்குழைந்து, நெஞ்சமாகிய திரையில் அவரைப் பற்றிய எண்ணங்களை அழியாமல் தீட்டி வைத்து "நான் " என்னும் செருக்கை அறுப்பார்களாயின் கடவுளின் திருவருள் தானாக வந்து எய்தும் என்பதே பக்தர்கள் கொள்கையாகும்.
- அவர்கள் தாம் பெற்ற பேரின்பத்தை பெற மக்களுக்கு வழி காட்டினார்.
- உலக இயல்புகளையும், இயற்கை எழிலிலும் நிரம்பிய இறைவனைக் கண்டார்கள். எனவே ஐம்பூதங்களிலும், பேசுகின்ற சொல்லிலும், எண்ணுகின்ற எண்ணங்களிலும் கடவுள் கலந்துள்ளார் என்பதை வலியுறுத்தி எண்ணம், செயல் ஆகியவற்றில் தூய்மை வேண்டும் என மக்களுக்கு எடுத்தோதினர்.

- பக்திப் பாடல்களால் சைவத்தையும், வைஷ்ணவத்தையும் வளர்த்துள்ளனர்.
- ஆழ்வார்கள் மக்களோடு மக்களாக வாழ்ந்து, மக்கள் ஒழுக்கத்தை வளர்த்தும் திருமாலிடம் அன்பைப் பெருக்கியும் வைணவத்தை வளர்த்துள்ளனர்.
- சித்தர்கள் என்போர் சிவபெருமானின் திருவருள் நோக்கினைப் பெற்றவர்கள்.
- சமயங்கடந்த சமரச நன்னிலையில் நிற்போர்.
- தமிழ் நாட்டுச் சித்தர்கள் பதினெண்மர்.
- சித்துக்களில் வல்லவர்கள் சித்தர்கள். இவர்கள் அட்டமா சித்திகளிற் கைதேர்ந்தவர்கள்
- சித்தர்கள் சாதி சமய ஆசாரக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்கள்.
- யோக மார்க்கத்தில் வல்லவர்களான சித்தர்கள் அந்நெறி நின்று பல சித்திகளைப் பெற்றனர்.
- சித்தர்கள் கைக்கொண்ட யோகமார்க்கம் வாசியோகம் எனப்படும். வாசியென்பது சுவாசம், வாசியை அடக்கி ஆண்டவர்கள் சித்தர்கள்.
- உடலை திடமாக வைத்திருப்பதற்கும் நீண்டநாள் வாழ்வதற்கும் சித்தர்கள் வைத்தியத் துறையில் ஆராய்ச்சி செய்து கண்டறிந்த முறை சித்த வைத்தியம் எனப்படும்.

## 3.1.2 நாயன்மார் நால்வரும் அவர்களது பணிகளும்

(நாயன்மார் வரலாறு இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் இதனை விரிவாகக் கற்பிக்கவும்.)

- சைவநெறியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு உழைத்தவர்கள் நாயன்மார்கள். இவர்கள் 63 பேர் ஆவர். சைவநாயன்மார்களில் சைவசமய குரவர்கள் முக்கியமானவர்கள்.
    - திருஞானசம்பந்தர் மூர்த்தி நாயனார்
    - திருநாவுக்கரச நாயனார்
    - சுந்தரர் மூர்த்தி நாயனார்
    - மாணிக்கவாசக சுவாமிகள்

### 3.1.2.1 திருஞானசம்பந்தர் மூர்த்தி நாயனார்

- வாழ்க்கை வரலாறு பற்றிய விளக்கம்
- சமய, சமூகப் பணிகளில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் பங்களிப்பு
- இயற்கையைப் போற்றுவதன் மூலம் மனித வாழ்வு வளம் பெறுவதைப் பாடியமை
- தேவாரப் பதிகங்கள் பாடியமை
- தலயாத்திரை மூலம் பக்தியை வளர்த்தமை
- வாதங்கள் புரிந்து சைவ சமயத்தை நிலைநாட்டியமை
- திருநீறு, பஞ்சாட்சர மந்திரத்தின் பெருமையை உலகறியச் செய்தமை
- பசிப்பிணி நீக்கியமை
- அரசரை மதம் மாற்றியமை
- சற்புத்திர மார்க்கத்தில் நின்று வாழ்ந்து காட்டியமை
- திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் சமூக நோக்கு
    - இறைவழிபாட்டால் மண்ணில்
    - நல்லவண்ணம் வாழலாம் என வழிகாட்டியவர்.
- கலை, தத்துவ வளர்ச்சியில் பங்களிப்பு
    - இயற்கை அழகையும், இறை ஆற்றலையும் உணரச் செய்தவர்
    - புராணக்கதைகள், இதிகாசக்கதை, கடவுட் கொள்கை என்பவற்றைப் பதிகத்தின் ஊடாக எடுத்துக்காட்டல்

### 3.1.2.2 திருநாவுக்கரச சுவாமிகள்

- வாழ்க்கை வரலாறு - விளக்கம்
- திருநாவுக்கரசு நாயனாரின் சமய, சமூகப் பணிகளை விளக்குதல்.
  - கோயிற்றிருப்பணி - சரியைத் தொண்டு - திருவங்கமாலை
  - தாசமார்க்கத்தில் வாழ்ந்தமை
  - அரசரை மதம் மாற்றியமை, ஆன்மவீரம்
  - தேவாரப் பதிகங்கள் பாடியமை
  - தல யாத்திரை
  - சமூக, சமரச மனப்பாங்கை வளர்த்தமை
    ”ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்”
- தத்துவ வளர்ச்சியில் பங்களிப்பினை விளக்குதல், இறைநம்பிக்கை, இறைவனின் உருவம் உலக நிலையாமைக் கருத்துக்கள்
- திருநாவுக்கரசு நாயனாரும் சமூகமும் - உழவாரத் தொண்டு, சிரமதானப் பணிக்கு முன்னோடி
- பக்திபூர்வமாக இறைவனை வழிபட வேண்டுமென வாழ்ந்து காட்டியவர்
  ”சலம்பூவொடுதூபம் மறந்தறியேன்”
  பஞ்சாட்சர மந்திரம் - தேவாரப் பதிகமூடாக விளக்குதல்.

### 3.1.2.3 சுந்தரமூர்த்தி நாயனார்

- வரலாற்றினை விளக்குதல்
- சமய, சமூகப் பணிகள்
  - தேவாரப் பதிகங்கள் பாடியமை
  - அற்புதங்கள் புரிந்தமை
- சமூக, சமரச மனப்பாங்கை வளர்த்தமை
  “தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கு மடியேன்”
- சக மார்க்க நெறியில் வாழ்ந்து காட்டியவர்
- தத்துவ வளர்ச்சியில் பங்களிப்பு
  - சிவனது தோற்றப் பொலிவு
  - வேதாகமக் கருத்துக்கள்

### 3.1.2.4 மாணிக்கவாசக சுவாமிகள்

- வாழ்க்கை வரலாறு - விளக்கம்
  சமய, சமூகப் பணிகள்
  - அற்புதங்கள் புரிந்தமை
    உ-ம் : ஊமைப்பெண்ணைப் பேசவைத்தமை
  - திருவாசகம், திருக்கோவையார் பாடியமை
- தத்துவ வளர்ச்சியில் பங்களிப்பு
  - இறைவனின் இயல்புகள்
  - அடியார்க்கு அருள் செய்யும் திறம்
  - சைவ சித்தாந்தக் கருத்துக்கள்
  - மும்மலங்கள், கன்மம், மறுபிறப்பு, முக்தி, ஞான மார்க்கச் சிறப்பு
- மாணிக்கவாசகரின் சமூக நோக்கினை விளக்குதல்
- தலைமைத்துவம், தெய்வ நம்பிக்கை

### 3.1.3 ஆழ்வார்களும் அவர்களது பணிகளும்

- "ஆழ்வார்" என்பதன் விளக்கம் திருமாலின் மங்கள கல்யாண குணங்களில் தம்மை ஆழ்த்தியவர்கள்.
- வைணவ மத பக்தர்களை ஆழ்வார்கள் என்று அழைப்பார்கள்.
- பன்னிரு ஆழ்வார்கள்:

| | | |
|---|---|---|
| பொய்கையாழ்வார் | பூதத்தாழ்வார் | பேயாழ்வார் |
| நம்மாழ்வார் | குலசேகராழ்வார் | தொண்டரடிப்பொடியாழ்வார் |
| ஆண்டாள் | மதுரகவியாழ்வார் | திருபாணாழ்வார் |
| திருமழிசையாழ்வார் | திருமங்கையாழ்வார் | பெரியாழ்வார் |

- பன்னிரு ஆழ்வார்களது பாடல்களின் தொகுப்பே நாலாயிரத் திவ்வியபிரபந்தம் ஆகும். அதனைத் தொகுத்தவர் ஸ்ரீமத்நாதமுனிவர் ஆவார்.

### 3.1.3 .1 நம்மாழ்வார்

- **வாழ்வும் பின்னணியும்**
  - பாண்டிய நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி நதிக்கரையில் உள்ள ஆழ்வார் திருநகரி என்னும் திருக்குருகூரில் காரியார் என்பவருக்கும் உடையநங்கையார் என்பவருக்கும் திருக்குறுங்குடிப் பெருமாள் அருளால் வைகாசி விசாகத்தில் மகவாக அவதாரம் செய்தவரே ஸ்ரீசடகோபர்.
  - மறுபெயர்கள் - நம்மாழ்வார், ஸ்ரீவைணவ குலபதி
- **பணிகள்**
  - வைணவ சமய உண்மைகளான தத்துவம், இதம், புருடார்த்தம் என்ற மூன்று பிரிவுகளையும், அர்த்த பஞ்சஞானத்தையும், வைணவ சமய தத்துவங்கள், இறை பற்றிய உண்மைகள், இறைவனுக்குப் புரியும் கைங்கரியங்கள், வீடுபேறு முதலான வைணவ சமயக் கருத்துக்களையும் தமது பாடல்களில் குறிப்பிட்டு வைணவ சமய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார்.
- **பாடல்களும் உட்பொருளும்**
  1. நம்மாழ்வார் பாடிய பாடல்கள் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய - திருவந்தாதி, திருவாய்மொழி என்பனவாகும்.
  2. திருவிருத்தம் : இது 100 பாடல்களைக் கொண்டது. இதில் உலகக் கட்டிலிருந்து விடுபடல் தொடர்பான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளார்.
  3. திருவாசிரியம் : இது 7 ஆசிரிய பாக்களால் ஆனது. இறைவன் அருட்குணங்களைப் பரமானந்தம் பொலிய அனுபவித்துப் பாடியுள்ளார். இதில் சரணாகதி முறை வற்புறுத்தப்பட்டுள்ளது.
  4. பெரியதிருவந்தாதி: இது 87 பதிகங்களை உடையது. இதில் பரமானந்தத்தை அனுபவிக்கும் ஆசைப்பெருக்கத்தைப் பாடியுள்ளார்.
  5. திருவாய்மொழி : இது 27 பதிகங்களை கொண்டது. இதில் இறைவன் தனக்கு அருள் செய்தமையைப் பற்றி பாடியுள்ளார்.

- **நம்மாழ்வார் பாடல்களில் காணப்படும் பிரம சூத்திரம் பற்றிய கருத்துக்கள்**
  - உபநிடதங்கள், பகவத்கீதை பிரமசூத்திரம் ஆகிய மூன்றும் வேதாந்தத்தின் அடிநிலைகளாகும். பிரம்மசூத்திரம் தத்துவபரம், உபாசனபரம் என்ற இரு பகுதிகளைக் கொண்டது.
  - நம்மாழ்வாரின் திருவாய் மொழியில் முதல் 10 பாசுரங்களும் "தத்துவபரம்" என்றும் அடுத்த 10 பாசுரங்களும் "உபாசனபரம்" என்றும் பூர்வாசாரியர்கள் நிச்சயித்துள்ளனர்.
  - தத்துவபரம் என்ற முதல் 10 பாசுரங்களில் இறைவனின் குணம், அவரின் செயல்கள், பெருமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.
  - உபாசனபரம் எனும் அடுத்த 10 பாசுரங்கள்

    "வீடுமின் முற்றவும் வீடு செய்து உம்முயிர்
    வீடுடை யானிடை வீடு செய்மினே "

    இதனூடாக நாம் அடையும் பயனை முதலில் சொல்லி ஜீவாத்மாவின் நிலையையும் கூறி அதன் பின் ஜீவன் அடையும் பயனையும் தெரிவித்துள்ளார்.
  - பிரமசூத்திரத்தில் பொருள் விஷயமாக ஐயம் ஏற்படும்போது திருவாய் மொழியைக் கொண்டு அந்த ஐயம் தீரப் பெற்று, சூத்திர அர்த்தங்களைப் பாஷியக்காரர் நிர்ணயிப்பர் என்பார் அழகிய மணிவாளப்பெருமாள் நாயனார்.

### 3.1.3.2 பெரியாழ்வார்

- **வாழ்க்கைப் பின்னணி**
  - பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் வேயக்குடியில் முகுந்தர் என்பவருக்கும் பதுமை என்பவருக்கும் வட பத்திரசாயி என்னும் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெருமானின் அருளால் கருடாழ்வாரின் அம்சமாய் ஆனி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் அவதரித்தார்.
  - இளமை முதலே தம் மனதில் விஸ்ணுவை நிலைநிறுத்தி வழிபட்டு வந்ததால் இவர் விஸ்ணுசித்தர் என்றும் அழைக்கப்பட்டார்.
  - மறுபெயர்கள் - விஸ்ணுசித்தர், பட்டர்பிரான்
- **பணிகள்**
  - நந்தவனம் அமைத்து நறுமணம் மிக்க மலர்களைக் கொய்து, அவற்றை மாலையாகத் தொடுத்துத் திருமாலுக்குச் சாத்தும் திருப்பணியைமேற்கொண்டிருந்தார்.
  - பாண்டிய அரசனின் அவையில் இறைவன் அருளால் பெற்ற பொற்கிழியைக் கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபெருங்கோயிலுடையானுக்குக் கோயில் கட்டு வித்து அங்கு ஒவ்வொரு நாளும் பூசைக்குரிய மலர், மலர்மாலை என்பன கொடுத்து வந்தார்.

**பெரியாழ்வார் இயற்றிய பிரபந்தமும் எழுந்த சந்தர்ப்பமும்**

பிரபந்தங்கள்: திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி

- திருப்பல்லாண்டு
  - பாண்டிய மன்னன், பெரியாழ்வார் புலவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கிய காரணத்தால் அவரை நகர்வலம் அழைத்து வந்தான். அவ்வாறு அழைத்து வருகின்ற கோலத்தை அனுபவிக்கப் பெருமாள் பிராட்டியுடன் கருடன் மீதமர்ந்து வானத்தில் தோன்றி ஆழ்வாருக்குக் காட்சி கொடுக்க," நல்ல காலத்திலேயே இம் மண்ணுலகோர் தீங்கு செய்வர்; இக்கலிகாலத்தில் முகம் காட்டுகிறாரே. அவருக்கு ஏதேனும் தீங்கு நேருமோ!" என்று பயந்து யானை மீதிருந்த மணிகளை எடுத்து, தாளமாகக் கொண்டு, 'பல்லாண்டு பல்லாண்டு' என்று மங்களாசாசனம் செய்தார்.

- **பெரியாழ்வார் திருமொழி**
  - கிருஷ்ண அவதாரத்தில் இளமை முதலே ஆழ்ந்த சிந்தனை உடையவராதலால் அந்த அவதாரப் பெருமைகள், கண்ணனின் விளையாட்டு எல்லாம் முற்றும் அனுபவித்து, இப்பிரபந்தத்தைப் பாடி உலகை வாழ்வித்தார்.
  - 43 பதிகங்கள் உள்ளன. பதிகம் என்பது வைணவ மரபுப்படி "திருமொழி" எனப்படும். இது கண்ணனின் அவதாரச் சிறப்புடன் தொடங்குகிறது.
  - பெரியாழ்வார் திருமொழியில் கண்ணனது பிள்ளைக் குணங்களையும் இளம் பருவச் செயல்களையும் கண்ணனின் வளர்ப்புத் தாயான யசோதையாகவே தம்மைப் பாவித்துப் பாடியுள்ளார்.
  - விசிட்டாத்வைதக் கோட்பாட்டின் தனிச் சிறப்பைக் காட்டும் பாசுரமும் இதுவாகும்.
  - விஷ்ணுவைச் சித்தத்தில் உடையவராக வாழ்க்கையைத் தொடங்கிய அவர் விஷ்ணுவின் சித்தத்தில் உறைபவராக முதிர்ச்சி பெற்றதையும் இது காட்டுகிறது.

### 3.1.3.3 ஆண்டாள்

- **வாழ்க்கையும் பின்னணியும்**
  - பெரியாழ்வார் நந்தவனம் அமைத்து மாலைகளைக் கட்டி ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கும் பெருமாளுக்கு அளித்து வந்தார்.
  - அச்சமயம் ஒருநாள் துளசிச்செடியின் கீழ் பெண் குழந்தை கிடக்கக் கண்டு, இது அப்பெருமாளின் அருளாலே கிடைத்தது என்று எண்ணி அக்குழந்தையை எடுத்து கோதை கோதைஎனும் பெயர் சூட்டி வளர்த்து வந்தார். அவரே ஆண்டாள் ஆவார்.
  - கோதை, பெரியாழ்வாரிடமும் அவரோடு தொடர்புடைய பாகவதர்களிடமும் சேர்ந்து பழகிப் பூர்வமான ஞானத்தையும் பெற்றதோடு, கற்பனாசக்தியையும் கவிதை இயற்றும் சக்தியையும் பெற்றிருந்தார்.

- **ஆண்டாளின் பாடல்களும் உட்கருத்தும்**
  - ஆண்டாள் பாடல்கள் - திருப்பாவை, நாச்சியார் திருமொழி
  - **திருப்பாவை**

    இது 30 பாசுரங்களை உடையது. இந்நூல் பல பகுதிகளைக் கொண்டுள்ளது. இப்பிரபந்தம் அஞ்ஞானத்தில் ஆழ்ந்து கிடக்கும் ஆன்மாக்களுக்கு ஞானம் ஊட்டி இறைவனுடன் கலந்து பேரின்பம் அனுபவிக்க செய்வதை விளக்குவது. அத்துடன் அர்த்த பஞ்சமான ஈசுவர சொரூபத்தையும் (1 - 5), ஆன்ம சொரூபத்தையும் (6 - 15), பகவதி சொரூபத்தையும் (16 - 20), ஆன்மாக்களையும் கையற்று நீக்கும் நிலையும் உபாயமாகிய பிரபக்தியும் (21 - 25), வீடுபேறு அடையும் நிலையும் (26 - 30) உணர்த்தப்படுகின்றன.

- **நாச்சியார் திருமொழி**
    - 143 பாசுரங்களை உடையதாகும்.
    - ஆண்டாள் விஷ்ணுவைத் தன்னுடைய காதலனாகக்கொண்டு பாடும் முறையில் நாச்சியார் திருமொழி அமைந்தது.

- **திருப்பாணாழ்வார் வரலாறும் பணிகளும்**
    - பாணர் மரபில் தோன்றியவரே திருப்பாணாழ்வார். சோழ வளநாட்டில் காவிரி பெருக்கெடுத்தோடும் உறையூரில் இவர் வாழந்து வந்தார். ஸ்ரீ ரங்கநாதனைப் புகழ்ந்து பாடி வைணவப் பணிசெய்தார். திருப்பாணாழ்வார். காவேரிக் கரையில் நின்று ஸ்ரீ ரங்க நாதனை புகழ்ந்துபபடும் போது லோகசாரங்கர் என்னும் குரு அபிஷேக நீர் எடுப்பதற்காக காவிரிக் கரைக்கு வருகைதந்தார்.
    திருப்பாணாழ்வார் தமக்கு தடையாக இருப்பதைக் கண்டார் அப்போது அயலவர்கள் திருப்பாணாழ்வாரைக் கல்லெறிந்து விலகச் செய்தனர்.
    - இக்காட்சி லோகசாரங்கர் மனதை வெகுவாய் பாதித்தது. கவலையுடன் நித்திரைக்குச் சென்றார் அப்போது ஸ்ரீ ரங்கநாத பெருமானை காண்பது போலவும் அவரது நெற்றியில் இரத்தம் கசிவதுபோலவும் கனவு கண்டார் அவ்வேளை திருப்பாணாழ்வாரைக் கோயிலுக்கு அழைத்து வருமாறு பணித்து ஸ்ரீரங்கநாதர் மறைந்து அருளினார்.
    - இதன்பின்பு லோகசாரங்கர் திருப்பாணாழ்வார் வீட்டுக்குச் சென்று அவரை தூக்கிச் சென்று ஸ்ரீரங்க நாதர் கோயிலை அடைந்தார்.
    அப்போது அமலனாதிபிரான் என்னும் பிரபந்தத்தைப் பாடினார். இது பத்துப் பாடல்களைக் கொண்டதாகும். இதில் திருமாலின் திருத்தோற்ற வடிவழகு வர்ணிக்கப்படுகின்றது.

        "கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
        உண்ட வாயான் என் உள்ளம் கவர்ந்தானை
        அண்டர்கோண அணியரங்கன் என்னமுதினைக்
        கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே"

    என்பது திருப்பாணாழ்வார் பாடலாகும் இவரது பாடல்கள் வேதசாரம் எனப் போற்றப்படுகின்றன. ஆழ்வார் உற்சவங்களில் லோகசாரங்கரே திருப்பாணாழ்வார் வாகனமாக கொள்ளப்படுகின்றது.∴

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

படி I • பக்தர்களில் ஒருவரைப் பற்றி மாணவருக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

படி II • பக்தர்கள், சித்தர்கள் தொடர்பான தகவலைத் திரட்டுவதற்குச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.

படி II • மாணவர்களைக் குழுக்களாக பிரித்து,"பக்தர்களின் சமயப்பணி, சித்தர்களின் சமயப்பணி " என்ற தலைப்புக்களில் தகவல் திரட்ட வழிப்படுத்துங்கள்.

• பக்தர்கள், சித்தர்கள் தொடர்பாக ஒப்படை ஒன்றை தயாரிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

படி: III • முன்வைத்த விடயங்களை தொகுத்து ஒப்படை ஒன்றைத் தயாரிக்குமாறு கூறுங்கள்.

**மேலதிக வாசிப்புக்குரியவை :**

| | | |
|---|---|---|
| இந்துக் கலைக்களஞ்சியம் | - | இந்து கலாசாரத் திணைக்களம் |
| இந்து நாகரிகம் | - | க. சி. குலரத்தினம் |
| பன்னிரு ஆழ்வார்களின் வரலாறு | - | அருணாசலம் |

**தேர்ச்சி 3.0 : நாயன்மார்களதும் சித்தர்களதும் பணியினை இனங்கண்டு, அவர்களின் மேம்பட்ட வாழ்வை வாழ முன்வருவார்**

**தேர்ச்சி மட்டம் 3.2 :** சித்தர் மரபு பற்றி அறிந்து அதற்கு மதிப்பளித்து எடுத்துக் கூறுவார்.

**பாடவேளைகள் :** 15

**கற்றற் பேறுகள் :**

- அனுபூதி அல்லது மறைஞானம் என்பது பற்றிய கருத்துக்களை தேடி அவற்றை வெளிப்படுத்துவார்.
- சித்தர்கள் என்பதன் பொருள் விளக்கத்தையும் பதினெண்சித்தர்களையும் கூறுவார்.
- பதினெண் சித்தர்களின் பெயர் விபரங்களைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- முக்கியமான சித்தர்களையும், ஈழத்துச் சித்தர்களையும் விளக்கமாக எடுத்துக் கூறுவார்.
- சித்தர்களின் பணிகளைப் பட்டியற்படுத்துவார்.
- திருமூலர் பற்றியும் திருமந்திரத்தின் சிறப்பு,அவை எடுத்துரைக்கும் தத்துவங்கள் என்பவற்றை ஆராய்ந்து முன்வைப்பார்.
- சித்தர்கள் பற்றியும் அட்டமா சித்திகளின் தேவை பற்றியும் அறிந்து போற்றுவார்.
- சித்தானைக்குட்டிச் சுவாமிகளின் சிறப்புக்களை அறிந்து, சித்தானைக்குட்டி சுவாமிகளின் ஆலயம் என்பவற்றை மற்றோருக்கும் எடுத்துரைப்பார்.
- சிவயோக சுவாமிகளின் சிறப்புக்களை அறிந்து அவரின் உபதேசங்களை வெளிப்படுத்துவார்.
- கடையிற் சுவாமிகளின் சிறப்புக்களை அறிந்து அவற்றினை மற்றோருக்கும் எடுத்துரைப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : 33.2.1 அனுபூதி - அறிமுகம்**

- அனுபூதி என்பது இறைவனைக் கண்ட அனுபவத்தில் பூரிப்பது ஆகும். அதாவது மனித நிலைமாற்றத்தை நோக்காகக் கொண்ட பல்வேறு அனுபவங்கள், சம்பிரதாயங்கள், முறையான பயிற்சிகள், ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு செயன்முறையால் உண்டாகும் மனித நிலைமாற்றமாகும். இதனை இன்னுமொரு வகையில் கூறுவதானால் மனித மனத்தின் நிலைகள் மற்றும் அசாதாரண அனுபவங்களுடன் இணைந்த ஒரு ஆன்மீக நிலை எனக்கூறலாம்.

- அனுபூதி பற்றி Evelyn Underhill (ஈவ்லின் அன்டகில்) என்பவர் ஆன்மீக வாழ்க்கை பற்றிய கலை அல்லது அறிவியல்தான் அனுபூதி எனக்கூறுகின்றார். இதனை மேலும் அவர் விபரிக்கையில் முழுமையான ஒரு பரவச நிலை நோக்கிய ஆத்மாவின் உள்ளார்ந்த போக்கின் ஒரு வெளிப்பாடு அனுபூதி என்கின்றார். Mccl lenon (மெக் லெனன்) அனுபூதி பற்றி விளக்கும் போது அனுபூதியை (Ultimate Truth) இறுதி உண்மை எனக் கூறுகின்றார். அதாவது இறுதி உண்மையை விளங்கிக் கொள்வதற்கு இட்டுச் செல்லுகின்ற விசேட மனம் சார் நிலைகள் தான் அனுபூதி என்கின்றார். Blake more (விளக் மோர்) Jennett (ஜெனட்) போன்றோர் அனுபூதி பற்றிக் கூறுகையில் இறைவனுடன் நேரடித் தொடர்பு கொள்கின்ற ஓர் அனுபவம் எனக்கூறுகின்றனர்.

- அனுபூதி பற்றி அகராதிகளும் பல்வேறு வியாக்கியானங்களைத் தருகின்றன. இவ்வகையில் Merriam webster என்னும் அகராதி ஆன்மீக உண்மை பற்றிய அறிவை வழிபாட்டின் ஊடாக அல்லது ஆழ்ந்த சிந்தனையின் ஊடாகவே அடைய முடியும் என்ற நம்பிக்கையால் எழுந்த ஒரு சமய செயற்பாடு அனுபூதி எனக்கூறுகின்றது. அனுபூதியை இறை அனுபவஞானம் என செந்தமிழ் அகராதி கூறுகின்றது. தானே உணர்ந்து பெற்றிடும் அறிவு(Experiential wisdom) அனுபூதி என நர்மதாவின் தமிழ் அகராதி தரும் விளக்கமாகும். அறிவு, புலனனுபவங்களை(Sense Experience) அடிப்படையாகக் கொண்டு உணர்ந்து பெறும் அறிவு அனுபூதி என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி கூறுகின்றது. மதுரைத் தமிழப் பேரகராதி அனுபூதியை சிந்தனை, பிரமாணங்களை கொண்டறிந்த அறிவு(சாதன சதுட்டயம்) எனக்கூறுகின்றது. ஆக, அனுபூதி என்பது ஆன்மா இறைவனுடன் ஐக்கியப்பட்டு, அனுபவித்து பெற்றுக் கொண்ட அனுபவ அறிவு என ஒருவாறு வரையறுத்துக் கூறலாம்.

### 3.2.2 சித்தர்கள்

**அறிமுகம்**

- சித்தத்தை இறைஞானத்தில் வைத்து வழிபாடு செய்தவர்கள் சித்தர்களாவர்.

  சித்தர் சிவத்தைக் கண்டவர் - சீருடன்
  சுத்தா சுத்தத்துள் தோய்ந்தும் தோயாதவர் "

  என்று சித்தர்களின் பெருமை குறிப்பிடப்பட்டுள்ளது.
- பிராணாயாமத்தின் மூலம் சித்தம் ஒடுங்கி வழிபாடு செய்யும் நிலையே சித்தர் வழிபாடாக அமைகின்றது. இறை உணர்வோடு வாழ்பவரே சித்தர்.
- சித்தர்கள் என்பவர் அட்டமா சித்திகள் மூலம் எண் வகை யோகங்களைக் கடைப் பிடிப்பவர்கள். அட்டமா சித்திகள் கைவரப் பெற்றவர்கள்.
- சித்தர்கள் சமய எல்லைகளைக் கடந்து சைவசித்தாந்தம், அறக்கோட்பாடு, ஞானம் முதலியவற்றை வளர்த்தவர்கள்.
- ஆன்மார்த்த வழிபாட்டைச் சித்தர்கள் அறிமுகம் செய்தார்கள்.
- சித்தர்கள் சமுதாயத்துடன் சேர்ந்தும் சேராமலும் தாமரை இலைத் தண்ணீர் போல் வாழ்ந்தார்கள். பற்றற்ற மனநிலையுடன் வாழ்ந்த சித்தர்கள் தமிழ்மொழி உணர்வுடன் தமது பாடல்களைப் பாடினர்.

#### 3.2.2.1 பதினெண் சித்தர்கள் - அறிமுகம்

- தமிழ் நாட்டுச் சித்தர், ஈழத்துச் சித்தர் என வகைப்படுத்தப்படுகின்றனர்.
- தமிழ்நாட்டுச் சித்தர் பதினெண்மர்

| | |
|---|---|
| • அகத்தியர் | • திருமூலர் |
| • பட்டினத்தார் | • சிவவாக்கியர் |
| • பத்திரகிரியார் | • அகப்பேய்ச்சித்தர் |
| • குதம்பைச்சித்தர் | • கடுவெளிச்சித்தர் |
| • அழுகணிச்சித்தர் | • கொங்கணச்சித்தர் |
| • பாம்பாட்டிச்சித்தர் | • இடைக்காட்டுச்சித்தர் |
| • கருவூரார் | • மதுரைவாலைசாமி |
| • கணபதிதாசர் | • உரோமரிஷி |
| • சட்டைமுனி | • போகர் சித்தர் |

### 3.2.2.2 திருமூலர்

**பின்னணி**

- இவர் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கும் 6 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்றது.
- திருக்கைலாச மரபில் வந்தவர். இம்மரபினை சிவமரபு, நந்திமரபு, நாதன் மரபு என அழைப்பர்.
- திருநந்திதேவரிடம் சிவாகமங்களைக் கற்றுணர்ந்தவர்.
- இளமைத் திருநாமத்தை சுந்தரநாதன் எனக் கொண்டவர். இடையன் மூலனின் இறந்த உடலுள் கூடுவிட்டுப் புகுந்து திருமூலராக விளங்கியவர்.
- திருவாவடுதுறையில் யோக நிஷ்டையில் ஆழ்ந்தவர்.
- தமிழ்நாட்டில் உதித்த சித்தர்களில் தலைமைச் சித்தராகக் கருதப்படுகிறார். சித்தர் பரம்பரையின் வித்து எனப் போற்றப்படுகிறார்.

**திருமந்திர நூலின் உட்பொருள்**

- மூவாயிரம் பாடல்களாலான சைவத் திருநூல் திருமந்திரமாகும். அது பன்னிரு திருமுறைகளில் பத்தாந் திருமுறையாகவும், தமிழ் ஆகமமாகவும் சிறப்புப் பெறுவது.
- ஒழுக்கத்தை வலியுறுத்திக் கூறும் நூல். அனுபவ ஞானத்தின் திருநூல்
- சமயம், தத்துவம், அறிவியல் ஆகியவற்றை ஒருங்கே தரும் கலைக்களஞ்சியம்.
- அது யோக சாதனை நூல். மந்திர சாத்திரம், தந்திர சாத்திரம் எனப் போற்றப்படும்.
- தர்மசாத்திரமாகவும் விளங்கும் சிறப்பு உடையது.
- சம காலத்தில் தமிழகத்தில் நிலவிய பல்வேறு சைவப் பிரிவுகளைப் பதிவுசெய்து கொண்ட ஒரு ஆவண நூலாக விளங்குவது.
- சைவத்தின் முடிந்த முடிபான சித்தாந்தக் கொள்கை பற்றி முதன்முதலில் குறிப்பிட்ட திருநூல். - "தற்பரம் கண்டுள்ளோர் சைவசித்தாந்தரே" என்று இந்நூல் கூறுகிறது.
- சைவ தத்துவத்தின் முதன் நூல்களைத் தெளிவாக அடையாளங் காட்டிய சிறப்பு.
- அண்டவியல், வானியல், கணிதவியல் உள்ளிட்ட இந்துக்களின் பௌதீக அறிவியல் பற்றிய குறிப்புகள் செறிந்துள்ளன.
- உயிர்வர்க்கங்களின் தோற்றம், நோய்கள், சிகிச்சை உள்ளிட்ட உயிரியல், மருத்துவ சிந்தனைகளைக் கொண்ட சிறப்பு நூல்.
- வடமொழி சாஸ்திர மரபுக்கும் தமிழ்ப்புலமை மரபிற்கும் இடையே ஒரு தொடரோட்டத்தை இனங்காட்டியமை.
- "தமிழ் ஆகமம் "- "சுந்தரனாகமச் சொல்"
- "தமிழ்ச்சொல், வடசொல் என்றிரண்டும்
  உணர்த்தும் அவனை உணரலுமாகும் "

- தமிழில் 9 ஆகமங்களை விரித்துத் தமிழ்படுத்திய நூல். இதன் உள்ளடக்கம்
    1. முதலாந் தந்திரம் - காரணாகமத்தின் சாரம்
    2. இரண்டாந் தந்திரம் - காமிகாகமத்தின் சாரம்
    3. மூன்றாந் தந்திரம் - வீராகமத்தின் சாரம்
    4. நான்காந் தந்திரம் - சிந்தியாகமத்தின் சாரம்
    5. ஐந்தாந் தந்திரம் - வாதுளாகமத்தின் சாரம்
    6. ஆறாந் தந்திரம் - வியாமளாகமத்தின் சாரம்
    7. ஏழாந் தந்திரம் - காலோத்தராகமத்தின் சாரம்
    8. எட்டாந் தந்திரம் - சுப்பிராபேதாகமத்தின் சாரம்
    9. ஒன்பதாந் தந்திரம் - மகுடாகமத்தின் சாரம்

### 3.2.3 ஈழத்துச் சித்தர்கள்

அறிமுகம்

- ஈழத்துச் சித்தர்களில் பின்வருவோர் அடங்குவர்.
    - கடையிற் சுவாமி
    - யோகர் சுவாமி
    - சித்தானைக்குட்டிச் சுவாமி
    - செல்லப்பா சுவாமி
    - நவநாத சித்தர்
    - பெரியானைக்குட்டிச் சுவாமி

- இவர்களில் பின்வருவோர் ஆராயப்பட வேண்டியவர்கள்.
    - கடையிற் சுவாமிகள்
    - சிவயோக சுவாமிகள்
    - சித்தானைக்குட்டிச் சுவாமிகள்

### 3.2.3.4 கடையிற் சுவாமிகள்

**பின்னணி**

- இந்தியாவில் பெங்களூரில் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.
- பெங்களூரில் நீதிமன்றில் நீதிபதியாகக் கடமையாற்றியவர்.
- ஸ்ரீ நரசிங்க பாரதியாரின் உத்தம சீடராகக் கருதப்பட்டார்.
- ஸ்ரீ நரசிங்க பாரதியாரினால் "முத்தியானந்தர்" எனும் தீட்சா நாமம் கொண்டவர்.
- நீதிமன்றில் குற்றவாளிக்கு மரணதண்டனை வழங்கியபோது இத்தண்டனையை வழங்க நான் யார்? எனும் வினா எழவே பதவியைத் துறந்து உட்பொருள் விசாரணையில் ஈடுபட்டவர்.

- யாழ்ப்பாணம் வயிரமுத்துச் செட்டியார் மூலம் ஈழத் திருநாட்டிற்கு வருகை தந்தவர்.
- யாழ்ப்பாணம் பெரியகடை வீதியைத் தமது பிற்கால வாழ்விடமாகக் கொண்டமையினால் கடையிற் சுவாமிகள் எனும் பெயர் பெற்றார்.
- செல்லப்பா சுவாமி, குழந்தைவேல் சுவாமி போன்றோரின் உறவினைத் தனதாக்கிக் கொண்டவர்.
- குழந்தைவேல் சுவாமிகளை உத்தம சீடனாகக் கொண்டவர்.
- கந்தர்மடத்தில் மகாதேவ சுவாமிகளால் தாபிக்கப்பட்ட வேதாந்தமடம் இவரின் அருள்பார்வை பெற்றது.
- சமாதியடையும் காலத்தில் நீராவியடிப் பிள்ளையார் கோயில் பகுதியில் வாழ்ந்து அங்கே புரட்டாதி மாத நிறைமதி நாளில் சமாதியானார்.

### தோற்ற வர்ணனை

பெரிய கடைநாதன், பித்தன் திருக்கோலம்
கரியவர்ணச் சீலை கருந்தோலான சால்வை
துரியாதீதப் பொட்டுத் துலங்க நடைமெட்டுச்
சரியாய் அறிந்தேத்தித் தழைத் தாட் படுவீரே" - (குழந்தைவேற் சுவாமி)

### பணிகள்

- ஆன்மீக வேதாந்த ஞானத்தை உட்பொருளாகக் கொண்டு செயற்பட்டார்.
- மக்களின் துயரங்களைக் களைந்தார்.
- மக்களின் இன்ப துன்பங்களில் தானும் ஒருவராகச் சேர்ந்து செயற்பட்டார்.

### சித்துக்கள்

- பொய்யொழுக்கமுடையவரைச் சீரான வழியில் கொண்டுவர வழியில் மெழுகு உருக்கியிருந்தவனிடம் அதனை வாங்கி உண்டு, சுற்றித் திரிந்தவர்களை அவ் ஒழுக்கத்தி லிருந்து விலகச் செய்தமை.
- கந்தையாச் செட்டியாரின் பாட்டியாரும் பாட்டனாரும் வறுமையுற்றுவாழ்ந்தபோது வறுமை போக்க இரும்பைப் பொன்னாக்கிக் கொடுத்தமை.
- கடலில் புயலில் தத்தளித்த மீனவனைக் காப்பாற்ற வீட்டு முற்றத்தில் நின்று தடியினால் சவள்போன்று முற்றத்தை வலித்து, மீனவனைக் காப்பாற்றிக் கரை சேர்த்தமை.

### சமாதி

- 1882 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பௌர்ணமித் தினத்தில் நீராவியடியில் சமாதியானார்.

### 3.2.3.3 சித்தானைக்குட்டி சுவாமிகள்

#### வாழ்க்கைப் பின்னணி

- 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சித்தர்களுள் ஒருவர்.
- தமிழகத்தில் இராமநாதபுரத்தில் ஆட்சிசெய்த சிற்றரசர் பரம்பரையில் உதித்தவர். அரச போக வாழ்வைத் துறந்து ஆண்டியாக மாறியவர்.
- இளமைத் திருநாமத்தை கோவிந்தசாமி எனக் கொண்டவர். நவநாதச்சித்தராலும், பெரியானைக்குட்டி சுவாமிகளாலும் ஆட்கொள்ளப்பட்டவர்.
- இந்தியாவிலுள்ள புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செய்து, ஈற்றில் ஈழத்திருநாட்டிற்கு வருகை தந்தவர்.
- பெரியானைக்குட்டி சுவாமிகளின் ஆத்மார்த்த சீடராக விளங்கியவர்.
- பல்வகை நோய்களைக் குணப்படுத்தியமை.
- இறைநம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக கிராமங்கள்தோறும் சென்று ஆன்மிக தத்துவங்களை விளக்கியமை.
- சாதி, மதம், இனம் பாராது யாவருக்கும் அறிவுரை கூறியமை.
- தொழில் செய்பவர்களின் குறைகளை அல்லல்களைப் போக்கியமை.

சித்துக்கள்

- இந்தியாவில் புகையிரதப் பயணத்தில் நவநாதச்சித்தர், பெரியானைக்குட்டிச் சுவாமிகளுடன் வருகை தந்து புகையிரதச் சீட்டினைப் பெறாமையினால் மூவரையும் இறக்கியமையால் புகையிரதத்தை ஓடாமல் நிறுத்தி பின் புகையிரதத்தை குறிப்பிட்ட நேரத்தின் பின் ஓடச் செய்தமை.
- நவநாதச்சித்தர், பெரியானைக்குட்டிச் சுவாமிகள் இருவரும் தன்னை இந்தியாவில் விட்டு, ஈழத்துக்கு பாய்க்கப்பலில் பிரயாணத்தை மேற்கொண்டு கொழும்புத் துறை முகத்தில் இறங்கியபோது முதன்மை அழைப்பாளராக இருவரையும் வரவேற்றமை.
- கதிர்காமத்தில் வருடாந்த உற்சவத்தின்போது திரைச்சீலை பற்றி எரிந்தபோது கல்முனைச் சந்தியில் நின்று, "கதிர்காமத் திரைச்சீலை பற்றுகின்றது" எனக் கூறியவர்
- மட்டக்களப்புக் கிராமத்தில் சூட்டுக்களத்தினைப் பிரித்து ஒவ்வொரு வயல் வரவைகளில் இட்டு விவசாயிகளின் வேலைக்காரக் கோலினால் அடியுண்டு களத்தில் நெற் பொலி பிரகாசிக்கச் செய்தமை.
- மீனவர் வாடிக்குச் சென்று வலைகளை அறுத்து, துண்டுகளாக்கி சவளினால் அடியுண்டு பின் வலைகளை முன்பிருந்த நிலைக்கு ஆக்கியமை.
- மட்டக்களப்பில் நோய்வாய்பட்டு இறந்த ஒரு பெண்மணியை உயிர் பெற்றெழச் செய்தமை.
- சமாதி - மட்டக்களப்பு காரைதீவில் சமாதியடைந்தார்.

### சிவயோக சுவாமிகள்

யோகர் சுவாமிகள் சித்தமரபில் வந்தபோதும் இவர் சித்தராக மட்டுமன்றி, பக்தராகவும்,சிவதொண்டனாகவும் மக்களோடு மக்களாக வாழ்ந்து சிவதொண்டினை அமைதியாக ஆற்றி தன் ஒளிக் கடாட்சத்தைப் பாய்ச்சிவிட்டு சென்ற மகான்

பிறெளனி என்ற ஆங்கிலேயர் இவரை **'நீர் ஒரு தெய்வீக மனிதர்'** (you are a god-fearing man) என்று குறிப்பிட்டுள்ளார்.யோகர் சுவாமிகள் நான் சந்தித்த மாபெரும் ஆத்மீகத் தலைவர் என்று ஸ்ரீ திக்கிரி பண்டா திஸ்ஸநாயக்க காரியதரிசி, இலண்டன் புத்தவிகாரை எழுதிய கட்டுரை இதனை உணர்த்தும்.

### சிவதொண்டிற்கு தூண்டு கோல்களாய் அமைந்த நூல்களும் அநுபவங்களும்

யோகர்சுவாமிகள்வேதங்கள்,ஆகமங்கள்,உபநிடதங்கள், பகவத்கீதை,திருமுறைகள்,ஔவையார் பாடல்கள்,திருக்குர்ஆன், விவிலிய வசனங்கள் (ஒரு சிலவற்றையும்) போன்ற பலநூல்களைக்கற்றதோடு,தனது குருவான செல்லப்பா சுவாமிகளிடம் நேரடியாக பெற்ற அநுபவங்களும்,விவேகானந்தரின் சொற்பொழிவுகளை கேட்டமையும்(சுவாமி விவேகானந்தர் பல தடவைகள் **'விடயம் பெரிது நேரமோ குறுகியது' (The subject is large but the time is short)** என்று அன்பர்களுக்குக் கூறியுள்ளார்.

### சிவதொண்டும், சிவதொண்டனும்

சிவதொண்டில் முதற்படி – குருபரனைப் போற்றி வணங்குதல் , குருவைப் போற்றுதல். அவரே குரு – சீடன் முறைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். சுவாமிகள் குருவின்

### சமய ரீதியான சிவதொண்டுகள்

1. சிவதொண்டன் நிலையங்களை உருவாக்கியமை
2. திருமுறை வகுப்புக்கள்
3. புராணபடனம்
4. சித்தாந்த சாத்திரங்களைக் கற்றல்
5. கோயில் தொண்டுகள்
6. பாதயாத்திரைகளை மேற்கொண்டமை
7. தியானப் பயிற்சிகள்

### சமூக ரீதியான சிவதொண்டுகள்

1. சீரியவாழ்க்கை முறை
2. வாழ்க்கையில் தியானம் செய்தல்.
3. கடமையே வழிபாடு.
4. ஒருவரைப்பற்றி குறை கூற எமக்கு உரிமையில்லை
5. நோய் தீர்த்தல்
6. மழை பெய்வித்தமை
7. மதுவிலக்கு
8. .விவசாய விருத்தி
9. சிவதொண்டாக மொழிபெயர்ப்புப் பணிகள்
10. இனம், சாதி, சமயம் பாராது சிவதொண்டு

**சமயமும், வாழ்க்கையும்**

சமயம் இன்றும் வாழ்க்கையுடன் இணையவில்லை. இன்று தொழிநுட்பத்தின் விளைவால் சமயப் பாடங்களைப் பயில்வதனால் என்ன பயன் என்கிறார்கள். சமயத்தின் மூலம் தான் மனப்பாங்கு மாற்றம் வருவதை யார் அறிவார்? உபநிடத மகாவாக்கியமான (தத்துவம் அஸி, அகம் பிரம்மஸி, சோகம் அஸி) இது தெரிந்தால் யார் யாரையும் வெறுக்க முடியாது. சுரண்ட வும் முடியாது. எனவே இது போல் யோகர் சுவாமிகளும்'தெய்வத்தை மனிதரிடத்தில் காண் என்கிறார்.

யோகர்சுவாமிகளின் கருத்துக்கள் மக்களுக்கு சென்றடைய வேண்டும் - சென்றடையாதிருப்பது தான் பிரச்சனை.இன்றைய உலகத்திலே நாம் போட்டி, பொறாமை, பழிக்குப்பழி.எங்கும் எதிர்பார்ப்பு,எதிலும் எதிர்பார்ப்பு ஓருவா் ஓர் உதவியைச் செய்துவிட்டு இன்னோர் சந்தர்ப்பத்தில் தனக்கு உதவி செய்ய வேண்டும்' என எதிர்பார்ப்பர். அவ்வாறு செய்யவில்லையென்றால் பொறாமை, வஞ்சம்,சிலவேளை அவரது தொடர்பையே துண்டிப்பர் அல்லது தூற்றுவார்.இவ்வாறான உலகத்திற்கு அரிய பொக்கிஷங்களை யோகர் சுவாமிகள் விட்டுச் சென்றிருக்கிறார். நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பயன் உண்டு. நியூட்டனின் விதியும் அதைத்தான் சொல்கிறது. அதைத்தான் தான் சுவாமிகளும் சிவதொண்டாய் செய்யும் போது கடவுள் உனக்குத்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்**

படி I
- ஈழத்துச் சித்தர்கள் என்ற தலைப்பில் ஒருவரைப் பற்றி மாணவருக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

படி: II
- ஈழத்துச் சித்தர்கள் தொடர்பான தகவல் திரட்டுவதற்குமாணவர் -களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து, சித்தர்கள் பற்றிய தகவல் திரட்ட வழிப்படுத்துங்கள்.

படி: III
- ஒவ்வொரு குழுவிலிருந்தும் தலைவரைத் தெரிவுசெய்து, சித்தர் தொடர்பான பேச்சு ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யுங்கள்.
- முன்வைத்த விடயங்களைத் தொகுத்து, ஆக்கமாகத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

மேலதிக வாசிப்புக்குரியவை

ஈழத்துச் சித்தர்கள் - ஆத்மஜோதி நா.முத்தையா

இந்து ஒளி (கட்டுரை) - திருமதி சாந்தி சேகவன்

**தேர்ச்சி 4.0 :** **பண்பாட்டு வளர்ச்சியில் இந்துக் கோயிற் கலைகளும் நாட்டார் கலைகளும் பெறும் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றை நயப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 :** கோயிற் கலை மரபின் பல்வேறு அம்சங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தினையும் விளங்கிக் கூறுவார்.

**பாடவேளைகள் :** 50

**கற்றற் பேறுகள் :**

- இந்துக் கோயிற்கலைகளில் அடங்கும் கவின்கலைகளை எடுத்துக் கூறுவார்.
- சிற்ப, நடன, ஓவியக் கலைகளுக்கிடையிலான தொடர்புகளை எடுத்துக் கூறுவார்.
- சிற்பங்களின் வகைகள், பிரதிமாலட்சணங்கள் என்பவற்றை விபரிப்பார்.
- நுண்கலைகளுக்கும் சமய அனுபவங்களுக்கும் இடையிலான தொடர்புகளை ஒப்பிடுவார்.
- காஞ்சி கைலாசநாதர் கோயில் கட்டடக்கலை அம்சங்களைப் போற்றுவார்.
- சிற்பக்கலை பற்றியும் மாமல்லபுரச் சிற்பங்கள் பற்றிய செய்திகளையும் அறிந்து அவை பற்றிக் கருத்துரைப்பார்.
- சிறந்த கலை வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் தஞ்சைப் பெருங்கோயில் மற்றும் மதுரை மீனாட்சியம்மன் ஆலய ஓவியங்கள் பற்றிய செய்திகளை எடுத்துரைப்பார்.
- விக்கிரகக் கலையின் தனிச் சிறப்புக்களை நடராஜர், சண்முகன், பஞ்சமுக விநாயகர் போன்றவற்றினூடாக ஆராய்ந்து வெளிப்படுத்துவார்.
- இசைக்கலை பற்றியும் இந்து மத வழிபாட்டில் பண்ணிசையும் அதன் சிறப்புக்களையும் இனங்கண்டு அதன் அவசியம் குறித்துக் கருத்துரைப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- **4.1.1 இந்து கோயிற்கலைகள் - இந்துக் கலைகளின் அறிமுகம்**

- இந்துக் கலைகள் லலித கலைகள் எனவும், அழகியல் கலைகள் எனவும், கவின் கலைகள் எனவும் அழைக்கப்படும். கோயிற் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்பன நிலைத்த கலையாக அமையும்.

- இசை, நடனம், நாடகம் என்பன அவைக்காற்றுக் கலையாக அமையும். அவைக் காற்றுக் கலைகள் என்பது சபைகளிலும் மேடைகளிலும் அரங்கேற்றம் செய்யப்படுவது ஆகும்.
- இந்துக் கலை வடிவங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்பானவை என்று விஷ்ணு தருமோத்திரம் கூறுகின்றது. கலைகள் யாவும் வாழ்வைப் பண்படுத்துவனவாகவும், இந்துக்களின் பண்பாட்டைப் பேணுவனவாகவும் அமைகின்றன.
- பண்பாட்டில், கலைகள் சரித்திரச் செய்திகளை வெளிப்படுத்துவனவாகவும் அமைகின்றன. இறைநம்பிக்கையையும் ஆன்மிகச் செய்திகளையும் வெளிப்படுத்தும் ஊடகங்களாகவும் இந்துக் கலை வடிவங்கள் விளங்குகின்றன.
- நுண்கலைகளில் அடங்கும் நாடகம் என்பதில் இசையும் நடனமும் இணைந்திருப்பதனை நோக்க முடியும். நாட்டிய சாத்திரம் நாடகம், நடனம் என்பவற்றுக்கும் இசை நூல்கள் இசைக்கும் இலக்கணமாகும். சிற்ப சாத்திரம் சிற்பத்திற்கும் உரியதென்பர். இவ்வாறு இவ்வழகுக் கலைகளுக்கு இலக்கணம் கற்பிப்பதனை அவதானிக்க முடிகின்றது.

- நடனக்கலைக்கு இலக்கணம் வகுத்த பரதரின் நாட்டிய சாத்திரம், "நடனம் என்பது பல பாத்திரங்களாக நடித்தும் இசை வாத்தியம் இசைத்தும், நாடக அபிநயம் பலவற்றை ஏற்படுத்தியும் நாடகத்தின் தலைவனாக நின்று நடாத்துபவனே பரதக் கலைஞன்" என்று குறிப்பிடப்படுகின்றது.
- இந்துப் பண்பாட்டின் ஒரு கூறு கலையாகும். அவற்றில் ஒரு பகுதியான உருவ வழிபாட்டில் கோயில் விக்கிரக, சிற்பக்கலைகள் தொடர்புபடுகின்றன. தெய்வங்களே கலை வெளிப்பாட்டுடன் வருணனை செய்யப்படுகின்றன. சிதம்பர நடனம் என்னும் நடராஜ வடிவம் இறை வழிபாட்டின் உன்னத நிலையைச் சுட்டிக் காட்டுகின்றது.
- கலை என்பது ஒரு வகையில் வழிபாடாகும். நடனம் இறை உபசாரமாக அமையும். இசை இறை உபாசனைகளில் இணைந்து கொள்கிறது. இதனால் கலைகள் சமய ஆசாரங்களாகவும், சமய அனுபவங்களாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றன.
- கலை என்பது ஒருவகையில் அழகியல் ரசனை அனுபவமாகும். மற்றொரு வகையில் இறைவெளிப்பாட்டு அனுபவமாகிறது.
- இந்துப் பண்பாட்டு வரலாற்றுக்கு கலை வரலாற்றுடன் நெருக்கமான தொடர்பு உண்டு. சிந்துவெளிக் காலம் தொடக்கம் இந்துப் பண்பாட்டில் கலை தொடர்ச்சியான செல்வாக்கைப் பெற்று வந்துள்ளது.
- வட இந்தியா, தென் இந்தியா முழுவதிலும் வெவ்வேறு கலை வடிவங்கள் முதன்மை பெற்றுள்ளன. வேசர, நாகர, திராவிட, கலிங்க மரபுகளில் கோயிற் கட்டட மரபுகள் விருத்தி பெற்றன.
- ஆடற்கலை வடிவங்களும் இந்தியாவின் வெவ்வேறு பிரதேசங்களின் அமைப்பிற்கேற்ப வேறுபட்டு வளர்ந்து வந்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. கதகளி, கதக், மணிப்புரி, குச்சிப்புடி, பரதம், சதிர், பாகவத மேளா, விலாசம் முதலிய நடன வடிவங்கள் சமயச் சார்பானவையாகவும் பொதுமக்கட் சார்பானவையாகவும் விளங்கின.
- இசை வடிவங்களும் இறை வழிபாடு, பக்தி என்பவற்றுடன் தொடர்பானவை. சாம வேதம் மந்திரோபாசனையுடன் தொடர்பானதாகும்.
- நாட்டிய சாத்திரம் நடனக் கலையுடன் தொடர்பானதாகும்.
- சிற்ப சாத்திரங்களிலும் ஆகமங்களிலும் ஆலய அமைப்பு பற்றிக் கூறப்பட்டுள்ளது.
- இசை நூல்களிலும் தேவாரப் பதிகங்களிலும் பண்ணும் இசையுமே இறை உபாசனையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.
- ஆலயங்களில் வழிபாடுகளும் பண்பாடுகளும் வளர்ச்சி பெற்று வருவதனால் அவை நுண்கலைகளின் உறைவிடங்களாகவும் அமைகின்றன.

**காஞ்சி கைலாசநாதர் கோயில்**

- காஞ்சி கைலாசநாதர் கோயில் தமிழக திராவிடக் கட்டடக்கலையின் பிரதான அம்சங்களான விமானம், மண்டபங்கள், பரிவாரத்தேவர் கோட்டம், சுற்றாலை, கோபுரம், பிரகாரம் ஆகிய யாவும் அமைக்கப்பட்டுள்ளன.
- காஞ்சி கைலாசநாதர் கோயில் கருவறையில் 16 பட்டை கொண்ட இலிங்கம் உள்ளது. கர்ப்பக்கிரகத்தைச் சுற்றி வருவதற்கு பாதை அமைப்பு உண்டு.
- கர்ப்பக்கிரகத்தின் கிழக்குப் பக்கம் தவிர்ந்த ஏனைய மூன்று திசைகளிலும் உள்ள பக்கச் சுவர்களின் நடுவிலும் தேவகோட்டம் இணைந்திருப்பது சிறப்பம்சமாகும்.
- விமானம் பல தள அமைப்பும் அது உள்நோக்கிய சரிவுடன் மேலே ஓங்கியெழும் பாங்கில் கலைவனப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. நாற்சதுர வடிவிலான அதன் தளங்களில் மாடங்களும் புராணக்கதையை விளக்கும் சிற்பங்களும் சிகரத்தின் மேலே தூபியும் உண்டு.
- திருச்சுற்றாலையைச் சுற்றி 58 சிறிய தேவகோட்டங்கள் உள்ளன.
- காஞ்சிபுரத்திலுள்ள வைகுந்தப்பெருமாள் கோயிலே பல்லவர் காலக் கட்டடக்கலையின் மிக முதிர்ச்சி பெற்ற படைப்பு எனக் கூறலாம். அது கைலாசநாதர் கோயிலைக் காட்டிலும் ஓரளவு பெரியது.
- சுற்றாலை மண்டபம், கருவறை, முக மண்டபம் என்பன அக் கோயிலின் முக்கிய உறுப்புக்களாகும்.
- கருவறை ஏறக்குறைய 90 அடி நீளமுள்ள பக்கங்களைக் கொண்டதாக சதுர வடிவில் அமைந்துள்ளது.
- சுற்றாலை மண்டபத்தில் சிங்க உருவங்கள் செதுக்கப்பட்டுள்ள தூண் வரிசையும், பல்லவ அரச மரபினது முக்கிய நிகழ்ச்சிகளைக் கூறும் செய்திகள் பொறிக்கப்பட்ட சிற்பங்களும் உள்ளன.
- முக மண்டபம் கருவறையைப் போல சதுர வடிவானது. கருவறையின் மேலுள்ள விமானம் சதுர வடிவிலானது.
- அதனது உயரமானது தரை மட்டத்திலிருந்து 60’ ஆகும்.
- விமானம் நான்கு தளங்களைக் கொண்டுள்ளது. அதைச் சுற்றிலும் நடைவழியும் உள்ளது.
- விமானத்தில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் பார்ப்போரைக் கவர்வதாகவும் உள்ளது.
- ஆலயத்திலே பிரகாரத்தின் உட்புறத்திலுள்ள திருச்சுற்றானது கூடங்கள் பொருந்திய சாலைகளுடன் காணப்படுகின்றது.
- சாலை நெடுகிலும் யாழித்தூண் நிரைகள் உண்டு.
- தூணின் பாரத்தை யாழிதாங்குவது போல் மிகத் தத்துவரூபமாக சிற்பி தன் கைவினைத் திறனைக் காட்டியுள்ளான்.
- பல்லவர் கால கட்டடக்கலையிலும் கலை வேலைப்பாடுகளிலும் மிக உயர்ந்த வளர்ச்சிக் காலம் இராஜ சிம்மனது ஆட்சிக்காலம் எனக் கூறலாம்.

### 4.1.1.2 சிற்பக் கலை

- இந்து நுண்கலைகளுள் கட்டடக் கலையுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய கலையென்ற வகையில் சிற்பக் கலைக்கு முதன்மையான இடமுண்டு.
- ஆலயங்களை அடிப்படையாகக் கொண்ட வகையில் சிற்பக்கலை வளர்ச்சியடையத் தொடங்கியதும் அக்கலை தொடர்பாக விளக்கும் ஆகமங்கள், சிற்ப சாத்திர நூல்கள் என்பன தோற்றம் பெறத் தொடங்கிவிட்டன.
- சாத்திர நூல்கள் சிற்பங்களுக்குரிய மூலப்பொருட்கள், அவற்றைக் கொண்டு அமைக்கப்படும் வடிவங்கள், அளவுப் பிரமாணங்கள், பங்க அமைதிகள், அங்க இலட் சணங்கள் என்று பல அம்சங்களை விதிகளாக விபரிக்கின்றன.
- ஆகமங்கள், சிற்ப சாத்திர நூல்கள் என்பனவற்றில் கூறப்பட்டுள்ள விதிகளை விளக்கும் வகையிலான பல சிற்பங்கள் வரலாற்றுக் காலகட்டங்களில் செதுக்கப் பட்டுள்ளன.
- சிற்பங்கள் அமைக்கப்படும் நோக்கம், அவற்றின் தன்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சிற்பங்களை வகைப்படுத்தும் மரபு தோற்றம் பெறுகிறது.
- வடிவங்களை இருத்தும் நிலையை அடிப்படையாகக் கொண்டு, அவற்றை மூன்றாக வகைப்படுத்துவர்.
  - சல வடிவங்கள்- இடத்துக்கிடம் நகர்த்தக்கூடிய வடிவங்களாகும்.
  - அசல வடிவங்கள் -ஓரிடத்தில் நிலையாக நிறுவப்படுகின்ற வடிவங்களாகும்.
  - சலாசல வடிவங்கள் -இடத்துக்கிடம் நகர்த்தக்கூடியனவாக இருப்பினும் அவ்வாறு நகர்த்தக்கூடாது என்று நோக்கத்தில் நிறுவப்படுகின்ற வடிவங்களாகும்.

- சிற்பங்களின் தோற்றத்தைக் கொண்டு, அவற்றை சிற்ப நூல்கள் மூன்று வகையாக இனங்காண்கின்றன.
  - அமைதித் தோற்றம் - அமைதியான நிலையில் அடியவர்களுக்கு வேண்டுவனவற்றை வழங்கும் திருக்கரங்களுடன்கூடிய வடிவங்கள்.
  - அருளும் தோற்றம் - ஊர்திகளுடன் நின்ற நிலையில் அணிகலன்களுட னும், படைக்கலங்களுடனும் அச்சம் அகற்றி காத்தருளும் நிலையில் உள்ள வடிவங்களாகும்.
  - அச்சுறுத்தும் தோற்றம் - பகைவர்களைக் கொல்லும் தோற்றத்தில் படைக் கருவிகளுடன், அச்சுறுத்தும் போர்த் தொழிலில் ஈடுபடும் வடிவங்கள் ஆகும்.

- சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ள விதத்தை அடிப்படையாகக் கொண்டும் சிற்பங்களை வகைப்படுத்துவர்.
  - முழுவடிவச் சிற்பங்கள் - வடிவத்தின் முழு அங்கங்களும் வெளியே தெரியும்படியாக அமைக்கப்படும் வடிவங்கள்
  - புடைப்புச் சிற்பங்கள் - வடிவத்தின் அங்கங்களின் ஒரு பகுதி மட்டும் தெரியும்படியாக செதுக்கப்படும் சிற்பங்கள்

    உதாரணம்: சுவர்கள், கோபுரங்களில் செதுக்கப்படும் சிற்பங்கள்

## சிற்பக் கலையின் தோற்றம், வளர்ச்சி

- இந்திய வரலாற்றிலே சிற்பக்கலையானது சிந்துவெளிக்கால பழைமையாது.
- சிந்துவெளிப் பிரதேசத்தில் கிடைக்கப் பெற்ற நடன மாதின் வெண்கலப் படிமம், ஆணின் வடிவம், குட்டிகளுடன் கூடிய குரங்கின் வடிவம் போன்ற சிற்பங்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன.
- வட இந்தியாவில் கி. பி. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்து சமயச் சார்புடைய சிற்பங்கள் தோன்றத் தொடங்கின.
- உதயகிரி, தியாகோ, வட மதுரை போன்ற இடங்களில் வைணவ சமயச் சார்புடைய விஷ்ணு அவதாரச் சிற்பங்கள் காணப்படுகின்றன.
- லிங்கராஜர் கோயில், பரசுராமர் கோயில், கோனராக் சூரியனார் கோயில் போன்ற இடங்களில் உள்ள சிற்பங்கள் இந்து சமயச் சார்புடையன.
- தக்கிணத்திலும் இந்து சமயச் சார்புடைய சிற்பங்களைக் காணமுடிகிறது. தக்கணப் பிரதேசத்தில் வாதாபிச் சாளுக்கியர்கள், கல்யாணிச் சாளுக்கியர், கொய்சலர் முதலான மன்னர்கள் அமைத்த ஆலயங்களில் இந்து சமயச் சிற்பங்கள் பல காணப்படுகின்றன.
- வாதாபிச் சாளுக்கியர்களின் குகைக் கோயில்களில் விஷ்ணுவின் அனந்தசயன வடிவம், வராக அவதார வடிவம் போன்ற சிற்பங்களைக் காணலாம்.
- ஐகோளே துர்க்கையம்மன் ஆலயத்தின் அடித்தளத்தில் மகிடாசுரமர்த்தனியின் வடிவம் சிற்பமாக உண்டு.
- கல்யாணிச் சாளுக்கியர்களின் சிற்பங்களை குக்கனூர் கல்லேஸ்வரம், சௌத்தம்பூர், முக்தேஸ்வரம் போன்ற இடங்களில் காணலாம்.
- கொய்சல மன்னர் காலச் சிற்பங்களை அவர்கள் அமைத்த கோயில்களில் காணலாம்.
- கொய்சல ஈஸ்வரத்தின் தூண்களில் நர்த்தன விநாயகர், நடன சரஸ்வதி, நரசிம்மர் ஆகிய தெய்வங்களின் வடிவங்கள் காணப்படுகின்றன.

## தமிழகத்தில் சிற்பக்கலை வளர்ச்சி

- தமிழகத்தில் கி.பி. 5 ஆம் நூற்றாண்டிலிருந்தே சிற்பக்கலை தொடர்பான புதைபொருட்சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றன.
- பல்லவர், சோழர், விஜய நகர நாயக்கர் முதலான மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் சிற்ப சாத்திர விதிகளுக்கமைவான சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- பல்லவர் காலச் சிற்பங்களைக் கட்டடக் கலையின் அடிப்படையில் குடைதளிச் சிற்பங்கள், செதுக்குத்தளிச் சிற்பங்கள், கட்டுத்தளிச் சிற்பங்கள் என வகைப்படுத்துவர்.
- விஜயநகர நாயக்க மன்னர்களால் செதுக்கப்பட்ட சிற்பங்களுள் இறை வடிவங்கள் முக்கியமான இடத்தைப் பெறுவன.
- அவ்வாறான வடிவங்களுள்:
    - லெபாஷி வீரபத்திரர் கோயிலில் உள்ள வீரபத்திரர் வடிவம், கல்யாண சுந்தரேஸ்வரர் வடிவம், நாகலிங்கம் போன்றவற்றையும்
    - மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் உள்ள லிங்கோற்பவர் வடிவம், அர்த்த நாரீஸ்வரர் வடிவம், கங்காதரர் வடிவம் போன்றவற்றையும்
    - தேவிகாபுரத்தில் உள்ள லிங்கோற்பவர், கால சங்காரர் போன்றவற்றையும் இங்கு குறிப்பிடலாம்.

- இதிகாச, புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்கள் பல இக்காலக் கோயில்களில் செதுக்கப்பட்டுள்ளன.
- மதுரை மீனாட்சியம்மன் கோயில் இராவணன் கயிலை மலையைத் தூக்கும் காட்சியும்
- திருவண்ணாமலைக் கோயில் ஆலயக் கோபுரத்தில் மகிடாசுரமர்த்தனி மகிடாசுரனை செய்யும் காட்சியும் கிருஷ்ணாபுரத்தில் கர்ணன் - அருச்சுனன் போர் செய்யும் காட்சியும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளதனைக் காணலாம்.
- தமிழ் மொழிப் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட சிற்பங்களும் கோயில்களில் காணப்படுகின்றன.
- கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் போன்ற புராணக்கதைகளுடன் தொடர்புடைய வடிவங்களை இந்த வகையில் குறிப்பிடலாம்.
- லெபாஷி வீரபத்திரர் கோயிலில் பெரியபுராணம் கூறும் சிறுத்தொண்டர் நாயனார் தனது மகனை உணவாகச் சமைத்து, சிவனடியாருக்குப் பரிமாறிய கதை தொடர் சிற்பமாக இடம்பெறுகிறது.

## மாமல்லபுரம்

- மாமல்லபுர குகைச் சிற்பம், மாமல்லபுர ரதக்கோயில் சிற்பம், மாமல்லபுர கற்றளிச் சிற்பம் மாமல்லபுர பாறைச் சிற்பம் என விரிவுபடும்.
- மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள மலைதளிகள், மகாபாரதக் கதாபாத்திரங்களின் பெயர்களாலும் அழைக்கப்படுகின்றன.
- மாமல்லபுர மலைதளிகள், தரும ரதம், வீம ரதம், நகுல ரதம், சகாதேவ ரதம், அர்ச்சுன ரதம், கொற்றவை ரதம், வடக்குப் பிடாரி ரதம், தெற்குப் பிடாரி ரதம், வலையான் குட்டை ரதம் எனும் பெயர்களினால் அழைக்கப்படுகின்றன.
- மலைதளிகள் நாகரம், திராவிடக் கலைப்பாணிகளைப் பிரதிபலிக்கின்றன.
- மாமல்லபுரக் கோயில்களுள் தர்மராஜ ரதம் தனித்துவம் உடையது.
- மூன்று தளங்களை உடைய தர்மராஜ ரதம் புத்த விகாரை அமைப்பைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளது.
- தருமராஜ ரதத்தின் மூன்று தளங்களிலும் இந்து சமயச் சார்புடைய பல சிற்பங்கள் காணப்படுகின்றன. தருமராஜ ரதத்தில் நடராச சிற்பம் பிரதானமானவை.
- இதனால் தருமராஜ ரதம் "சிற்பக்கலைக் களஞ்சியம்" என்று போற்றப்படுகின்றது. பிடாரி ரதத்தில் அம்மன் சிற்பம் பிரதானம்.
- கற்களைச் சீராகப் பொளிந்தெடுத்து ஒன்றின் மேல் ஒன்றை வைத்து கட்டுகின்ற கட்டுமானக் கட்டக்கலையே கட்டுத்தளியாகும்.
- கட்டுத்தளிக் கலைமரபு இராஜசிம்ம பல்லவ மன்னனது கலைமரபாகும்.
  உ. ம்: மாமல்லபுரக் கடற்கரைக்கோயில், ஈஸ்வரன் கோயில், முகுந்தன் கோயில், தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பனைமலைக்கோயில், காஞ்சி புரத்திலுள்ள வைகுந்தப் பெருமாள் கோயில்.
- மாமல்லபுர கடற்கரைக்கோயில் பாதுகாப்பற்ற திறந்தவெளியில் அமைந்துள்ள இக்கோயில் கடல்நீரிலிருந்து வரும் உப்புக்காற்றாலும், காற்றில் வரும் மணலாலும் இன்னும் சிதைவடையாது இருப்பது பல்லவர்கால கட்டுமான வேலையின் உறுதிப்பாட்டைக் காட்டுகிறது.
- மாமல்லபுர கடற்கரைக் கோயிலை ஜலசயனம் என தற்போது அழைக்கின்றனர்.
- இராஜசிம்மனால் கட்டப்பட்ட காஞ்சி கைலாசநாதர் கோயில் கலை வனப்புடையது. பெரிய கற்றளி என பிற்கால சாசனங்கள் கூறுகின்றன. இவை மாமல்லபுரக் கோயிலுக்கு இணையானவை.

## 4.1.1.3 ஓவியக் கலை

- இந்துக்களின் சமய, சமூக வரலாற்று நிகழ்வுகளை வெளிப்படுத்துவதில் ஓவியக்கலை பிரதான இடத்தைப் பெறுகின்றது.
- “கலை அழியாது” என்பதனை எடுத்துக்காட்டுவது ஓவியக்கலையாகும்.
- ஆய கலைகள் அறுபத்து நான்கினுள் தனித்துவமானது ஓவியக்கலை. இக்கலை மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி இறைவனை அடைய வழிவகுப்பது.
- பண்டைக்காலம் முதலாக ஓவியக்கலை இந்தியாவிலே சிறப்புப் பெற்றிருந்தது. ஓவியங்கள் வாழ்க்கையோடு தொடர்புடைய விடயங்களையும் இயற்கைக் காட்சிகளின் அம்சங்களையும் சமயச் சார்புடைய விடயங்களையும் கொண்டனவாக அமைந்துள்ளன. இவையே பண்பாட்டுக் கோலங்களைப் பிரதிபலிக்கும் சாதனங் களாகும்.
- ஆரம்ப காலத்தில் ஓவியங்கள் மட்பாண்டம், மரம் என்பவற்றில் தீட்டப்பட்டன. பின்னர் குகைகளிலும் கோயில் சுவர்களிலும் தீட்டப்பட்டன.

- ஓவியக்கலைப் பீடங்கள்
  - வட இந்திய ஓவியங்கள்- அஜந்தா, வாதாபி, எல்லோரா, ராஜபுத்திர
  - தென் இந்திய ஓவியங்கள்

| | | |
|---|---|---|
| பல்லவ பாண்டியர் காலம் | - | சித்தன்னவாசல் |
| சோழர் காலம் | - | தஞ்சாவூர் |
| நாயக்கர் காலம் | - | மதுரை |

## 4.1.3.1 தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஓவியங்கள்

- இராஜராஜனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் ஓவியக் கலையின் சிறப்புமிக்க வளர்ச்சியையும் வனப்பையும் நாம் காணலாம்.
- தஞ்சைப் பெரிய கோயிலின் கருவறையைச் சுற்றிலும் உள்ள சுற்றாலையின் இரு பக்கங்களிலும் கவின்மிகு ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் பண்டைப் பல்லவரின் ஓவியக்கலை முறைக்கும் பிற்கால விஜயநகரக் கலைப் பண்புக்குமிடையே முக்கியமானதொரு தொடர்பினை அமைத்துத் தருகின்றன.
- தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள ஓவியங்களின் உதவியைக் கொண்டு முற்காலத்து ஓவியக்கலைப் பாணியின் சிறப்பு இயல்புகளையும் பிற்காலத்துக்கு உரிய ஓவியக் கலையின் நோக்கினையும் எளிதில் அறிய இயலுகின்றது.

யோக தட்சணாமூர்த்தி

- ஒரு பக்கச் சுவரில் முதலில் உள்ளது சிவபெருமானின் யோக நிலையாகும். மான்தோலின் மீது காலை மடித்து அர்த்த யோகப் பட்டத்துடன் சிவன் யோகத்தில் அமர்ந்துள்ளார்.

## திருக்கைலாயக் காட்சி

- இதையடுத்து வேலைப்பாடு மிக்க ஒரு போர்வையையும் நான்கு தந்தங்களையும் கொண்ட ஒரு வெள்ளை யானை நிற்கிறது. அதன் மீது தாடியுள்ள ஓர் இளைஞன் அமர்ந்துள்ளான். அவன் பாடிக் கொண்டும் கையிலுள்ள தாளத்தினால் தாளம் போட்டுக்கொண்டும் சவாரி செய்கின்றான். இதற்கு வலப்பக்கத்தில் விரைவாகப் பாய்ந்து செல்லும் குதிரையின் மீது நல்ல உடற்கட்டும் பெருமிதத் தோற்றமும் உடைய ஒருவன் ஊர்ந்து செல்லுகின்றான்.
- சுந்தரரும் சேரமான் பெருமாளும் கைலை செல்லும் காட்சியாக இதனைக் கலா விமர்சகர்கள் கருதுவர்.

## தடுத்தாட்கொண்ட வரலாறு

- இவற்றுக்கு அடுத்து வரையப்பட்டுள்ள ஓவியத்தில் பல தூண்கள் கொண்ட பெரிய மண்டபம் ஒன்று காணப்படுகின்றது. அதில் அந்தணர்கள் கூடியுள்ளனர்.
- அவர்களுக்கு நடுவே ஒரு கையில் தாழங்குடையைப் பிடித்துக் கொண்டு மற்றொருகையில் ஒரு சுவடியை அவையோருக்குக் காட்டிய வண்ணம் ஒரு முதியவர் நிற்கின்றார். இது சுந்தரர் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்ட வரலாற்றைச் சித்தரிக்கின்றது.

## தில்லைத் திருக்காட்சி

- இச்சுவரின் வேறொரு பகுதியில் தில்லைப் பொன்னம்பலத்தைப் போன்றதொரு கூரையும் அம்பலவாணரின் திருவுருவத்தின் ஒரு பகுதியும் அதன் அருகில் அரச கோலத்துடன் ஒருவன் தொழுவதும் அவனுடன் மூன்று மகளிர் கூப்பிய கைகளுடன் வணங்குவதும் சித்திரிக்கப்பட்டுள்ளது.

## இராசராசனும் கருவூர்த்தேவனும்

- இந்தச் சிற்றோவியங்களுக்குச் சிறிது தொலைவில் இராஜராஜனும் கருவூர்த்தேவரும் காட்சி தருகின்றனர்.
- ஆன்மீகப் பொலிவு மிக்க தோற்றமுடைய முதியவரும் அவரருகிலே ராஜகளை ததும்பிய வதனமுடைய ஒருவரும் காணப்படுகின்றனர். இவ்விரண்டு உருவங்களும் முறையே கருவூர்த் தேவரையும் இராஜராஜனையும் குறிப்பதாகக் கொள்வது மரபு.

## திரிபுராந்தகர்

- வடபுறச் சுவர் முழுவதிலும் சிவபெருமான் திரிபுரத்து அசுரர்களை எதிர்த்துப் போரிடுவதற்காகக் கொண்ட போர்க்கோலம் பேரளவில் தீட்டப்பட்டுள்ளது. புராணங்களில் சித்தரிக்கப்படுவதனை விடவும் சற்று வேறுபட்ட விரிவான காட்சிப்படுத்தல்கள் இந்த ஓவியத்தில் இடம்பெற்றுள்ளன.
- சிவனுக்கு உதவியாக, துர்க்கை சிங்கத்திலும் முருகன் மயிலிலும் போர்க்கோலம் பூண்டிருத்தல்.
- அசுரப் பெண்களின் அவலம். இவ்வோவியம் சோழர்களின் போர் விருப்பின் பிரதிபலிப்பாக அமைவதாகக் கலா விமர்சகர்கள் குறிப்பிடுவர்.

**அன்றாட வாழ்க்கை ஓவியம்**

- எழில் மிகு இளம்பெண்ணொருத்தி சமையலறையில் சமைப்பதும் வேறொருத்தி வேகும் அரிசியைக் கரண்டியால் கிளறுவதும் மற்றொருத்தி அடுப்பினுள் விறகு வைப்பதும் ஓவியமாக வரையப்பட்டுள்ளன.

**மங்கையரின் மாண்புமிகு ஓவியங்கள்**

- மேற்கண்ட சுவருக்கு எதிர்ப்புறத்தில் உள்ள சுவரில் அழகிய ஆடைகளை அணிந்தும் வேலைப்பாடு வாய்ந்த அணிகளைப் பூண்டும் அமர்ந்த நிலையிலுள்ள இரு பெண்களின் வடிவங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன.
- இவை அக்காலத்திய பெண்மையின் அழகோவியங்களாகத் திகழ்கின்றன.

**நடன மாதர்**

- தேவ அரம்பையர் சிலர் நடனமாடும் காட்சி சுவரின் ஒரு புறத்தில் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.
- சோழர்கால ஓவிய வர்ணப்பூச்சுக்கள் அயற்கைப் பொருட்களால் ஆன வர்ணப்பூச்சுக்கள் உள்ளமை விசேடமானது.

### 1.3.2 மதுரை மீனாட்சியம்மன் கோயில் ஓவியங்கள்

- நாயக்கர் காலச் சுவர் ஓவியங்கள் பல மதுரையில் உள்ளன.
- மீனாட்சி அம்மனின் கோயில் மண்டப விதானத்தில் சிவபெருமானுடைய அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் அழகுறத் தீட்டப்பட்டுள்ளன.
- பொற்றாமரைக் குளத்திற்கு அருகில் உள்ள ஊஞ்சல் மண்டபத்தின் கூரையில் மீனாட்சியின் திக்விஜயமும், மீனாட்சி - சுந்தரேஸ்வரர் திருமணக்காட்சியும் கவினுறத் தீட்டப்பட்டுள்ளன. இதனை வானுலகத்திலுள்ள தேவர்களும் பூலோக மக்களும் களிக்கும் வண்ணம் உள்ளது.
- திருமணக் காட்சியில் இடையில் ராணி மங்கம்மாவும் தளவாய் நரசப்பையரும் கண்டுகளிக்கும் காட்சி ஒன்றையும் ஓவியன் தீட்டியுள்ளான்.
- மீனாட்சியம்மனிடமிருந்து ஒருவர் செங்கோலை வாங்கும் காட்சியும் அங்கு தீட்டப்பட்டுள்ளது.
- அட்டதிக்குப் பாலகருடன் மீனாட்சி போர் செய்யும் காட்சியும் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- மதுரை மீனாட்சியம்மன் கோயிற் சுவர்கள் மீது பல ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. மதுரையில் சிவபெருமான் செய்த அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் பொற்றாமரைக் குளத்திற்கு எதிரிலுள்ள சுவர்களில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.
- மதுரை மீனாட்சியம்மன் கோயிற் சுவர்கள் மீதுள்ள ஓவியங்களில் நாயக்கர் கால மக்களுடைய உடை, கூந்தல் ஒப்பனை, அணி வகைகள், உடை வகைகளைக் காணலாம்.

### 4.1.1.4 விக்கிரகக் கலை

- இந்து நுண்கலைகளுள் சிற்பக் கலையுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக விக்கிரகக் கலை உள்ளது.
- திருவுருவங்களை ஆலயத்தின் தூண்கள், சுவர்கள், அதிட்டானங்கள் போன்ற இடங்களில் செதுக்குமிடத்து அவை சிற்பங்களாக அமைகின்றன.
- சிற்பங்களாக அமையும் வடிவங்களது எல்லா அங்கங்களும் வெளித் தெரியும்படியாக விக்கிரகம அமைக்கும்போது அது விக்கிரகம் எனப்படும்.
- ஆரம்ப காலத்தில் விக்கிரகங்கள் அமைப்பதற்குரிய மூலப்பொருளாக கருங்கற்களே பயன்படுத்தப்பட்டன.
- காலப்போக்கில் உலோகங்களதும் வேறு பொருட்களதும் பயன்பாடு விக்கிரகங்களின் உருவாக்கத்தில் பிரதான இடம்பெற்றன.
- விக்கிரகம் அமைப்பதற்குரிய மூலப்பொருள்கள் பற்றி மானசாரம் என்னும் சிற்பசாத்திரம் “பொன், வெள்ளி, செம்பு, கல், மரம், சுதை, சர்க்கரை, பளிங்கு, ஓடு முதலியவற்றால் உருவங்கள் அமைக்கப்பட வேண்டும்” என்று கூறுகின்றது.
- விக்கிரகங்களுள் அசையும் தன்மை கொண்ட சலவிக்கிரகங்களை அமைப்பதற்கு பொன், வெள்ளி, செம்பு, சுதை, சர்க்கரை, ஓடு முதலானவற்றையும், நிலையாக நிறுவப்படும் அசல விக்கிரகங்களுக்கு கல், மரம் என்பனவற்றையும் பயன்படுத்த வேண்டும் எனவும் சிற்ப சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன.
- ஆகம, சிற்ப சாத்திர விதிகளுக்கு அமைய அமைக்கப்படும் விக்கிரகங்களை, அவை நிறுவப்படும் நோக்கத்தைக் கொண்டு மூன்றாக வகைப்படுத்துவர்.
    - சல விக்கிரகம் - இடத்துக்கிடம் நகர்த்தக்கூடிய விக்கிரகங்கள்
    - அசல விக்கிரகம் - நிலையாக ஓரிடத்தில் நிறுவப்படும் விக்கிரகங்கள்
    - சலாசல விக்கிரகம் - நகர்த்தக்கூடியதாக இருப்பினும் அவ்வாறு நகர்த்தக் கூடாது என்னும் நோக்கத்தில் நிறுவப்படும் வடிவங்கள்
- ஆகமங்கள், சிற்ப சாத்திரங்கள் கூறும் விதிகளைப் பிரமாணமாகக் கொண்டு திருவடிவங்கள் விக்கிரகங்களாக அமைக்கப்படுகின்றன.
- உலோகங்களில் வார்க்கப்பட்ட பல படிமங்களைப் பல்லவர், சோழர், விஜய நகர நாயக்கர் காலங்களில் சிறப்பாகக் காணலாம்.
- சிறப்பாக இந்து சமயத் தெய்வ வடிவங்களுள் சிவனின் பல்வேறு மூர்த்தி பேதங்கள் சோழர் காலத்தில் (தமிழகத்தில்) வெண்கலப் படிமங்களாக வார்க்கப்பட்டன. உதாரணமாக தட்சணாமூர்த்தி, நடராஜர், சோமாஸ்கந்தர், திரிபுராந்தகர், இலிங்கோற்பவர் போன்ற மூர்த்தங்களைக் குறிப்பிடலாம்.

## விக்கிரகம் வார்க்கும் முறை

- உலோகத்தினால் எந்த உருவை செய்யவேண்டுமோ அந்த உருவைப்போல முதலில் மெழுகினால் செய்து கொள்வது வழக்கம்.
- மெழுகினாலான வடிவத்திற்கு மேல் புற்றுமண்ணை ஒன்றுக்கு மேல் ஒன்றாக மூன்று முறை பூசுதல்.
- இவ்வாறு பூசப்பட்ட மெழுகுப் பாவையை பல நாட்கள் நிழலில் உலரவிடுவர்.
- பின்னர் அதனை தீயிலிடுவர்.
- உள்ளிருக்கும் மெழுகு உருகி வெளியே வருவதற்கும் பின்னர் உலோகத்தை உருக்கி உள்ளே வார்ப்பதறகென மண்ணில் ஆங்காங்கே துளைகள் இடப்படும்.
- மெழுகு உருகி வெளியே வந்ததும் மண் அச்சில் உலோகக் குழம்பை வார்ப்பர்.
- இவ்வாறு வார்த்தெடுக்கப்பட்ட வடிவத்தை உளிகொண்டு செம்மைப்படுத்தி நுண்ணிய வேலைப்பாடுகளுடன் அழகு செய்வர்.
- தமிழகம் 3000 வருடங்களுக்கு முன்பே விக்கிரகங்களை வார்க்கத் தொடங்கிவிட்டது.
  உதாரணம்: ஆதிச்ச நல்லூரில் கிடைத்த உலோக வடிவங்கள்
  (தாய்க்கடவுள், நாய், கோழி)

### 4.1.1.4.1 நடராஜ மூர்த்தம்

- சிவமூர்த்தங்கள் 64 ஆகும்.
- இதில் சிறப்பாக 25 மூர்த்தங்கள் குறிப்பிடப்படுகின்றன.
- இதில் நடராஜர் வடிவமும் ஒன்று.
- சிற்ப சாத்திரங்கள் கூறும் அளவுப் பிரமாணங்களின்படி அமைக்கப்படுகிறது.
- அங்க இலட்சணங்களும் அவை உணர்த்தும் உண்மைகளும்

| | | |
|---|---|---|
| முயலகன் | - | ஆன்மா |
| பாம்பு | - | ஆணவம் |
| புலித்தோல் | - | கோபத்தைக் கட்டுப்படுத்துபவன் |
| முக்கண் | | இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி |
| சிலம்பு | - | பல வினைகள் பிறவித் துன்பத்தை நீக்குவதைக் குறிக்கின்றது |
| திருவாசி | - | ஓங்காரத்தைக் குறிக்கின்றது |
| பவளநிற (சிவந்த)திருமேனி | - | தூய்மைப்படுத்தும் தன்மையைக் காட்டும் |
| நான்கு திருக்கரம் | - | திசைகளைக் குறிக்கும் |
| திசைகள் | - | எல்லையில்லா ஆற்றலைக் குறிக்கும் |
| நெற்றிக்கண் | - | உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்களை புன்முறுவலால் நீக்குகிறார் என்பதைக் குறிக்கும் |
| சடாமுடி | - | ஞானத்தைக் குறிக்கும் |
| பிறை | - | பேரழகைக் குறிக்கும் |
| திருநீறு | - | பராசக்தியைக் குறிக்கும் |
| சூலம் | - | முச்சக்தியைக் குறிக்கும் |
| கோடரி | - | பேராற்றலைக் குறிக்கும் |
| மான் | - | வேதநாயகனைக் குறிக்கும் |

இவ்வடிவம் கொண்டு விளங்கும் தத்துவங்கள்

- பஞ்சகிருத்திய விளக்கம்
  (சிருஷ்டி) படைத்தல் - உடுக்கை ஏந்திய கை
  (ஸ்திதி) காத்தல் - அபய கரம்
  (சங்காரம்)அழித்தல் - தீ ஏந்திய கரம்
  (திரோபவம்) மறைத்தல் - ஊன்றிய திருவடி
  (அநுக்கிரகம்) அருளல் - தூக்கிய திருவடி

- "தோற்றம் துடியதனில் தோயுந்திதி அமைப்பில்
  சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்
  ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
  நான்ற மலர்ப்பதத்தே நாடு " - உண்மை விளக்கம்

- நடராஜ வடிவம் தூல, சூக்கும பஞ்சாட்சரங்களுடனும் தொடர்புபடுத்தப்பட்டு நோக்கப்படுகிறது.
- திருவைந்தெழுத்தின் தொடர்பு
  ந - திருவடி
  ம - திருவயிறு
  சி - திருத்தோள்
  வா - திருமுகம்
  ய - திருமுடி
- சைவசித்தாந்தம், திருமந்திரம் முதலானவை நடராஜரைப் போற்றும் பண்பு கொண்டவை.
- தோத்திரப் பாடல்களில் நடராஜர் வருணனை
  "குனித்த புருவமும் கொவ்வைச் செய்வாயிற் குமிண்சிரிப்பும்"
  என்னும் அப்பரின் தேவாரப் பாடலில் காணலாம்.
- வழிபாடுகள்
  - திருவாதிரை
  - திருவெம்பாவை
  - சிதம்பரத்தில் சிறப்பான வழிபாடுகள்
- நடராஜர் விக்கிரகம் சமயம், கலை, தத்துவம் ஆகியவற்றை சித்திரிக்கின்ற திருவுருவமாகும்.
- ஆனந்தகுமாரசுவாமியின் " சிவானந்த நடனம்" என்ற ஆய்வு நூல் நடராஜர் வடிவம் பற்றி குறிப்பிடுகின்றது.
- சைவ சித்தாந்தத்தின் அனைத்துக் கோட்பாடுகளையும் நடராஜ மூர்த்தம் பிரதிபலிக்கிறது.
- சிவன்கோயில்கள் எல்லாவற்றிலும் நடராஜர் வடிவம் நிறுவப்படும்.
- ஆலயங்களில் ஆடல் வல்லனாகச் சிறப்புப் பெறுவது.
- இலங்கையில் பொலநறுவையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட நடராசர் வடிவம் சிறப்பானது.
- சிதம்பரத்தில் தில்லைக்கூத்தன் முதன்மை பெறுகின்றார்.
- நடராஜ மூர்த்தம் மார்கழித் திருவாதிரையுடன் தொடர்புடையது.

**பஞ்ச முக விநாயகர்**

- இந்து சமய மரபில் முழுமுதற்கோட்பாட்டின் ஓர் அம்சமாக விநாயகர் வடிவம் அமைகிறது. சிவ வழிபாட்டு மரபில் பஞ்சமுக மரப பிரதான இடத்தைப் பெறுகிறது. சிவனது ஐந்து திருமுகங்களாக அகோரம், வாமதேவம், சத்யோதம், தற்புருடம், ஈசானம் என்பன அமைகின்றன. சிவன் தன் ஐந்து முகங்களிலிருந்தே இருபத்தெட்டு ஆகமங்களையும் அருளினார். சிவனை ஐந்து முகத்தினனாக நோக்குவது போலவே விநாயக வழிபாட்டிலும் பஞ்ச முக விநாயகர் வடிவம் பிரதான இடத்தைப் பெறுகிறது.
- விநாயகர் தன்னுள் எல்லாத் தெய்வங்களின் அம்சங்களையும் கொண்டுள்ளமை பற்றி சமய நூல்கள் கூறுகிறன்றன. விநாயகர் வடிவத்தின்:

  நாபி – பிரம ரூபத்தையும்

  முகம் - விஸ்ணு ரூபத்தையும்

  கண் - சிவ ரூபத்தையும்

  இடது பாகம் - சத்தி ரூபத்தையும்

  வலது பாகம் - சூரிய ரூபத்தையும்

  உணத்துகின்றது. எனினும் சிவனுக்கும் கணபதிக்கும் இடையிலான தொடர்பு மிகவும் நெருக்கமானது.

- சிவனும் கணபதியும் முக்கண்ணன் என அழைக்கப்படுவதுடன், சுயம்பு லிங்கப் பிள்ளையார், மாமாங்கேசுவரப் பிள்ளையார் முதலான திருவுருவங்களும் சிவன் - விநாயக இணைப்பிக்குச் சான்று.
- விநாயகப் பெருமானை, கணபதி சிவானந்தம் என்று அழைக்கும் மரபுமுண்டு.
- விநாயகர், மேலான பரமேஸ்வர வடிவத்தை பெற்றுக்கொண்ட போது அவர் ஐந்து முகங்களைக் கொண்டவராக காட்சியளித்தாக விநாயக புராணம் கூறுகிறது. இதனால் அவர் பஞ்சமுக விநாயகர் என அழைக்கப்படுகிறார்.
- சிவ விக்கிரக இலட்சணங்களையும், விநாயகரின் பிரதிமா லட்சணங்களையும் கலந்த வகையில் பஞ்சமுக விநாயகரின் பிரதிமா லட்சணம் அமைகின்றது. பஞ்சமுக விநாயக வடிவம் ஐந்து திருமுகங்களையும், பத்து திருக்கரங்கரளையும் கொண்டதாக அமையும். ஆசன நிலையில் அமர்ந்து, இடது கால் தொங்கிய நிலையிலும், வலது கால் ஆசனத்தில் மடித்தவாறும் இவ்வடிவம் அமையும்.
- தலையில் கரண்ட மகுடம் கொண்டதாக அமையும் பஞ்சமுக விநாயகர் வடிவம் சகல ஆடை ஆபரங்கணளையுடையவராக அமைக்கப்படுதல். ஸ்தானக நிலையிலும் பஞ்சமுக விநாயகர் வடிவம் அமையும். அவ்வாறு அமையும் வடிவம் உற்சவ மூர்த்தியாக காணப்படுகிறது.
- சிவனுடைய ஐந்து முகங்களுடன் பத்துக் கரங்களையுடையவராக பஞ்ச முக விநாயகர் வடிவம் அமைவுறுகிறது. பஞ்சமுக கணபதியின் பத்துத்திருக் கரங்களும் வலமிருந்து இடமாக திரிசூலம், மழு, வாள், வச்சிராயுதம், அக்கினி, அபயம், பாசம், மணி, சர்ப்பம், அங்குசம் எனும் வகையிலான அங்க இலட்சணத்தைக் கொண்டமைந்து அடியவர்களுக்கு அருள்பாலிகின்றார்.

- கந்தபுராணத்தின் 'திகட சக்கர செம்முகம் ஐந்துளான்....' என வரும் காப்புச் செய்யுளில் கணபதி ஐந்து முகத்தையுடையவனாகக் கூறப்படுகிறார்.
- பஞ்சமுக விநாயகரின் வடிவம் பல தத்துவ உண்மைகளுடன் தொடர்புபடுகிறது. சைவ சித்தாந்தம் கூறும் பதியின் ஐந்தொழில் தத்துவத்தை உணர்த்துவதாக அவரது ஐந்து முகங்களும் அமைகின்றன.
- சைவ சமயத்திற்கும் விநாயக வழிபாட்டிற்குமிடையிலான தொடர்பை பஞ்சமுக விநாயக வடிவம் எடுத்துக்காட்டுகிறது. யாழ்பாணம் திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்வசத்தின் போது பஞ்சமுக விநாயகர் வடிவம் உற்சவ மூர்த்தியாக வீதியுலா வரும் வழக்கம் உள்ளது.

சண்முக வடிவம்

- இந்து சமய நெறிகளுள் கௌமாரம் முருகக் கடவுளை முதன்மையாகக் கொண்டதாகும் முருகக் கடவுளின் பிரதிமாலட்சணங்களுள் பதினாறு வகை வடிவங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. சரவணபவன், கந்தசுவாமி, கார்த்திகேயன், சண்முகன்,பாலசுப்பிரமணியன் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுபவர். கந்தபுராணத்திலே சிவபெருமானின் நெற்றிக் கண்ணில் இருந்து ஆறு தீப்பொறிகளாக எழுந்து ஆறுமுகமாகிய வடிவமே சண்முக வடிவமாகும்.

- பிரதிமாலட்சணங்கள்
    - ஆறுமுகங்கள்
    - பன்னிரு தோள்கள்
    - பன்னிரு கைகள்
    - வேல்
    - மயில்வாகனம்
    - பல்வேறு ஆயுதங்களும், தோற்றப் பொலிவு மாறுபாடுகளும் கூறப்படுகின்றன.
- சண்முக தத்துவம்

  சதாசிவன் ஐந்து முகம் அதோமுகன்

  பரமேஸ்வரனின் வெளித்தெரியும் முகங்கள்
    - ஸத்யோஜாதம்
    - வாமதேவம்
    - தத்புருஷம்
    - ஈசானம்
    - அகோரம்

  பரமஞானியர் உள்நோக்குக்கு மட்டும் புலப்படும் உள்முகம் - அதோமுகம்

- ஆறுமுக தத்துவம்

  சிவமூர்த்திக்குரிய ஆறு அருட்குணமும் ஆறுமுகமாதல்
    - முற்றறிவு
    - வரம்பில் இன்பமுடைமை
    - இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல்
    - முடிவில் ஆற்றலுடைமை
    - பேரருளுடைமை
    - தன்வயமுடைமை

### 4.1.1.5 இசைக் கலை

**அறிமுகம்**

- திருக்கோயில்கள் வளர்த்த நுண்கலைகளில் இசைக்கலை முக்கியமானதாகும்.
- இந்துப் பண்பாட்டு வரலாற்றில் இசைக்கலையானது மிக உன்னத கலையாக மிளிர்கின்றது.
- இசை இயைபுபடுத்தும் சாதனமாகும்.
- இறைவனே இசை வடிவினன் (நாதப் பிரம்மம்) என்பது இந்துமத நம்பிக்கை
- இசையானது செவிக்கு இன்பம் ஊட்டுவதோடு மட்டுமல்லாது ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி உள்ளத்தை பண்படுத்தி பேரின்பப் பேற்றையும் தரவல்லது.

**இசைக்கலையின் தோற்றம் - வட இந்தியா**

- **வேதங்கள்**
    - நான்கு வேதங்களுள் ஒன்றாக காணப்படும் சாமவேதம் இசைப்பாடல்களால் அமைந்தவை.
    - பிற்பட்ட காலத்தில் இசைக்கலை வளர்வதற்கு வித்திட்ட பெருமை சாம வேதத்தையே சாரும்.
- **புராண, இதிகாசங்கள்**
    - புராணக் கதைகளில் இறைவனே இசை வடிவினன் என்னும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது.
    - கடவுளர் திருவுருவங்கள் இசைக்கருவிகளோடு சித்தரிக்கப்படுகின்றன.

    | | | | |
    |---|---|---|---|
    | உ-ம்: | சிவன் | - | உடுக்கு திருநந்திதேவர் - மத்தளம் |
    | | நாரதர் | - | தம்புரா |
    | | சரஸ்வதி | - | வீணை |
    | | கண்ணன் | - | புல்லாங்குழல், சங்கு |

    - தேவசபையில் இந்திரனுக்கு முன்னால் மேனகை, ஊர்வசி இசைமீட்டி நடனம் ஆடுவதாகக் கூறப்பட்டுள்ளது.
    - இராமாயணத்தில் வரும் இராவணன் சாமகானம் பாடுவதில் வல்லவன். தனது பத்துத் தலைகளில் ஒன்றினை வெட்டி எடுத்து, நரம்புகளின் துணையுடன் இசை மீட்டி சிவனிடம் வரம் பெற்றதாக வரலாறு உண்டு.
- **குப்தர் காலம்**
    - கண்டெடுக்கப்பட்ட நாணயங்களில் சமுத்திரகுப்தன் வீற்றிருந்து வீணை வாசிப்பது போன்ற நிலை உள்ளது.
    - சமுத்திரகுப்தன் பெரிய கவி என இலக்கியங்கள் போற்றுகின்றன.

## தென் இந்தியா

- **சங்க காலம்**
  - சங்க காலத்தில் மக்களது வாழ்க்கையுடன் இசையானது இரண்டறக் கலந்து காணப்பட்டது.
  - இசை பற்றி சங்க நூல்களான பரிபாடல், சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவற்றில் கூறப்பட்டுள்ளது.

- **ஐவகைப் பண்**
  - குறிச்சிப் பண், முல்லைப் பண், மருதப் பண், நெய்தல் பண், பாலைப் பண் என்ற அடிப்படையில் மக்கள் தத்தம் நிலங்களில் சங்கீத மரபை கொண்டிருந்தனர்.
  - பண்களைப் பாடியவர்கள் பாணர் எனப்பட்டனர்.
  - யாழே இசைக்கருவிகளில் சிறப்பானது.
  - பெருநாரை, பெருங்குருகு, தாள சமுத்திரம் போன்ற இசை நூல்கள் இருந்தமை பற்றிய குறிப்புகள் உள்ளன.

- **சங்கமருவிய காலம்**
  - சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும், காரைக்கால் அம்மையார், முதலாழ்வார் மூவர் பாடல்களிலும் இசையின் சிறப்பினை அறியலாம்.
  - சிலப்பதிகாரம், தமிழரின் சங்கீதம் செந்நெறிச் சங்கீதமாக இருந்ததை உணர்த்துகின்றது.

    ''யாழும் குழலும் சீரும் மிடரும்
    தாழ்குரல் தண்ணுமை ஆடலோடு இவற்றின் இசைந்த பாடல் இசையாகும்''
    என சிலப்பதிகாரம் கூறுகின்றது.
  - காரைக்கால் அம்மையார் தோத்திரங்கள் இறைவனுடன் இசையச் செய்பவை.
    உ-ம்: அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை

- **பல்லவர் காலம்**
  - நாயன்மார்கள், ஆழ்வார்கள்
    ஏழிசையாய் இசைப் பயனாய்” என சுந்தரரும்
    ஓசை ஒலி எலாம் ஆனாய்” என அப்பரும்
    பண்ணும் பதமேழும்” என சம்பந்தரும்
    பண் சுமந்த பாடல் பரிசு”
    என மணிவாசகரும் இசையினைப் போற்றிப் பாடியுள்ளனர்.
  - ஆழ்வார்களது பாடல்களில் திருமாலின் ஆயிரம் நாமங்களையும் பண் இசைந்துபாடுவது. உ-ம்:“அறுகால் வரி வண்டுகளா யிரநாமஞ் “

- **மன்னர்களும் இசைக்கலையும்**
  - மகேந்திரவர்மன் பல்லாவரம் குகைக்கோயில் கல்வெட்டில் தன்னை "சங்கீரண சாதி" எனக் கூறியுள்ளான்.
  - மேலும் "பரிவாதினி " என்னும் பெயர் கொண்ட வீணையில் வல்லவனாக இருந்தான்.
  - இராசசிம்மன் இசையில் புலமை பெற்றிருந்தான். உ-ம்: "வாத்ய வித்யாதரன் ", "வீணாதரன்" எனும் பெயர்கள் கொண்டிருந்தமை.
- **சோழர் காலம்**
  - ஆலயங்களில் பல் வகை இசைக்கருவிகள் ஆராதனைகளில் வாசிக்கப்பட்டன. உ-ம்: தக்கை, தண்ணுமை முதலியன.
  - இசைச் சிற்பங்கள், இசை மண்டபங்கள், இசைக்கலைஞருக்குரிய நிலபுலங்கள் ஆலயத்துக்கு உரியனவாகும்.
  - முதலாம் இராஜராஜன் கோயில்களில் ஓதும் வழக்கத்தை நடைமுறைப்படுத்தினான். வாச்சிய மாராயன்" பட்டம் இசைக்கலைஞருக்கு வழங்கப்பட்டது.
  - தேவாரம் ஓதுபவர்களை மேற்பார்வை செய்ய, தேவார நாயகம் என்னும் அலுவலகர் நியமிக்கப்பட்டார்.
- **நாயக்கர் காலம்**
  - தமிழ்நாட்டில் கீர்த்தனை வடிவம் - நந்தனார் கீர்த்தனை, இராம நாடகக் கீர்த்தனை என்பன இக்காலத்தில் அறிமுகமானது.
  - இசைத்தூண்கள் அமைக்கப்பட்டன. உ-ம்: மதுரை அழகர்
  - அருணகிரிநாதர் பாடிய பாடல்கள் - திருப்புகழ் சிறந்த சந்த லயம் உடைய நூலாகும்.
- **தற்காலம்**
  - கருநாடக இசையில் மாரிமுத்தாப்பிள்ளை, முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், தியாகராஜ பாகவதர் போன்றவர்களின் பங்களிப்பு
  - விபுலாநந்தரின் யாழ்நூல் சிறந்த இசை நூலாகும்.
  - பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இசை ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. உ-ம்: விபுலாநந்தர் இசை நடனக் கல்லூரி, இராமநாதன் இசை நடனக் கல்லூரி
  - ஆலயங்களில் பஜனை, பிரார்த்தனை, நாமகீர்த்தனம், கதாகலாட்சேபம், என்பன இசைவளர்ச்சியைப் பிரதிபலிப்பனவாகும். மேலும் நாதாஞ்சலி, புராணபடனம், இசைக்கருவிகள் ஆலய வழிபாட்டில் பயன்பட்டமை, பஞ்ச புராணம் பாடும் மரபு தோன்றியமை.

4.1.1.5.1 பண்ணிசை

- பண்ணிசையின் தோற்றமும் வளர்ச்சியும்
  - தமிழ் மக்களின் பாரம்பரிய இசையில் பண் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது.
  - பண் என்பதற்கு பஞ்சமரபு என்னும் இசைத்தமிழ் நூல் பின்வருமாறு விளக்கம் தருகின்றது. "தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அண்ணம் என்னும் எட்டு இடங்களாலும் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு ஆகிய எண் வகை முயற்சியாலும் பண்ணப்படுவதே பண்" என்பதே அவ்விளக்கமாகும்.
  - பண் கர்நாடக இசையில் இராகம் என வழங்கப்படுகின்றது.
  - பழந்தமிழ் நூல்களில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் கூறப்படுகிறது. இம்மூன்றிலும் இசை என்பது தமிழ்ப் பண் இசையையே குறிக்கின்றது.
  - பழந்தமிழ் நூல்களில் பண்ணிசை பற்றிக் கூறும் நூலாக இன்று எமக்கு கிடைப்பது 'பஞ்சமரபு' என்னும் இசை நூலாகும்.
  - சங்கத் தொகை நூல்களாகிய நற்றிணை, பரிபாடல் என்பவற்றிலும் மற்றும் சிலப்பதி காரத்திலும் காரைக்காலம்மையார் பாடல்களிலும் பண் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
  - பல்லவர் ஆட்சிக் காலத்திலே சைவ நாயன்மார்கள் தேவாரப் பாடல்கள் மூலம் தமிழ்ப் பண்ணிசையை வளர்த்துள்ளனர். தமிழிசை உன்னத வளர்ச்சி பெற்ற காலம் பல்லவர் காலமே. இக்காலத்திலேயே பண்கள் பல பயிலப்பட்டன.
  - தேவாரத் திருப்பதிகங்களை ஓதுவார்களும், பிடாரர்களும் பரம்பரை பரம்பரையாகப் பாடி வந்திருப்பதை இலக்கிய, தொல்பொருள் சான்றுகளால் அறிய முடிகின்றது.
  - "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் " பற்றித் தேவாரப்பாடல்கள் கூறுகின்றன. இதனால் தேவாரப் பதிகங்களே நமக்கு கிடைத்துள்ள ஆதி இசை உருப்படிகள் எனலாம்.
  - தேவாரப் பாடல்களில் ஆங்காங்கு சில பண்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தேவாரப் பாடல்கள் 23 பண்களைக் கொண்டுள்ளன.
  - தேவாரப் பாடல்கள் அக்காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களிடையே வழக்கிலிருந்த பண்களிலேயே பாடப்பட்டிருந்தன. திருமுறைகண்ட புராணத்தில் பாணர் மரபில் தோன்றிய வல்லி என்னும் பெண் இசை அமைத்ததாக அறிய முடிகின்றது. தேவாரப் பாடல்களும் திருவாசகமும் பண் சுமந்த பாடல்கள் என்றே புகழப்படுகின்றன.
  - இறைவனைப் புகழ்ந்து பாடும் தோத்திரங்களைப் பண்ணோடு ஓதுவதனால் இறைவனிடம் அன்பும் ஈடுபாடும் பக்தியும் உண்டாகின்றது. மனம் பண்படுகின்றது. புலன்கள் அடங்குகின்றன, இறை அருளும் கிடைக்கின்றது.
  - தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்னும் பஞ்சபுராணம் ஓதும் மரபாக பண்ணிசை மரபு விளங்குகின்றது.
  - இறைவழிபாட்டில் இசை முக்கியமானது. மகோற்சவங்களில் இசையும் கீர்த்தனைகளும் பிரதானமானவை. அவ்வாறே உற்சவ காலங்களில் நவசந்திப் பண் இசைத்தல் பிரதானமானது.

## கற்பித்தற் செயற்பாடுகள்:

படி 1 : அழகியற்கலைகள் சமயச் சார்பானவை என்றும் கோயில் கலைகளுடன் தொடர்பானவை என்றும் மாணவர்களுக்கு முன்வையுங்கள்.

படி 2 : மாணவர்களை இந்து நுண்கலை தொடர்பான தகவல்களைத் திரட்டவும் படங்களைச் சேகரிக்கவும் வழிகாட்டுங்கள்

படி 3 : மாணவர்களை 8 குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு கலைகள் பற்றி, தேவையான தகவல்களைத் திரட்டி ஒழுங்குபடுத்துமாறு கூறுங்கள். சேகரித்த விடயங்களை வகுப்பறையில் முன்வைக்க இடமளியுங்கள்.

படி 4 : அவற்றைத் தொகுத்து வகுப்பறையில் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

## மேலதிக வாசிப்புக்குரியவை :

| | | |
|---|---|---|
| இந்து கலாசாரம் | | |
| நடனங்களும் ஓவியங்களும் | - | பேராசிரியர் சி. பத்மநாதன் |
| ஓவியக்கலை | - | இராமமூர்த்தி |
| தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் | - | மயிலை சீ. வேங்கடசாமி |
| வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 9 | - | தஞ்சைப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் |
| தென்னிந்திய வரலாறு | - | நீலகண்டசாஸ்திரி |
| தென்னிந்திய சிற்ப வடிவங்கள் | - | க. நவரெத்தினம் |
| சிவானந்த நடனம் | - | கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி |
| இந்துக் கோயில்களும் சிற்பங்களும் | - | பேராசிரியர் சி. பத்மநாதன் |
| இந்து கலைக் களஞ்சியம் | - | தொகுதி 07 |
| இந்து நாகரிகம், இந்து சமயம் பகுதி -111 | - | திருமதி சாந்தி சேகவன் |

**தேர்ச்சி 4.0 :** **பண்பாட்டு வளர்ச்சியில் இந்துக் கோயிற் கலைகளும் நாட்டார் கலைகளும் பெறும் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றை நயப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 4.2 :** நாட்டார் கலை மரபின் பல்வேறு சிறப்பியல்புகளை அறிந்து, அவற்றைப் பற்றி விளக்குவார்.

**பாடவேளைகள் :** 20

**கற்றற் பேறுகள் :**

- நாட்டார் கலை என்பதன் பொருள் விளக்கத்தை அறிவார்.
- நாட்டார் கலையின் சிறப்பியல்புகளைத் தேடித் தொகுப்பார்.
- கலைகள் பொதுவாக சமயம்சார் கலை, சமூகம்சார் கலை, தொழில்சார் கலை என வகைப்படுத்தப்படுள்ளதை அறிந்து கூறுவார்.
- நாட்டார் கலைகளான கூத்து, கரகம், காவடி ஆகியன சமய அடிப்படையிலான கதைகளை உள்ளடக்கியதாக ஆடப்படுகின்றது என்பதை விளக்குவார்.
- கூத்துக்கள் மூலம் வெளிப்படுத்தப்படும், தத்துவ சிந்தனைகள் பற்றி விளக்குவார்.
- காவடி ஆட்டம் நாட்டார் வழிபாட்டில் பெறும் முக்கியத்துவத்தினை அறிந்து போற்றுவார்.
- காவடியாட்டம் முருக வழிபாட்டில் பெறும் முக்கியத்துவத்தையும் அவை வெளிப்படுத்தும் வழிபாட்டம்சங்களையும் எடுத்துரைப்பார்.
- காவடி ஆட்டத்தின்போது பாடப்படும் காவடிப் பாடல்கள் பெரும்பாலும் முருகனைத் துதிப்பனவாகவே காணப்படுவதை விளக்குவார்.
- கரகம் ஒரு கலையாகவும், அம்மன் வழிபாட்டில் அவை பெறும் முக்கியத்துவத்தையும் எடுத்துரைப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

- **4.2.1 நாட்டார் கலைகள் - அறிமுகம்**
- இயற்கைப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு மக்களை களிப்படையச் செய்யும் கலைகளை நாட்டார் கலைகள் எனலாம். இதனை நாட்டுப்புறக் கலைகள் எனவும் அழைப்பர்.
- நாட்டுப்புறக் கலைகள் கிராம மக்களது வாழ்வோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன.
- இவை திருவிழாக்களிலும் சடங்குகளிலும் நிகழ்த்திக் காட்டப்படுகின்றன.
- நாட்டுப்புற மக்களின் அழகியல் உணர்வுகளின் வெளிப்பாடாக இக்கலைகள் விளங்குகின்றன.
- நாட்டார் கலைகள் மூன்று வகையாகப் பிரிக்கலாம்.
  1. சமயம்சார் கலை
  2. சமூகம்சார் கலை
  3. தொழில்சார் கலை
- நாட்டுப்புறக் கலைகள் சமூக வாழ்க்கை, கடவுள் நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை விளக்கும் தன்மையுடையன.
- நாட்டுப்புறக் கலைகள் ஆகமம் சாராத, சிற்ப சாஸ்திர ஆகம விதிக்கமைவான ஆலயங்களிலும் நிகழ்த்திக் காட்டப்படுகின்றன.

4.2.1.1 கூத்து

அறிமுகம்

- மூத்த கலைகளுள் கூத்துக் கலையும் ஒன்றாகும்.
- சங்க காலத்தில் கூத்தினை ஆடும் கூத்தருக்கு மிகுந்த சிறப்பிருந்தது.
- சங்க இலக்கியங்கள் கூத்தர் பற்றி பல செய்திகளைத் தருகின்றன.
  உ-ம்: கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்.....” புறத்திணை இலக்கியம்
- சங்க மருவிய காலத்தில் கூத்து, குரவைக் கூத்து என அழைக்கப்பட்டது. பல்லவர் காலத்தில் இறைவன் கூத்துகளுக்கெல்லாம் தலைவனாகப் போற்றப்பட்டான்.
  உ-ம்: தில்லையில் கூத்தனே தென்பாண்டி நாட்டானே...”

**கூத்தின் வகைகள்**

- இலங்கையில் கூத்துக் கலை, கதை தழுவிய ஆட்டத்துடன் தொடர்பு உடையதாகக் காணப்படுகின்றது.
- மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் - வடமோடி, தென்மோடிக் கூத்து
  மன்னார் - வடபாங்கு, தென்பாங்கு
  மலையகம் - காமன் கூத்து

கூத்தின் பொருள் மரபு

- கூத்து சமய அடிப்படையிலான கதைகளை உள்ளடக்கியது.
- வடமோடி, தென்மோடிக் கூத்துகளில் மகாபாரதம், இராமாயணம், கந்தபுராணம் முதலிய இதிகாச, புராணக் கதைகள் செல்வாக்குப் பெற்றுள்ளன.

  உ-ம்: மகாபாரதம் - அரிச்சுனன் தவம்

  இராமாயணம் - வாலி வதை

  கந்தபுராணம்- - வள்ளி திருமணம்

- இதிகாச புராணங்களின் கிளைக்கதைகளும் கூத்துகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
  உ-ம் : கணையாழி - இராமாயணம்
  நாயன்மார்களுடைய வாழ்க்கை வரலாறு கூத்துகளின் உள்ளடக்கமாக காணப்படுகின்றது.
  உ-ம் : சிறுத்தொண்டர் வரலாறு
  அவ்வாறே புராணக் கதைகளும் கூத்துகளின் உள்ளடக்கமாக உள்ளன.
  உ-ம்: காமன்கூத்து

**வடமோடிக் கூத்திற்கான ஒப்பனைகள்**

- ஆண்களுக்குரிய முடி பூமுடியாகக் காணப்படும்.
- கொடுக்கு கட்டியிருப்பர்.
- உடல் முழுவதும் வெள்ளை நிறப் (மாத்து) பவுடர் பூசியிருப்பர்.
- ஏற்கும் பாத்திரத்திற்கேற்ப ஒப்பனை அமையும்.
- ஒப்பனைகளை வைத்துக்கொண்டே பாத்திரங்களை அடையாளம் காண்பர்.
- காலில் சலங்கை கட்டி, கையில் ஏதாவது ஆயுதம் ஏந்தியிருப்பர்.
- பெரும்பாலும் ஆண்களே பெண்களாக ஒப்பனை செய்து கூத்தாடுவர்.

**தென்மோடி கூத்திற்கான ஒப்பனைகள்**

- ஆண்களுக்கு அரசமுடி (ராஜகிரீடம்) அணிவர்.
- உடுப்பு கரப்பு உடுப்பாக காணப்படும்.
- உடல் முழுவதும் வெள்ளை நிறப் (மாத்து) பவுடர் பூசியிருப்பர்.
- காலில் சலங்கை கட்டியிருப்பர்.
- இதிலும் ஆண்களே பெண்களாக ஒப்பனை செய்து கொள்வர்.

கூத்துகளுக்கு பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள்

- மத்தளம்
- சல்லரி
- உடுக்கை
- பறைமேளம்
- நாதஸ்வரம்

கூத்தின் சமூக, சமய முக்கியத்துவம்

- ஆலய முன்றலில் வட்டக்களரி அமைத்து, சமய சம்பந்தமான கூத்துகளை ஆடுவதனால் மக்களிடையே பக்தி உணர்வு, கலை உணர்வு விருத்தியடையும். போதனைகள் (படிப்பினைகள்) கிடைக்கும்.
  உ-ம் : கம்சன் வதம்" என்ற கூத்தில் கம்சனின் ஆணவம் கடவுள் பக்திக்கு முன்னால் செல்லுபடியற்றதாக காணப்படுகின்றது.
- வேளாண்மை அறுவடைக்காலம் நிறைவடைந்ததும் கூத்துப் பழகி, அரங்கேற்றத்திற்காக உறவினர்களுக்கு அழைப்பு விடுப்பர்.
- கூத்தில் வரும் கதாபாத்திரங்களின் பெயர்களால் கதாபாத்திரம் தாங்கியவர்கள் யதார்த்த வாழ்விலும் அழைக்கப்படுகின்றார்கள்.

  உ. ம்:
  1. தருமர் சண்முகம்
  2. வீமன் சிவலிங்கம்
  3. துரியோதனன் முருகப்பர்
  4. சல்லியன் ஆறுமுகன்

### 4.2.1.2 காவடி ஆட்டம்

- காவடி என்பதன் சொற்பொருள் விளக்கம்
    * காவு + தடி என்னும் இரு பதங்கள் சேர்ந்து காவடி என்னும் சொல் உருவாகிற்று.
- காவடி ஆட்டம் பற்றிய தோற்றப் பின்னணி
    * காவடி ஆட்டத்தின் தோற்றம் பூர்வீகமான சுமை தூக்கும் செயற்பாட்டோடு இணைந்தது.
    * தமது குழுவின் தேவைகளுக்காகச் சுமை தூக்குதல்.
    * எஜமானர்களது தேவைகளுக்காகச் சுமை தூக்குதல்.
    * நேர்த்திக்காகச் சுமை தூக்குதல்.
    * குறிஞ்சிக்குமரனாக முருகனை வழிபட்ட பண்டைத் தமிழர்கள், மலைமேல் உள்ள வழிபாட்டிடங்களுக்கு காவுதடிகள் மூலம் காணிக்கைப் பொருட்களை காவிச் சென்றமை.
    * இடும்பனைப் போன்று காவடி எடுத்துச் சந்நிதிக்கு வருபவர்க்கு முருகன் அருள்புரிவார்.
- காவடி அமைப்பு முறை
    * காவடி பெரும்பாலும் வில் வளைவு போன்று அமைக்கப்பட்டிருக்கும்.
    * வில் வளைவின் இரண்டு பக்கங்களையும் தடியொன்று தொடர்புபடுத்தும்.
    * காவடியின் இரு பக்கங்களும் மயில் இறகால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.
    * அத்துடன் சலங்கையும் கட்டப்பட்டிருக்கும்
- தேவையான பொருட்கள்
    * குறுந்தடி
    * வேல்
    * சலங்கைகள்
    * மலர்மாலை
    * மயிலிறகுகள்
    * வளைக்கக்கூடிய தடிகள்
    * துணி
    * முருகனின் சிறிய படம்
- காவடி ஆட்டத்தின் வகைகள்
    * பாற் காவடி
    * தானியக் காவடி
    * புஸ்பக் காவடி
    * பழக் காவடி
    * பறவைக் காவடி

- இவை அவற்றின் செயற்பாட்டுக்கமைய மாறுபடும். அவற்றின் அமைப்புக்கேற்ப அவை மூன்று வகையாகப் பார்க்கப்படுகின்றன.

  ஆனந்தக் காவடி - இவ்வகை எல்லோராலும் ஆடப்படும்.
  துலாக் காவடி - துலா போன்ற வடிவத்தின் மேல் தொங்கி ஆடும் காவடி.
  முள்ளுக் காவடி - முள்ளுக்குத்தி ஆடும் காவடி

- காவடி ஆட்டத்திற்குப் பயன்படும் இசைக்கருவிகள்
  * பறைமேளம்
  * உடுக்கு
  * சல்லாரி என்பன பின்னணி இசைக்குப் பயன்படும்.
- சந்த இசையில் காவடி ஆடப்படும்.
- காவடி ஆட்டத்தின்போது பல பாடல்களைப் பாடுவது மரபாகும்.
- காவடிப் பாடல்கள் பெரும்பாலும் முருகனைத் துதிப்பனவாகவே உள்ளன.
- அவை பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டும் ஒன்றுபட்டும் அமையும். அவற்றில் சில பாடல்களை இங்கு நோக்கலாம்.

  * " கந்தனுக்குச் சுமை தூக்கிச்
    சுகங்கண்டோம் - கதிரை
    வேலனுக்குச் சுமை தூக்கிச்
    சுகங்கண்டோம் - வல்ல
    முருகனுக்குச் சுமை தூக்கிச்
    சுகங் கண்டோம்." (காவடிப் பாடல் - யாழ். அளவெட்டி)

  * கந்தன் அருள் சுரக்கக் கெந்தியாடு
    காந்தன் அருள் சுரக்கக் கெந்தியாடு
    விந்தன் அருள் சுரக்கக் கெந்தியாடு
    வேலன் அருள் சுரக்கக் கெந்தியாடு (யாழ்ப்பாணம்)

  * கழுகுமலை தனி லுறையும் முருகவேளே
    கருத்துடனே உன் பாதமலர் தானே ஓத
    பழுதொன்றும் வாராமல் காக்கவேண்டும்
    பச்சைமால் தன்மருகா பார்வதியின் மைந்தா
    வழுவாமல் அடியேன் முன் நிற்க வேண்டும்
    வரும் பிழைகள் தனை அகற்றி வழியைச் செய்வாய்
    தெளிவாக உன்பாதம் துதிப்பேன் ஐயா! சுவாமி
    தென்கதிரை முருகோனே! தெரிசிப்பாயே!

    (மட்டக்களப்பு -கழுகுமலைப்பத்து - கதிரைமலைப்பத்து)

- **ஆலய வழிபாடும் காவடி ஆட்டமும்**
  - * சிறப்பாக முருக வழிபாட்டுடன் தொடர்புடையது. முருக வழிபாட்டுடன் காவடியாட்டம் இணைந்து வளர்வதற்குச் சமூகப் பின்புலம் உண்டு.
  - * காவடி, எந்த வயதினராலும் ஆடக்கூடியதாக இருக்கும். முருகனைக் குழந்தையாக, குமரனாக, விருத்தனாக, பல்வேறு வீச்சுக்களால் காணும் தொன்மம் காணப்படுகிறது.
  - * காவடியாட்டத்தின்போது முருகனைக் குழந்தையாக, குமரனாக, விருத்தனாகக் காட்சிப்படுத்தி ஆடுவர்.
- காவடியின் அலங்காரப் பொருட்கள் குறிக்கும் தத்துவங்கள்
  - * வேல் - ஆழ்ந்து, அகன்று நுண்ணிய கடவுட் கொள்கை. கெட்டவரை அழித்து நல்லோரைக் காப்பாற்றுதல்.
  - * மயிற்தோகை - பிரணவமாகிய ஓங்காரம்
  - * மயிலிறகுகள் - ஆணவம் அழியாமல் வலிகுன்றி, மலபரிபாகமாக்கப் பட்டிருத்தல் (சூரன் ஆணவம் அடங்கி மயிலானமை)
  - * காவடி எடுப்பவர் - ஆன்மா - ஆணவம், கன்மம் முதலான பாசங்களினின்றும் விடுபட்டு ஆன்மிக விடுதலையை நாடுதல்.
  - * வழிபாட்டு முறை- தன்னைத்தானே துன்புறுத்தி ஆன்மிக விடுதலையைப் பெறுதல்.

- **சமய, சமூக முக்கியத்துவம்**
  - * மனிதர் தமக்கு ஏற்படும் துன்ப, துயரங்கள் நீங்க, பல்வேறு தெய்வங்கள் மீதும் நம்பிக்கை வைத்து, காவடி எடுப்பர்.
  - * காவடி எடுத்தல் மென்பக்தியினையும் வன்பக்தியினையும் வெளிப்படுத்துகின்றது. உ-ம்: பால் காவடி - மென்பக்தி, முள்ளுக் காவடி - வன்பக்தி
  - * காவடி எடுப்பவன் தனது பக்தியை வெளிப்படுத்துவதோடு மன அமைதியையும் பெற்றுக் கொள்கிறான்.
  - * ஈழத்தில் இந்துக்களும் பௌத்தர்களும் கதிர்காம முருகன் மீது காவடி எடுப்பதைக் காணலாம்.

## 4.2.1.3 கரகாட்டம்

- கரகாட்டம் என்பதன் சொற்பொருள் விளக்கம்
  - * அலங்கரிக்கப்பட்ட செம்பை அல்லது பித்தளையிலான குடத்தை ஆட்டக்காரர் தலையில் வைத்துக் கொண்டு, மேளப் பின்னணிக்கு ஏற்றவாறு குடம் கீழே விழாதவாறு ஆடும் ஆட்டம் கரகாட்டம் ஆகும்.
- கரகம் என்பதன் வேறு பெயர்கள்
  - * புனித நீர்தாங்கும் குடம், கமண்டலம், குடம், கும்பம், செம்பாட்டம், பூங்குடம், பூம்பந்தல், கரகக்கூத்து எனப் பல பெயர்கள் உள்ளன.
  - * தொல்காப்பியம் - "கரகங் கவிழ்ந்த காவிரிப் பாவை.. "
    "நூலே கரகம்..."
  - * கலித்தொகை, புறநானூறு, சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் கரகம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.
    கலித்தொகை - "உறித்தாழ்ந்த கரகமும்..."

- கரகம் ஆடுவதன் நோக்கம்
  - * நாட்டில் வரட்சி, நோய் ஏற்படும் போது அதில் நின்று மீளும்பொருட்டு அம்மன் மீதும், மாரி அம்மன் மீதும் கரகம் எடுப்பர்.
  - * நேர்த்தியின் பொருட்டுக் கரகம் எடுப்பர்.
- அரங்கு - ஆலய முன்றல் - அறுவடை விழா
- கரகத்தின் அமைப்பும், ஆட்டக்காரரின் ஒப்பனையும்
  - * சக்திக் கரகம் அமைப்பதற்கு செம்பு, தண்ணீர், வேப்பிலை, நூல், அரளிப்பூ, தென்னம்பூ முதலானவையும் கிளி, அன்னம், புறா போன்ற தக்கைப்பறவை உருவங்களும் தேவையாகும்.
  - * சக்திக் கரகம் அமைப்பதற்கு, தேர்ந்தெடுத்த செம்பில் தண்ணீர் எடுத்து, கும்பத்தின்நடுவே தேங்காய் வைத்து, அதனைச் சுற்றி வேப்பிலை வைப்பர். அத்துடன் அரளிப்பூ, தென்னம்பூ போன்றவற்றால் அலங்கரித்து செம்புப்பகுதியில் பரிவட்டம் கட்டுவர். கரகக் கும்பத்தின் மேல் கிளி, அன்னம், புறா போன்ற தக்கைப் பறவை உருவம் இருக்கும்.
  - * சிலப்பதிகாரம் குறிப்பிடும் குடக்கூத்து என்ற கலை கரகாட்டத்தை ஒத்தது.
  - * கரகத்திற்குரிய ஒப்பனை, கோயிலின் புறமான அல்லது மறைவான இடத்தில் வைத்துச் செய்யப்படும்.
- கரகாட்டத்தின் வகைகள்
  - * இரண்டு வகைப்படும்.
    1. தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையது.
       சக்திக் கரகம், அம்மன் கரகம் (அரிசியால் நிரப்பப்படுவது)
    2. தொழில்முறையுடன் தொடர்புடையது.
       ஆட்டக் கரகம் (மண்ணால் நிரப்பப்படுவது)
  - * சக்திக் கரகம் வழிபாட்டுச் சடங்கின் பிரிக்கமுடியாத அங்கமாகும். கரகம் தூக்குமுன்கடுமையான விரதம் மேற்கொள்ள வேண்டும்.
  - * கரகம் பக்தியுடன் ஆடப்படும். தவிர, பார்வையாளரைக் கவருவதற்கல்ல.
  - * வழிபாட்டுடன் தொடர்புடைய, தெய்வச்சார்புடைய ஒப்பனைகள் செய்யப்படும்.
  - * கரகம் ஆடுவோரைத் தெய்வசக்தி பெற்றவராகக் கருதி, மக்கள் அவர்களை வழிபடுவர்.
  - * கரகம் கீழே விழாமல் இருக்க, தெய்வ சக்தியே காரணம் என நம்புகின்றனர்.
  - * கரகம் ஆடுவோர் கரகாட்ட மரபினைப் பின்பற்றுவதில் மிகுந்த கவனமாக இருப்பர்.

- **ஆட்டக்காரரின் ஒப்பனை - ஆடுவோரின் தோற்றம்**
    * ஆட்டக்காரர்களில் பெண்களும் ஆண்களும் ஒப்பனைப் பொருட்களைப் பயன்படுத்துவர். முகப்பவுடர், உதட்டுச்சாயம், சந்தனம் முதலியன பயன்படுத்தப்படுகின்றன.
    * பெண்கள் தலைமுடியை இறுகக் கட்டிக்கொண்டு இரட்டைப் பின்னல் அல்லது கொண்டை போடுவர். பூக்களைச் சூடி இருப்பர். முழங்கால் வரை பாவாடை, மார்புக்கச்சை, இடுப்புப்பட்டி அணிந்திருப்பர்.
    * கால்களில் சதங்கை கட்டியிருப்பர்.
    * ஆண்கள் தாறுப்பாச்சி கட்டி, உடம்பில் சந்தனம் பூசி, கால்களில் சதங்கை கட்டி ஆடுவர்.
    * கையில் வேப்பிலை, இடுப்பில் மஞ்சள் பட்டு, காவி நிறச் சேலைகள் அணிவர், விபூதி, உருத்திராக்கம் தரிப்பர்.

- வாத்தியங்கள்
    * கரகாட்டத்தின்போது தவில், நாதஸ்வரம், குழல், தாளம், பறை, உடுக்கு முதலான வாத்தியங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- ஆலய வழிபாட்டில் கரகம்
    * மழைத்தெய்வமான மாரியம்மன் தாலாட்டுடன் தொடர்புடையது.
    * வெப்ப நோயிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள மாரியம்மனை வேண்டும் வழிபாட்டுடன் தொடர்புபடுகிறது.
    * கோயில் விழா நிகழ்ச்சியின் தன்மையைப் பொறுத்து அமையும்.
- தமிழகத்தில் தஞ்சாவூர், திருச்சி, மதுரை, சேலம், சிவகங்கை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, இராமநாதபுர மாவட்டங்களில் கரகம் ஆடப்படுகிறது.
- இலங்கையில் - மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், மலையகம் முதலிய பிரதேசங்களில் கரகம் சிறப்பாக ஆடப்படுகிறது.
- நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு, சாதிவேறுபாடு இன்றி ஒழுக்கத்துடனும் பக்தியுடனும் கரகம் நிகழ்த்தப்படுகிறது.
- நாட்டார் வழக்காற்றிலும் ஆகமம்சார் வழிபாட்டு முறையிலும் கரகாட்டம் பேணப்படுகின்றது.
- அதேவேளையில் சிற்ப சாத்திர, ஆகமம் சாராத நாட்டார் தெய்வங்களைப் போற்றுகின்ற விழாக்களில் மிகுதியாக நிகழ்த்தப்படுகின்றது.

- கரகாட்டத்தில் சமய, சமூக முக்கியத்துவம்
    * கரகாட்டக் கலையானது கோயிலும் சமூகமும் சார்ந்தவையாகும்.
    * இன்றைய நிலையில் இக்கலை சிறப்பாக நிகழ்த்தப்படினும் பலவித மாற்றங்களைப் பெற்று வருகின்றது.

### 4.2.1.4 வசந்தன் கூத்தும் கோலாட்டமும்

**(அ) வசந்தன் கூத்து**

- வசந்தன் ஆட்டம் என்ற சொல்லாட்சியின் பொருள் வசந்த காலத்தில் ஆடப்படுவது என்பதாகும்.
- வசந்தன் கூத்தின் வகைகள்
  - பிள்ளையார்ர் வசந்தன்
  - அனுமார் வசந்தன்
  - அம்மன் பள்ளு வசந்தன் என ஆட்டம் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**வசந்தன் கூத்து ஆடப்படும் முறை**

- வசந்தன் கூத்தின் ஆரம்பத்தில் தரு இடம்பெறும். அதனைக் தரு கட்டியம் கூறுதல் என அழைப்பர்.
- கட்டியம் கூறுபவர் காலில் சலங்கை கட்டி, வடமோடி அல்லது தென்மோடிக் கூத்துகளுக்குரிய உடை அணிந்து, தருப் பாடி ஆடி வருவார்.
- தரையில் உயரமாகவும் வட்டமாகவும் அமைக்கப்பட்ட மேடையில் வசந்தன் கூத்து ஆடுவோர் வட்டமாக நின்று ஆடுவர்.
- வட்டமாக கயிறு கட்டி அதற்குள் மேடையமைத்து, வெளியே பார்வையாளர்கள் சுற்றிவர அமர்ந்திருந்து பார்க்கக்கூடியதாக இக்கூத்து ஆடப்படும்.

**ஆலய அரங்கில் வசந்தன் கூத்து**

- வசந்தன் கூத்து முருகன் ஆலயங்களிலும் கண்ணகியம்மன் ஆலயங்களிலும் முத்துமாரியம்மன் ஆலயங்களிலும் (ஆலய முன்றலில்) ஆடப்படும்.
- ஆலய முன்றலில் இவ் வசந்தன் கூத்து ஆடப்படும் வேளையில் பக்தி மேலீட்டால் அடியவர் அல்லது பார்வையாளர்கள் பரவசமடைவர்.
- இவ் வசந்தன் கூத்துகள் இதிகாசக் கதைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டே ஆடப்படுகின்றன.

**வசந்தன் கூத்தின் சமய, சமூக முக்கியத்துவம்**

- வசந்தன் கூத்து முருகன் ஆலய, கண்ணகியம்மன் ஆலய, முத்துமாரியம்மன் ஆலய விழாக்களின்போது அடுப்படுகின்றது.
- கண்ணகி வழிபாட்டில் கொம்பு முறி விளையாட்டின்போதும் வசந்தன் கூத்து ஆடப்படுகின்றது.
- வசந்தன் கூத்தில் வரும் வசந்தராசன் தனக்காகவும் பிறருக்காகவும் கண்ணகியம் மனையும் பத்திரகாளியம்மனையும் வேண்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.
- கோயிலில் ஆடப்படும் வசந்தன் கூத்து பக்தி, அழகு, போதனை ஆகியவைகளை உட்பொருளாகக் கொண்டுள்ளது.

## (ஆ) கோலாட்டம்

### கோலாட்டம் என்பதன் சொற்பொருள் விளக்கம்

- நிறங்கள் தீட்டப்பட்ட கோல்களைக் கொண்டு, தாளத்திற்கும் இசைக்கும் ஏற்றவாறு தட்டி ஆடுவதால் கோலாட்டம் என்று இக்கலை பெயர் பெற்று உள்ளது.

### கோலாட்டக் கலையோடு தொடர்புடைய புராணக் கதை

- கோலாட்டக் கலையோடு தொடர்புடைய சிவபுராணக் கதைகள் உள்ளன.
- தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே கடும்போர் நடந்தது. தேவர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, பார்வதிதேவி 9 நாட்கள் தவம் புரிந்தார். தவத்தின் கடுமையால் ஏற்பட்ட வெப்பத்தின் காரணமாக தேவியின் முகம் அழகிழந்து கருமை நிறமாகிவிட்டது. சிவபெருமானால் கூட அந்தக் கருமை நிறத்தை மாற்ற முடியவில்லை. பார்வதியின் தோழியர்கள் வருத்தமுற்று நந்திதேவருடைய அருளை வேண்டி, அவர் முன் கோலாட்டம் ஆடினர்.
- இவ்வாறு ஆடிய பின் பார்வதியின் முகத்திலிருந்த கருமை நிறம் நீங்கியது.

### கோலாட்டத்தின் வகைகள்

- கோலாட்டம் மூன்று வகைப்படும்.
    1. கோலாட்டம்
    2. பின்னல் கோலாட்டம்
    3. கோலாட்டக் கும்மி

### கோலாட்டம் ஆடும் முறை

- கோலாட்டம் ஒன்றைக் கம்பு கொண்டு அடிப்பது, இரட்டை கம்பு கொண்டு அடிப்பதென இருவகையாக ஆடப்படுகின்றது.
- ஒரு கம்பில் கயிற்றைக் கட்டிக்கொண்டு ஒவ்வொருவரும் குறிப்பிட்ட முறையில் ஆடி, கயிற்றினைப் பின்னலாகப் பின்னி, பின் அதனைப் பிரித்தெடுக்கும் ஆட்டமுறையும் இக் கோலாட்டத்தில் அடங்குகின்றது.

### ஆலய வழிபாடும் கோலாட்டமும்

- ஆலயங்களில் திருவாதிரை நாளிலும் கண்ணன் பிறந்த நாளிலும் கோலாட்டம் ஆடப்படுகிறது.
- தங்களுக்கு விருப்பமான தெய்வங்களுக்கு கோலாட்டம் நிகழ்த்தும் நாட்களாக ஓணம் பண்டிகையும், கார்த்திகை விளக்கீடும் காணப்படுகின்றன.

### கோலாட்டத்தின் சமய, சமூக முக்கியத்துவம்

- ஆரம்பத்தில் கோயிலை மையப்படுத்திய கோலாட்டக் கலையானது, இன்று பொது அரங்குகளிலும், பொது நிகழ்வுகளிலும் நிகழ்த்தப்படுகின்றது.
- கோலாட்டத்தின்போது அழகு, பக்தி, இரசனை என்பன வெளிப்படுத்தப்படுகின்றது.
- ஆரம்பத்தில் திருமணம் ஆகாத ஆண்களால் மட்டும் நிகழ்த்தப்பட்ட இந்தக் கோலாட்டம் தற்போது சிறுமியராலும் இளம் பெண்களாலும் ஆடப்படுகின்றது.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

படி I : நாட்டார் கலைகள் என்ற தலைப்பிலுள்ள ஒரு பகுதியைத் தெரிவு செய்து, மாணவர்களைக் கவரத்தக்க வகையில் உபகரணங்களைக் கையாண்டு அதனை முன்வையுங்கள்.

படி II : மேற்படி தலைப்பு தொடர்பான விடயங்களைச் சேகரிப்பதற்கான ஆதாரமாக நூல்களை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு உதவி செய்யுங்கள். அல்லது விடயங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியவர்களின் விபரங்களைமுன்வையுங்கள்.

படி III : மாணவர்களை 5 குழுக்களாகப் பிரித்து, கூத்து, காவடி, கரகம், வசந்தன், கோலாட்டம் என்னும் தலைப்புகளின் கீழ், தகவல்களைச் சேகரிக்க வழிகாட்டுங்கள்.

படி IV :
- சேகரித்த விடயங்களைத் தொகுத்து முன்வைக்க ஒவ்வொரு குழுவிலும் ஒருவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முன்வைத்த விடயங்களை அழகுற எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்துமாறு கூறுங்கள்.

## மேலதிக வாசிப்புக்குரியவை :

நாட்டார் வழக்காறுகள் - கே. லூர்த்து
நாட்டுப்புறவியல் - இராமகிருஷ்ணன், ஞானசேகரன்
தமிழரின் பெருமரபும் சிறுமரபும் - கலாநிதி. சி.மா. ரவிச்சந்திரன்

**தேர்ச்சி 5.0 : இலங்கையில் இந்து சமயத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் பண்பாட்டுச் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பளிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1** : இலங்கையில் இந்து சமயத்தின் வரலாற்றுச் சுருக்கத்தை அறிந்து, அவற்றை மூலாதாரங்களின் மூலமாக முன்வைப்பார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற் பேறுகள் :**

- இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான பாரம்பரிய உறவுகள் பற்றி விபரிப்பார்.
- இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் இந்தியாவின் செல்வாக்கினைக் கூறுவார்.
- இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் அதன் அமைவிடம் ஏற்படுத்திய செல்வாக்கினை மதிப்பிடுவார்.
- இலங்கையில் ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சியை அறிய உதவும் வரலாற்று மூலங்கள் பற்றி விபரிப்பார்.
- பொலநறுவைக் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட இந்து சமயத்தின் பல்துறை வளர்ச்சியை வரலாற்று மூலங்களை அடிப்படையாகக் கொண்டு விபரிப்பார்.
- இலங்கையில் பல்வேறு காலங்களிலும் நிலவிய இந்து சமய மரபுகள் பற்றிக் கூறுவார்.
- அரசர்களால் மட்டுமன்றி, பிரதானிகள், வணிகர்கள் என்போராலும் கோயில்கள் அமைத்து நிருவகிக்கப்பட்டன என்பதை எடுத்துரைப்பார்.
- சமய சமூக முன்னேற்றத்திலும், கலாசார அபிவிருத்தியிலும் வரலாற்றுச் சம்பவங்கள் உணர்த்தும் உண்மைகளை எடுத்துரைப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : 5.1.1 இலங்கையில் இந்து சமயம் - வரலாற்றுச் சுருக்கம்**

**அறிமுகம்**

- இந்து சமய நம்பிக்கைகள் இந்தியாவைப் போலவே இலங்கையிலும் தனித்துவமும் வரலாற்றுப் பழமையும் கொண்டவை.
- இலங்கை இந்திய உப கண்டத்தில் அமைந்துள்ளமையால் இதன் இந்து சமய வளர்ச்சியில் இந்தியாவிற்கு முக்கிய பங்குண்டு.
- இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் ஏற்படும் அரசியல், பண்பாட்டு மாற்றங்கள் இலங்கையிலும் அத்தகைய துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தின.
- இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான அரசியல், வணிகம், திருமண உறவுகள், கலாசார பரிமாற்றங்கள் போன்றவை இலங்கையின் இந்து சமய வளர்ச்சியில் செல்வாக்கினை ஏற்படுத்தின.
    - மௌரியர் காலத்தில் இலங்கைக்குப் பௌத்தம் கொண்டு வரப்பட்டமை
    - பக்தி இயக்கத்தவர் இலங்கையிலுள்ள திருத்தலங்களைப் பாடியமை
    - சோழ மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்தமை
- இலங்கையின் வட பகுதியில் ஆரியச் சக்கரவர்த்திகளால் யாழ்ப்பாண இராச்சியம் என்னும் சைவம் சார்ந்த அரசு தோற்றுவிக்கப்பட்டது.

## வரலாற்று மூலங்கள்

- இலங்கையின் இந்து சமய வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ள, பல புதைபொருட் சின்னங்கள் உதவுகின்றன.
- தமிழ்மொழி, பாளி மொழி, சிங்கள மொழி, சமஸ்கிருத மொழி என்பவற்றில் தோன்றிய இலக்கியங்கள், பிற நாட்டார் குறிப்புக்கள் முதலானவை இலக்கியச் சான்றுகளாக அமைவன:
    - சமஸ்கிருத மொழி நூல்களுள் இதிகாசங்கள், புராணங்கள் முக்கியமானவை.
    - தமிழ்மொழி இலக்கியங்களைத் தமிழகத்தைச் சேர்ந்த இலக்கியங்கள், இலங்கையில் தோன்றிய இலக்கியங்கள் என இனங்காணலாம்.
    - பாளி மொழி இலக்கியங்களாக மகாவம்சம், சூளவம்சம் முதலானவற்றைக் கூறலாம்.
- புதைபொருட் சின்னங்களாக ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டங்களிலும் அமைக்கப்பட்ட கோயில்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள் முதலானவை உள்ளன.
- பௌத்த சமய மரபுகளுடன் இணைந்த வகையில் இந்து சமயம்சார் புதைபொருட் சின்னங்கள் காணப்படுதல் சிறப்பம்சமாகும்.
- இந்துசமயம் தொடர்பான ஆரம்பகால ஆய்வுகளில் அதிகமானவை, இலக்கியச் சான்றுகளாக முதன்மைப்படுத்தியவை ஆகும்.
- அண்மைக் காலத்தில் இருவேறுபட்ட வரலாற்று மூலங்களை அடிப்படையாகக் கொண்ட வகையில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## இலங்கையில் இந்து மத வரலாறு

அனுராதபுரக் காலம்

- இலங்கை வரலாற்றில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி அனுராதபுரக் காலம் எனக் கொள்ளப்படும்.
- தேவநம்பிய தீசனின் காலம் முதல் 5 ஆம் மகிந்தனின் ஆட்சிக்காலம் வரையான காலப் பகுதியாக இது உள்ளது.
- வட இந்தியாவில் மௌரியர் ஆட்சியின்போது மகிந்த தேரரினால் பௌத்தம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. பின்பு அது அரச மதமாக வளர்ச்சி பெற்றது.
- இவ்வாறு, இலங்கை வரலாற்றில் பௌத்த சமயம் அரச ஆதரவுடன் வளர்ச்சி பெறத் தொடங்கிய காலமாக அனுராதபுரக் காலம் அமைகிறது.
- பௌத்த சமய நம்பிக்கைகளுடன் இந்து சமய மரபுகளும் வளர்ச்சியடைந்த காலம் என்ற வகையில் இலங்கையின் இந்து சமய வரலாற்றில் அனுராதபுரக் காலத்திற்கு தனித்துவமான இடமுண்டு.
- அனுராதபுரக் காலப்பகுதியில் இந்து சமயமானது தனித்துவமான நிலையிலும், பௌத்த சமய மரபுகளுடன் இணைந்த வகையிலும் வளர்ச்சியடைந்தது.
- அனுராதபுரக் கால இந்து சமய வளர்ச்சியில் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் நிலை, சமய மறுமலர்ச்சி என்பன அதிக செல்வாக்குச் செலுத்தின.

- இந்நிலையில் இந்து சமய நம்பிக்கைகள் பௌத்த சமயத்தினுள் உள்வாங்கப்பட்டன.
- தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் நிலை, சமய மறுமலர்ச்சி என்பன இலங்கையில் இந்து சமயம் தனது நிலையில் வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பாக அமைந்தன.
- எனவே இலங்கையின் இந்து சமய வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வதற்கு இலங்கையில் கிடைக்கும் சான்றுகளுடன், தமிழகத்து வரலாற்றுச் சான்றுகளும் தொல்பொருட் சான்றுகளும் இலக்கியச் சான்றுகளும் உதவுகின்றன.
- இலங்கை மன்னர்கள் பௌத்த சமயத்தைத் தழுவிய போதிலும் இந்து சமய வளர்ச்சிக்கு தமது ஆதரவை வழங்கினர்.
- 2 ஆம் மகிந்தன், 2 ஆம் சேனன், எல்லாளன், துட்டகைமுனு போன்ற மன்னர்களின் காலத்தில் இந்து சமய நம்பிக்கைகள் நன்னிலையில் இருந்ததாக அறிய முடிகிறது.
- சிங்கள மன்னர்கள் தமது அரண்மனைகளில் வைதிகச் சடங்குகளை ஆற்றுதல், இந்து ஆலயங்களை வழிபடுதல், புரோகிதர்களுக்குத் தானங்களை வழங்குதல் என்று இந்து சமயத்துடன் தமது தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.
- இலங்கை மன்னர்கள் வைதிகச் சடங்குகளால் தம்மைத் தூய்மைப்படுத்தியமை பற்றி சீன யாத்திரிகனாகிய பாகியன் குறிப்பிடுகிறான்.
- மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி இலக்கியங்கள் சிங்கள மன்னர்கள் இந்து ஆலயங்களைப் புனர்நிருமாணம் செய்தமை, கதிர்காமம் போன்ற ஆலயங்களை வழிபட்டமை போன்ற செய்திகளைத் தருகின்றன.
- இந்து சமயப் புரோகிதர்கள் அரண்மனைகளில் வேள்விகளை ஆற்றுதல், பூர்வ அபரக் கிரியைகளைச் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டனர்.

## இந்து சமயத் தெய்வங்களும் கோயில்களும்

- இந்து சமயத்தில் வழிபடப்பட்ட் தெய்வங்கள் தொடர்பான ஆதாரங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.
- சிவன், விஷ்ணு, முருகன், கணபதி போன்ற தெய்வங்கள் இக்கால மக்களால் வழிபடப்பட்டதாக அறிய முடிகிறது.
- சிவபாலித, சிவரக்கித, விணு, கோபால, வேல, வேலச, கண, கணகுட்டச என்ற தொடர்கள் மேற்கூறிய தெய்வங்கள் தொடர்பாகக் கிடைக்கின்ற பிராமிக் கல்வெட்டுச் சான்றுகளாகும்.
- இந்துத் தெய்வங்கள் தொடர்பான வேறு பல சான்றுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.
    - கி.பி. 1 ஆம் நூற்றாண்டில் இலங்கை மக்கள் சிவ வழிபாட்டை உடையவர்களாக இருந்தனர் என்று தொலமி கூறியுள்ளமை.
    - அனுராதபுர அழிபாடுகளுக்கு மத்தியில் இந்துத் தெய்வங்களின் வெண்கலப் படிமங்கள் கிடைக்கப் பெற்றமை.
    - இசுறுமுனியாவில் உள்ள “காதலர் சிற்பங்கள்“ சிவன், பார்வதி ஆகியோரின் வடிவங்கள் என்பர்.
    - கடலாதெனிய, லங்காதிலக விகாரைகளின் கோட்டங்களில் குமரக்கடவுளுக்கான தனிக் கோட்டம் உண்டு அதேபோன்று ஏனைய கோட்டங்களிலும் விஷ்ணு, அம்மன், முதலிய தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

- இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இந்துத் தெய்வங்களுக்கு ஆலயங்கள் பல காணப்பட்டன.
- இந்துக் கோயில்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மட்டுமன்றி, நாட்டின் தென்பகுதிகளில் பௌத்த மக்கள் வாழ்ந்த பிரதேசங்களிலும் சிறப்புற்று விளங்கின.
  - கதிர்காமம் முருகன் ஆலயத்தை துட்டகைமுனு வழிபட்டமை.
  - தேவேந்திரமுனையில் உப்புலவன் ஆலயம் சிறப்புற்றிருந்தமை.
  - வசபக் குளத்தின் அருகில் பிள்ளையார் ஆலயம் இருந்தமைக்கு அவ்வாலயத்தின் அடித்தளம் கண்டுபிடிக்கப்பட்டமை.
  - திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற சிவாலயங்கள் புகழ் பெற்று விளங்கியமை.

  என்பன போன்ற ஆதாரங்களை இங்கு குறிப்பிட முடியும்.
- திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற சிவாலயங்கள் சம்பந்தர், அப்பர் முதலான நாயன்மார்களால் தேவாரத் திருமுறைகளில் புகழ்ந்து பாடப்பட்ட பெருமை பெறுவன.

**இலங்கையில் இந்துசமய வரலாறு - பொலநறுவைக்காலம்**

- பொலநறுவையில் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இந்து மரபுசார் கோயில் வழிபாடு, சமயச் சடங்குகள் என்பன வளர்ச்சி கண்டன.
- இந்திய, தமிழக அரசியல் பண்பாட்டு மாற்றங்கள் இலங்கையின் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தின.
- சோழ மன்னர்களின் பேரரசு விரிவாக்கத்தை அடுத்து இலங்கையும் சோழர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.
- இராஜராஜனை அடுத்து அவன் மகன் இராஜேந்திரன் கி.பி. 1017 இல் நாடு முழுவதையும் தமது ஆதிக்கத்தில் கொணர்ந்தான்.
- இலங்கை - மும்முடிச்சோழ மண்டலம் எனவும், பொலநறுவை - ஜனநாதமங்களம் எனவும் அழைக்கப்பட்டன. சோழ அரசர்களின் பிரதிநிதி - சோழ இலங்கேஸ்வரன் எனப்பட்டான்.
- மகாவம்சம், சூளவம்சம், ராஜவலிய, பூஜாவலிய போன்ற இலக்கியங்கள் மூலமும் கட்டிடங்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள் முதலானவற்றின் மூலமும் புதைபொருட் சின்னங்கள் வாயிலாகவும் பொலநறுவைக் கால இந்து சமய வளர்ச்சியைப் பற்றி அறிய முடியும்.
- தமிழகத்துடன் இலங்கை கொண்ட தொடர்பு காரணமாக பொலநறுவையிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இந்துப் பண்பாடும், சைவநெறியும் பெரு வளர்ச்சி கண்டன.
- பொலநறுவைப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 16 இந்துக் கோயில்களுள் சிவன் கோயில்கள் 10, விஷ்ணு கோயில்கள் 5, காளி கோயில் ஒன்றாகும்.
- சிவன் கோயில்களுள் வானவன் மாதேவீஸ்வரம் இராஜேந்திரனால் கட்டப்பட்டதாகும்.
- கந்தளாய், மண்டலகிரி, பதவியா, மாதோட்டம், திருகோணமலை போன்ற இடங்களில் இந்து சமய மரபுகள் வளர்ச்சி பெற்றன.

- இந்து, பௌத்த அரசர்கள் மற்றுக் வணிகக் குழுக்கள், படைத்தளபதிகள் என்போர் இந்துக் கோயில்களை அமைத்ததுடன் பூசைகளும் ஏனைய காரியங்களும் முறையாக நடைபெற தானங்கள், கொடைகளை வழங்கினர்.
- சிவன் கோயில்கள் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், வீதிகள், பரிவாரக் கோயில்கள் எனும் பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளன.
- திருக்கோணேஸ்வரம், விக்கிரம சோழேஸ்வரம், உத்தம சோழேஸ்வரம், பண்டித சோழேஸ்வரம் போன்ற ஆலயங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளில் வளர்ச்சி கண்ட இந்து கோயில்களாகும்.
- குருநாகல் கல்வெட்டு "விக்கிரம சாளமேகேஸ்வரம்" பற்றியும் மெடிரிகிரியா கல்வெட்டு இராஜேந்திரன் காலத்தில் புகழ்பெற்ற " பண்டித சோழேஸ்வரம் " பற்றியும் குறிப்பிடும்.
- திருக்கேதீஸ்வரத்தில் புதிய கோயில் அமைத்து அதற்கு "இராஜராஜேஸ்வரம்" எனப் பெயரிட்டனர்.
- 2 ஆம் விக்கிரமபாகு முதலான சிங்கள மன்னர் பணிகளால் இக் கோயில்கள் சிறப்படைந்தன.
- குளக்கோட்டனின் திருக்கோணேஸ்வர ஆலய நிர்மாண, புனர்நிர்மாணப் பணிகளை பல சான்றுகளால் அறியலாம். குளக்கோட்டன் இக்கோவிலை புனர்நிர்மாணம் செய்தமை, கந்தளாய்க் குளத்தை புனரமைத்தமை, திருமால், அம்மன் கோயில்களை அமைத்தமை, நிலங்களைத் தானமாக வழங்கியமை பற்றிக் கூறுகின்றன.
- தட்சண கைலாய புராணம் - "பா தாங்கும் கோயிலும் பொன் மண்டபமும்..... " எனும் பாடலில் திருக்கோணேஸ்வரத்தில் அவனது பணிகள் பற்றிக் கூறுகிறது.
- ஆலயங்களை அமைத்ததுடன் பூசைகளுக்கும் ஏனைய செயற்பாடுகளுக்கும் அரசர்கள் பல தானங்களை அளித்தனர்.
- தமிழகக் கோயில்களைப் போல இங்கும் ஆகம விதிப்படியான பூசைகள், தோத்திர பாராயணம் என்பனவற்றிற்கு ஒழுங்கு செய்தனர்.
- தாழிக்குமரன் திருக்கேதீஸ்வரத்தைப் புனரமைத்து அதன் தேவைகளுக்கென மாதோட்ட நகரத்து நிலத்தையும் தானமாக வழங்கினான்.
- நிலாவெளிச் சாசனம், திருக்கோணேஸ்வரத்திற்கு அதிக நிலம் தேவதானமாக விடப்பட்டமையைக் பற்றிக் கூறும்.
- பன்மகேஸ்வரர் என்பவர் திருக்கோணேஸ்வரத்து அறக்கட்டளையை மேற்பார்வை செய்தார்.
- அரசர்களால் மட்டுமன்றி, பிரதானிகள், வணிகக் கணங்கள் என்போராலும் கோயில்கள் அமைத்து நிருவகிக்கப்பட்டன.
- அக் காலத்தில் நானாதேசிகர், வீரவளஞ்சியர் முதலான வணிகக் கணங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன.
- சமூக முன்னேற்றத்திலும், கலாசார அபிவிருத்தியிலும் ஐந்நூற்றுவர் எனும் வணிகக் கணத்தின் பங்கு முக்கியமானது. ஆலயத்தை அமைத்தல், திருவுருவங்களை நிறுவுதல், மண்டபங்களை அமைத்தல் எனப் பல வகையில் அவர்களின் பணிகள் அமைந்தன.

- சாசனங்களில் ஐந்நூற்றுவர் மடம், ஐந்நூற்றுவர் மண்டபம் எனும் பெயர்கள் உண்டு.
- பதவியாக் கல்வெட்டு, காளி கணத்தவர் அமைத்த காளி கோயில் பற்றியும் அதன் நிருவாகம் பற்றியும் கூறும்.
- வேதாகம கிரியைகளை ஆற்றும் பிராமணர்கள் அக்காலத்தில் முக்கியமான இடத்தைப் பெற்றனர்.
- மிகிந்தலைக் கல்வெட்டு " ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம்" பற்றிக் கூறும். கந்தளாயில் அமைந்திருந்த பிராமணர் குடியிருப்பான "ராஜராஜன் சதுர்வேதி மங்கலம்" ராஜராஜன் காலத்தில் சிறப்படைந்தது. கோயில்களில் மட்டுமன்றி, அரண்மனைகளிலும் இந்து சமய மரபுகளும் பிராமணிய மரபுகளும் பேணப்பட்டன.
- அரசர்கள், அவர் தம் சுற்றத்தவர்களின் நாளாந்த வாழ்க்கை, சடங்குகள், கல்வி, கலைகள் என்ற பல துறைகளும் இந்து கலாசாரத்தின் செல்வாக்கைக் காட்டுவன.
- சோழ அரசர்களினதும், சிங்கள அரசர்களினதும் அரண்மனைகளில் இம் மரபுகள் வளர்ச்சி கண்டன.
  - சூளவம்சம் - விக்கிரபாகு புரோகிதர்கள் மூலம் வேள்விகளையும், இந்து சமயக் கிரியைகளையும் நடத்தினான் எனக் கூறும்.
  - மகாவம்சம் - "மானாபரணனின் அரண்மனையில் வேதங்களில் வல்ல புரோகிதரகள் ஓமம் வளர்த்து யாகம் செய்தார்கள்" எனக் கூறும்.
  - பராக்கிரமபாகு பிறந்த நாள் தொட்டு, வைதீகச் சடங்குகளை முறைப்படி பின்பற்றினான்.
  - பராக்கிரமபாகுவின் ஜாதக கருமம், கர்ண வேதனம், அன்னப்பிரசாதனம் என்பன வைதீக முறைப்படி ஆற்றப்பட்டன.
- பொலநறுவைக் கால இந்துக் கோயில்கள் கட்டிடக் கலை, சிற்பக்கலை, விக்கிரகக் கலை என்பனவற்றின் வளர்ச்சியைக் காட்டுவன.
- தமிழகத்தில் வளர்ச்சி அடைந்த திராவிடக் கலை மரபின் செல்வாக்கு இப்பிரதேசக் கோயில்களில் பிரதிபலிக்கின்றன.
- தமிழக ஆலயங்களைப் போல் அல்லாமல் அளவில் சிறிதாக இருப்பினும் திராவிடக் கட்டிடக் கலை அம்சங்களைக் கொண்டுள்ளன.
- கோயில்கள் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், முன் மண்டபம், பரிவாரக் கோயில்கள், விமானம் எனும் திராவிடக் கட்டடக் கலைக் கூறுகளைக் கொண்டுள்ளன. பொலநறுவைக் கோயில்களுள் 1 ஆம் சிவதேவாலயம் கலை ஆய்வாளர்களின் கவனத்தைக் கவருவன.
- இதன் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம் ஆகிய உறுப்புகள் தனித்தனியாக அமைக்கப்பட்டு பின்பே இணைக்கப்பட்டன.
- கருவறையின் அடித்தளம் முதல் சிகரம் வரையான பகுதி செம்மையான கற்பாளங்களால் அமைக்கப்பட்டுள்ளது.
- பொலநறுவைக் கோயில்களில் கல்லிலும், உலோகத்திலும் அமைந்த பல சிற்ப விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- 1907, 1908, 1960 போன்ற ஆண்டுகளில் பொலநறுவையிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் பல கடவுளர், நாயன்மார் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கடவுளர் படிமங்களுள் நடராஜர், சோமாஸ்கந்தர், பிரதோஷ மூர்த்தி என்பனவற்றையும், அடியவர் படிமங்களுள் - அப்பர், சம்பந்தர், சுந்தரர், காரைக்கால் அம்மையார் வடிவம் என்பனவற்றையும் கூறலாம்.
  - சோமாஸ்கந்த வெண்கலப் படிமத்தில் பீடத்தின் மேல் சிவன், உமை என்போர் காணப்படினும் முருகனின் வடிவம் தற்போது இல்லை.
  - திரிபங்க அமைதியில் உள்ள அப்பரின் படிமத்தின் இடுப்பும், கால்களும் சற்று வளைந்தவாறு காணப்படுகிறன.
  - காரைக்கால் அம்மையார் வடிவம் சேக்கிழார் சித்தரிக்கும் பேய் உருவைச் சித்தரிப்பதாக உள்ளது.

**இராஜதானிகளும் வரலாற்று மூலங்களும்**

- இலங்கையின் இந்து சமய வரலாற்றில் பொலநறுவைக் காலத்தைப் போலவே அதனை அடுத்து வந்த காலத்திலும் இந்து சமயத்தின் வளர்ச்சியைக் காணலாம்.
- பொலநறுவை இராஜதானியின் வீழ்ச்சியை அடுத்து, இலங்கை பல இராஜதானிகளாக பிளவுபட்டது.
- இலங்கையின் மேல் மாகாணத்தை மையப்படுத்தி கோட்டை இராஜதானியும் மத்திய மலைநாட்டை மையப்படுத்தி கண்டி இராஜதானியும் நாட்டின் வட பகுதியை மையமாகக் கொண்டு யாழ்ப்பாண இராஜதானியும் அமைந்திருந்தன.
- கி.பி. 13 தொடக்கம் கி.பி. 16 வரையான காலத்தில் மூன்று இராஜதானிகளாக இலங்கை பிரிந்து இருந்தது.
- இவ்வாறு ஆட்சி அதிகாரங்கள் வேறுபட்ட நிலையில் காணப்பட்டாலும் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் இந்து சமய நம்பிக்கைகள் வளர்ச்சி பெற்றன.
- கி.பி. 13 தொடக்கம் கி.பி. 16 வரையான காலத்தில் இந்து சமயம் பெற்ற வளர்ச்சி பற்றி அறிவதற்கு பல்வேறு வரலாற்று மூலங்கள் உதவுகின்றன.
- சிங்கள - தமிழ் மொழிகளில் அமைந்த கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் என்பன அவற்றுள் முக்கியமானவை.
- அவ்வகையில் குயில் விடு தூது, புறா விடு தூது, கிளி விடு தூது முதலான இலக்கியங்களைக் குறிப்பிடலாம்.
- திருக்கரசைப் புராணம், தட்சண கைலாய புராணம், கோணேசர் கல்வெட்டு, கைலாச மாலை போன்றன தமிழ் மொழி இலக்கியங்களுள் முக்கியமானவை.
- பிற நாட்டவர்களின் குறிப்புகளும் இக்காலம் பற்றி அறிவதற்கான வரலாற்று மூலங்களாக அமைவன.
- இந்துக்கள் வாழும் பகுதிகளில் மட்டுமன்றி, பௌத்த மக்கள் வாழும் பிரதேசங்களிலும் இந்து சமய நம்பிக்கைகள் வளம் பெற்ற வகையினை அறிந்து கொள்வதற்கு இவ்வகை வரலாற்று மூலங்கள் உதவுகின்றன.

## பௌத்த சமய மரபுகளும் இந்து சமயமும்

- இலங்கையின் மூவேறு இராஜதானிகளில் வெவ்வேறு மன்னர்கள் ஆட்சி செய்தாலும் அவர்களின் ஆட்சிக் காலங்களில் இந்து சமய மரபுகளும் வளம் பெற்றன.
- யாழ்ப்பாணத்தில் சிங்கை ஆரியன், பரராசசேகரன், செகராசசேகரன், சங்கிலி குமாரன், விஜய காலிங்கன் முதலான அரசர்களதும் ஏனைய பகுதிகளில் 1 ஆம் பராக்கிரமபாகு, 4 ஆம் பராக்கிரமபாகு, 6 ஆம் பராக்கிரமபாகு, 9 ஆம் பராக்கிரமபாகு, மாயாதுன்னை, 7 ஆம் விஜயபாகு, ராஜசிங்கன் போன்ற அரசர்களதும் ஆட்சி இடம் பெற்றது. அக் காலங்களிலும் இந்து சமயத்தின் வளர்ச்சியைக் காணலாம்.
- சிங்கள மன்னர்கள் பௌத்த சமயத்தைப் பின்பற்றினாலும் இந்து சமயத்திலும் நம்பிக்கை உடையவர்களாக விளங்கினர்.
- இலங்கையில் கோட்டை இராஜதானியாக விளங்கிய காலத்தில் நாட்டின் தென் பகுதியில் இந்து ஆலயங்களும், அவை சார்ந்த நம்பிக்கைகளும் நன்கு வளர்ச்சி பெற்றன.
- 1 ஆம் பராக்கிரமபாகு, 4 ஆம் பராக்கிரமபாகு, 6 ஆம் பராக்கிரமபாகு, 9 ஆம் பராக்கிரமபாகு, மாயாதுன்னை, 7 ஆம் விஜயபாகு போன்றவர்கள் இந்து சமயத்திற்கு அளித்த ஆதரவு, வழங்கிய நன்கொடைகள் என்பன பற்றி அறிய முடிகிறது.
- 6 ஆம் பராக்கிரமபாகு சிவன் கோயில்களுக்கும், முருகன் ஆலயங்களுக்கும் தானங்களை வழங்கினான்.
- தேநுவரை விஷ்ணு ஆலயம் பற்றிய செய்திகளை 2 ஆம் பராக்கிரமபாகுவின் கல்வெட்டு, குவெறோஸ் முதலான வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகள் போன்றவற்றில் காணலாம்.
- பூவை விடு தூது, அன்னம் விடு தூது போன்ற இலக்கியங்கள் கோட்டையில் அமைந்திருந்த முருகன் கோயில் தொடர்பான தகவல்களைத் தருகின்றன.
- சிங்கள மொழிக் கல்வெட்டு ஒன்று தெய்வேந்திர முனையில் நகரீசர், நாகர், கணேசர் முதலான தெய்வங்களுக்கு அமைந்திருந்த கோயில்கள் பற்றிக் கூறுகின்றன.
- முன்னேஸ்வரத்திற்கு 6 ஆம் பராக்கிரமபாகு, 9 ஆம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் செய்த பணிகள் பற்றி சிங்கள, தமிழ் மொழிகளில் அமைந்த கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

## வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்து சமய வளர்ச்சி

- நாட்டின் வடக்குப் பகுதியை மையமாகக் கொண்ட யாழ்ப்பாண இராச்சியத்தில் இந்து சமய நம்பிக்கைகள் நன்கு நிலை பெற்றிருந்தன.
- புவனேகபாகு மன்னன் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் அமைத்தமை பற்றிக் கைலாய மாலை குறிப்பிடுகிறது. யாழ்ப்பாண வைபவ மாலை விஜயகாலிங்க மன்னனின் சமயப் பணிகள் பற்றிக் கூறுகிறது.
- நல்லூர் தலைநகரமாக விளங்கிய காலத்தில் அதன் நான்கு திசைகளிலும் பல ஆலயங்கள் அமைக்கப்பட்டன.
- உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம், அரியாலை சித்தி விநாயகர் கோயில் போன்ற கோயில்கள் புகழ்பெற்று விளங்கின.
- கிழக்கிலங்கையில் திருக்கோணேஸ்வரம், கொக்கட்டிச்சோலை தான்றோன்றீஸ்வரம், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயம், திருக்கோயில் முருகன் கோயில் போன்ற ஆலயங்களும் இக்காலத்தில் புகழ்பெற்று விளங்கின.
- திருக்கோணேஸ்வரத்தின் சிறப்பினைக் கூறும் திருக்கோணசல புராணம் இக்காலத்திலேயே இயற்றப்பட்டது என்பர்.

## கிராமிய வழிபாடு

- ஆகமம், சிற்ப சாத்திர நெறி சாராத வழிபாடு எனக் கருதப்படும் கிராமியச் சடங்குகளின் வளர்ச்சியையும் அக்கால இலங்கையில் நாம் காணலாம்.
- கண்ணகி அம்மன், மாரியம்மன், நாச்சிமார், பெரியதம்பிரான் முதலான கிராமியத் தெய்வங்கள் அக்கால மக்களால் வழிபடப்பட்டன.
- இந்நம்பிக்கைகளின் தொடர்ச்சியை இன்றும் மட்டக்களப்பு, வன்னி, திருகோணமலை, மலையகம் போன்ற பிரதேசங்களில் காணமுடிகிறது.

## இலக்கிய வளர்ச்சி

- கண்ணகியின் வரலாற்றைப் பிரதேச வழக்குகளுடன் இணைத்துக் கூறும் கண்ணகி வழக்குரை, கோவலனார் கதை, சிலம்பு கூறல் போன்ற இலக்கியங்கள் தோன்றின.
- இந்து சமய நம்பிக்கைகள், இந்து ஆலய வழிபாடுகள் என்பன பற்றிக் கூறும் இலக்கியங்கள் பலவும் இக்காலப் பகுதியில் தோன்றின.
- சிங்கள மொழியில் தோன்றிய குயில் விடு தூது, புறா விடு தூது, கிளி விடு தூது முதலான இலக்கியங்கள் இந்து சமய நம்பிக்கைகள் பற்றிக் கூறுவன.
- இந்துக் கோயில்களினுடைய புகழ் கூறும் தலபுராணங்களும் தோற்றம் பெற்றன.
- உதாரணமாக திருக்கோணேஸ்வரத்தின் சிறப்பினைக் கூறுகின்ற திருக்கோணசல புராணத்தைக் குறிப்பிடலாம்.
  - கோணேசர் கல்வெட்டு, திருக்கரசைப் புராணம், கைலாய மாலை, சரசோதிமாலை போன்ற இலக்கியங்களையும் குறிப்பிடலாம்

## ஆசிரியச் சக்கரவர்த்திகள் காலம் (கி.பி.1216 -1621)

- சிவ சின்னமான நந்தியை ஆரியச் சக்கரவர்த்திகள் தங்கள் குலச் சின்னமாகக் கொண்டனர்.
- இராமேஸ்வரத்து சேது பதிகளோடு திருமண உறவு காரணமாக இவர்கள் தம்மை சேது காவலர் என அழைக்கலாயினர். எனவே சேது யாழ்ப்பாண அரச காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களிலும் நூல்களிலும் பொறிக்கப்பட்டன.

நல்லூர் கந்தசுவாமி கோயில், நல்லூர் கைலாசநாதர் கோயில், சட்டநாதர் கோயில், இணுவில் கருணாகரப்பிள்ளையார் கோயில், நாயன்மார்கட்டு அரசசேகரிப்பிள்ளையார் கோயில், அரியாலை சித்திவிநாயகர் கோயில் என பல பாகங்கிலும் கோயில்கள் எழுந்தன.

இலக்கியம் :

சமயம் : தட்சிணகைலாச புராணம்
வியாக்கிரதபாத புராணம்
கதிரமலைப் பள்ளு
கண்ணகி வழக்குரைக் காதை
கைலாய மாலை
கோணேசர் கல்வெட்டு
சரசோதி மாலை, இரகுவம்சம்,

சோதிடம் : செகராசசேகரம்

வைத்தியம் : பாராசசேகரம்

- வேதம், புராணம், ஆகமம், தத்துவ தரிசனம் ஆகியவற்றில் புலமை பெற்ற அரசர்களின் ஆதரவின் கீழ் நல்லூர் பிராமணர்கள் வாழ்ந்தமை.

## இலங்கையில் ஐரோப்பியர் காலம்

- இலங்கை வரலாற்றில் 16 ஆம் நூற்றாண்டில் இருந்து ஐரோப்பியர்களின் ஆட்சி தொடங்குகின்றது.
- 1948 ஆம் ஆண்டு வரை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என்ற அந்நியர்கள் இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தனர்.
- இக்காலப் பகுதிகளில் இலங்கை மக்கள் அவர்களுக்கு அடிமைப்பட்டதுடன் சுதேச சமயங்களும் வீழ்ச்சி அடைந்தன.
- ஐரோப்பியர்களின் ஆட்சிக் காலங்களில் கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து, கிறிஸ்தவம் போன்ற சமயங்களின் வருகையை அடுத்து சுதேச சமயம் குறிப்பாக சைவம் வீழ்ச்சி பெறத் தொடங்கியது.

## போர்த்துக்கேயர்களின் ஆட்சிக்காலம்

- போர்த்துக்கேயர்களின் ஆட்சிக் காலத்தில் சைவ சமயம் பெரு வீழ்ச்சி அடைந்தது.
- ஆலயங்களுக்குச் செல்லுதல், சைவ சமய ஆசாரங்களைக் கடைப்பிடித்தல், சைவ உணவு உட்கொள்ளுதல் என்பன சட்டப்படி தண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்பட்டன.
- இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்த இந்து ஆலயங்கள் போர்த்துக்கேயப் படைகளால் அழிக்கப்பட்டன.
- திருக்கேதீஸ்வரம், சீதாவாக்கை பெறண்டிக் கோயில், தெய்வேந்திரமுனை விஷ்ணு ஆலயம், முன்னேஸ்வரம் போன்ற கோயில்கள் போர்த்துக்கேயப் படைகளால் அழிக்கப்பட்டன.
- சைவ மக்கள் பலர் கட்டாயத்தின் பேரில் கத்தோலிக்கர்களாக மாற்றப்பட்டனர்.
- சைவ மக்கள் மறைவான இடங்களில் திரிசூலம் முதலான குறிகளை வைத்து தம் சமய அனுட்டானங்களை மேற்கொண்டனர்.
- சைவ சமயத்தவர்கள் தம் சமயாசாரங்களை மறைமுகமாகவே கடைப்பிடித்தனர்.

## ஒல்லாந்தர்களின் ஆட்சிக்காலம்

- இலங்கையில் போர்த்துக்கேயரை அடுத்து ஒல்லாந்தர்களின் ஆட்சி இடம்பெற்றது.
- கி.பி. 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகள் இலங்கையில் ஒல்லாந்தர்களின் ஆட்சிக் காலமாக அமைகிறது.
- ஒல்லாந்தர்கள் ஆரம்பத்தில் கடுமையான சமயக் கொள்கை உடையவர்களாக இருந்த போதிலும், பிற்கூற்றில் சுதேச சமயங்களுக்கு ஓரளவு சமயச் சுதந்திரம் அளித்தனர்.
- மட்டக்களப்பில் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்திலேயே இந்து ஆலயங்கள் பலவும் அழிக்கப்பட்டன.
- நல்லூர் கந்தசுவாமி ஆலயம், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் கோயில் போன்ற ஆலயங்கள் ஒல்லாந்தரின் ஆட்சியின் போதே புனர்நிர்மாணம் செய்யப்பட்டன.
- இக்காலப் பகுதியில் இந்து சமயம் சார்ந்த இலக்கிய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.
- பறாளை விநாயகர் பள்ளு, மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, நல்லைக் குறவஞ்சி போன்ற இந்து சமய இலக்கியங்கள் தோன்றின.

**ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம்**

- இலங்கை வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 20 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலமாக உள்ளது.
- இலங்கையர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்காக ஐரோப்பாவில் இருந்து சமயக் குழுக்கள் வரவழைக்கப்பட்டன. இலங்கைக்கு வந்த அமெரிக்கன் மிஷன், வெஸ்லியன் மிஷன், மெதடிஸ்த மிஷன் போன்ற சமயக் குழுக்கள் ஆங்கிலக் கல்வியைப் போதித்ததுடன், கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் சமய நிறுவனங்களாகவும் செயற்பட்டன.
- கிறிஸ்தவ சமயக் குழுக்கள் கல்வி வசதி, வேலை வாய்ப்பு, சமூக நலப்பணிகள் போன்ற வழிமுறைகள் மூலம் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பின. கிறிஸ்தவ சமயக் குழுக்களின் செயற்பாடுகளுக்கு ஆங்கிலேய அரசாங்கமும் உறுதுணையாகச் செயற்பட்டது.

  (ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலத்துடன் இணைத்துக் கற்பிக்கவும்.)

**பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி**

- சூழ்நிலை, அரசியல், பொருளாதார, சமய, கல்வி நிலைகள்.
- ஆங்கிலேயர் ஆட்சியில், ஆங்கிலக் கல்வியும் அரச உத்தியோகமும் அளித்து, சைவ சமயத்தவர்களைத் தமது மதமாற்றக் கொள்கைக்கு உட்படுத்தினர்.
- கிறிஸ்தவ மிஷனரிமார்களிடம் தங்களது கல்விக் கொள்கையைக் கையளித்தனர்.
- கிறிஸ்தவ சமயம் பரம்பலைத் தடுக்கவும், சைவ சமயத்தை வளர்க்கவும் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் பல சைவ சமயப் பெரியார்கள் தோன்றினர்.
- **சைவ சமய முயற்சிகள்**
- **பிரசங்கம் செய்தல்**

  பிரசங்கப் பொருள் - கடவுள், திருவிழா, நிலையாமை, மகளிர் ஒழுக்கம், கூடாவொழுக்கம்

  பிரசங்கம் செய்தோர் - ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர், கொக்குவில் சபாரத்தின முதலியார், நீர்வேலி சங்கரபண்டிதர், சி. வை. தாமோதரம்பிள்ளை, த. கைலாசபிள்ளை
- **கண்டனம் செய்தல்**
  1. கிறிஸ்தவ கண்டனம் செய்தல் – கண்டனம் பிரசங்கங்களாகவும், கண்டன நூல்கள் மூலமும் துண்டுப் பிரசுரங்களின் மூலமும் நிகழ்த்தப்பட்டன
  2. சுதேசிய கண்டனம் செய்தல்

     (i) பொருள் - பலியிடல், ஆகமப் பிறழ்வு, மகளிர் ஒழுக்கம், ஆகமவிதி, அந்தணர் ஒழுக்கம்.

     (ii) கண்டனம் செய்தோர் - நாவலர், காசிவாசி செந்திநாதையர் மேலைப்புலோலி நா. கதிரவேற்பிள்ளை

- **சைவ சமய நிறுவனங்கள்**
  - (i) சைவப் பிரகாச சபை
  - (ii) சைவப் பிரகாச சமாஜம்
  - (iii) சைவப் பரிபாலன சபை
- **பாடசாலைகள் அமைத்தல்**
  - அமைவிடம் -யாழ்ப்பாணம், வேலணை, புலோலி, வண்ணார்பண்ணை, ஏழாலை, கந்தர்மடம், நீர்வேலி, சாவகச்சேரி
  - வித்தியாசாலையின் பெயர்கள் - சைவப்பிரகாசம், நாயன்மார்கள் பெயர், சந்தானகுரவர் பெயர் முதலானவற்றைக் கொண்டிருத்தல்.
  - வித்தியாசாலைகளில் கலைத்திட்டங்கள் பேணப்பட்டன. வகுப்பு - முதல் எட்டு வகுப்புகள் இருந்தன.
  - கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல் முதலான பாடங்களும் கற்பிக்கப்பட்டன. ஆங்கில மொழி போதிக்கப்பட்டது.
  - முகாமைத்துவம் - நிறுவனங்களின் கீழும், தனிப்பட்டோரிடமும் இருந்தன.
  - கல்வியின் நோக்கம் - நல்லொழுக்கம், சமயம் என்பவற்றை வளர்த்தல்.
  - பாடநூல்களை எழுதுதல் - பாலபாடங்கள் எழுதுதல், நூல்களுக்கு உரை எழுதுதல், வசன நூல்கள் எழுதுதல்.
  - ஆசிரியர்கள் - ஆறுமுகநாவலர், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார்
  - சைவாங்கில பாடசாலைகளை நிறுவுதல்.

    உ-ம்:- (i) சைவாங்கிலப் பாடசாலை
    (ii) யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
    (iii) உரும்பிராய் இந்துக்கல்லூரி
    (iv) காரைதீவு இந்துக்கல்லூரி
- நாட்டின் பல பிரதேசங்களில் கதிரேசன் கோயில்கள், சிவன், விநாயகர், அம்மன் முதலான தெய்வங்களுக்கும் பெருங்கோயில்கள் எழுந்தன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த கோயில்கள் இக்காலத்தில் பெருங்கோயிலாகவும், உற்சவங்களையும் பல்வேறு விழாக்களையும் கொண்டதாகவும் விளங்கின.
- இந்த நூற்றாண்டில் மலையகத்தில் தமிழ் மக்கள் குடியேறினர். அதனால் முத்து மாரியம்மன் வழிபாடு அப்பகுதியில் சிறப்புப் பெற்றது.
- நாட்டார் தெய்வங்களுக்கு வெளிப்படையான சடங்குகள் நடைபெற்றன.
- வன்னிப் பிரதேசத்தில் கண்ணகியம்மன், நாகதம்பிரான் முதலான தெய்வங்கள் முக்கியத்துவம் பெற்றன.
- மட்டக்களப்பு பிரதேசத்தில் கண்ணகியம்மன், திரௌபதையம்மன் வழிபாடுகள் முக்கியத்துவம் பெற்றன.
- சைவாலயங்கள் மீது பல பிரபந்தங்கள் பாடப்பட்டன.
- பிரபந்த வடிவில் காவியங்களும் பாடப்பட்டன

- **அச்சியந்திரசாலை நிறுவுதல்**
    - பணி - துண்டுப்பிரசுரங்களை வெளியிடல்
      பாடநூல்களை வெளியிடல்
      ஏட்டுச் சுவடிகளை அச்சேற்றல்
      உரை நூல்களை வெளியிடல்
      வசன நூல்களை வெளியிடல்
      பத்திரிகைகளை வெளியிடல்
      பிரபந்த நூல்களை வெளியிடல்
    - அச்சியந்திரங்கள் அமைந்த இடங்கள்:
      வண்ணார்பண்ணை, அச்சுவேலி, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வேலணை, நீர்வேலி, சாவகச்சேரி.
    - அச்சியந்திர வருகையால் பத்திரிகை வெளியிடல்:
      இலங்கை நேசன், இந்துசாதனம் (Hindu Organ) (1889), சைவ உதயபானு (1880)
    - இலங்கை அரசியலில் சைவர்களின் வகிபாகம்
      உ:ம் : சேர். பொன். இராமநாதன்

**இருபதாம் இருபத்தோராம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி**

- சூழ்நிலை, அரசியல், பொருளாதார, சமய, கல்வி நிலைகள்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைத் தொடர்ந்து சுவாமி விபுலாநந்தர், சேர். பொன். இராமநாதன், சிவபாதசுந்தரனார், சேர். பொன். அருணாசலம் அருணாசலதேசிகர், காசிவாசி செந்திநாதையர், கைலாசநாதக்குருக்கள் என்று பலர் சைவசமய மறுமலர்ச்சிக்காகப் பணிபுரிந்தனர்.
- சைவ சமய வளர்ச்சி நிறுவன ரீதியாக ஏற்படுத்தப்பட்டமை.
  உ-ம்:- (i) விவேகானந்த சபை (1902)
  (ii) சைவ வித்தியா விருத்திச் சங்கம் (1922)
  (iii) இராம கிருஷ்ண மிஷன்
  (iv) அகில இலங்கை இந்துமாமன்றம் (1955)
  (v) சைவ மங்கையர் கழகம் (1930)
  (vi) சிலாபம் இந்து வாலிபர் சங்கம்
  (vii) யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை - 1988

- **பிரசங்கம்**

  தங்கம்மா அப்பாக்குட்டி தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளுக்குச் சென்று நடத்தியமை.

- **கதாப்பிரசங்கம்**
  - சமய அறிவை சாதாரண மக்களுக்கு மிகவும் எளிய முறையில் விளக்கப் பயன்படுவதாகும். உ-ம்:-

    (ii) குப்பிளான் செல்லத்துரை

    (iii) அளவெட்டி அருட்கவி சீ. விநாசித்தம்பி

    (iv) திருகோணமலை பண்டிதர் வடிவேல்

    (v) கல்முனை சிவ அன்பு
  - சச்சிதானந்த யோகிகள் தமிழ்நாடு வரை புகழ் பெற்றவர்.
  - கதாப்பிரசங்கத்திற்கு சங்கர சுப்பையர் சிறப்பானவர் எனப் புகழ் பெற்றவர்.
  - ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக பரமாசாரிய சுவாமிகள் தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் கதாப்பிரசங்கம் செய்தார்.

- **பத்திரிகைகள்**

  உ-ம்:- (i) சைவ சித்தாந்த பானு (1924)

  (ii) விவேகானந்தன் (1925)

  (iii) சிவதொண்டன் (1935)

  (iv) சைவக் காவலன் (1960)

  (v) மெய்கண்டார்நெறி (1972)

  - கோப்பாய் சபாபதி நாவலர் சென்னையில் சித்தாந்த வித்தியானுபாலன் எனும் அச்சகத்தை நிறுவி ஞானாமிர்தம் எனும் பத்திரிகையை வெளியிட்டமை.
  - சித்தாந்த தீபிகை எனும் ஆங்கிலச் சஞ்சிகையை ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை நடத்தியமை.

- **பாடசாலைகள் நிறுவப்பட்டமை**

  உ-ம்:- (i) கொழும்பு விவேகானந்த வித்தியாலயம்

  (ii) இரத்மலானை இந்துக் கல்லூரி

  (iii) வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலயம்

  (iv) சிலாபம் மருதங்குளம் சைவப் பிரகாச வித்தியாசாலை

  - சுதந்திரத்தின் பின் சைவ சமய நிறுவனங்கள் மூலம் சமயம் வளர்க்கப்பட்டது.

    உ-ம்:- அகில இலங்கை இந்துமாமன்றம் (1955)

- **பணிகள்**
  - சைவ சமயக் கல்வி அரசின் அங்கீகாரத்துடன் பாடசாலையில் கற்பிக்கப்பட்டது.
  - சைவ சித்தாந்த சமாசம் (1905) நிறுவியமை.
  - வேலணையில் நடைபெற்ற திருமுறை விழா (1955)
  - வேத சிவாகம பாடசாலைகள் நிறுவப்பட்டன.

    உ-ம்: - உடுவில் - சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோயிலுக்கு அருகில் உள்ளது.

- நாட்டுக்கோட்டை நகரத்தார் பணி
  உ-ம்: யாழ்ப்பாணம், புத்தளம், காலி
- சைவப் பிள்ளைகள் பயில்வதற்கென தனியான கல்லூரிகளும், சைவ அநாதை இல்லங்களும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் நடத்தப்பட்டமை.
- 1960 ஆம் ஆண்டு 180 தனியார் பாடசாலைகளை நிறுவனங்கள் பொறுப்பேற்றன.
- நிறுவனங்களினால் நிறுவப்பட்ட பாடசாலைகள் சைவ ஆசார அனுஷ்டான பயிற்சி நிலையங்களாக விளங்கின.
- வெளிநாட்டினரும் இலங்கைக்கு வந்து சமய, சமூகப் பணிகளைப் புரிந்துள்ளனர். உ - ம் : சுவாமி தந்திரதேவா
- ஆங்கிலத்தில் சைவக் கொள்கை
- எச். டபிள்யு. சோமறஸ் (ஜேர்மனி) என்பவர் சைவசித்தாந்தம் எனும் தலைப்பில் ஜேர்மன் மொழியில் நூலை (1912) எழுதியமை
- திருவாசகத்தை (1900) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை
- திருமதி. இரத்தினா நவரத்தினம் 256 பக்கங்களைக் கொண்ட திருவாசக விளக்கம் ஆங்கிலத்தில் எழுதியமை

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

படி I : இலங்கையில் இந்து மத வரலாறு என்னும் தலைப்பின் கீழ்வரும் ஒரு பகுதியைத் தெரிவு செய்து மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் அதனை முன்வையுங்கள்.

படி II : இலங்கையில் ஆரம்பகாலம் முதல் 20 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதியில் இந்து சமயத்தின் வளர்ச்சி தொடர்பான கவல்களைத்திரட்ட பொருத்தமான நூல்களை வழங்குங்கள்.

படி III : மாணவர்களை பல குழுக்களாகப் பிரித்து, காலங்களுக்கு ஏற்ப தகவல்களைத் திரட்ட வழிப்படுத்துங்கள் உ-ம்: அனுராதபுரம், பொலநறுவைக் காலம்)

- திரட்டிய தகவல்களைத் தொகுத்து, குழுவில் ஒருவர் வீதம் வந்து வகுப்பில் முன்வைக்குமாறு கூறுங்கள்.
- தகவல்களைக் குறிப்புகளாகத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

**மேலதிக வாசிப்புக்கானவை:**

| | | |
|---|---|---|
| இலங்கையில் இந்து மதம் | - | பேராசிரியர் சி. பத்மநாதன் |
| சிந்தனை (சஞ்சிகை) | - | யாழ். பல்கலைக்கழக வெளியீடு - |
| கோணேஸ்வரம் | - | பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் குணசிங்கம் |
| ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சி | - | க.செ. நடராசா |
| ஈழத்து தமிழ் நூல் வரலாறு | - | எப்.எகஸ். நடராசா |

**தேர்ச்சி 5.0 : இலங்கையில் இந்து சமயத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் பண்பாட்டுச் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பளிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.1** : இலங்கையில் உள்ள இந்துக் கோயில்களது வரலாறு, பண்பாடு பற்றி அறிந்து விளக்கிக் கூறுவார்.

**பாடவேளைகள்** : 30

**கற்றற் பேறுகள் :**

- இலங்கையிலுள்ள இந்துக் கோயில்களில் மிகப் பழமையான ஆலயங்களும் உண்டு என்பதை ஆதாரங்கள் மூலம் முன்வைப்பார்.
- தரப்பட்ட கோயில்களின் வரலாறு, பண்பாடு தொடர்பான விடயங்களைத் தேடித் தொகுப்பார்.
- மேற்படி கோயில்கள் பற்றிய தகவல்களைப் பாதுகாக்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டறிந்து, அவற்றைப் பாதுகாக்க முன்வருவார்.
- ஆகம, சிற்ப சாத்திர விதிகளுக்கு உட்பட்ட ஆலயங்களில் வழிபாட்டு முறை பற்றி எடுத்துரைப்பார்
- சோழர் ஆண்ட காலத்தில் பொலநறுவையில் கட்டப்பட்ட சிவாலயங்களின் சிறப்புக்கள் தொடர்பாகக் கருத்துரைப்பார்.
- இவ்வாலயங்களின் மகோற்சவக் கிரியைகள், விழாக்கள் தொடர்பாக எடுத்துரைப்பார்.
- இவ்வாலயங்கள் மீது பாடப்பட்ட நூல்கள் மற்றும் விசேட தனிச்சிறப்புக்களை விளக்குவர்.
- ஆலயம் பற்றிய பாடல்களை இசையுடன் பாடுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

இலங்கையில் இந்துக் கோயில்களின் வரலாறும் பண்பாடும்

அறிமுகம்

- ஆலயம், கோயில் என்பவற்றின் பொருள் விளக்கம்:
  - ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயப்படும் இடம் என்பது பொருளாகும்.
  - கோயில் என்பது கோ + இல் எனப் பிரிந்து, கோ - என்பது பதி எனவும், இல் - என்பது இடம் எனவும் பொருள் தந்து ஆன்மாக்களின் தலைவன் வீற்றிருக்கும் இடம் எனப் பொருள் தரும்.
- வழிபாட்டிற்கும் ஆலயத்துக்கும் உள்ள தொடர்பு
- ஆகம, சிற்ப சாத்திர விதிகளுக்கு உட்பட்ட ஆலயங்களில் வழிபாட்டு முறை
- ஆலய அமைப்பு
- ஆலயமும் கிரியைகளும்
- சமூகமும் ஆலயமும்
  - **திருக்கோணேச்சரம்**
  - **திருக்கேதீச்சரம்**
  - **கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்**
  - **முன்னேஸ்வரம்**
  - **நகுலேஸ்வரம்**
  - **பொலநறுவைக் கோயில்கள்**
  - **பொன்னம்பலவாணேச்சரம்**

**திருக்கோணேச்சரம்**

**ஆலய அமைவிடம்**

- இலங்கையின் கிழக்குக் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள மலைத்தொடர்களையும்
- இயற்கைத் துறைமுகத்தையும் கொண்டுள்ள திருகோணமலையில் கடலினுள்ளே நீண்டு
- உயர்ந்து நிற்கும் குன்றில் ஆலயம் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

**புராண இதிகாசங்களில் இவ் ஆலயம் பற்றிய தகவல் உண்டு**

- நாயன்மார்களால் பதிகம் பாடப்பட்ட சிறப்புக்குரியது.
- பல்லவ சோழ மன்னர் கால வரலாற்றுச் சிறப்புப் பெற்றது.
- இவ்வாலயம் கி.மு.1300 ஆண்டிற்கு முற்பட்டது என ஈழத்து சிவாலயம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

**வரலாறு தொடர்பான நூல்கள்**

- இதிகாசபுராணங்கள்
- திருக்கோணணேசர் தலபுராணம்
- திருகோணமலை அந்தாதி
- பெரியபுராணம்
- தட்சிண கைலாய புராணம்
- தட்சண கைலாய மான்மியம்
- மகாசம்சம்

**மன்னர்கள் பணி**

- வாராம தேவன் தீருப்பணிகள்
- குளக்கோட்ட மன்னன் இவ்வாலயத்திற்கு குளம் கட்டினான்
- ஆலய திருப்பணிக்கு நிலம் வழங்கினான்
- இலங்கையை ஆண்ட பௌத்த மன்னர்களும் ஆலய வளர்ச்சிக்கு பங்காற்றினார்

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

- மூர்த்தி - திருக்கோணநாதர்
- அம்பாள் - மாதுமையாள்
- தீர்த்தம் - பாவநாசம்
- தலவிருட்சம் - ஆல்

**விழாக்கள்**

- நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன, மகோற்சவ விழா சிறப்பாக நடைபெறுகின்றது. நவராத்திரி தினத்தில் ஸ்ரீ சக்கர பூசை விசேடமானது

**சமூக மேம்பாடு**

- இனமத வேறுபாடின்றி ஆலய விழாக்களில் கலந்து கொள்ளல், விரதம் இருத்தல், ஆலயத் தொண்டு செய்தல், அன்னதானம் செய்தல், அடியார் வழிபாடு.

**திருக்கேதீச்சரம்**

ஆலய அமைவிடம்

- மன்னாருக்கு சமீபத்தில் மாதோட்டம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. புராதன காலத்தில் மஹாதுவட்டாபுரம் என அழைக்கப்பட்டது.

**வரலாற்றுச் சிறப்பு**

- இதிகாச புராண காலங்களில் இவ்வாலயம் பற்றிய குறிப்புக்கள்.
- சம்பந்தர் சுந்தரமூர்த்தி நாயனாரால் பதிகம் பாடப்பட்ட சிறப்பு கொண்டது.
- பல்லவ சோழ மன்னர் காலங்களில் சிறப்புப் பெற்றது மகாதேவன் கோயில் என அழைக்கப்பட்டது.

**வரலாறு தொடர்பான நூல்கள்**

- இதிகாச புராணங்கள்
- மகாவம்சம்
- தாடாவம்சம்
- தேவாரப் பதிகம்
- தட்சிணகைலாய மான்மியம்
- பெரியபுராணம்

**மன்னர்கள் பணி**

- இராசேந்ததிர சோழனால் புனருத்தாரணம் செய்யப்பட்டது
- இலங்கை ஆண்ட பௌத்த மன்னர்கள் ஆதரவு

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

- மூர்த்தி - திருக்கேதீஸ்வர நாதர்
- அம்பாள் - கௌரி அம்பாள்
- தீர்த்தம் - பாலாவி
- தலவிருட்சம் -வன்னி

**விழாக்கள்**

- நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன, மகோற்சவ விழாவில் ஐந்து தேர்கள் வலம் வருகின்றன. சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறுகின்றது.

**சமூக மேம்பாடு**

- மடங்கள் அமைத்து உண்டி உறையுள் வழங்குதல்
- சமய சொற்பொழிவுகள் இடம்பெறல்
- அன்னதானம் வழங்கல்
- திருமுறை ஓதுதல்

**கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்**

ஆலய அமைவிடம்

- மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்மேற்குப் பகுதியில் கொக்கட்டிச்சோலை எனும் இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

- கிழக்கிலங்கையில் தேசத்துக் கோயில்களில் ஒன்று
- வேடுவர்கள் கொக்கட்டி மரத்தை வெட்டும்போது அதில் இருந்து இரத்தம் கசிந்தது ஏனையவர்களுடன் சேர்ந்து அவ்விடத்தைப் பார்த்தபோது மரத்தடியில் தானாகத் தொன்றிய சிவலிங்கம் காணப்பட்டது. அவ்விடத்தில் வேறுவர்கள் பந்தர் அமைத்து பூசை செய்து வந்தனர் என்பது ஐதீகம்.
- இந்தியாவில் இருந்து கதிர்காம யாத்திரை வந்த கொக்கட்டியார் என்னும் அடியவர் சமாதிகூடி இருந்த இடத்தில் சிவலிங்கம் தோன்றியதாக அப்பிரதேச மக்களிடையே ஐதீகம் உள்ளது.
- கல்நந்தி புல் உண்ட சிறப்புக்குரியது

**வரலாறு தொடர்பான நூல்கள்**

- மட்டக்களப்பு மான்மியம்
- கல்வெட்டு நூற்பிரதி
- மரபுவழிப் பாடல்கள
- புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பாடி இரு நூல்கள்

**மன்னர்கள் பணி**

குளக்கோட்டன் கோயில் வளர்ச்சிக்காக திருப்பணி ஆற்றியதுடன் பூசைகளுக்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டான். குளக்கோட்டன் பற்றிய கல்வெட்டு ஒன்று மேன்மை தான்தோன்றி லிங்கம் வெற்றி புனை...... என்று குறிப்பிடுகின்றது.

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

- மூர்த்தி - கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் (மூல விக்கிரகம் வெயியே தெரியாதபடியால். மேலே உமாமகேஸ்வரர் விக்கிரகம் தாபிக்கப்பட்டுள்ளது.
- அம்பாள் - பார்வதி அம்மையார்
- தீர்த்தம் - கோயிற் திருக்கேணி
- தலவிருட்சம் - கொக்கட்டிமரம்

**விழாக்கள்**

நித்திய நைமித்திய கிரியைகள் நடைபெறுகின்றது, பூசை செய்பவர் சங்கமர் எனப்படுவர். மகோற்சவ விழாவில் சிறப்பாக நடைபெறுகின்றது கிழக்கில் தேரோடும் கோயில் என்ற சிறப்புக்குரியது.

**சமூக மேம்பாடு**

- திருவிழாக் காலங்களில் மட்டுமன்றி மடங்களில் அன்னதானம் நடைபெறுகின்றது
- பாடசாலை மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள் நடைபெறுதல்
- செயலமர்வுகள் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடாத்துதல்

**முன்னேஸ்வரம்**

**ஆலய அமைவிடம்**

- வட மேற்கு மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் உள்ள சிலாபம் எனும் இடத்தில் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

- வியாசர், இராமர் முதலியோர் வழிபட்ட தலமாக கொள்ளப்படுகின்றது.

**வரலாறு தொடர்பான நூல்கள்**

- தட்சணகைலாய மாஹத்ம்யம்
- முன்னேஸ்வர மான்மியம்
- ஸ்ரீ முன்னைநாத சுவாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல்
- முன்னேஸ்வரந்தாதி

**மன்னர்கள் பணி**

- குளக்கோட்ட மன்னன் இவ்வாலயத்தை மீள அமைத்து திருப்பணி செய்தான் சிங்கள மன்னர்கள் திருப்பணி - 6ஆம் பராக்கிரமபாகு, 9ஆம் பராக்கிரமபாகு நாயக்கமன்னன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் பணிகள்.

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

- மூர்த்தி - முன்னைநாதர்
- அம்பாள் - வடிவாம்பிகை
- தீர்த்தம் - மாயவன் ஆறு (தெதுறு ஓயா)
- தல விருட்சம் - அரசமரம்

**விழாக்கள்**

- பௌர்ணமி தினத்தில் ஸ்ரீ சக்கர பூசை
- மகோற்சவம், பக்தோற்சவம்
- நித்திய நைமித்திய கிரியைகள்

**சமூக மேம்பாடு**

- மடங்கள் அமைத்து அன்னதானம் வழங்குதல்
- வேதாகமப் பாடசாலை, அறநெறிப் பாடசாலை அமைத்து சமயம் வளர்த்தல்
- இனமத பேதமின்றி வழிபாடு நடைபெறுதல்

**நகுலேஸ்வரம்**

ஆலய அமைவிடம்

- இலங்கையின் வடக்கே கீரிமலையில் அமைந்துள்ளது. இவ்வாலயம் புராதன காலத்தில் திருத்தம்பலேஸ்வரம் என அழைக்கப்பட்டது. கீரிமலையை நகுலகிரி என்றும் அமைக்கப்படுகின்றது.

**வரலாற்றுச் சிறப்பு**

- நகுல முனிவர் தவம் செய்து கீரிமுகம் மாறிய தலம்
சோழ இளவரசியாகிய மாருதப்புரவீக வல்லியின் குன்மவலி திருந்தியமை
மாவிட்டபுரக் கோயிலுக்குரிய காங்கேயன் விக்கிரகம் வந்திறங்கிய துறை.

**வரலாறு தொடர்பான நூல்கள்**

- கூத சங்கிதை, மகாபாரதம், மச்சய புராணம், தட்சணகைலாய மான்மியம், யாழ்ப்பாண வைபவ மாலை, நகுலாச புராணம், நகுலேஸ்வர மான்மியம், நகுலேஸ்வரர் சதகம், திருப்புகழ்.

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

- மூர்த்தி - நகுலேஸ்வர பெருமான்
- அம்பாள் - நகுலாம்பிகை
- தீர்த்தம் - கீரிமலை

**விழாக்கள்**

- நித்திய நைமித்திய கிரியைகள் நடைபெறுகின்றன
- ஆடி அமாவாசை அன்று பிதிர்க்கடன் தீர்த்தல் சிறப்பாக நடைபெறுகின்றது. மகோற்சவ விழா சிறப்பாக இடம்பெறுகின்றது.

**சமூக மேம்பாடு**

- மடங்கள் அமைத்து புராணபடனம், திருமறை ஓதுதல் இடம்பெறல்
- அறிஞர்களுக்கு கௌரவம் அளித்தல்
- அடியார் வழிபாடு

## • பொலநறுவைக் கோயில்கள்

(இவற்றில் முதலாம், இரண்டாம், மூன்றாம், ஐந்தாம் சிவாலயங்கள் பற்றி சிறப்பாகக் கற்றிருத்தல் வேண்டும்.)

### முதலாம் சிவாலயம்

- வனப்புமிக்க கட்டட வேலைப்பாடுகளின் காரணமாகவும் நகரின் மத்தியில் அமைந் திருப்பதாலும் இது முக்கியத்துவம் பெறுகின்றது.
- இக்கோயிலின் அழிபாடுகள் சுமார் 100 வருடங்களுக்கு முன் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் மூலம் அடையாளங் காணப்பட்டபோது கலாவிமர்சகர்களதும் பிறரதும் கவனத்தை ஈர்த்தது.
- தொல்பொருட் திணைக்கள, ஆணையாளரான எச். சி. பி. பெல் இது பற்றி பின்வருமாறு வர்ணிக்கிறார்.
  கல் விகாரை நீங்கலாகவுள்ள கட்டடங்களில், அதுவே பொலனறுவையைப் பார்க்கச் செல்வோரின் கூடுதலான கவனத்தைப் பெற்றது..... தலதா மாளிகை என்று பிழையாக வர்ணிக்கப்பட்டது" என்று கூறியுள்ளார்.
- இக்கோயிலில் வேலைப்பாடுகள் பல காணப்படுகின்றன. இக்கோயில் அதிஷ்டானம், பத்மதளம், கண்டம், கபோதம் முதலான 7 உறுப்புகளைக் கொண்டமைந்துள்ளது. அதிஷ்டானம் 4'5'' உயரமுடையது.
- இது முற்றிலும் கற்றளியாக அமைந்த கோயிலாகும்.
- இவ்வாலயம் அமைப்புருவில் 2 ஆம் சிவாலயத்தைப் போன்றதாயினும், அளவில் சற்றுச் சிறியதாகும். ஆயினும் அலங்கார வேலைப்பாடுகள் சற்று அதிகமாகக் காணப்படுகின்றன.
- இக்கோயில் கர்ப்பக்கிருகம், அந்தராளம், முக மண்டபம் ஆகியன ஒழுங்கு முறையாக அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.
- 2 ஆம் சிவாலயம் போல் இதுவும் அடித்தளத்திலிருந்து சிகரம் வரை செதுக்கப்பட்ட கற்பாளங்களால் அமைக்கப்பட்டுள்ளது.
- இவ்வாலயம் திராவிடக் கட்டடக்கலை மரபிற்குரியது. தென்னிந்திய சிற்ப, சாஸ்திர விதிக்கேற்பவும் அமைந்துள்ளது.
- இவ்வாலயம் 61'9'' நீளம் கொண்டது. 105' நீளமும் 75' அகலமும் கொண்ட நிலப்பரப்பினுள் அமைக்கப்பட்டுள்ளது.
- இக்கோயிலில் மூன்று பரிவார தேவர்களுக்கான கோயில்கள் அமைந்திருந்தமைக்கான சுவடுகளும் உள்ளன.
- கர்ப்பக்கிருகத்தின் தென்மேற்கில் விநாயகர் கோட்டம் அமைந்திருந்தது. அதில் 9'6'' அகலமும் 8'9'' நீளமும் கொண்ட கர்ப்பக்கிருகமும் அதற்கு ஒப்பான சுற்றளவினை உடைய அந்தராளமும் இருந்தன.
- வளாகத்தின் வடமேற்கு மூலையில் அதேயளவு கொண்ட தேவகோட்டம் ஒன்று இருந்தது. அகழ்வுகளின்போது, அவ்விடத்தில் குமாரக்கடவுள் சிலையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் வெண்கலப் படிமங்கள் காணப்படுகின்றன.
- கோயில் தூண்கள் பத்மதளம், கால், வரி, கலசம், இதழ், பலகை, பொதிகை என்னும் அழகிய வேலைப்பாடுகள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன.

- **இரண்டாம் சிவாலயம்**
- இவ்வாலயம் பொலநறுவை நகரின் அரணமைந்த பகுதியிலுள்ள வடகிழக்கு மூலையின் சமீபத்திலே காணப்படுகின்றது.
- சோழர் இப்பகுதியை ஆண்ட காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதாகும்.
- 2 ஆம் சிவாலயத்தை வானவன் மாதேவீஸ்வரம் எனவும் அழைப்பர்.
- கர்ப்பக்கிருகம், அந்தராளம், அர்த்தமண்டபம், நந்திபீடம், விமானம் ஆகிய பகுதி களுடன் அமைக்கப்பட்டிருந்தது.
- ” கோயில் வளாகத்தைச் சூழ்ந்த சுவர் 96’ நீளமும் 84’ அகலமும் கொண்ட தாகும். மதிற்சுவர்கள் செங்கட்டிகளால் அமைக்கப்பட்டிருந்தன.
- கோயில் கற்றளி அமைப்புடையது. அது கருங்கல், சுண்ணக்கல் ஆகிய இரு வகையான கற்களையும் கலந்து கட்டப்பட்டுள்ளது.
- இக்கோயில் விமானம், தென்னிந்திய கோயில் விமானங்களுடன் ஒப்பிடுகையில் விஜயாலயன் காலத்தை ஒத்தனவாகவும் மிகுந்த அழகுடையனவாகவும் காணப்படு கின்றது.
- இக்கோயில் வளாகத்தில் பிள்ளையார் கோயில் தனி ஆலயமாகக் காணப்படுகின்றது.

**மூன்றாம் சிவாலயம்**

- இவ்வாலயம் அளவிற் சிறிய கற்றளியாகும்.
- இது யோத எல என்னும் கால்வாயின் வலது பக்கத்துக் கரையிலிருந்து 90’ தூரத்தில் அமைந்துள்ளது.
- 51’6” நீளம் கொண்டது. அதன் பிரகாரம் 102’ நீளமும் 66’ அகலமும் கொண்ட தாகும்.
- இதன் விமானமும் கட்டடமும் இடிந்து வீழ்ந்து விட்டது.
- கிழக்கு நோக்கிய இச்சிவாலயம் கர்ப்பக்கிருகம், மண்டபம், அந்தராளம், முகமண்டபம் என்னும் பகுதிகளைக் கொண்டிருந்தது.
- இது கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்டதாகும்.
- இங்குள்ள தூண்களில் குறிப்பாக கண்டம், கலசம், பத்ம இதழ் ஆகிய அம்சங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**நான்காம் சிவாலயம்**

- மின்னேரியா தோப்ப வாவி வீதியில் அமைந்துள்ளது.
- இது செங்கல்லினால் அமைக்கப் பெற்ற கோயிலாகும். இதில் இலிங்கம் பிரதிட்டை செய்யப் பெற்றிருந்தது.
- இதன் வளாகம் 136’ நீளமும் 100’ அகலமும் கொண்ட சுற்றளவினை உடையதாகும். இவ்வாலயத்துக்குத் தெற்கிலும், மேற்கிலும் நுழைவாசல்கள் அமைந்துள்ளன.
- இது மற்றைய ஆலயங்களைப் போல் கர்ப்பக்கிருகம், அந்தராளம், முக மண்டபம் ஆகியவற்றைக் கொண்டு காணப்படுகின்றது.
- மூன்று பரிவார தேவர் கோட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

- **ஐந்தாம் சிவாலயம்**
- இதன் சுவர்களும் அவற்றின் மேலமைந்த பகுதிகளும் இடிந்து வீழ்ந்து விட்டன. இப்போது ஆலயத்தின் அத்திவாரமும் சில தூண்களுமே எஞ்சியுள்ளன. இது செங்கல்லினால் அமைக்கப்பட்ட பல கட்டடங்களின் தொகுதியாக அமைந்துள்ளது.
- இவ்வாலயம் 117’6” நீளமும் 75’ அகலமும் கொண்ட வளாகத்தினுள் அமைந்துள்ளது. இங்கு அமைந்த தூண்கள் நான்கு வரிசைகளைக் கொண்டதாய் சதுரமாகவும், எண்கோண வடிவமானதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. தூண்களில் அன்னப்பறவை வடிவங்களும் குமுதங்களும் இடம் பெற்றுள்ளன.
- இவ்வாலயம் 2 ஆம் சிவாலயம் போல் எண்கோண வடிவமாக அமைந்துள்ளது.

**ஆறாம் சிவாலயம்**

- 5 ஆம் சிவாலயத்தின் அண்மையில் அமைந்துள்ளது. இவ்வாலயம் 54’6” நீளம் கொண்டதாகும்.
- இவ்வாலயம் இறையகம், அந்தராளம், அர்த்த மண்டபம், முக மண்டபம் என்னும் பகுதிகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.
- இவ்வாலயத்தின் மண்டபம் 25’6” நீளமும் 14’9” அகலமும் கொண்டதாக அமைக் கப்பட்டுள்ளது. அங்குள்ள ஆலயங்களின் மண்டபங்களுள் இதுவே பெரியது. இவ்வாலயம் மூன்று வாசல்களைக் கொண்டது. இவ்வாலயத்தைச் சுற்றி மூன்று பரிவார தேவ கோட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

**ஏழாம் சிவாலயம்**

- நகரத்தின் வடக்கு வாசலுக்குச் செல்லும் வீதியின் வலது பக்கத்தில் அமைந்திருந்த ஆலயம் இதுவாகும். இவ்வாலயம் அழிபாடுகளுக்கு இடையில் இறையகம், அந்தராளம், அர்த்த மண்டபம், முக மண்டபம் என்னும் அமைப்புகளைக் கொண்டுள்ளது.
- இவ்வாலயம் 64’ 2” நீளமுடையது.
- கோபுர வாசலின் இருபக்கங்களிலும் சிறிய கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

**பொன்னம்பலவாணேச்சரம்**

**ஆலய அமைவிடம்**

- கொழும்பு மாநகரில் கொச்சிக்கடைப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.

**வரலாற்றுச் சிறப்பு**

- 1856 ஆம் ஆண்டு அருணாசலம் பொன்னம்பல முதலியாரால் அமைக்கப்பட்ட கருங்கற் கோயில் என்ற சிறப்புப் பெற்றது.

**மூர்த்தி தல தீர்த்தச் சிறப்பு**

- மூர்த்தி - பொன்னம்பலவாணேச்சர்
- அம்பாள் - சிவகாம சௌந்தரி
- தீர்த்தம் -

**விழாக்கள்**

- நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன. மகோற்சவ விழா சிறப்பாக நடைபெறுகின்றது.
- மகா மண்டபத்தில் நித்தியாக்கினி வளர்த்தல் ஸ்ரீசக்கர பூசை என்பன நிகழும்.

**சமூக மேம்பாடு**

- இனமத பேதமின்றி அடியார்கள் கலந்து கொள்கின்றனர்
- அறநெறிப் பாடசாலை அமைத்து மாணவர்களுக்கு உதவுதல்

**தேர்ச்சி 5.0 :** **இலங்கையில் இந்து சமயத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் பண்பாட்டுச் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பளிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.3 :** இலங்கையில் இந்து சமய வளர்ச்சிக்காகத் தொண்டாற்றிய பெரியார்கள் பற்றி அறிந்து, அவர்களுக்கு மதிப்பளிப்பதுடன் தாமும் சமயப் பணியாற்ற முயற்சிப்பார்.

**பாடவேளைகள் :** 20

**கற்றற் பேறுகள் :**

- இலங்கையில் இந்து சமயத்திற்காகத் தொண்டாற்றிய பெரியார்களைக் குறிப்பிடுவார்.
- இந்து சமயத்திற்காகத் தொண்டாற்றிய பெரியார்கள் தோன்றிய காலத்தையும் சூழ்நிலையையும் நூல்களிலிருந்து தொகுத்து எழுதுவார்.
- மேற்படி பெரியார்கள் செய்த தொண்டுகளைத் தேடித் தொகுப்பதில் ஈடுபடுவார்.
- மேற்படி பெரியோர்களின் தொண்டுகளை மதிப்பதுடன் தாமும் அவ்வாறான தொண்டுகளைச் செய்ய முன்வருவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**5.3.1 இலங்கையில் இந்து சமயத்தின் வளர்ச்சிக்காகத் தொண்டாற்றிய சமயப் பெரியார்கள்**

**5.3.1.3 இந்துபோர்ட் சு. இராசரத்தினம்**

- **அவரது வாழ்க்கைச் சுருக்கம்அவரது வாழ்க்கைச் சுருக்கம்**
    - பிறப்பு - 1884 ஆம் ஆண்டு ஆடி மாதம் 4 ஆந் திகதி
    - பிறந்த இடம் - யாழ்ப்பாணம்
    - கற்ற பாடசாலை - யாழ். மத்திய கல்லூரி (ஆரம்பக்கல்வி)
      உயர்கல்வி - கல்கத்தா பல்கலைக்கழகம் கொழும்பு சட்டக்கல்லூரி
    - சிவபதமடைந்த தினம் - 1970.3.12

- **ஆற்றிய பணிகள்ஆற்றிய பணிகள்**
    - சமயப் பணி
    - கல்விப் பணி
- சமயப்பணி
    - சைவ மரபுகளைப் பேணியமை
      உ-ம்: விபூதி தரித்தல் சைவ சமய விழாக்கள் கொண்டாடுதல்
    - சைவக் கல்வி மரபை பாதுகாக்க சைவ வித்தியா விருத்திச்சங்கம் (1923) ஆரம்பிக்கப்பட்டமை.
    - திருமுறை ஓதவேண்டும், பண்ணோடு பாடவேண்டும் என்பதற்காக பாடசாலைகளில் பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப்பட்டன.
    - சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினூடாக பல பணிகள் ஆரம்பிக்கப் பட்டமை.
      உ-ம்: சைவ சமய பரீட்சைகளை நடத்துதல்
      சைவ ஆசிரியர்களை பயிற்றுவித்தமை
      சைவப் பண்பாட்டினைப் பேணிப் பாதுகாத்தமை

- **கல்விப் பணி**
- பாடசாலைகள் உருவாக்கியமை
  உ-ம் : யாழ்ப்பாணம், பதுளை, நாவலப்பிட்டி, புத்தளம்
- அநாதை விடுதிகள் அமைத்தமை
  உ-ம் : திருநெல்வேலி
- சைவாசிரியர் கலாசாலை உருவாக்கியமை
  உ-ம் : யாழ்ப்பாணம், திருநெல்வேலி (1928)
- 187 பாடசாலைகள் அரசாங்க நன்கொடைகளை பெற வைத்தமை
- சமூகத்தில் பின்தங்கிய மாணவரும் கல்வி கற்க வாய்ப்பு வழங்கியமை

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் - அறிமுகம் - பின்னணி

- ஈழத்தில் உதித்த சைவப் பெரியார்களுள் ஆறுமுகநாவலரும் ஒருவர்.
- 19 ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரின் செல்வாக்குப் பெற்ற காலத்தில் ஞானப்பிரகாசர் மரபில் வந்த கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியினருக்கு ஆறாவது பிள்ளையாக நல்லூரில் 1882 டிசம்பர் 18 ஆம் திகதி பிறந்தார்.
- பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பதாகும்.
- தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் தேர்ச்சியுடையவர்.
- சுப்பிரமணிய உபாத்தியாயர், வேலாயுத முதலியார், சரவணமுத்து உபாத்தியாயர், சேனாதிராய முதலியார் ஆகியோரிடம் குருகுல முறையில் கல்வி பயின்றவர்.
- யாழ். வெஸ்லியன் மிஷன் கல்லூரியில் (யாழ்ப்பாண மத்திய கல்லூரி) கல்வி பயின்று சகல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றார்.அவர் 7ஆண்டுகள் அக் கல்லூரியிலேயே ஆசிரியராகப் பணிபுரிந்தார்.
- ஆசிரியர் பணியை நிறுத்தியமைக்கான காரணம் "சைவசமயத்தையும் அதன் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும்"என்ற பேராசையாகும்.

பணிகள்:
1. சமயப்பணி
2. கல்விப்பணி
3. பதிப்பாசிரியர் பணி4. சமூகப்பணி

சமயப்பணி:

- சைவப் பிரசங்கங்களை ஆற்றியமை
  உதாரணம்: வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் ஆலயம்
- புராணபடனங்கள் நிகழ்த்தியமை
  உதாரணம்: நல்லூர் கந்தசுவாமி கோயில் உதாரணம்:
- ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்தமை.
  உதாரணம்: திருக்கேதீச்சரம், திருக்கோணேசுவரம்
  மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டம் என்னும் நன்நகரில் தேன்பொந்தொன்று உள்ளது. அதனைச் சென்றடையுங்கள்" என விஞ்ஞாபனம் செய்தமை குறிப்பிடத்தக்கது.
- சைவ சமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டமை.
  உதாரணம்: சைவ வினாவிடை முதற்புத்தகம், இரண்டாம் புத்தகம், இலக்கண நூல்கள் பலவற்றை வெளிக்கொணர்தல்.
- பண்ணிசையினை வளர்த்தமை. உதாரணம்:
  உதாரணம்: நல்லூர் மகோற்சவ காலங்களில் திருவாவடுதுறையிலிருந்து ஓதுவார்களை அழைத்து தமிழ் வேதப்பாக்களை ஓதுவித்தமை.
- பிரமச்சரிய வாழ்வினைச் சீராக வாழ்ந்து காட்டியமை.
- பிறசமயக் கண்டனங்களையும் அகச்சமயக் கண்டனங்களையும் மேற்கொண்டமை. கண்டனப் பிரசுரங்கள் மூலம் சைவத்தின் மாண்பை நிலைநிறுத்தியமை.
  "சைவதூஷண பரிகாரம்", "நல்லூர் கந்தசுவாமி கோயில்","

**யாழ்ப்பாணத்துச் சமயநிலை”**

கல்விப்பணி

- சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அமைத்தார்.
  உதாரணம்:
  - 1848 வண்ணார்பண்ணையிலும் 1864 சிதம்பரத்திலும் 1872 கோப்பாயிலும் வித்தியாசாலைகளை அமைத்தமை.
  - 1871 புலோலியில் சைவ ஆங்கில வித்தியாசாலையை அமைத்தமை.
- வித்தியாசாலைகளுக்கு முகாமையாளராக இருந்தார்.
- பெண்களுக்கான கல்வி ( 3 ஆம் பாலபாடத்தில் விளக்கியுள்ளார்)

பதிப்பாசிரியர் பணி

- ஈழத்தில் வண்ணார்பண்ணையிலும் தமிழ்நாட்டின் சிதம்பரத்திலும் வித்தியாநுபால யந்திரசாலைகளை நிறுவினார்.
- அகராதிகள் பதிப்பித்தல்உதாரணம்: உதாரணம்: சூடாமணி நிகண்டு
- இலக்கிய நூல்கள் - இலக்கண விளக்கச் சூறாவளி
- தருக்க நூல்கள் - தருக்கசங்கிரகம் • இலக்கிய நூல்கள் - மகாபாரதம்
- அறிவியல் சார் நூல்கள் - இலங்கை பூமிசாத்திரம்
- முதன்முதல் ஏட்டுச்சுவடிகளிலிருந்த நூல்களை அச்சுவாகனமேற்றினார்.
  உதாரணம்: தொல்காப்பிய சூத்திரவிருத்தி
- தொகுத்துப் பதிப்பித்தமை - அருட்பா
- சில நூல்கள், இலக்கணக் குறிப்புக்கள், அருஞ்சொல் அகராதி, சொல்லிலக்கண ஆராய்ச்சிப் பதிப்புக்கள்
- சிலவற்றுக்கு உரை எழுதிப் பதிப்பித்துள்ளார்.
  உதாரணம்: ஔவையார் அருளிச் செய்த நல்வழி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன்
- சில செய்யுள் நூல்களை வசனநடையில் எழுதிப் பதிப்பித்தார்.
  உதாரணம்: திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண வசனம், கந்தபுராண வசனம்.
- அப்பியாசங்களோடு பாடநூல்கள் சிலவற்றையும் எழுதிப் பதிப்பித்தார்.
  உதாரணம் : இலக்கணச் சுருக்கம்
  - “நாவலர் பதிப்பே நல்ல பதிப்பு” என்று அன்றும் இன்றும் அறிஞர்களால் பாராட்டப்படுகின்றது.
  - இலங்கையில் சைவ ஊடகத்துறை, பத்திரிகைத்துறை வளர்ச்சியுற வித்திட்டமை.
  - இலங்கைநேசன் என்னும் பத்திரிகை வளர்ச்சிக்கு உதவியமை, சைவ உதய பானு என்னும் பத்திரிகையை வெளியிட ஆர்வம் காட்டியமை.

சமூகப் பணி

- 1876 / 77 ஆண்டுகளில் கடும் வரட்சியால் ஏற்பட்ட பஞ்சவேளையில் கஞ்சித்தொட்டித் தருமம் மேற்கொண்டமை. ஷ
- யாழ்ப்பாண கரையூர் உள்ளிட்ட இடங்களில் பேதி நோய் பரவியபோது மக்களுடன் மக்களாக நின்று முதலுதவிகளையும் தக்க பரிகாரங்களையும் மேற்கொண்டமை.
- சமூகத்தைப் பாதிக்கும் மதுபாவனை, சூதாடுதல் முதலியவற்றை ஒழிக்கப் பாடுபட்டார்.
- யாழ்ப்பாணக் கச்சேரி நிர்வாகத்தின் ஊழல்கள் தொடர்பாக 1878 ஆம் ஆண்டு அங்கு வந்த தேசாதிபதிக்கு விண்ணப்பம் ஒன்றை வழங்கினார்.
- தமிழ் சமூகத்திற்காக தமிழ் இலக்கண இலக்கிய நூல்களைச் செம்மைப்படுத்தினார். செய்யுள் நடையிலுள்ள பழங்கால இலக்கியங்களுக்கு உரைசெய்தார்.
- பிறரை உரியவேளையில் கௌரவித்தமை.
  உ - ம்: நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பக்திரசம் சொட்டப் பாடிய கோபால கிருஷ்ண பாரதியாருக்கு நாவலர் சன்மானம் வழங்கிக் கௌரவித்தமை.

நிறைவு

- 1879 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆந் திகதி மக நட்சத்திரத்தில் இறையடி சேர்ந்தார்.
- 1971.10.29 இலங்கை அரசாங்கம் நாவலர் நினைவு முத்திரையை வெளியிட்டது.

## சுவாமி விபுலானந்தர்

அறிமுகம்

- இலங்கையிலும், இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கினார்.
- 1892 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆந் திகதி தமிழ் கர வருஷம் பங்குனித் திங்கள் 16 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணத்தில் மட்டுமாநகரின் தெற்கேயுள்ள காரைதீவு என்னும் கிராமத்தில் பிறந்தார்.
- சாமித்தம்பியாருக்கும் கண்ணம்மைக்கும் நன்மகனாக மயில்வாகனம் என்னும் இளமைப்பெயர் கொண்டார்.
- உயர்திரு க. குஞ்சித்தம்பி, புலோலி பொ. வைத்தியலிங்க தேசிகர் ஆகிய உபாத்தியாயர்களிடம் இளமைக்கல்வியைக் கற்றார்.
- இளமையில் ஆற்றல், அறிவு, விவேகம் முதலானவை கைவரப் பெற்றார்.
- இளமைக் கல்வியினை கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையிலும் பின்னர் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும் பயின்றார்.
- பாடசாலைக் கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கையில் கேம்பிரிஜ் ஜுனியர், கேம்பிரிஜ் சீனியர் பரீட்சைகளில் சித்தி பெற்றார்.
- கொழும்பு ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞான ஆசிரிய டிப்ளோமாப் பயிற்சி பெற்றார்.
- 1916 இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்றார்.
- 1920 இல் லண்டன் B.Sc விஞ்ஞானமாணிப் பரீட்சையில் தேறி விஞ்ஞானப் பட்டதாரியானார்.
- கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலை மட். புனித மிக்கேல் கல்லூரி, யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றினார்.
- யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றினார்.
- 1922 வாழ்வில் திருப்புமுனை துறவு நாட்டம் சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடம் சுவாமி சிவானந்தரால் “பிரபோத சைதன்யர்” என்னும் பிரமச்சரிய நாமம் சூட்டப்பிட்டார்.
- 1924 ஆம் ஆண்டு ஞான உபதேசம் பெற்று “சுவாமி விபுலாநந்தர்” என்னும் தீட்சை நாமம் பெற்றார்.
- துறவு வாழ்வு மானிட நேயத்தை வளர்த்தது.
- தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், கிரேக்கம் முதலிய மொழிகளில் வல்லவராக விளங்கினார்.

### ஆற்றிய பணிகள்

- சமயப்பணிகள்
- நூலாசிரியர் பணி
- கல்விப்பணி
- பதிப்பாசிரியர் பணி
- கலைப்பணி
- சமூகப்பணி
- உரையாசிரியர் பணி

### சமயப் பணிகள்

- இலங்கையிலும், இந்தியாவிலும் நடைபெற்ற பல்வேறு சமய மகாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் தலைமை தாங்கினார்.
- ஈசன் உவக்கும் இன்மலர்கள், கோயில் என்பவற்றை வினாவிடை அமைப்பில் இயற்றினார்.
- மகாலட்சுமி தோத்திரம், நடராஜ வடிவம் (ஐந்தொழில்களையும் சுருக்கமாக விளக்கும் நூல்), உமாமகேஸ்வரம் (மாதொரு பாகனாயமைந்துள்ள நுட்பத்தை விளக்குவது)

- கணேச தோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை, குமரவேள் நவமணிமாலை முதலான சமய நூல்களை ஆக்கியுள்ளார்.
- சமயப் பிரசங்கம் செய்தல், சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் ஈடுபட்டவர். இலங்கையில் அத்வைத வேதாந்த மரபின் பரவலுக்கு முன்னோடியானவர்.
- இராமகிருஷ்ண சங்கத்தின் கிளைத் தாபனம் ஒன்றை இலங்கையில் நிறுவி, அதன் ஆதரவில் கல்விச்சாலைகள் பல அமைத்தும், மாணவர் இல்லங்களை நிலைநாட்டியும், திருமடங்களைக் கட்டியும் தரும பரிபாலனம் செய்தவர்.
- சமயம் அனுட்டிப்பதற்குரியது என்பதனை தமது போதனைகளிலும் சாதனைகளிலும் நிலைநாட்டினார்.
- சமய தத்துவக் கருத்துக்களை சாதாரண மக்களும் விளங்கக்கூடியவாறு இலகு நடையில் விளக்கினார்.
- கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா வகைகளையும், கண்ணிகள் சிந்துகளையும் கையாண்டு சமய நூல்களைப் பாடினார். உதாரணமாக நான்மணிமாலை, தோத்திரம், தேவபாணி என்பனவற்றைக் கூறலாம்.
- சமயத்துறை சார்ந்தனவாகவும், வேதாந்த மரபு தழுவியதாகவும் அவரது கவிதைகள் காணப்படுகின்றன.
- இராம கிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், ஆறுமுகநாவலர் முதலான சமயப் பெரியார்களை மதித்துப் போற்றியதுடன், அவர்களுடைய போதனைகளையும், பணிகளையும் முன்மாதிரியாகக் கொண்டவர்.

## கல்விப் பணிகள்

- விபுலாநந்தர் கல்வியில் உயர்ந்து விளங்கியதுடன் இந்துக்களும் அத்தகைய கல்வி பெறவேண்டும் என்பதில் ஆர்வமுடையவராக இருந்தார்.
- தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வியை வழங்கும் பொருட்டு சிதம்பரத்தில் பல்கலைக் கழகம் நிறுவுவதை வலியுறுத்தி, சென்னை மாகாண அரசின் கல்விக் குழுவுக்கு சிபார்சு செய்ததுடன், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உதயமாவதற்கும் வித்திட்டார்.
- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இலங்கை கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் முதல் தமிழ் பேராசிரியராகப் பணி புரிந்தார்.

## கல்விப் பணிகள்

- விபுலாநந்தர் கல்வியில் உயர்ந்து விளங்கியதுடன் இந்துக்களும் அத்தகைய கல்வி பெறவேண்டும் என்பதில் ஆர்வமுடையவராக இருந்தார்.
- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், இலங்கை கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் முதல் தமிழ் பேராசிரியராகப் பணி புரிந்தார்.
- சுய மொழியபிமானமற்றதும், தேசாபிமானமற்றதும், அடிமைத்தனமானதும், நாகரிகத்தை நாசப்படுத்துவதுமான கல்வி முறையைக் கண்டித்தார்.
- மேல்நாட்டுக் கல்வியை இந்துக்கல்வி மரபுக்கமைவாகப் போதிப்பதற்குரிய வழிவகைகளைச் செய்தார்.

- "கற்ற கல்வி பிறரைப் பாதிக்கக்கூடாது; அது உயிர்ப்பூட்டுவது; உண்மையைக் காட்டுவது; தன்னம்பிக்கையைத் தருவது " எனும் கொள்கை உடையவராக விபுலானந்தர் விளங்கினார்.
- தன் கல்வியற் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் நோக்கத்துடன் பல பணிகளை மேற்கொண்டார். இராம கிருஷ்ண மிஷனுக்குரிய கல்விச் சட்டத்தை இந்து போர்ட் இராஜரத்தினத்துடன் இணைந்து உருவாக்கினார்.
- 1925 இல் இலங்கையில் இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் முகாமைப் பொறுப்பை ஏற்று, தன் கல்விப் பணிகளைத் தொடர்ந்தார்.
- இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் பாடசாலைகள் பலவற்றை நிறுவி நிருவகித்தார்.
- விபுலாநந்தர் இராமகிருஷ்ணமிஷனுடன் இணைந்து பணிபுரிந்த காலத்தில்
  - கல்லடி - சிவானந்தா ஆண்கள் பாடசாலை
  - ஆனைப்பந்தி - இராமகிருஷ்ணமிஷன் பெண்கள் பாடசாலை
  - காரைதீவு - சாரதா வித்தியாலயம்
  - திருகோணமலை - இந்துக்கல்லூரி
  - வண்ணை - வைத்தீஸ்வர வித்தியாலயம்

    ஆகிய பாடசாலைகளை நிறுவி ஏழை மாணவர்களின் வாழ்வில் ஒளியூட்டினார்.
  - 1926 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலும் அநாதை ஆச்சிரமங்களை நிறுவி, அநாதைச் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தினார்.
  - இலங்கை கல்வித் திணைக்களத்தின் பாடநூற் சபை, கல்வி ஆய்வுச் சபை, தேர்வுச் சபை என்பனவற்றின் உறுப்பினராகவிருந்து கல்வித்துறைசார் பணிகளைப் புரிந்தார்.
  - மாணவர் நலனைக் கருத்திற் கொண்டு "கலைச்சொல் அகராதியை " உருவாக்கினார்.
  - பாடசாலை மட்டத்தில் சமயக்கல்வி, பொதுக்கல்வி என்பன தொடர்பாகத் தொடர்ச்சி யான பல பணிகளை ஆற்றினார்.
  - வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்துதல்.
  - பக்திப் பாசுரங்களைப் பாராயணம் செய்தல்.
  - வார இறுதியில் சைவ சமய வகுப்புகளையும், பண்ணிசைப் பயிற்சிகளையும் நடாத்துதல்.
  - சமயக் கல்வியை இளைஞர்களுக்கு ஏற்றவாறு போதித்தல் அவரது புதிய திட்டமாகும். விபுலாநந்தரின் அத்தகைய திட்டம் இன்று செயல் முறைக்கு வந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.
  - இவரது கல்விப் பணிகள் அனைத்திலும் சமயம்சார் கல்விப் பணிகளே பிரதான இடத்தைப் பெறுகின்றன.

கலைப் பணிகள்

- இசைத் தமிழிலே மிகுந்த ஈடுபாடும் ஆராய்ச்சியும் பொருந்திய விபுலாநந்தர் விதைகள் ஓசை நயம் மிகுந்தவை. "இயலின்றி இசையில்லை; இசையின்றி இயலில்லை" என்பது அவரது கொள்கை.
- காலத்திற்கேற்ப கவிதை அமைந்துள்ளது.
- அவரது நூல்களில் செந்தமிழ் நடை கையாளப்பட்டுள்ளது.
- குருதேவர் வாக்கியம், விவேகானந்த பஞ்சகம், ஆறுமுகநாவலர், கங்கையில் விடுத்த ஓலை என்பவற்றை எழுதியுள்ளார்.

- அவர் உள்ளத்தில் அனுபவித்த உணர்வுகளைக் கவிதையிலே தீட்டிக் காட்டும் திறமை உள்ளவர்.
- பல்வேறு ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தப்பா வகைகளையும், கண்ணிகள், சிந்துகளையும் கையாண்டுள்ளார்.
- நாடகநூல் - மதங்கசூளாமணி. இசைத்தமிழ் - யாழ்நூல்
- ஆங்கிலவாணி, பூஞ்சோலைக்காவலன்
- சென்னை பச்சையப்பன் கல்லூரியில் (1936) சொல்லாக்க மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.
- இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் வல்லவர் என்பதால் "முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர்" எனப் போற்றப்படல்.
- தமிழ்க் கவிதையின் போக்கிலே புரட்சிகரமான மாற்றங்களைச் செய்த பாரதியாரைப் பண்டிதர்கள் தீண்டாதிருந்த வேளையில் பாரதி கழகம் அமைத்து, பாரதி புகழைத் தமிழ் நாட்டில் பரப்பிய பெருமைக்குரியவர்.

## உரையாசிரியர் பணிகள்

- தெளிவான நடை, எளிமையான மொழி நடை என்பவற்றைக் கையாண்டவர்.
- ஓசை நயத்தாலும் உணர்ச்சி வெளியீட்டுச் சிறப்பாலும் தம் உரைநடையிற் கூட பல இடங்களில் கவிதையின் எல்லையைத் தொட்டவர் விபுலானந்தர்.
- அவரது உரைநடை நூல்கள் -
    - விஞ்ஞானக் கட்டுரை
    - கலைச்சொற்கள்
    - விஞ்ஞான தீபம்• மொழிபெயர்ப்பு

      உ-ம்:- சுவாமி விபுலானந்தர் சம்பாசணை விவேகானந்த தீபம்
      விவேகானந்தரின் சொற்பொழிவு நூல்கள்

## பதிப்பாசிரியர் பணிகள்

- விபுலாநந்தரின் நூல்கள் பிழையற்ற பதிப்புக்களாக கால, இட விபரங்களுடன் எழுதப்பட்டவை.
- அவர் தமிழரின் பழம் பெருமைகளைப் பத்திரிகைகளில் கட்டுரை வடிவில் வெளியிட்டார்.

  உ-ம்: செந்தமிழ்ச் செல்வி, கலைமகள், ஈழகேசரி உ-ம்:
- வேதாந்த கேசரி, இராமகிருஷ்ண விஜயம், பிரபுத்த பாரத முதலான வெளியீடுகளுக்குப் பத்திரிகாசிரியாக விளங்கினார்.

## பதிப்பாசிரியர் பணிகள்

- விபுலாநந்தரின் நூல்கள் பிழையற்ற பதிப்புக்களாக கால, இட விபரங்களுடன் எழுதப்பட்டவை.
- அவர் தமிழரின் பழம் பெருமைகளைப் பத்திரிகைகளில் கட்டுரை வடிவில் வெளியிட்டார்.**சமூகப் பணிகள்**

- விபுலானந்தர் மக்களை நேசித்தவர். அவர்களுடைய நன்மை தீமைகளில் ஈடுபட்டவர்.
- ஒருமுறை கடவுள் நேரில் வந்தால் ... என்று பேச்சு எழுந்தபோது, சுவாமி பின்வருமாறு கூறினாராம். "நானென்றால் முத்தி தரும்படி கேட்கமாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும். அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதானால் அதிலுள்ள இன்பமே ஒப்பற்றது. " இவ்வாறு பிறருக்குப் பணி புரிவதே பெருமின்பம் தருவது என்ற திடசித்தம் கொண்டவர்.

- தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர்.
- அன்னார் தன் சொந்த நலன்களைத் துறந்த வேளையிலும் நாட்டு நலனையும், மக்கள் நலனையும், மொழி நலனையும் துறவாதிருந்த சிறப்பு போற்றத்தக்கது.
- அநாதை இல்லங்களின் வளர்ச்சிக்காக கிராமங்கள் தோறும் அறக்கொடைத் திட்டங்களை ஏற்படுத்தினார்.
- விபுலானந்தரின் கல்விச் செயற்பாடுகள் ஏழை மாணவர்களினதும், அநாதைக் குழந்தைகளதும் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் வகையில் அமைந்த சமூகப் பணிகளே என்பர்.

நிறைவு

- இறைபதம்- 1947 ஜூலை 19 ஆம் நாள் சமாதி மட். கல்லடி உப்போடையில் உள்ளது.
  முத்தமிழும் பெருஞ்சீர் முதல்வனார் திருக்குமரா பக்தியுடன் பணிபவர்க்கு பல
  கலையும் பாலிக்கும் சித்தி புத்தி நாயகனே திருமுறைகள் தமிழகத்தில்
  நிலைத்து நிலை பெற்றதுவும் நின்னருளின் திறனன்றோ " (சுவாமி விபுலாநந்தர்)

**கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்:**

படி i : ஈழத்துச் சைவப் பெரியார்களில் ஆறுமுகநாவலரதும் விபுலானந்தரதும் வாழ்வின் ஒவ்வொரு பகுதியை மாணவருக்கு விருப்பை ஏற்படுத்தும் வகையில் முன்வையுங்கள்.

படி ii: மேற்படி சைவப் பெரியார்கள் தொடர்பான தகவல்களைத் திரட்ட மாணவர்களுக்கு நூல்களைக் கொடுத்து உதவுங்கள்.

படி iii: மாணவர்களை 2 குழுக்களாகப் பிரித்து, ஆறுமுகநாவலர் பணிகளையும் விபுலானந்தவரின் பணிகளையும் ஒப்பீடு செய்வதற்கான தகவல்கள் திரட்ட ஆலோசனை வழங்குங்கள்.

படி iv: இரு குழுவிலிருந்தும் 5 பேர்கள் வீதம் தெரிவு செய்து மேற்படி பணிகள் பற்றிய விவாதம் ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள்.

படி v: விவாதத்தில் செவிமடுத்த தகவல்களைத் தொகுத்து, ஆக்கமாகத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

உசாத் துணைகள்:

வே. கனகரத்தின உபாத்தியாயரின்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம் - பதிப்பு. வை. கனகரத்தினம்
நாவலர் நூற்றாண்டு விழா மலர் - நூற்றாண்டு விழாச்சபை (வெளியீடு)
நாவலர் ஆளுமையும் புலமையும் - பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம்
அடிகளார் படிவ மலர் - தொகுப்பு. ம. சற்குணம்
விபுலானந்த ஆராய்வு - அருள் செல்வநாயகம்
இலங்கைத் தமிழ் இலக்கியம் - பேராசிரியர் எஸ். தில்லைநாதன்
இலக்கியக் கட்டுரைகள் - உயர்திரு விபுலாநந்த அடிகள்
ஈழத்து இலக்கிய வளர்ச்சி - க.செ.நடராசா
ஈழத்து தமிழ்நூல் வரலாறு - எப்.எக்ஸ்.நடராசா

**தேர்ச்சி 5.0 : இலங்கையில் இந்து சமயத்தின் வரலாற்றுப் பின்னணியையும் அதன் பண்பாட்டுச் சிறப்பம்சங்களையும் இனங்கண்டு அவற்றுக்கு மதிப்பளிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.4** : இலங்கையில் இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பினை ஏற்று அவற்றை உரிய முறையில் பயன்படுத்துவார்.

**பாடவேளைகள்** : 30

**கற்றற் பேறுகள்** :

- ஊடகம் என்பதற்கான விளக்கத்தையும் உதாரணங்களையும் கூறுவார்.
- ஊடக வகைகளையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் அவை இந்து சமய வளர்ச்சியில் செய்துள்ள பங்களிப்புகளையும் வெளிப்படுத்துவார்.
- சமகாலத் தொடர்பாடல்கள் இந்து சமயத்தில் பெற்றுள்ள இடத்தை எடுத்துக்காட்டுக்களுடன் முன்வைப்பார்.
- இலங்கையில் இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்புகளை கால அடிப்படையில் ஒழுங்குபடுத்திக் கூறுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி** : ஊடகம் - அறிமுகம்

- இரு தசாப்தங்களுக்கு முன்பிருந்த உலகமல்ல இன்றைய உலகம். மிக மிக மாறுதல் பெற்று விட்ட யுகம் ஒன்றினுள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.
- உலகம் இன்று சுருங்கிவிட்டது. இவ்வாறு உலகம் முழுவதையும் ஒரு கிராமமாக மாற்றிய தனித்துவத்தன்மை தகவற் புரட்சிக்கே உரியது.
- அதற்கு நாம் ஈடுகொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இந்த தகவல் யுகத்துள் எமது பாரம்பரிய மத உணர்வுகள், இறை வழிபாட்டு முறைமைகள், தலங்கள், சமய தாற்பரியங்கள் முதலானவை உள்வாங்கப்பட வேண்டும்.
- கல்வெட்டுக்களிலும், நூல்களிலும், அகழ்வாய்வுச் சின்னங்களிலும் வெளிப்படும் இந்து சமயத்தின் தொன்மை எல்லோர் கரங்களுக்கும் செல்ல வேண்டும்.
- இந்து மதக் கோட்பாடுகள் சரியான வடிவில், சரியான வழியில் மக்களைச் சென்றடைய வேண்டும்.
- இதனை எடுத்துச் செல்லும் தகவல் தொடர்புச் சாதனங்கள் அல்லது ஊடகம் பற்றிய அறிவும், விளக்கமும் அவசியம்.
- அதனை அறிந்து இந்து சமயத்தை வளர்த்துச் செல்லும் முயற்சியில் ஈடுபடுதல் அவசியம்.

5.4.1.1 ஊடகம் அல்லது தகவல் தொடர்பு என்பதன் விளக்கம்

- ஊடகம் என்பது மக்களுக்குத் தகவல்கள், செய்திகள் போன்றவற்றை வழங்குகின்ற தகவல் தொடர்புச் சாதனங்களைக் குறிக்கும்.
  உ-ம்: நாளிதழ், வானொலி, தொலைக்காட்சி, இணையம்
- மனிதன் கிணற்றுத் தவளையாக வாழ நினைக்காது பரந்த அறிவு பெற்றவனாக உலகத்துடன் ஒத்தியங்கக்கூடியவனாக வாழவேண்டும். ஆதலால் தகவல் துறை அல்லது ஊடகத்துறை மனித வாழ்க்கையில் இன்றியமையாததாக உள்ளது.

### 5.4.1.1 ஊடகம் அல்லது தகவல் தொடர்பு என்பதன் விளக்கம்

- ஊடகம் என்பது மக்களுக்குத் தகவல்கள், செய்திகள் போன்றவற்றை வழங்குகின்ற தகவல் தொடர்புச் சாதனங்களைக் குறிக்கும்.
  உ-ம்: நாளிதழ், வானொலி, தொலைக்காட்சி, இணையம்
- மனிதன் கிணற்றுத் தவளையாக வாழ நினைக்காது பரந்த அறிவு பெற்றவனாக உலகத்துடன் ஒத்தியங்கக்கூடியவனாக வாழவேண்டும். ஆதலால் தகவல் துறை அல்லது ஊடகத்துறை மனித வாழ்க்கையில் இன்றியமையாததாக உள்ளது.

### 5.4.1.2 ஊடக வகையும் அவற்றின் தொழிற்பாடுகளும்

**ஊடக வகைகள்**

**(அ) மரபு வழிச்சாதனங்கள்**

- ஓலைச் சுவடிகள், அழைப்பு ஓலைகள்
- நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புற நம்பிக்கைகள், கதைப்பாடல்கள்
- பக்திப் பாடல்கள், தேவாரப் பாடல்கள்
- முரசறைதல் மூலம் (பிரசித்தம்) அறிவித்தல்

**(ஆ) சொல்வழித் தொடர்பு**

(i) பொதுக்கூட்டம் (iii) பிரசங்கம்
(ii) பொது விவாதம் (iv) மகாநாடுகள்

**(இ) வெளிப்புறச் சாதனங்கள்**

(i) விளம்பரப் பலகை (iii) சித்திரங்கள், சிற்பங்கள்
(ii) அறிவிப்புப் பலகை

(ஈ) அச்சுக் கலை (அச்சியந்திரப் பயன்பாடு)

(உ) தொலைபேசி

(ஊ) திரைப்படம்

(எ) வானொலி

(ஏ) தொலைக்காட்சி

**(ஐ) தகவல் தொழில் நுட்பம்**

(i) இணையம் (Inter net) (ii) இறுவெட்டு (CD)
(iii) ஒலிநாடா (Audio) (iv) ஒளிநாடா (Vedio)
(v) இலத்திரனியல் அஞ்சல் (E.mail)

(உ-ம்) ஊடக வகையுள் அச்சுக்கலையும் அதன் தொழிற்பாடுகளும்

(i) பத்திரிகைகள்
1. தினசரி- காலை, மாலை
2. பருவ இதழ்கள் -வாரம், மாதம், மாதம் இருமுறை, காலாண்டு, ஆண்டு

(ii) துண்டுப்பிரசுரங்கள் : விஞ்ஞாபனம்
(iii) நாட்காட்டி
(iv) சஞ்சிகைகள்
(v) பஞ்சாங்கங்கள் (சோதிடக்கலை)
(vi) ஆராய்ச்சி வெளியீடுகள்

- ஊடகங்களில் அல்லது தகவல் தொலைத்தொடர்புச் சாதனங்களில் பொருள் மரபாக அமையும் இந்து சமயக் கருத்துகள் : இந்து சமய நெறிமுறைகள், வழிபாட்டு மரபுகள், தத்துவ சிந்தனைகள்

  உ-ம்: (i) புராணக் கதைகள்
  (ii) இதிகாசக் கதைகள்
  (iii) சமய சம்பந்தமான கதைப்பாடல்கள்
  (iv) சமய இலக்கிய வடிவங்கள் - பிரபந்தங்கள்
  (v) விழாக்கள், விரதங்கள்
  (vi) பண்டிகைகள், சடங்குகள்
  (vii) நாட்டார் கதைகள், நாட்டார் இலக்கியங்கள்
  (viii) நாயன்மார், அடியார் வரலாறுகள்
  (ix) கோயில் வரலாறு, சிற்ப நாட்டியங்கள், ஓவியங்கள்
  (x) இசைப்பாடல்கள் - பண், துதி

  முதலானவை சமுதாயத்தில் செல்வாக்கு பெறவும் வாய்ப்பு உண்டாகும். இவற்றோடு சமய அறிஞர்களின் பேட்டிகள், சமய அறிஞர் பேச்சுக்கள் என்பனவும் சமயக்கல்வி தொடர்பான விடயங்களாக அமைகின்றன.

## சம காலத் தொடர்பாடல்களும் இந்து சமயமும்

- ஒவ்வொரு காலப் பகுதிகளிலும் வெவ்வேறு ஊடகங்களினால் இந்துப் பண்பாடு வளர்ச்சியடைந்து வந்துள்ளது.
- மரபுவழி ஊடகங்களினாலும் அறிவைப் பயன்படுத்தப்படும் சிந்தனை வளர்ச்சியாலும், கருத்துப் பரிமாற்றங்களாலும் இம்முறைகள் முதன்மை பெற்று வருகின்றன.
- பதிகம் பாடல், கதை கூறல், வாதங்கள், பிரசாரம், பிரசங்கம் என்பன ஆன்றோர் கருத்துக்களை ஜனநாயக ரீதியாக வளர்ப்பதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன.
  உ-ம்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பிரசங்கங்கள்
- பக்தி ததும்பும் பாடல்களை இறுவெட்டுக்கள், ஒலி ஒளிநாடாக்கள் என்பவற்றின் மூலம் இந்து இல்லங்கள் தோறும் ஒலிக்கவிடுவதன் ஊடாக ஒருவரின் பண்பாட்டை மற்றொருவர் அறியக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.
- பஞ்சாங்கங்கள் இந்து மக்கள் நாள், கோள், சுபநேரங்களை அறிந்து செயற்பட வழிகாட்டுகின்றன.
  உ-ம்: கிரகண காலங்கள், விரதகாலச் செயற்பாடுகள்
- ஆலய பரிபாலனம், ஆலய சேவைகள், சமூக சேவைகள் என்பன தொடர்பான வலையமைப்புகள் பண்பாட்டு வளர்ச்சிக்கு மேலும் உதவுகின்றன.
- தொழில்நுட்ப ஊடகங்களினால் மத ஈடுபாடு அதிகரிக்கும். சமய அபிமானம் ஒவ்வொருவரிடமும் விருத்தியடையும்.
- இளைஞர்கள் சமய, தத்துவக் கதைகளை நாடகங்கள் மூலம் அறிவதற்கான வாய்ப்பு ஏற்படும். அதனால் தமது மதத்தில் நம்பிக்கை வளர வாய்ப்பு ஏற்படும்.
- வாராந்த பத்திரிகைகளில் சமய சம்பந்தமான பல விடயங்கள் வெளியிடப்படுகின்றன
  உ-ம் : கும்பாபிஷேகம், திருவிழா

- அயல் நாடுகளின் இந்துப் பண்பாட்டு வரலாற்று அம்சங்களை அறிய ஊடக தொடர்புகள் பெரிதும் உதவும்.
  உ-ம்: மலேசியாவில் நிகழும் தைப்பூசம். அது தொடர்பான படங்கள்.
- ஆலய திருவிழாக்களில் இடம்பெறும் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம், வில்லிசை, விவாதங்கள், புராணபடனமுறை, நாடகங்கள் என்பன மின் ஊடகங்களினூடாக சேமிக்கப்பட்டு பொதுமக்களிடையே பரப்பப்படுகின்றன.
- ஆலய திருவிழாக்களின்போது ஒலிபரப்பும், ஒளிபரப்பும் புராண இதிகாசம் தழுவிய நாடகங்கள் ஆலய விழாக்களை நேரடியாகத் தரிசிக்காதவர்களுக்கு ஊடகங்கள் அவற்றைப் பதிவுசெய்து விருந்தாக அளிக்கின்றன.
- தொலைக்காட்சி ஊடகங்கள் புராண, இதிகாசக் கதைகளை நாடகங்களாகத் தயாரித்து, ஒளிபரப்பும்போது அவை சாதாரண மக்களிடையே சமய உணர்வினை ஏற்படுத்த வழி பிறக்கின்றது.

## ஊடகங்களின் தன்மை

- இந்து சமய வளர்ச்சியில் பெரும் பங்களிப்பைச் செய்கின்ற நவீன தொடர்பாடல் ஊடகங்கள் வெளியிடும் கருத்துக்கள் ஆதாரபூர்வமானவையாக இருத்தல் வேண்டும்.
- மூலாதாரங்களில் இருந்து தகவல்கள் பெறும்போது, அவை உண்மைத் தன்மையும் நம்பகத் தன்மையும் உடையனவாக இருத்தல் வேண்டும்.
- ஊகம், கற்பனை முதலானவற்றைத் தவிர்த்து, நம்பகத் தன்மை உடையவற்றை மட்டும் மக்கள் முன் கொண்டு செல்ல வேண்டும்.
- தார்மீகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

படி I : • ஊடகங்கள் என்னும் தலைப்பில் ஒரு பகுதியைத் தெரிவுசெய்து, எடுத்துக்காட்டுகள், படங்கள், உண்மைக்கருவிகள் என்பவற்றைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் விதத்தில் முன் வையுங்கள்.

படி II : • இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின்பங்களிப்பு - என்னும் தலைப்பின் கீழ் தகவல்களைச் சேகரிக்குமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள். இணையத்தளத்தினூடாகவும் தகவல்களைச் சேகரிக்க இடமளியுங்கள்.

படி III : • இரு குழுக்களாக்கி, ஐந்து பேர் வீதம் தெரிவு செய்து, மேற்படி தலைப்பில் கருத்துக்களை முன்வைக்க ஏற்பாடு செய்யுங்கள்.

படி IV : • முன்வைத்த கருத்துக்களைத் தொகுத்து ஆக்கமாகத் தயாரித்து, காட்சிப்படுத்துமாறு கூறுங்கள்.

## மேலதிக வாசிப்புக்குரியவை :

இரண்டாவது உலக இந்து மகாநாட்டுச் சிறப்பு மலர் - இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, 2003

பத்திரிகை இயல் - கலாநிதி. தங்கமாணிக்கம்

## • பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்றேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்குத் தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல், முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமை களையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேம்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர் களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி / முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு
14. பேச்சுக்கள்
15. சுய ஆக்கங்கள்
16. குழுச் செயற்பாடுகள்
17. எண்ணக்கருப் படங்கள்
18. இரட்டைப் பதிவு - ஜேர்னல்
19. சுவர்ப் பத்திரிகைகள்
20. வினா - விடை நிகழ்ச்சிகள்
21. வினா - விடைப் புத்தகங்கள்
22. விவாதங்கள்
23. குழுக் கலந்துரையாடல்கள்
24. கருத்தரங்குகள்
25. உடனடிச் சொற்பொழிவு
26. பாத்திரமேற்று நடித்தல்

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் - கற்பித்தல், மதிப்பீட்டு முறைகள் அனைத்தை யும், எல்லா பாடங்களினதும் எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என எதிர் பார்க்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான வகைகளைத் தெரிவு செய்து கொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும். அதற்கமைய அவற்றைத் தெரிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

இந்த ஆசிரியர் வழிகாட்டியில் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தைக் கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் மற்றும் கணிப்பீட்டு வகைகள் பற்றிக் றிப்பிடப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தமது மாணவர்களின் முன்னேற்றத் திற்காக அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 1

தவணை : முதலாம் தவணை
கருவி இலக்கம் : 01
தேர்ச்சி : 1.0
தேர்ச்சி மட்டம் : 1.1
கருவியின் தன்மை : வினாவிடைப் புத்தகம்

இந்து சமயம் பற்றி அறிமுகம், இந்து சமயத்தின் சறிப்பம்சங்கள் என்பன உள்ளடங்கும் வகையில் வினாவிடைப் புத்தகம் ஒன்றை வெளியிட வழிப்படுத்துங்கள்

- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| **நியதிகள்** | **புள்ளிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. தலைப்பை தெளிவாக முன்வைத்தலும் அதன் பொருத்தப்பாடும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. ஒழுங்கமைப்பு, தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. ஆக்கபூர்வமான தன்மை | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. மேலதிக தகவல்களும் பிரயோகங்களும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. தொகுப்பு, முடிவுகளுக்கு வருதல் காரணங்காட்டல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | |

10

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 2

தவணை : முதலாம் தவணை
கருவி இலக்கம் : 02
தேர்ச்சி : 1.0
தேர்ச்சி மட்டம் : 1.2
கருவியின் தன்மை : ஆக்கச் செயற்பாடு (மாதிரி உருக்களை தயாரித்தலும் காட்சிப்படுத்தலும்)

இந்து சமயத்தின் தொல்பொருட் சின்னங்களின் மாதிரி உருக்களைக் காட்சிப்படுத்துவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்

- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. தலைப்பை அறிமுகஞ் செய்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. பாடங்களின் முக்கியத்துவம் தலைப்புக்குப் பொருத்தமான இருத்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. மாதிரி உருக்களின் ஆக்கபூர்வத்தன்மை. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவெடுத்தல், நியாயப்படுத்தல், விடயங்களைத் தர்க்கரீதியில் முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 3

தவணை : முதலாம் தவணை

கருவி இலக்கம் : 03

தேர்ச்சி : 1.0

தேர்ச்சி மட்டம் : 1.3

கருவியின் தன்மை : குழுக் கலந்துரையாடல்

- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம் என்பன பற்றி, குழுக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
  - தோற்றமும் பின்னணியும்
  - சமயப் பணிகள்
  - சமூகப் பணிகள்
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. கற்றற் செயன்முறையுடன் காட்டும் பொருத்தப்பாடு | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. குழுவாக்க கலந்துரையாடி, தலைப்புக்களை ஒதுக்கிக் கொள்ளல், அறிவுறுத்தல்களைப் பின்பற்றல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. கலந்துரையாடலை முன்னெடுத்துச் செல்லத்தக்க வகையில் ஆக்க பூர்வமான கருத்துக்களை முன்வைத்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. முன்வைக்கப்படும் கருத்துக்களின் ஆக்கபூர்வமான தன்மையும் தர்க்கரீதியான தன்மையும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. முடிவுகளுக்கான காரணங்களை முன்வைத்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 4

தவணை : இரண்டாம் தவணை

கருவி இலக்கம் : 01

தேர்ச்சி : 2.0

தேர்ச்சி மட்டம் : 2.1

கருவியின் தன்மை : செயற்றிட்டம்

- பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும் வகையில் அறுவகைச் சமயநெறிகள் பற்றிய செயற்றிட்டம் ஒன்றைத் தயாரிக்க, மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
  - தோற்றமும் வரலாறும்
  - முழுமுதற் கடவுள்
  - பிரதிமாலட்சணம்
  - நூல்கள்
  - வழிபாடும் தத்துவமும்
- மாணவர்களை ஆறு குழுக்களாகப் பிரித்து ஒரு குழுவுக்கு ஒரு சமயநெறி என்ற அடிப்படையில் ஒப்படை தயாரிக்க வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. குறிக்கோள்களுக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பை வெளியிடல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. தகவல் சேகரிப்பதற்காக் கையாண்ட முறைகளின் பொருத்தப்பாடு | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. தகவல் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. பயன்படுத்தும் உத்திகளின் பொருத்தப்பாடும் தர்க்கரீதியான தன்மையும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவுக்கு வருதலும் காரணங்காட்டலும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 5

தவணை : இரண்டாம் தவணை
கருவி இலக்கம் : 0
தேர்ச்சி : 2.0
தேர்ச்சி மட்டம் : 3.1
கருவியின் தன்மை : விவாதம்

- நாயன்மார் நால்வரில் இருவரை அல்லது ஆழ்வார்களில் இருவரைத் தெரிவு செய்து, அவர்கள் சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை எடுத்துரைக்கும் வகையில் பொருத்தமான தலைப்பொன்றைத் தெரிவு செய்யுங்கள். அதனை வெட்டியும் ஒட்டியும் பேசும் வகையில் மாணவரை விவாதத்தில் பங்குபற்ற வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. தலைப்பை தெளிவாக அறிமுகஞ் செய்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. தகவல்கள் ஆக்கபூர்வமாகவும் தர்க்கரீதியிலும் முன்வைக்கப் பட்டிருத்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. முகபாவனையும் அங்க அசைவுகளும் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவுகளுக்கான காரணங்களை முன்வைத்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 6

தவணை : முதலாம் தவணை
கருவி இலக்கம் : 03
தேர்ச்சி : 2.0
தேர்ச்சி மட்டம் : 4.2
கருவியின் தன்மை : திறந்தநூல் பரீட்சை

- கூத்து காவடி, கரகம், ஆகிய நாட்டார் கலைகள் பற்றிய கட்டுரை ஒன்றை எழுத மாணவரை வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| **நியதிகள்** | **புள்ளிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. தலைப்பை அறிமுகஞ் செய்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. தலைப்புக்குப் பொருத்தமான விடயங்கள் இருத்தல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. ஒழுங்கமைப்பு பந்தி பிரித்தல், அட்டவணைபோன்ற பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. மொழிச்செம்மை, இலக்கணச் செம்மை, நிறுத்தக் குறிகள், மொழிசார்ந்த பிரயோகங்கள் தெளிவு,ஆக்கபூர்வத்தன்மை. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவெடுத்தல், நியாயப்படுத்தல், விடயங்களைத் தர்க்கரீதியில் முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 7

தவணை : மூன்றாம் தவணை
கருவி இலக்கம் : 01
தேர்ச்சி : 5.0
தேர்ச்சி மட்டம் : 5.3
கருவியின் தன்மை : தேடி ஆய்வுகள் (இறுவட்டு தயாரித்தல்)

- இலங்கையில் இந்து சமயம்
- மாணவர்களை குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு தலைப்பை வழங்குங்கள்
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. குறிக்கோள்களை விளக்குதல் | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. தகவல் சேகரிப்பதற்காகக் கையாண்ட முறைகள். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. தகவல்கள் சேகரித்தலும் அவற்றைப் பதிவு செய்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. பயன்படுத்தும் உத்திகளின் பொருத்தப்பாடும் தற்கரீதியான தன்மையும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. முடிவுவுக்கு வருதலும், அவற்றுக்கு காரணங்காட்டலும் ஆக்கத்தை முன்வைத்தலும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 8

தவணை : மூன்றாம் தவணை
கருவி இலக்கம் : 02
தேர்ச்சி : 5.0
தேர்ச்சி மட்டம் : 5.2
கருவியின் தன்மை : களச்சுற்றுலாக்கள்

- பொலனறுவைக் கோயில்கள் பற்றிய செயற்றிட்டம் ஒன்றைச் செய்வதற்கு மாணவரகளை வழிப்படுத்துங்கள்
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. கற்றல் - கற்பித்தல் செயன் முறை காட்டும் தொடர்பு, பொருத்தப்பாடு. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. களச் சுற்றுலா ஒழுங்கமைப்பு | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. களச்சுற்றுலாவில் பெறப்பட்ட தகவல்கள், கையாளப்பட்டுள்ள உத்திகளும் அவற்றின் பொருத்தப்பாடும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. களச் சுற்றுலாவின் உள்ளடக்கமும் மாணவர் ஈடுபாடும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. களச் சுற்றுலாவின் மாணவர் ஆக்கத்திறன் பற்றிய அறிக்கையும் பொருத்தப்பாடும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 9

தவணை : மூன்றாம் தவணை
கருவி இலக்கம் : 03
தேர்ச்சி : 5.0
தேர்ச்சி மட்டம் : 5.4
கருவியின் தன்மை : உடனடிச் சொற்பொழிவு

- இலங்கையில் இந்து சமய வளர்ச்சிக்கு தொண்டாற்றிய பெரியார்கள் பற்றிக் கலந்துரையாடி உடனடிச் சொற்பொழிவை நிகழ்த்துங்கள்
- பின்வரும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| **நியதிகள்** | **புள்ளிகள்** | **புள்ளி வழங்கல்** | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சி மட்டத்தினை அடைந்துள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை | |
| 1. தலைப்பைத் தெளிவாக முன்வைத்தலும் அதன் பொருத்தப்பாடும். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 2. ஒழுங்கமைப்பு, தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| 3. ஆக்கபூர்வமான தர்க்க ரீதியான தன்மை தன்மை | 4 | 4 | 3 | 2 | 1 |
| 4. தெளிவு, குரல், கட்டுப்பாடு, முகபாவனை,அங்க அசைவுகள், நேரக்கட்டுப்பாடு,சரியான உச்சரிப்பு. | 4 | 4 | 3 | 2 | 1 |
| 5. தொகுப்பு, முடிவுகளுக்கு வருதல், காரணங்காட்டல். | 4 | 4 | 3 | 2 | 1 |
| பெற்ற புள்ளிகளின்கூட்டுத்தொகை (மொத்தப்புள்ளி) 20 | | | | | 20 |
| இறுதிப்புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் | | | | | 10 |